


இலங்கையின் இனமோதலும் சமாதானமும்

2002-2004

கலாநிதி எஸ். ஐ. கீதபொன்கலன்

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
இனமோதலும் சமாதானமும்
2002 – 2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
இனமோதலும் சமாதானமும்
2002-2004

கலாநிதி எஸ்.ஐ.கீதபொன்கலன்
B.A. (Hons.), M.A., M.Sc., Ph.D.
முதுநிலை விரிவுரையாளர்
அரசறிவியற் துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்



குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு எண் : 195

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
- 361-1/2, டாம் வீதி, கொழும்பு-12, தொ.பே. 2421388, மி. அஞ்சல் : kumbh@sltnet.lk
- 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை - 600 026

இலங்கையின் இனமேதாலும் சமாதானமும் 2002-2004
- காலாநிதி எஸ். ஐ. கீதபொன்கலன் எழுதியது

பதிப்புரிமை © 2005 எஸ். ஐ. கீதபொன்கலன்

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது
- 361-1/2, டாம் வீதி, கொழும்பு-12.

அட்டை வடிவமைப்பு : கனவு நிலையம்

Published by **Kumaran Book House**
- 361-1/2,Dam Street, Colombo-12, Tel. - 2421388, E.mail : kumbh@sltnet.lk
- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Elangaine Enamothalum Samathanamum
By S.I.Keethaponkalan

Copyright © 2005 by S.I.Keethaponkalan

Printed in **Kumaran Preess (pvt) Ltd.**
- 361-1/2,Dam Street, Colombo - 12,

Cover Designe by*: *Dream Station

இலங்கைத் தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியற் தரவு
National Library of Sri Lanka - Cataloguing - In - Publication Data

கீதபொன்கலன், எஸ். ஐ.

இலங்கையின் இனமோதலும் சமாதானமும்/எஸ். ஐ. கீதபொன்கலன்-
கொழும்பு : குமரன் புத்தக இல்லம், 2004 -
ப. xii + 244 ; ச. மீ. 21.

ISBN 955 - 9429 - 72- 8 விலை : 400. 00

i. 320.954 93 டிடிசி 21 ii. தலைப்பு
1. ஆசிரியர் 2. அரசறிவியல்

All rights reserved. No part of this book may be reproduced, translated, stored in a retrieval system, or transmitted in any form or by means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior written permission from the Author or the Publisher.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

இந்நாட்டில் இனவன்முறை காரணமாக கொல்லப்பட்ட
எல்லா உயிர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

இலங்கையில் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் விவாதங்கள் மிக உயர் மட்டத்திலேயே இடம்பெற்று வருவது ஜனநாயகத்தின் ஒரு குறைபாடாகச் சுட்டிக்காட்டப்படலாம். இது சாதாரண மக்கள் மத்தியில் அரசியல் தெளிவின்மைக்குக் காரணமாய் அமைவதுடன் அவர்கள் தவறான முடிவுகளை மேற்கொள்வதற்கும் உதவியுள்ளது. இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவது ஒரு சில அரசியல் தலைவர்கள் ஒன்றிணைவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகக் கூடியதல்ல. சமூகத்தின் தீவிர பங்குபற்றுதலும் அவர்களது ஆதரவுமின்றி இது சாத்தியமானதல்ல. எனவே சமாதான செயன்முறையின் தார்ப்பரியங்களை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதுடன் அது பற்றிய தெளிவை ஏற்படுத்த வேண்டிய தேவை காணப்பட்டது. இத்தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலான ஒரு முயற்சியே ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட இக் கட்டுரைகளாகும்.

ஒவ்வொரு வாரமும் சமாதான செயன்முறையிலும், அதனுடன் தொடர்புடைய அரசியலிலும் ஏற்பட்ட அபிவிருத்திகளை அடிப்படையாகக் கொண்டு கட்டுரைகள் எழுதப்பட்டன. அவ்வகையில் சமாதான செயன்முறை இடம்பெற்ற காலத்தில் ஏற்பட்ட பிரதானமான பிரச்சினைகள், வாதப்பிரதிவாதங்கள், புதிய அபிவிருத்திகள், அவற்றின் வேறுபட்ட பரிமாணங்கள் போன்றவற்றிகு முக்கியத்துவமளிக்கப்பட்டிருந்தது. எனவே சமாதான செயன்முறை பற்றிய பரந்த ஒரு அறிவை வழங்குவதில் கட்டுரைகள் உதவியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதே சமயம் இக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு புத்தக உருவில் வெளியிடப்படுவதன் மூலம் இவ் அறிவை நிரந்தரமாகப் பதிய முடியும் என உணரப்பட்டமையினால் இப்பொழுது இந்நூல் வெளியிடப்படுகின்றது.

அவ்வகையில் எனது முதல் நன்றிகள் தினக்குரல் ஆசிரியர் திரு. பாரதியையே சாரும். அவரது தூண்டுதலின் காரணமாகவே கட்டுரைகள் எழுதப்பட்டன. அத்துடன் கட்டுரைகளை விருப்பமுடன் வெளியிட்ட தினக்குரல் நிறுவனத்திற்கும் நன்றி கூறவேண்டியது எனது கடமையாகும். இவ்விடயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து நூலுருவில் வெளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொணரும் குமரன் பதிப்பகத்தாருக்கும் அதன் முகாமைப் பணிப்பாளர் திரு. கணேசலிங்கம் குமரன் அவர்களுக்கும் எனது நன்றிகள். ஒவ்வொரு கட்டுரையையும் வாசித்து பிழைத்திருத்தத்தில் உதவிய எனது மனைவி மெட்டில்டாவுக்கும் நன்றிகள் உரித்தாகும்.

25. 09. 2005

கலாநிதி எஸ்.ஐ.கீதபொன்கலன்
அரசறிவியற் துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

	முன்னுரை	vii
1.	அறிமுகம்	1
2.	யுத்த நிறுத்த உடன்படிக்கையும், ஜனநாயக உரிமைகளும்	10
3.	சமாதான செயன்முறை இடைநிறுத்தம் : ஒரு பேச்சுவார்த்தை தந்திரோபாயம்?	15
4.	சக வாழ்வுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியும் அதன் தாக்கங்களும்	20
5.	டோக்கியோ மாநாடும் வட-கிழக்கு அபிவிருத்தி நெருக்கடிகளும்	26
6.	டோக்கியோ மாநாடு ஒரு சர்வதேச பொறியா?	32
7.	டோக்கியோ மாநாட்டு பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தையின் நிலை	38
8.	பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதிலான பிரச்சினைகள்	44
9.	ஸ்ரீ.ல.சு.க - ஜே.வி.பி அரசியல் கூட்டணி	50
10.	இந்தியா தலையிடுவது சமாதான முயற்சியின் சுமூகமான முன்னேற்றத்துக்கு பாதகமானது	56
11.	தீர்வில் மூன்றாந் தரப்பாக இந்தியாவும், நோர்வேயும்	61
12.	அரசின் புதிய யோசனைகள் புலிகளால் ஏற்கக் கூடியதா ?	67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.	அரசின் புதிய யோசனைகள் புலிகளால் ஏற்கக் கூடியதா ?	67
13.	இடைக்கால சபை யோசனைகளின் அரசியல் பரிமாணங்கள்	73
14.	கூர்மையடையும் தமிழ் - முஸ்லிம் முரண்பாடுகள்	79
15.	இரட்டை புறக்கணிப்புக்கு உள்ளாகும் நிலையில் தமிழர்	84
16.	வடக்கு - கிழக்கு பிரிப்பு பேச்சுவார்த்தை முறிப்பிற்குச் சமமானது	89
17.	இன்றைய அரசியல் யதார்த்தம் ஜே.வி.பி.யின் அரசியல் பலத்தைப் பெருமடங்கு பெருப்பித்துள்ளது	94
18.	சமாதானப் பேச்சு முயற்சிகளில் ஐப்பான்	100
19.	சமாதான முயற்சிகளின் முதலாவது சாவுமணி	106
20.	புலிகளின் இடைக்கால சபை யோசனைகளும், தென்பகுதியின் நெருக்கடியும்	111
21.	ஆட்சி மாற்றத்திற்கான பொ.ஐ.முன்னணியின் நடவடிக்கைகள்	117
22.	சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு எதிராக ?	122
23.	புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகள்	127
24.	தேசிய நல்லிணக்க அரசும் அரசியலமைப்பு சாதிப்புரட்சியும்	133
25.	அநாதையாக்கப்பட்டுள்ள சமாதான செயன்முறை	138
26.	மெல்லச்சாகும் சமாதான செயன்முறை	144
27.	ஈழப்பிரச்சினையில் மீண்டும் இந்தியா ?	148
28.	நாட்டின் அரசியல் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் நிகழ்வுகள்	153
29.	சமாதான முயற்சிகளின் கடைசி சாவுமணி	158
30	அரசியல் கட்டமைப்பில் மாற்றத்தை அவசியமாக்கும் சமாதான செயற்பாடு	163

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31.	சந்தானயா தலைமையை ராஜினாமா செய்த ஜனாதிபதி	167
32.	பெருகிவரும் அரசியல் யோசனைகளும் அருகிவரும் நல்லிணக்கமும்	172
33	இ.தொ.கா.வின் அரசியல்	177
34.	தென்பகுதிக்கு நகர்த்தப்பட்டுள்ள சமாதான செயன்முறை	182
35.	ஒருதலைப்பட்ச சமாதான முயற்சியின் பின்னணியிலுள்ள யதார்த்தங்கள்	186
36.	தொடரும் வன்முறைகளுக்கு முன்றாந்தரப்பு பொறுப்பாகுமா?	189
37.	தேசிய ஆலோசனைச் சபையின் உள்ளார்ந்த முரண்பாடுகள்	194
38.	பலவீனமான அரசாங்கம், பலமற்ற எதிர்கட்சி	199
39.	ஜே. வி. பி. யின் இரட்டைப் பாத்திரம்	204
40.	ஒஸ்லோ பிரகடனமும் சுயநிர்ணய உரிமையும்	209
41.	அதிகரிக்கும் இலங்கை - இந்திய நெருக்கம்	214
42.	சமாதான செயன்முறை மீள ஆரம்பித்தல்	219
43.	யுத்த அபாயத்தின் தாற்பரியத்தைப் புரிந்து கொள்ளும் இயலுமை தெற்கிற்கு உள்ளதா ?	224
44.	சரிந்து செல்லும் ஜனநாய்கம்	229
45.	ஜே.வி.பி.யின் தற்காப்புத் தாக்குதலில் மௌனித்துப் போன சர்வதேச சமூகம்	234
46.	சுனாமியின் பின் இலங்கை அரசியலில் உருவாகியுள்ள புதிய பரிமாணங்கள்	239
	முடிவுரை	244

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

அறிமுகம்

இனத்துவம் என்பது தேசியவாதம் போன்ற எண்ணக் கருக்களுடன் ஒப்பிடுகையில் காலத்தால் பிந்திய ஒரு விடயம் ஆகும். ஒரு வகையில் அது இருபதாம் நூற்றாண்டின் குழந்தை எனக் கூறப்படலாம். இனத்துவத்தைக் குறிக்க பயன்படுத்தப்படும் ஆங்கில வார்த்தையாகிய **எத்னிசிட்டி** என்பது 1950 ம் ஆண்டுகளிலேயே முதன்முதலில் ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி போன்ற ஆவணங்களில் இடம் பிடிக்கத் தொடங்கியிருந்தது. எனினும் மிகக்குறுகிய காலத்தினுள் இது கல்வியியல் ரீதியாக முக்கியத்துவமுடைய ஒரு எண்ணக்கருவாகவும், சர்வதேச ரீதியில் மிகப்பெரும் பிரச்சினையாகவும் மாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இனத்துவம் அல்லது இன மோதல்கள் என்பவை 20ஆம் நூற்றாண்டின் இரண்டாவது அரைப்பகுதியில் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கின்ற முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக மாறியிருந்தன. குறிப்பாக 1990 ம் ஆண்டின் பின்னர் சர்வதேச ரீதியாக இன மோதல்களின் வெடிப்பு ஒன்று இடம் பெற்றிருந்ததாக டெட் கேர் போன்ற ஆய்வாளர்கள் கருதியிருந்தனர்.

இவ்விதம் கருதப்படுவதற்கான காரணம் யாதெனில் 1990 ஆம் ஆண்டுவரை, அதாவது கெடுபிடி யுத்தம் முடிவடைகின்றவரை சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த மோதல் மாதிரியாக அமைந்திருந்தது. நாடுகளுக்கிடையிலான யுத்தங்களேயாகும். இதன் கருத்து 90 ஆம் ஆண்டிற்கு முன்னர் இனரீதியான உள்ளூர் யுத்தங்கள் காணப்பட்டிருக்கவில்லை என்பதல்ல. மாறாக சர்வதேச மோதல்கள் பிரதானமான பிரச்சினைகளாக காணப்பட்டிருந்தமையினால் இன மோதல்கள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கெடுபிடியுத்த முடிவின் பின்னர் தீவிரம் வாய்ந்த புதிய இன மோதல்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியிருந்தன. உதாரணமாக முன்னால் யூகோஸ்சிலாவியாவில் பொஸ்னியர்களுக்கும் சேர்பியர்களுக்கும் இடையிலான மோதல்கள், நகர்னோ கரபாக் பிராந்தியத்தில் ஆர்மேனியர்களுக்கும் அசர்பைஜானியர்களுக்கும் இடையிலான மோதல், செச்னிய யுத்தம் போன்றவை முதன்மை பெறத் தொடங்கியிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இதற்கு முன்னரே புரையோடிப் போயிருந்த பல இன மோதல்கள் குறிப்பாக ஆசிய, ஆபிரிக்கப் பிராந்தியங்களில் காணப்பட்டிருந்தன. இவையும் கெடுபிடி யுத்தத்தின் முடிவைத் தொடர்ந்து புதிய பரிமாணங்களுடன் வெளிப்படத் தொடங்கியிருந்தன. இவற்றில் சில மிக மோசமான அழிவுத்தன்மை வாய்ந்தவையாக இருந்தமை ருவாண்டா, புருண்டி போன்ற பிரதேசங்களில் நிரூபிக்கப்பட்டிருந்தது. எனினும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலான பெரும்பாலான இனமோதல்கள் காலனித்துவத்தின் முடிவின் விளைவுகளே அன்றி வேறில்லை. காலனித்துவ ஆட்சியின் கீழ் பொது எதிரியாக ஏகாதிபத்தியங்கள் விளங்கியிருந்தமையினால் உள்ளார்ந்த பிளவுகள் பெரிதும் உணரப்பட்டிருக்கவில்லை. எனினும் சுதந்திரத்தின் பின் தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற செயற்பாடுகள் பெரும்பாலான புதிய நாடுகளில் எல்லாக் குழுக்களையும், நலன்களையும் உள்வாங்குகின்ற செயற்பாடாக அமைந்திருக்கவில்லை. விரும்பத்தக்க ஒரு மட்டத்தில் அவ்விதமான ஒரு செயன்முறை இடம்பெற்றிருக்க வேண்டும். ஆயினும் இடம்பெற்றது யாதெனில் பெரும்பான்மையினர் அரசியல் அதிகாரத்தை தம்வசம் வைத்துக்கொண்டு ஏனைய குழுக்களை வெளித்தள்ளுகின்ற செயல்முறையாகும். இது தவிர்க்க முடியாதபடி பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினக் குழுக்களுக்கும் இடையில் முரண்பாடுகளையும் மோதல்களையும், ஏற்படுத்தி விட்டிருந்தது, இவற்றில் சில பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொள்ளக்கூடிய சிவில் யுத்தங்களாக அபிவிருத்தியடைந்திருந்தன.

இவற்றுள் ஒன்றே இலங்கையின் இன மோதல் அல்லது உள்ளூர் சிவில் யுத்தமாகும். ஆசிய, ஆபிரிக்கப் பிராந்தியங்களில் காணப்பட்டிருந்த பல இன மோதல்களைப் போலவே இலங்கைப் பிரச்சினையும் "காலனித்துவத்தின் முடிவின் பின்" வெடித்ததொன்றாக காணப்பட்ட போதும் நீண்டகால வரலாற்றை உடையது. சிலர் இலங்கை இனமோதலின் ஆரம்பத்தை எல்லாளன், துட்டகைமுனு காலத்திலிருந்து கணக்கிடுவதுண்டு. இருப்பினும் இங்கு சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்குமிடையிலான பிரச்சினைகள் 20 ம் நூற்றாண்டின் உற்பத்தியே எனக்கூறப்படலாம். குறிப்பாக 1920 ம் ஆண்டு இவ்விரு சமூகங்களுக்குமிடையில் இன அடிப்படையில் தெளிவான பிளவுகள் ஏற்படத் தொடங்கியிருந்தன. இக்காலப் பகுதியில் தென்னிலங்கையிலிருந்து "தமிழர்" ஒருவர் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்படக் கூடியதாக தொகுதியொன்றை அமைத்துத் தரும்படி கேட்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் இதற்கு இணங்கியிருந்த "சிங்களத்" தலைவர்கள் பின்னர் இக்கோரிக்கையை நடைமுறைப்படுத்தத் தவறியிருந்தனர். இதன் காரணமாக அதிருப்தியுற்ற தமிழ் தலைவர்கள் இலங்கைத் தேசிய காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்று தமிழர் மகாசபையை அமைத்துக் கொண்டனர். இதுவே தமிழ், சிங்களப் பிளவின் நவீன ஆரம்பம் எனக் கருதப்படலாம்.

பெரும்பாலான இன மோதல்களைப் போலவே இங்கும் இரண்டு பிரதானமான மூலக்கூறுகள் காணப்பட்டிருந்தன் (1) இனப்பாகுபாடு பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்பாடுகள், (2) அழிந்து போகும் அச்சம். பெரும்பாலான இன மோதல்களில் அடிப்படையான ஒரு காரணியாக அமைவது இனப்பாகுபாடு பற்றிய முறைப்பாடுகள் ஆகும். இங்கு சுவாரசியமானது யாதெனில் இத்தகைய முறைப்பாடுகள் பெரும்பான்மையினருக்கு எதிராக சிறுபான்மையினரால் முன்வைக்கப்படுபவை மட்டுமன்றி பெரும்பான்மையினரே கூட சிறுபான்மையினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் கொண்டிருப்பதாகும். எனவே இனமோதல்களில் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் பரஸ்பரத் தன்மையுடையவையாக இருப்பது கவனிக்கத்தக்கது.

இலங்கையில் காலனித்துவ ஆட்சியின் கீழ் தமிழர்கள் பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் சேர்ந்து செயற்பட்டதன் மூலம் அதிகளவான அரசியல் மற்றும் பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொண்டனர் என்ற தீவிரமான ஒரு நம்பிக்கை சிங்கள மக்களிடையே காணப்படுகின்றது. இதற்கு ஓர் உதாரணமாக தமது சனத்தொகை விகிதாசாரத்திலும் அதிகளவான பதவிகளை பொதுத்துறையில் தமிழர்கள் அனுபவித்து வந்தனர் எனக் கூறப்படுகின்றது. இவ்விதம் தமக்கு சேரவேண்டியதிலும் அதிகமான நலன்களை தமிழர்கள் அனுபவித்து வந்தமை சிங்களவர்களின் நியாயமான நலன்களை அபகரிப்பதற்குச் சமமானது எனக் கருதப்பட்டது. இதன் உண்மைத்தன்மை எவ்விதம் இருந்த போதும், தமிழர்களுக்கு எதிரான இத்தகைய ஒரு குற்றச்சாட்டு சிங்கள மக்களிடையே காணப்பட்டது என்பது மறுக்கப்படுவதற்கில்லை. உண்மையில் இத்தகைய நம்பிக்கைகளே சுதந்திரத்தின் பின்னர் சிறுபான்மையினருக்கு எதிரான, குறிப்பாகத் தமிழர்களுக்கு எதிரான அரசின் செயற்பாடுகளை நியாயப்படுத்தியிருந்தன.

1948 ம் ஆண்டு சுதந்திரத்தின் பின்னர் சுதேசிய அரசு மேற்கொண்ட உடனடியான தீர்மானங்களில் ஒன்று இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரஜாவுரிமையைப் பறிப்பதாகும். இதற்கு தேர்தலை அடிப்படையாகக் கொண்ட அரசியல் நோக்கங்கள் சில பின்னணியில் இருந்தபோதும் பிரஜா உரிமைச் சட்டங்களின் முக்கியமானதொரு நோக்கம் மத்திய மலை நாட்டில் இழக்கப்பட்டதாகக் கருதப்பட்ட சிங்களவர்களின் உரிமைகளை "மீள" உத்தரவாதப்படுத்துவதாகும்.

1956ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட போதும் பிரதமர் பண்டாரநாயக்காவின் "தேசியமயப்படுத்தல்" கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் "சுதேசியத்திற்கு" முன்னுரிமையளித்தல் என்பதற்கு கீழ் சிங்கள மக்களுக்கு காலனித்துவத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அநீதிகளை இல்லாமற் செய்வது ஒரு நோக்கமாயிருந்தது. இவை தவிர்க்க முடியாதபடி தமிழ் மக்களுக்கும் அவர்களது நலன்களுக்கும் எதிரானவையாக அமைந்திருந்தன. சிங்களம் மட்டுமே அரச கருமமொழி என்பதனால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தொழில்களையும் பொருளாதார நலன்களையும் இழக்க வேண்டியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் இன மோதல்களில் பாகுபாடு என்பதிலும் அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய காரணியே அழிந்து போகும் அச்சம் ஆகும். தீவிர இன மோதல்களில் ஈடுபட்டிருக்கின்ற எல்லா இனக் குழுக்களுக்கிடையிலும் காணப்படுகின்ற "உளவியல் நிலை" இவ்வச்சம் ஆகும். இலங்கையில் சிங்களவர், தமிழர் மட்டுமன்றி ஏனைய சிறுபான்மையினரும் கூட இவ்வச்சத்தைக் கொண்டுள்ளது போல் தோன்றுகின்றது.

சிங்களவர்களை எடுத்துக் கொள்வோமாயின் அவர்கள் "சிறுபான்மை மனோபாவம்" கொண்ட ஒரு பெரும்பான்மை என்று வர்ணிக்கப்படுகின்றனர். அது இத்தீவின் பிராந்திய புவியியல் அமைப்பினால் ஏற்படுகின்ற ஒரு நிலை ஆகும். உள்ளார்ந்த ரீதியாக சிங்களவர்கள் பெரும்பான்மையினராக இருந்த போதும் பிராந்திய ரீதியில் தமிழர்களுக்கு எதிரான மிகச்சிறிய சிறுபான்மையினரேயாவர். ஏனெனில் தமிழ்நாட்டில் உள்ள ஆறுகோடி தமிழர்களும் இலங்கைத் தமிழரும் ஒரே குழுவினரே என்ற உளவியல் உருமாதிரியே சிங்களவர்களிடையே காணப்படுகின்றது. அத்துடன் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களும் தென்னிந்திய மாநிலமாகிய தமிழ்நாடும் இணைந்த வகையில் "பாரிய ஈழம்" ஒன்றை அமைப்பதற்கான திட்டம் ஒன்று காணப்படுவதாகவும் நம்பப்படுகின்றது. இப்பாரிய ஈழம் இயல்பாகவே சிங்களவர்களுக்கு எதிராக அமையும் என்பதனால் சிங்கள இனம் இந்நாட்டிலிருந்து இல்லாமற் போய்விடும் என்ற அச்சம் இன்றும் காணப்படுகின்றது.

இதன் காரணமாக தமிழர்களை இந்நாட்டிலிருந்து இல்லாமற் செய்துவிடும் அல்லது அழித்துவிடும் திட்டமொன்றை சிங்கள மக்கள் அல்லது அரசு கொண்டிருப்பதாக தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். பிரஜா உரிமைச்சட்டம், தனிச்சிங்களச் சட்டம் போன்றவை இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படுகின்றது. 1948ஆம் ஆண்டு பிரஜாவுரிமைச் சட்டம் அறிமுகப்படுத்தப்-பட்டபோது அரசின் அடுத்த இலக்கு இலங்கைத் தமிழராகவே அமைவர் என நம்பப்பட்டது. இந்நம்பிக்கை யதார்த்தமானதாகவே அமைந்தது, ஏனெனில் 1956 ம் ஆண்டின் சட்டம் இலங்கைத் தமிழருக்கு எதிரானதாகவே அமைந்திருந்தது. அது தமது சொந்த நாட்டில் அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக மாற்றியதாகக் கருதப்படுகின்றது.

எனினும், தமிழ் மக்களின் அழிந்து போகும் அச்சத்தை உறுதிசெய்த மிக முக்கியமான காரணி தமிழ் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட அரச குடியேற்றங்களே அன்றி வேறில்லை. வடக்கிலும் குறிப்பாக கிழக்கிலும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள் தமிழ் மக்களின் சனத்தொகைப் பரம்பலையும், அவர்களது நிலம் தொடர்பிலான உரிமைகளையும் பலவீனப்படுத்துவதாக அமைந்திருந்தன. இச்செயன்முறை தொடர்ந்து அனுமதிக்கப்பட்டால் இலங்கைத்தீவில் இருந்து தமிழர்கள் முழுமையாக இல்லாதொழிகின்ற நிலையேற்படும் என்று கருதப்பட்டது. அத்துடன் தமது பிராந்தியங்களிலான அரசியல் அதிகாரம் தமது கைகளிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குமாயின் இத்தகைய எதிர்நிலை அபிவிருத்திகளைத் தடுத்து நிறுத்த முடியும் என்று கருதப்பட்டமையினால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை மட்டுமன்றி, தமிழ் தேசிய வாதத்தையுமே கூட ஒன்றுபடுத்தி வடிவமைத்து, வெளிப்படுத்துவதில் தமிழ் தேசியவாதத்தின் தந்தை என அழைக்கப்படுகின்ற செல்வநாயகம் வெற்றியடைந்தபோதும், அவரது 30 ஆண்டுகால அகிம்சாவாதப் போராட்டம் வெற்றிகரமானதொன்றாக அமைந்திருக்கவில்லை. இது இயல்பாகவே இளைய தலைமுறையினரை விரக்தியடையச் செய்தமையினால் அகிம்சாவாதப் போராட்டம் மெதுவாக வன்முறை வடிவம் பெறத்தொடங்கியது. ஆரம்பத்தில் மென்மையான வன்முறை என்ற அளவில் காணப்பட்ட மோதல் இறுதியில் ஒரு உள்ளூர் யுத்தமாக நிலைமாற்றம் பெற்றிருந்தது.

1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தைத் தொடர்ந்து ஆயுதக்குழுக்களின் திடீர்ப் பெருக்கம் ஒன்று வடக்கு கிழக்கில் ஏற்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் இங்கு 35 இற்கும் அதிகமான அரசிற்கு எதிரான தமிழ் ஆயுதக்குழுக்கள் இயங்கிவந்தன எனினும் பிற்காலத்தில் "அழித்தல், ஒன்றிணைத்தல்" ஆகிய தந்திரோபாயங்களூடாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அரசிற்கு எதிராக உறுதியான போராட்டத்தை முன்னெடுக்கும் ஒரே இயக்கமாக மாற்றம் பெற்றிருந்தது. குறிப்பாக விடுதலைப்புலிகள் பிரதானமான ஒரே இயக்கமாக மாற்றமடைந்ததன் பின்னர் போராட்டம் நிச்சயமான ஒரு முறையில் "யுத்தமாக" மாற்றமடைந்திருந்தது.

1990ஆம் ஆண்டிலிருந்து 2000ஆம் ஆண்டுவரை இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற நீண்ட யுத்தத்தில் இரு தப்பினருமே மிகப் பாரிய வெற்றிகள் சிலவற்றை அடைந்திருந்தனர். அவ்வகையில் அரச படைகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியமை, புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றியமை போன்றவை கூறப்படலாம். அதேசமயம் இரு தரப்பினருமே மோசமான தோல்விகள் சிலவற்றைச் சந்தித்திருந்தமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டும். இருந்தபோதும் நீண்டகால யுத்தத்தில் இருந்து புரிந்து கொள்ளப்பட்ட முக்கியமானதொரு விடயம் அடுத்த தரப்பை முழுமையாகத் தோற்கடிக்கக்கூடிய இராணுவ வல்லமை இரு தரப்பினருக்குமே காணப்படவில்லை என்பதாகும்.

எனவே இடையிடையே தமது இலக்குகளை அடைந்து கொள்வதற்காகவும் சில சந்தர்பபங்களில் வேறு நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவும் புலிகளும் அரசும் அரசியற் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதுண்டு. 1980 ம் ஆண்டுகளில் திம்பு, வட்டமேசை போன்ற பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றிருந்த போதும், இவ் விருதரப்பினருக்குமிடையில் முக்கியமான மூன்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருந்தன.

அவ்வகையில் முதலாவதாக ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையில் இடம்பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தைகள் கூறப்படலாம். ஹில்டன் பேச்சுவார்த்தைகளின் முக்கியமானதொரு பரிமாணம், அவை அமைதித் தீர்வொன்றை எட்டுவதை இலக்காகக் கொண்டிருக்கவில்லை என்பதாகும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் அமைதி காக்கும் படைகள் என அழைக்கப்பட்ட இந்தியப் படைகள் இலங்கைக்கு அனுப்பப்பட்டதையும் அப்பொழுது பிரதம மந்திரியாகவிருந்த பிரேமதாச எதிர்த்திருந்தார். எனவே அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் இந்தியப்படைகளை வெளியேறுமாறு கோரிக்கை விடுத்திருந்த போதும் இந்தியர்கள் அதனை ஏற்க மறுத்திருந்தனர். அதேசமயம் "நிர்ப்பந்தத்தின்" கீழ் விடுதலைப் புலிகள் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டிருந்த போதும் விரைவர்கவே இந்தியப் படைகளுடன் யுத்தமொன்றை ஆரம்பித்திருந்தனர். எனவே இந்தியப் படைகளை வெளியேற்றுகின்ற பொதுவான ஒரு நோக்கம் ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் காணப்பட்டிருந்தது. எனவே இப்பொது நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே ஹில்டன் பேச்சுவார்த்தை அமைந்திருந்தது. இந்தியப் படைகள் 1990ஆம் ஆண்டு வெளியேறியவுடன் இந்நோக்கம் அடையப்பட்டமையினால் பேச்சுவார்த்தைகள் முறிவடைவது தவிர்க்க முடியாததாக மாற்றமடைந்திருந்தது.

எவ்வாறாயினும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பம் 1994ஆம் ஆண்டு தென்னிலங்கையில் ஏற்பட்டிருந்த அரசியல் மாற்றங்களுடன் தோற்றம் பெற்றிருந்தது. பதினெட்டு ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் பின்னர் சுதந்திரக் கட்சி இக்காலப்பகுதியில் புத்துயிரூட்டப்பட்டிருந்தமை அடிப்படையில் சந்திரிகா குமாரதுங்காவின் தலைமைத்துவத்தின் விளைவே என்று கூறப்படலாம். 1994ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, குமாரதுங்கா புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தார்.

ஆரம்பத்தில் மிகுந்த உற்சாகத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பேச்சுவார்த்தைகள் விரைவிலேயே நெருக்கடி நிலையை எதிர்நோக்கியிருந்தன. பேச்சுவார்த்தைத் தரப்பினரிடையே போதிய பரஸ்பர நம்பிக்கை காணப்பட்டிராமையும் பேச்சுவார்த்தைகள் விரைவிலேயே முறிவடைந்தமைக்கு ஒரு காரணமாக அமைந்திருந்தது. அத்துடன் இணங்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசு போதிய் அக்கறை செலுத்தியிருக்கவில்லை என்ற பொதுவான ஒரு குற்றச்சாட்டு தமிழ் தரப்பினரால் முன்வைக்கப்-பட்டிருந்தது. எனவே ஒருதலைப்பட்சமாக பேச்சுவார்த்தைகளில் இருந்து வெளியேறுகின்ற தீர்மானத்தைப் புலிகள் மேற்கொண்டிருந்ததுடன் திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதல்களுடன் இப் பேச்சுவார்த்தைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், பேச்சுவார்த்தைகளூடாக மட்டுமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றை அடைந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கை ஜனாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரதுங்காவின் அரசாங்கத்திற்கு பூரணமாகக் காணப்பட்டது எனக் கூறமுடியாது. ஏனெனில் ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் யுத்தம் சரியாக, திறமையான முறையில் நடாத்தப்படவில்லை என்ற பொதுவானதொரு அபிப்பிராயம் சுதந்திரக்கட்சி உறுப்பினர்களிடையே நிலவி வந்தது. எனவே புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேறியதும் யுத்தத்தை சரியான முறையில் நடத்திப் பார்ப்பதற்கான அவகாசம் அரசாங்கத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்தது. அதன் காரணமாக பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான மாற்று வழிமுறைகளைத் தேடுவதை விடுத்து அரசாங்கம் "சமாதானத்திற்கான யுத்தம்" ஒன்றைப் பிரகடனப்படுத்தியிருந்தது.

இச் சமாதானத்திற்கான யுத்த காலமே இலங்கையின் இன மோதல் வரலாற்றில் மிகத் தீவிரம் வாய்ந்ததும், மோசமான அழிவுகளைக் கொண்டதுமாகிய காலமாயிருந்தது. ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் இடம் பெற்ற இந்த யுத்தம் மிக நவீன யுத்தக் கருவிகளையும் வழிமுறைகளையும் கொண்டமைந்திருந்தமையினால் குறிப்பிடத்தக்க வெற்றிகளுக்கிடையிலும் யுத்த தரப்பினர் பாரிய இழப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. குறிப்பாக இலங்கை அரசாங்கத்தை எடுத்துக் கொள்வோமாயின் யுத்தம் நாட்டின் பொருளாதார வளங்களில் பெரும்பகுதியை விழுங்கிக் கொண்டிருந்தது. மந்தகதியிலான பொருளாதார அபிவிருத்தியும், பணவீக்கமும் யுத்தத்தின் பொருளாதாரத் தாக்கத்தை வீதிக்குக் கொண்டுவருவதாக அமைந்திருந்தன. 1999, 2000 ஆம் ஆண்டளவில் திறைசேரி வெறுமையாக்கப்பட்டிருந்தமையினால் அரசு சீரழிந்து விடக்கூடிய மோசமான ஒரு நிலை ஏற்பட்டிருந்தது. அத்துடன் புலிகளின் பாரிய தாக்குதல்களினால் இராணுவத்தின் யுத்தம் செய்யும் மனோபாவமும் பலவீனப்படுத்தப்பட்டிருந்தது. இது தென்னிலங்கை அரசியல் தலைவர்களை மட்டுமன்றி மக்களையும் கூட மீண்டுமொரு சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிச் சிந்திக்கத் தூண்டியிருந்தது.

இயல்பாகவே புலிகளும் யுத்தத்தினால் களைப்படைந்த நிலையிலேயே காணப்பட்டிருந்தனர். அதிகரித்த பாரிய தாக்குதல்கள் அதிகரித்த மனிதவள இழப்புகளை ஏற்படுத்தியிருந்தன. ஆயினும் புலிகளின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்திய மிகப் பிரதானமான காரணி அமெரிக்கா மீதான 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி தாக்குதலே ஆகும். இப் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்கா தலைமையில் "பயங்கரவாதத்திற்-கெதிரான சர்வதேச யுத்தம்" ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இச் சூழ்நிலையின் கீழ் இலங்கையில் மட்டுமல்ல உலகின் எந்தவொரு பாகத்திலும் அரசிற்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுப்பது சாத்தியமற்றதாக மாற்றமடைந்திருந்தது. புலிகள் மீதான இதன் தாக்கம் கடுமையானதொன்றாகவே இருந்தது. ஏனெனில் விடுதலைப் புலிகள் இயக்கம் அமெரிக்காவின் வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அடிப்படையாகக் கொண்டு பயங்கரவாதத்திற்கெதிரான சர்வதேச யுத்தம் புலிகளையும் உள்ளடக்கக் கூடிய வகையில் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயத்தை இலங்கை அரசிற்கு ஆதரவான சிலர் கொண்டிருந்தனர். எனினும் தனது இராணுவ நடவடிக்கைகளை இலங்கை வரை அல்லது இஸ்லாமியக் குழுக்களுக்கு அப்பால் விஸ்தரிப்பதற்கு அமெரிக்கா தயாராக இருக்கவில்லை. இதன் கருத்து புலிகளின் மீது எந்தவித அழுத்தமும் இருக்கவில்லை என்பதல்ல. மாறாக அமெரிக்காவிலிருந்தும் ஏனைய சில ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தீவிர இராஜதந்திர மற்றும் நிதி ரீதியான அழுத்தங்களுக்குப் புலிகள் உள்ளாக்கப்பட்டிருந்தனர். எனவே தமது போராட்டத்தை தாம் இதுவரை முன்னெடுத்த அதே வடிவில் முன்னெடுத்துச் செல்லக்கூடிய நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பு இருக்கவில்லை. அவர்களுக்கு மாற்றுத் தந்திரோபாயம் ஒன்று தேவைப்பட்டிருந்தது.

எனவே 2000 ஆம் ஆண்டளவில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக்கூடிய நிலையில் இரு தரப்பினரும் காணப்பட்டிருந்தனர். அத்தகைய ஒரு புதிய செயன்முறையை உந்துவதற்குத் தேவையான சக்தியை வழங்கக் கூடியதாக 2001 ம் ஆண்டு தென்னிலங்கையிலேற்பட்ட ஆட்சி அரசியல் மாற்றம் அமைந்திருந்தது. அதேசமயம் 2000 ஆம் ஆண்டிலேயே இனப் பிரச்சினையை சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதில் ஒரு மூன்றாம் தரப்பு அனுசரணையாளராக உதவும்படி நோர்வே அரசை இரு தரப்பினரும் கேட்டிருந்தனர். இத்தகைய ஒரு பின்னணியிலேயே 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இவ்வுடன்படிக்கையின் சிறப்பம்சங்களில் ஒன்று, அது அமுல்ப்படுத்தலைக் கண்காணிக்கும் கட்டமைப்பு ஒன்றைக் கொண்டிருந்தமையாகும். அவ்வகையில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு புதிய பரிசோதனையாகவே கருதப்பட வேண்டும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு நேரடிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டபோது நாட்டில் சமாதானம் பற்றிய அதீத நம்பிக்கையும் வரவேற்பும் காணப்பட்டிருந்தன. தாய்லாந்து, நோர்வே, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற ஆறு சுற்று பேச்சுவார்த்தைகளில் முக்கிய சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. உதாரணமாக நான்கு உபகுழுக்கள் அமைக்கப்பட்டமை முன்னேற்றகரமான ஒரு விடயமாகக் கருதப்பட்டது. ஏனெனில் சிறிய, உடனடிப் பிரச்சினைகளிலான இணக்கம், அடிப்படை விடயங்களில் இணக்கத்தை எட்டுவதற்கு உதவும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் துரதிஸ்டவசமாக அவை மிக விரைவிலேயே செயலிழந்துவிட்டிருந்தன.

எவ்வாறாயினும் நேரடிப் பேச்சுவார்த்தைகளில் அடையப்பட்ட மிக முக்கியமான தீர்மானம் "சமஷ்டி" பற்றியதாகும். ஒஸ்லோவில் இடம்பெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி "ஆராய்வதற்கு" இரு தரப்பினரும் இணங்கியிருந்தனர். இவ்விணக்கம் இரு தரப்பினரிடமிருந்தும் சில விட்டுக் கொடுப்புகளை உத்தரவாதப் படுத்தியிருந்த போதும், மிக ஆரோக்கியமான ஒரு அபிவிருத்தி எனக் கருதப்படலாம். ஏனெனில் இலங்கை இன மோதலுக்கு நடைமுறைச் சாத்தியமான, அமைதி பூர்வமான ஒரே தீர்வு சமஷ்டி முறையை அறிமுகப்படுத்துவதேயாகும். விரும்பத்தக்க ஒரு மட்டத்தில் தரப்பினர் சமஷ்டிக் கட்டமைப்பினுள் உள்ளடக்கப்படக்கூடிய விடயங்கள் பற்றி கவனம் செலுத்தியிருக்க வேண்டும். இருப்பினும், உள்ளூர் ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பல புதிய பிரச்சினைகள் தோற்றம் பெற்றிருந்தமையினால் சமாதான செயன்முறையின் கவனம் வேறு திசையில் திருப்பப்பட்டிருந்தது. இது தொடர்பிலான பரிமாணங்களே அடுத்துவரும் கட்டுரைகளில் ஆராயப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

யுத்த நிறுத்த உடன்படிக்கையும் ஜனநாயக உரிமைகளும்

ஒன்றிற்கு மேற்பட்ட தோல்வியடைந்த சமாதான முயற்சிகளுக்குப் பின்னர் தற்போது நோர்வே அரசின் அனுசரணையுடனான சமாதான முயற்சி ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. நடைமுறையிலுள்ள சமாதான செயன்முறையின் அடிப்படை இவ்விரு இனக்குழுக்களும் இந்நாட்டில் சகோதரத்துவத்துடனும், சமத்துவத்துடனும் வாழ வேண்டும் என்பதாயின், அடையப்படுகின்ற இறுதித் தீர்வு இனக்குழுக்களுக்கிடையிலான அச்சங்களை நீக்குகின்ற ஏற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமானது. நிரந்தரமான நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடிய சமாதானம் அடையப்படுவதில் இது மிக அடிப்படையானது.

துரதிஷ்டவசமாக அண்மைக் காலங்களில் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் யாவும் உடனடிப் பிரச்சினைகளில் அதிக அக்கறை கொண்டிருந்தனவே அன்றி அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிய அக்கறைகளை வெளிப்படுத்தியிருக்கவில்லை. உதாரணமாக 1994/1995 ஆம் ஆண்டுகளில் பொதுஜன முன்னணி அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைபுலிகள் இயக்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள், வட பகுதிக்கான பொருளாதாரத் தடையை நீக்கிக் கொள்ளுதல் என்கின்ற உடனடிப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு முன்பாகவே முறிவடைந்து விட்டிருந்தது.

1994/1995 ஆம் ஆண்டு பேச்சுவார்த்தை தொடர்பில் கூறப்பட வேண்டிய இன்னுமோர் முக்கிய விடயம் பேச்சுவார்த்தை முறிவடைந்ததைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட "சமாதானத்திற்கான யுத்தம்" என்பதாகும். சமாதானத்திற்கான யுத்தக் கொள்கை இந்நாட்டை அதிதீவிர யுத்தம் ஒன்றிற்கு இட்டுச் சென்றிருந்தது என்பதுடன், குறிப்பாக, தமிழ் மக்கள் மீதான மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கும் வழி ஏற்படுத்தியிருந்தது. இதன் காரணமாக, பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனமோதல் தீர்வு தொடர்பான கொள்கைகள் தமிழ் மக்களிடையே கடும் எதிர்ப்பைப் பெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தன. மேற்கூறப்பட்ட மனித உரிமை மீறல்களையும், எதிர்ப்புக்களையும், வடிவமைத்து வெளிப்படுத்துவதில் தமிழ் ஊடகங்கள் குறிப்பாகப், பத்திரிகைகள் பெரும்பங்காற்றியிருந்தன. அரசாங்கத்தின் பத்திரிகைத் தணிக்கை போன்ற தடைகளுக்கு மத்தியில் தமிழ் ஊடகங்கள் ஆற்றிய பங்கு பாராட்டப்படக் கூடியது. எவ்வாறாயினும், சமாதானத்திற்கான யுத்தம் என்பதில் சாதகமான அம்சங்கள் சிலவும் காணப்பட்டன.

உதாரணமாக

(1) வடக்கு, கிழக்கு யுத்தம் இராணுவத் தீர்வொன்றின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட முடியாதது. (2) நீண்ட காலத்தில் அதிதீவிர யுத்தம் ஒன்றை பேணிக் கொள்கின்ற இயலுமை அரசுக்கு இல்லை போன்ற யதார்த்தங்கள் அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டிருந்தன. இப் புரிந்துணர்வின் விளைவே 2001 ஆம் ஆண்டு டிசம்பர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றமையாகும். இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி இனமோதலுக்கு பேச்சுவார்த்தை அடிப்படையிலான சமாதானத் தீர்வுகாணும் கோட்பாட்டை முன்வைத்து போட்டியிட்டிருந்தது. தேர்தலில் வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக்கட்சி ஏனைய சிறுபான்மைக் கட்சிகளுடன் கூட்டிணைந்து ஆட்சி அமைத்தது.

எவ்வாறாயினும், தனக்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் உடனடியாகவே விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்ததன் மூலம் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி "யுத்த நிறுத்த உடன்படிக்கை" ஒன்றை அமுலுக்குக் கொண்டு வந்தது. யுத்த நிறுத்த உடன்படிக்கை காரணமாகவும். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் காரணமாகவும் குறிப்பாக, ஐந்து நிறுவனங்கள் தோற்று விக்கப்பட்டுள்ளன. அவை,

(1) யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு

(2) உடனடி மனிதாபிமான மற்றும் புனருத்தாரண தேவைகளுக்கான உபகுழு

(3) பதற்றத் தணிப்பு மற்றும் இயல்பு நிலைக்கான உபகுழு

(4) அரசியல் விடயங்களுக்கான உபகுழு

(5) பால் விவாகாரங்களுக்கான உபகுழு

இவ்விதம் சமாதானத்தை நிறுவன ரீதியான ஓர் அணுகுமுறையின் மூலம் கட்டியெழுப்ப முற்படுகின்றமை நடைமுறையிலுள்ள சமாதான முயற்சிகளின் ஓர் சிறப்பம்சம் என வர்ணிக்கப்படலாம். இது குறிப்பாக ஒரு மத்தியஸ்தராக நோர்வே ஒஸ்லோவில் கடைப்பிடித்த அணுகு முறையில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். பாலஸ்தீனியர்களுக்கும். இஸ்ரேலியர்களுக்கும் இடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒஸ்லோவில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளில் மோதல் தரப்பினரதும், மத்தியஸ்தரதும் முக்கிய நோக்கமாக இருந்தது, செயற்படக் கூடிய இறுதித் தீர்வு ஒன்றை அடைந்து கொள்ளுதல் ஆகும். எனவே, கீழ் மட்டத்திலான சிந்தனை ஒன்று ஒஸ்லோவில் காணப்படவில்லை.

இது எவ்வாறு இருப்பினும், இலங்கையில் கடைப்பிடிக்கப்படுகின்ற சமாதானத்திற்கான நிறுவன ரீதியான அணுகுமுறை இன்றுவரை உடனடிப் பிரச்சினைகளை கையாள்வதாக உள்ளதே அன்றி அடிப்படைப் பிரச்சினைகளை இட்டு அதிக அக்கறை கொண்டுள்ளதாகக் காணப்படவில்லை. இதற்கான ஒரு காரணம் நடைமுறையிலுள்ள "படிமுறை" அணுகுமுறை சிறந்தது என வாதிடப்படுவதாகும். எனினும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம் என்னவெனில், நடைமுறையிலுள்ள மிக மெதுவான நகர்வு உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோரின் உள்ளார்ந்த நோக்கங்கள் குறித்த சந்தேகங்களை தோற்றுவிக்கக் கூடியது என்பதாகும். இந்நிலை வெற்றிகரமான இறுதித் தீர்வை அடைவதில் சாதகமற்ற ஓர் நிலையை ஏற்படுத்தக் கூடும் என்பதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

மனித உரிமைகள்

எவ்வாறாயினும், இலங்கையில் மனித உரிமைநிலை தொடர்பில் மேலே கூறப்பட்ட ஐந்து நிறுவனங்களில் முதல் இரண்டு முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளன. ஏனெனில், பதற்றத் தணிவு மற்றும் வழமை நிலைக்கான உபகுழு செயலற்றுப் போயுள்ளதுடன், அரசியல் விடயங்களுக்கான உப குழுவின் நடவடிக்கைகள் மேலும் தாமதப்படலாம்.

கண்காணிப்புக் குழுவைப் பொறுத்தவரை அது யுத்த நிறுத்த மீறல்களை கண்காணிப்பதுடன், குறிப்பாக, வடக்கு, கிழக்கில் சாதாரண மக்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்களையும் கண்காணிக்கின்றது. கண்காணிப்புக் குழுவின் முக்கிய நோக்கு அரசியல் விடயங்களிலானதாகக் காணப்பட மனிதாபிமான மற்றும் புனருத்தாரண தேவைகளுக்கான உபகுழுவின் நோக்கு வடக்கு, கிழக்கில் உள்ள மக்களின் குறிப்பாக, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரத் தேவைகளைத் தீர்க்க முற்படுவதாக உள்ளது.

இதற்குப் புறம்பாக யுத்த நிறுத்த உடன்படிக்கை முழு நாட்டினதும் மனித உரிமைகள் நிலையை பெரிதும் மேம்படுத்தியுள்ளது. ஏனெனில், யுத்தத்தில் ஈடுபட்டோரினால் மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் யாவும் யுத்தத்தின் பெயரால் நியாயப்படுத்தப்பட்டிருந்தன. இத்தகைய மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்துவதில் இந்நாட்டின் ஊடகத் துறையும் பெரும்பங்காற்றியிருந்தது. எனினும், தற்போது யுத்த நிறுத்த ஒப்பந்தம் காரணமாக உதாரணமாக உயிர் வாழ்வதற்கான உரிமை, அச்சமின்றி நடமாடுவதற்கான உரிமை, எதேச்சாதிகாரமாக கைது செய்யப்படாதிருக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை போன்றவை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக தமிழ் மக்களின் மனித உரிமை நிலையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக இலங்கையில் மனித உரிமை நிலை பூரணமாக புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது என்ற கருத்துடையது அல்ல. உதாரணமாக அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீள்குடியேற்றப்படுவதில் காணப்படுகின்ற இடர்பாடுகள், நூற்றுக்கணக்கான தமிழ்க் கைதிகள் தொடர்ந்தும் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டிருத்தல், முஸ்லிம் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களுக்கு திரும்பிச் செல்வதில் காணப்படுகின்ற பிரச்சினைகள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருத்தல் போன்றவை எமது மனித உரிமை முறைமையில் காணப்படுகின்ற பலவீனங்களாகும்.

இதன் கருத்து இலங்கையில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள் யாவும் யுத்தம் காரணமாக அல்லது யுத்தத்தில் ஈடுபட்டுள்ளோரின் செயற்பாடுகள் காரணமாக இடம்பெறுபவையே என்பது அல்ல. அதாவது எமது மனித உரிமை முறைமையில் காணப்படுகின்ற பலவீனங்களுக்கு முழுச்சமூகமும் ஒரு வகையில் பொறுப்பேற்க வேண்டும். குறிப்பாக ஊடகத்துறைக்கு இவ்விடயத்தில் அதிகரித்த பொறுப்பும், கடமையும் காணப்படுகின்றன. ஜனநாயக முறைமை ஒன்றில் அடிப்படையான இரு உரிமைகள் காணப்படுகின்றன.

(1) தகவல்களை இடையூறின்றி பெற்றுக் கொள்ளும் சுதந்திரம்

(2) கருத்து வெளியிடும் சுதந்திரம்

இலங்கையில் மக்களின் தகவல்களை பெற்றுக் கொள்ளும் சுதந்திரம் எந்த அளவிற்கு பேணப்படுகின்றது என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் தகவல்கள் "உண்மைகளாக" அன்றி தேசியவாத முலாம் பூசப்பட்ட கருத்துக்களாகவே முன்வைக்கப்படுகின்றன. இந்நிலைக்கு தேசப்பற்று, இனப்பற்று என்பவற்றிற்குப் புறம்பாக வர்த்தக நலன்களும் பெரிதும் காரணமாய் உள்ளன.

எவ்வாறாயினும் விசேட கவனத்திற்குரியது யாதெனில் குறிப்பாகத் தமிழ் ஊடகங்களில் காணப்படுகின்ற கருத்துச் சுதந்திரத்தை பயன்படுத்துவதில் உள்ள நெருக்கடி நிலைமையாகும். தேசிய ரீதியில் பத்திரிகைத் தணிக்கை ஒன்று இல்லாதிருக்கின்ற நிலையிலும் கூட பெருமளவான தமிழ் ஊடகங்கள் "சுயதணிக்கை" ஒன்றை கடைப்பிடிக்கின்றமை தெளிவானது. குறிப்பாக பத்திரிகைகள் தாம் ஏற்றுக்கொண்ட நிலைப்பாட்டிற்கு சார்பான கருத்துக்களை மட்டுமே முன்வைப்பதுடன், பலம் மிக்க அபிப்பிராயத்தை உள்வாங்கிக் கொண்டு அதற்கு இசைவாக செயற்படுகின்றன. இதன் காரணமாக தமிழ் ஊடகங்களில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இந்நாடும் தமிழ்ச் சமூகமும் தமது எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற முக்கியமான ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் உள்ள போதும் கூட அவர்களின் அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலம் பற்றிய அபிப்பிராயங்களை கட்டி எழுப்பக்கூடிய விவாதம் ஒன்று காணப்படவில்லை. குறிப்பாக மக்களின் அபிப்பிராயங்களை தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு எடுத்துக்கூறுகின்ற செயல்முறை ஒன்று நடைமுறையில் இல்லை.

மாறாக, மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு அவற்றை நியாயப்படுத்துகின்ற போக்கே பொதுவானதாக காணப்படுகின்றது. இந்நிலை தமிழ் சமூகத்தின் எதிர்காலம் பொறுத்து சாதகமற்றது மட்டுமல்ல அபாயகரமானதும் கூட.

(11.05.2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

சமாதான செயன்முறை இடைநிறுத்தம்: ஒரு பேச்சுவார்த்தை தந்திரோபாயம்?

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபோது, நீண்டகால யுத்தத்தினால் களைப்படைந்திருந்த இலங்கை மக்கள் அதனை பெரிதும் வரவேற்றனர். ஆர்வமிகுதியில், குறிப்பாக தென்பகுதியில் சில அரசியல்வாதிகளும், பத்திரிகைகளும் இதனை "நிரந்தரமான" யுத்தநிறுத்தம் என வர்ணிக்கத் தலைப்பட்டனர்.

இடைக்கால ஏற்பாடு

உள்ளூர் சிவில் யுத்தங்களில் யுத்த நிறுத்தம் என்பது ஒரு இடைக்கால ஏற்பாடு மட்டுமே அன்றி நிரந்தரமானதல்ல. ஏனெனில் அதன் நிரந்தரத்தன்மை அடையப்படுகின்ற இறுதித் தீர்வின் தன்மையிலேயே பெரிதும் தங்கியுள்ளது. சர்வதேசரீதியாக இன மோதல்களைத் தீர்க்கும் நோக்கில் கையெழுத்திடப்பட்ட, ஆனால் அதேசமயம் இறுதித் தீர்வு எனக் கருதப்பட்ட பல ஒப்பந்தங்கள் தோல்வியடைந்துள்ளன. எனவே இறுதித் தீர்வுகளே நிரந்தரமற்றவையாக இருக்கின்றபோது யுத்தநிறுத்தம் நிரந்தரமானது எனக் கருதுவது யதார்த்தத்திற்குப் புறம்பானதாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் அண்மைக்காலங்களில் தென்பகுதியில் ஏற்பட்டிருந்த இத்தகைய யதார்த்ததிற்குப் புறம்பான அதீத நம்பிக்கைகள் இன்று பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்படுவதில் ஒரு காரணியாக செயற்பட்டுள்ளது எனக் கூறுவது தவறானதல்ல. இத்தகைய அதீத நம்பிக்கைகள் தென்பகுதியில் ஏற்படுவதற்கு பின்னணியில் இருந்த காரணிகளை இங்கு நாம் நோக்கலாம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் ஏற்பட்டிருந்த "தேனிலவு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில காலங்களுக்கு முன்னரேயே முடிவடைந்திருந்தது. இலங்கைக் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடற்பரப்பில் ஏற்பட்டிருந்த பல பிணக்குகளும், அதிஉயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் ஏற்பட்ட இறுக்க நிலையும், குறிப்பாக அண்மைக்காலங்களில் இரு தரப்பினரும் பயன்படுத்தி வந்த வார்த்தைப் பிரயோகங்களும் இத்தேனிலவின் முடிவைச் சுட்டி நின்றன.

இத்தகைய அபிவிருத்திகளுக்கு மத்தியில் கொழும்பில் தீர்மானம் மேற்கொள்பவர்களும், அவர்களுடன் நெருக்கமான ஒரு பிரிவினரும், பேச்சுவார்த்தைகள் சுமூகமாகத் தொடர்வதை இடையூறு செய்யக்கூடிய வகையில் விடுதலைப் புலிகள் எத்தகைய செயல்களிலும் ஈடுபடமாட்டார்கள் என்கின்ற உறுதியான அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர். சுருக்கமாகக் கூறுவதாயின் எத்தகைய சூழ்நிலையிலும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேற மாட்டார்கள் என இப்பிரிவினர் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தனர். இதற்கு பல்வேறு காரணிகள் காணப்பட்டன.

சர்வதேச அபிப்பிராயம்

பிரதானமாக, விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேறுவதற்கு ஏற்ற சர்வதேச சூழ்நிலை காணப்படவில்லை எனக் கருதப்படுகின்றது. 1995 ஆம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணியுடனான பேச்சுவார்த்தைகளிலிருந்து விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக வெளியேறியமை சர்வதேச ரீதியாக அவர்களுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது. இச்சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சர்வதேச அபிப்பிராயத்தைத் தனக்குச் சாதகமாகக் கட்டி எழுப்பிக் கொள்வதில் வெற்றி அடைந்திருந்தது. இதன் ஒரு அங்கமாக விடுதலைப் புலிகள் தொடர்பில் மிக மோசமான அபிப்பிராயம் தோற்றுவிக்கப்பட்டது. பிற்பட்ட காலங்களில் குறிப்பாக மேற்குலக நாடுகளில் விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கமாக பிரகடனப்படுத்தப்பட்டு தடைசெய்யப்படுவதிலும் இந்த ஒருதலைப்பட்ச வெளியேற்றம் செல்வாக்குச் செலுத்தியது. இத்தகைய அபிவிருத்திகள் விடுதலைப் புலிகளின் செய்ற்பாடுகளில் குறிப்பாக அவர்களது இலக்குகளை அடைந்து கொள்வதில் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தியிருந்தன என்பதில் சந்தேகமில்லை.

எனவே இத்தகைய ஒரு தவறை விடுதலைப் புலிகள் மீண்டும் ஒருமுறை இழைக்கமாட்டார்கள் என்கின்ற பொதுவான கருத்து ஒன்று காணப்பட்டது. பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச முனைப்புகள் கூர்மை அடைந்துள்ள நிலையில் இத்தகைய முடிவு தற்கொலைக்குச் சமமானது எனக் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரம்

அடுத்து விரும்பியோ விரும்பாமலோ சமாதான செயல்முறையில் தொடர்ந்திருக்க வேண்டிய "பொருளாதாரத் தேவை" ஒன்று காணப்படுவதாகவும் நம்பப்பட்டது. இம்முறை மோதலில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வந்ததில் பொருளாதாரக் காரணிகள் பெரும் பங்காற்றியிருந்தன என்பதில் ஐயமில்லை. "சமாதானத்திற்கான யுத்தத்தைத்" தொடர்ந்து எவ்விதம் தென்பகுதியில் பொருளாதார நெருக்கடி ஒன்று தோற்றம் பெற்றிருந்ததோ, அவ்விதமே தமது பகுதிகளில் ஏற்பட்டிருந்த மனிதாபிமான நெருக்கடிகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டிய அவசியம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டிருந்தது. வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தைத் தூக்கிநிறுத்தவும், சிதைவடைந்திருந்த அடிப்படைக் கட்டுமானங்களை சரி செய்து கொள்ளவும் பெருந்தொகையான நிதித் தேவை காணப்படுகின்றது.

இதனடிப்படையிலேயே இரு தரப்பினரும் ஒன்றாக இணைந்து சர்வதேச சமூகத்திடம் நிதி உதவி கோரி இருந்தனர். ஒஸ்லோ வட்டப் பேச்சுவார்த்தைகளில் இதற்குச் சாதகமான விளைவு ஏற்பட்டிருந்த போதும் ஜூன் மாதம் ஜப்பானில் இடம்பெறவுள்ள சர்வதேச உதவி வழங்கும் மாநாடே முக்கியமானது. ஏனெனில் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான உதவி உத்தரவாதம் இங்கு கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே பெருந்தொகையான நிதி உதவியை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பை பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதன் மூலம் இழந்துவிட புலிகள் தயாராக இருக்க மாட்டார்கள் என கொழும்பில் உறுதியாக நம்பப்-பட்டது.இக்காரணிகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் "சமாதானப் பொறியில்" சிக்கியுள்ளனர் எனவும் அதிலிருந்து விடுபடுவது இலகுவானது அல்ல எனவும் கூறப்பட்டது.

அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் ஏன் யதார்த்தத்திற்கு புறம்பான அதீத நம்பிக்கையைக் கொண்டிருந்தது என்பதற்கு பேச்சுவார்த்தை தரப்பினர் இருவருக்குமிடையில் ஏற்பட்டிருந்த இணக்கத்தின் பண்பும் ஒரு காரணி எனக் கூறப்படலாம். மோதல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுபவர்களுக்கிடையில் ஏற்படக்கூடிய நெருக்கமான, நல்லிணக்கமான உறவு பேச்சுவார்த்தைகளின் விளைவில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது எனக் கோட்பாட்டாளர்கள் கருதுகின்றனர். எனினும் இவ்வுறவு ஒரு எல்லையைத் தாண்டுகின்ற போது தவறான அபிப்பிராயங்களுக்கும், முடிவுகளுக்கும் இட்டுச் செல்லக் கூடியது என்பது கவனத்திற்குரியது. இம்முறை பேச்சுவார்த்தைகளின் போது இருதரப்பினரும் "பங்காளிகள்" போன்று செயற்பட்டதுடன் தனிப்பட்ட வகையிலும் மிக நெருக்கமான உறவு ஏற்பட்டிருந்தது. இது பாராட்டிற்குரியதே. ஆயினும், தீர்க்கப்பட வேண்டிய பாரதூரமான பிரச்சினைகள் தீர்க்கப்படாமலே இருந்தபோது இவ்வித மிக நெருங்கிய உறவும் யதார்த்தத்திற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறம்பானதாகவே இருந்தது. எனவே பேச்சுவார்த்தைகளுக்கான சமூகமான சூழ்நிலை ஒன்றைத் தோற்றுவிக்கின்ற அதேசமயம் "பாதுகாப்பான இடைவெளி" ஒன்றைப் பேணிக்கொள்கின்றமை பயனுடையதாயிருந்திருக்கும். பேணப்பட்ட உறவின் பண்பு விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு, அவர்களின் தேவை என்பவை பற்றிய மயக்க நிலையை அரசாங்க உறுப்பினர்களிடையே ஏற்படுத்தியிருந்தது. இரு தரப்பினரிடையேயும் தோன்றியிருந்த மிக நெருக்கமான உறவு விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகிக் கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தியது. இந்நம்பிக்கை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இணங்கப்பட்டிருந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதிலும், தமிழ் மக்களின் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் அரசாங்க உறுப்பினர்களிடையே ஒருவித அசமந்தப் போக்கை ஏற்படுத்தியிருந்தது.

இவற்றிற்குப் புறம்பாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இணங்கப்பட்ட விடயங்கள்நடைமுறைப்படுத்தப்படாதிருந்தமைக்கு அரசாங்கத்திடம் போதிய நிதிவளம் இல்லாதிருந்தமை, பொதுத்துறை செயலின்மை அல்லது பொதுத்துறையின் மந்தப்போக்கு என்பவையும் காரணிகளாய் இருந்துள்ளன என்பது மறுக்கப்படுவதற்கில்லை.

எவ்வாறாயினும் அரசாங்கத்தின் மெதுவான நகர்வு குறிப்பாக விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தில் அதிருப்தியையும், விரக்தியையும் ஏற்படுத்தியமை ஆச்சரியத்திற்குரியதல்ல. விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து கூறப்படுவது போல் அவர்களது அதிருப்தி நடைபெற்ற இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது அரச தரப்பு பிரதிநிதிகளிடம் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும் விடுதலைப் புலிகளின் அதிருப்தி அவர்களின் கடந்தகால செயற்பாடுகள் பலவற்றிலிருந்து தெரிய ஆரம்பித்திருந்தது. எனினும் துரதிஷ்டவசமாக அரசாங்கம் இத்தகைய அபிவிருத்திகளை கவனத்தில் எடுக்கவில்லை.

அதிரடி நடவடிக்கை

எனவே அரசாங்கத்திற்கு யதார்த்த நிலையை உணர்த்துவதற்கு அதிரடி நடவடிக்கை ஒன்று அவசியமாயிருந்த நிலையில் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொள்ள புலிகள் தீர்மானித்துள்ளனர். ஒரு யுத்த சூழ்நிலையின் கீழ் எவ்விதம் மோதல் தரப்பினர் வேறுபட்ட தந்திரோபாயங்களைக் கையாள்கின்றனரோ அதே போன்று பேச்சுவார்த்தைகளிலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வேறுபட்ட தந்திரோபாயங்களைக் கையாள்வது பொதுவானது. அதேபோன்று பேச்சுவார்த்தைகளில் ஏற்ற இறக்கங்கள் காணப்படுவதும் பொதுவானது.

எனவே இருக்கின்ற சூழ்நிலையில் அதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்ற வகையில் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொள்வது உகந்தது என புலிகள் உணர்ந்தமையினால் அவ்விதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டுள்ளனர். ஆயினும் முக்கியமானது யாதெனில் இத்தகைய தந்திரோபாயங்கள் தமக்குச் சார்பாக அதிகப்படியான நன்மைகளை அடைந்து கொள்ளும் நோக்கில் பயன்படுத்தப்பட வேண்டுமே அன்றி தந்திரோபாயமே இறுதி இலக்காக மாறிவிடக்கூடாது. எனவே தேவைக்கேற்ப இறுக்கநிலையைப் பிரயோகிப்பது போன்றே தேவைக்கேற்ப விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்வதும் அவசியமானது.

ஏனெனில் (1) இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையானோர் நீதியான, கௌரவமான சமாதானத்தை விரும்புகின்றனர், (2) பேச்சுவார்த்தைகள் அற்ற நிலையில் யுத்தம் மீள ஆரம்பிக்கப் படுவதற்கான அபாயம் அதிகமானது. பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் இருதரப்பிலும் இருந்து கூறப்பட்ட ஒரு முக்கியமான விடயம் எத்தகைய சூழ்நிலையிலும் யுத்தத்திற்கு மீளச் செல்வதில்லை என்பதாகும். இதுவும் கூட யதார்த்த நிலையில் சாத்தியமான எதிர்பார்ப்பு அல்ல. ஏனெனில் பேச்சுவார்த்தைகள் அற்ற நிலையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை பலவீனமானதொரு கருவிமட்டுமே ஆகும். அதன் செயற்பாட்டுத்தன்மை நிலையான சமாதானம் அடையப்படலாம் என்கின்ற "எதிர்பார்ப்பிலேயே" தங்கி உள்ளது.

அதேசமயம், உதாரணமாக, நீண்டகாலத்தில் பேச்சுவார்த்தைகள் இல்லாத நிலையில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை அவர்கள் தொடர்ந்தும் வைத்திருக்க இலங்கை இராணுவம் அனுமதிக்கும் எனவோ, அல்லது யுத்த நிறுத்த உடன்படிக்கையின் கீழ் இழக்கப்பட்ட தமது கடற்கட்டுப்பாட்டை விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் அனுமதிப்பர் எனறோ எதிர்பார்ப்பதற்கில்லை. எனவே சமாதானப் பேச்சுவார்த்தைகள் அற்ற நிலையில் யுத்த நிறுத்தம் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும் என்பது நடைமுறைச் சாத்தியம் அற்றது என்பது அனைவரினாலும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(18. 05. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

சகவாழ்வுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியும் அதன் தாக்கங்களும்

விடுதலைப் புலிகள் அடுத்த மாதம் ஜப்பானில் இடம்பெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்வார்களா? சமாதானப் பேச்சுவார்த்தைகள் சுமூக நிலைக்குத் திரும்புமா? போன்ற கேள்விகளை இரண்டாம் நிலைக்குத் தள்ளுகின்ற வகையில் கடந்த வாரம் அபிவிருத்தி லொத்தர் சபையை கையேற்கும் ஜனாதிபதியின் தீர்மானம் அமைந்தது. சகவாழ்வு என்ற பெயரில் ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் இதுவரை இடம்பெற்று வந்த இழுபறி நிலை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் திகதிக்குப் பின்னர் வெடிப்பு நிலையை அடையும் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் அப்போது எதிர்பார்த்த அளவு தீவிரத் தன்மை உடைய எதுவும் இடம்பெறவில்லை. எனவே தற்பொழுது ஏற்பட்டுள்ள விரிசல் சற்றுத் தாமதமாகவே ஏற்பட்டுள்ளது எனப்படலாம்.

அரசாங்கம் : வலுவற்ற வாதம்

அரசியலமைப்பின்படி நாட்டின் நிர்வாக அதிகாரங்கள் தெளிவான வகையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ள ஒரு நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி தாம் "பிந்தித் தெரிவு செய்யப்பட்டவர்கள்" என்கின்ற வாதத்தின் அடிப்படையிலேயே அரச அதிகாரங்கள் யாவற்றையும் பூரணமாகப் பயன்படுத்தி வந்தது. இவ் வாதத்தின் அடிப்படை யாதெனில், மக்கள் இறுதியாக வழங்கிய தீர்ப்பின் மூலம் தாம் முன்னர் தேர்தலில் வழங்கிய தீர்ப்புகளைச் செயல் இழக்கச் செய்துள்ளனர் என்பதாகும். எனவே 2001 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியடையச் செய்ததன் மூலம் மக்கள் ஜனாதிபதியை நிராகரித்துள்ளனர் எனவும் கூறப்பட்டது. மக்களால் பிந்தித் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் என்கின்ற வகையில் இந்நாட்டை வழிநடத்திச் செல்கின்ற உரிமை தமக்கே உரியது என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் வாதமாகும். இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலேயே தற்போதும் அபிவிருத்தி லொத்தர் சபை கையேற்கப்-பட்டமையை அரசாங்கம் எதிர்க்கின்றது. இவ்வாதம் அடிப்படையில் "அரசியல்" ரீதியானதும், "நெறிமுறை" சார்ந்த ஒன்றும் ஆகும் என்பது கவனத்திற்குரியது.

இவ்வாதத்தில் காணப்படுகின்ற பிரதானமான பிரச்சினை யாதெனில் அதற்கு சட்டவலு எதுவும் இல்லை என்பதாகும். அதாவது இவ்வாதம் நீதிமன்றத்தில் எடுபடாது. இதன் காரணமாக இந்த நெருக்கடியில் அரசாங்கத்தின் நிலை பலவீனமானதாகவே காணப்படுகின்றது.

குறிப்பாக உயர் நீதிமன்றத்தின் கட்டமைப்பு, அரசாங்கத்தின் நிலையை மேலும் பலவீனப்படுத்துவதாக அமைகின்றதே அன்றி எவ்வகையிலும் உதவக் கூடியதாக இல்லை. அதற்கான பிரதான காரணம் உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் சரத் என் சில்வா ஜனாதிபதி குமாரதுங்கவின் காலத்தில் சட்டமா அதிபராக இருந்து பின்னர் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டவர் என்பதாகும். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பிற்கான 19 ஆவது திருத்தச் சட்டமூலம் உயர்நீதிமன்றத்தினால் அரசியலமைப்பிற்கு முரணானது எனத் தீர்ப்பளிக்கப்பட்டமையினால் இவ்விடயத்தில் அரசாங்கத்தின் முயற்சி தோல்வி யடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே, அபிவிருத்தி லொத்தர் சபை கையேற்கப்பட்ட விவகாரத்தில் அரசாங்கத்திற்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான முரண்பாடுகள் கூர்மையடையுமாயின் விடயம் உயர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட வேண்டி தேவை ஏற்படும் என்பதும் அத்தகைய ஒரு கட்டத்தில் தமது நிலை மிகப் பலவீனமானது என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியாதது அல்ல. அவ்வகையில் அரசாங்கம் சட்டரீதியற்ற மாற்று வழிமுறைகள் பற்றிச் சிந்திக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

சக ஜீவனம்?

இதற்குப் புறம்பாக அரசாங்கம் வலியுறுத்திக் கூறியுள்ள இன்னுமோர் விடயம், ஜனாதிபதி அரசியல் சக ஜீவனத்திற் கெதிராக நடந்து கொள்வதன் மூலம் சமாதான முயற்சிகளுக்கு ஊறு விளைவிக்கின்றார் என்பதாகும். இதன் காரணமாக நாடு மிக மோசமான நெருக்கடியை நோக்கி சறுக்கி விடக்கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இங்கு இரண்டு விடயங்கள் கூறப்படுகின்றன. ஒன்று ஜனாதிபதி சகஜீவனத்திற்கு ஊறு விளைவிக்கின்றார் என்பதும், இரண்டாவது இதனால் சமாதான முயற்சிகள் சீர்குலையலாம் என்பது மாகும்.இவற்றுள் இரண்டாவது அம்சம் சரியானதே ஆயினும் சகஜீவனம் முறிவடைந்து விட்டது என்பது சரியானது அல்ல. ஏனெனில், ஆரம்பம் முதலே இங்கு சகஜீவனம் என்கின்ற ஒன்று காணப்பட்டிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி, அரசாங்கம் எனப்படுகின்ற இரண்டு அரசியலமைப்பு நிறுவனங்கள் வேறுபட்ட காலங்களில் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும், இரண்டும் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட (அதன் காரணமாக) இறைமையுடைய நிறுவனங்களாகும். இரு நிறுவனங்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களால் கட்டுப்படுத்தப்படுகின்ற போது பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பில்லை என்பது வரலாற்று ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், இரு நிறுவனங்களும் வெவ்வேறு கட்சிகளைச் சார்ந்தவையாக இருக்கின்ற போது ஏற்படுகின்ற நெருக்கடிக்கு, அரசாங்கம் கூறுவது போல் சகஜீவனம் தான் தீர்வாக இருந்திருக்குமாயின் இரு நிறுவனங்களும் அதிகாரங்களைத் தம்மிடையே பகிர்ந்து கொண்டு தமக்களிக்கப்பட்ட அதிகாரத்தினுள் இருந்து செயற்பட்டிருத்தல் வேண்டும்.

2001 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னர் இரு கட்சிகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியம் பற்றி எச்சரிக்கப்பட்டபோது, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இத்தகைய நிலை காணப்படுவதாகவும் எனவே அது ஒரு பிரச்சினையாக மாற வாய்ப்பில்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சியினால் கூறப்பட்டது. எனவே பிரான்ஸ் ஒரு முன்மாதிரியாகக் கொள்ளப்பட்டிருக்குமாயின், உதாரணமாக வெளிவிவகாரம், பாதுகாப்பு போன்ற பொறுப்புக்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டு குறிப்பாக உள்நாட்டு நிர்வாகப் பொறுப்புக்கள் அரசாங்கத்தினால் கையேற்கப்பட்டிருக்க வேண்டும். இவ்விதமான ஒரு ஏற்பாடு சகஜீவனத்தின் வெளிப்பாடாக அமைந்திருக்கும்.

ஆயினும் நடைபெற்றது யாதெனில், தாம் "பிந்தி" தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற வாதத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசிய முன்னணி எல்லா அதிகாரங்களையும் தானே கைப்பற்றிக் கொள்கின்றமையாகும். அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு சமாதானமாகச் செயற்படுவதற்கான முயற்சி ஒன்றாயினும் மேற்கொள்ளப்பட்டது எனக் கூறமுடியாது.

எனவே, அரசியலமைப்பு ரீதியாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒரு இரவில் சம்பிரதாய பூர்வமான ஒரு தலைவராக மாற்றப்பட்டார். இதற்கு அப்போது காணப்பட்ட அரசியல் சூழ்நிலை ஒரு காரணியாக செயல்பட்ட அதேநேரம், பொதுவாக எமது அரசியல் கலாசாரம் இத்தகைய விட்டுக் கொடுப்புகளுக்கும், சமாதான சகஜீவனத்திற்கும் இடமளிக்கவில்லை என்பதும் ஒரு காரணியாகும்.

எவ்வாறாயினும், இறுதி நிலையில் இரு நிறுவனங்களுக்குமிடையில் ஏற்பட்ட போட்டியில் ஒரு நிறுவனம் பூரணமாக வெற்றியடைய மற்றது பூரணமாக தோல்வியடைந்திருந்தது. இது எவ்விதம் சமாதான சகவாழ்வு ஆக முடியும்? எனவே ஜனாதிபதியின் நிலை அடிபட்ட பாம்பைப் போன்றே அன்றி வேறில்லை. அவ்வகையில் அவரது தற்போதைய செயற்பாடு ஆச்சரியப்படத்தக்கதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் 5

எவ்வாறாயினும் நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இது தாமதப்படுத்தப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கான முட்டுக்கட்டை டிசம்பர் மாதம் 5 ஆம்திகதி நீக்கப்பட்ட உடனேயே இது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறாயின் ஏன் இந்தக் காலதாமதம்?

இதற்கு இரண்டு காரணிகள் காணப்பட்டன. முதலில் டிசம்பர் 5 ஆம்திகதி பற்றி மக்களிடையே பாரிய எதிர்பார்ப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது. குறிப்பாக ஐ.தே.முன்னணிக்கு ஏற்கனவே காணப்பட்ட அரசியல் ஆதரவு பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கோ அல்லது அரசாங்கத்தின் செயற்பாடுகளை சீர்குலைக்கும் நடவடிக்கைகளுக்கோ எதிராகக் கட்டி எழுப்பப்பட்டிருந்தது. எனவே இத்தகைய நடவடிக்கைகளில் ஜனாதிபதி உடனடியாக ஈடுபட்டிருப்பாரேயானால் அது பாரதூரமான அரசியல் விளைவுகளை ஏற்படுத்தியிருக்கக் கூடும். இத்தகைய ஒரு நிலை புத்திசாலித்தனமாகத் தவிர்க்கப்பட்டது என்றே கருதப்படவேண்டும்.

இரண்டாவதாக, ஜனாதிபதியின் அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கை என்பது அதன் செயற்பாடுகளை அச்சுறுத்துவதை இலக்காகக் கொண்டதல்ல. மாறாக, நோக்கம் இழந்த அதிகாரங்களையும் அரசாங்கத்தையும் கைப்பற்றுவதாகும். நாட்டின் அரசியல் மனோநிலையையும், பாராளுமன்ற ஆசனப்பகிர்வு முறையையும் அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற போது, அரசாங்கத்தைக் கைப்பற்றுவதென்பது பொதுஜன முன்னணியினால் தனித்து வெற்றியடைய முடியாத ஒரு இலக்கு என்பது எவருக்கும் புரியக்கூடியது. எனவே இதற்கு ஒரு புதிய அரசியல் கூட்டு தேவைப்பட்டது. அத்தகைய கூட்டுக்கு பொருத்தமான ஒரே கட்சி ஜனதா விமுக்தி பெரமுன மட்டுமே ஆகும்.

பொ.ஐ.மு. - ஜே.வி.பி.கூட்டு

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜனதா விமுக்தி பெரமுனவுடன் கூட்டுச் சேர்வது என்பது புதிய ஒரு விடயமோ அல்லது கடினமான அம்சமோ அல்ல ஏனெனில் 2001 ஆம் ஆண்டு கவிழ்வதற்குத் தயாராக இருந்த பொ.ஐ.மு. அரசாங்கத்தை தூக்கி நிறுத்துவதற்கான ஒரு ஏற்பாடாக இவ்விரு கட்சிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டதுடன் "தகுதிகாண்" அரசாங்கம் ஒன்றைத் தோற்றுவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. எனவே ஜே.வி.பி உடன் கூட்டு என்பது ஒரு பிரச்சினை அல்ல, பிரச்சினை பொதுவாக இனப் பிரச்சினையையும், குறிப்பாக விடுதலைப் புலிகளுடனான தற்போதைய பேச்சுவார்த்தைகளையும் எவ்விதம் கையாள்வது என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் கருத்து ஜே.வி.பி. இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வையும், புலிகளுடனான பேச்சுவார்த்தைகளையும் எதிர்க்க, பொ.ஐ.மு. அவற்றை ஆதரித்து அடம் பிடிக்கின்றது என்பதல்ல. உண்மையில் தேவை ஏற்படின் இனப் பிரச்சினை தொடர்பில் எதனையும் விட்டுக்கொடுக்கக்கூடிய நிலையிலேயே பொ.ஐ.மு.உள்ளது. ஆனால், பொ.ஐ.மு.வைப் பொறுத்த வரையில் துரதிர்ஷ்டவசமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குச் சாதகமாக சர்வதேச அபிப்பிராயம் காணப்படவில்லை. பொ.ஐ.மு.வின் பேச்சு வார்த்தைகளைக் குழப்பும் எத்தகைய நடவடிக்கைகளும் பாரதூரமான சர்வதேச விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. எனவே புதிய அரசாங்கம் ஒன்று ஏற்படுகின்ற நிலையிலும் கூட பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு ஜே.வி.பி.யை இணங்கச் செய்வது அவசியமானதாகக் காணப்பட்டது.

ஆயினும் கொள்கை ரீதியாக ஜே.வி.பி அதிகாரப்பரவலாக்கல், அரசியல் பேச்சுவார்த்தைகள் என்பவற்றுக்கு எதிரானது. 2001 ஆம் ஆண்டின் பொ.ஐ.மு. - ஜே.வி.பி புரிந்துணர்வு ஒப்பந்தம், அதிகாரப் பரவலாக்கம், மற்றும் பேச்சுவார்த்தைகள் என்பவற்றைத் தடைசெய்திருந்ததும் இங்கு நினைவு கூறத்தக்கது. பேச்சு வார்த்தைகளைத் தொடர்வது என்பது அதிகாரப் பரவலாக்கம் என்பதுடன் பின்னிப்பிணைந்தது என்பதனால் இதற்கு ஜே.வி.பி.யை இணங்கச் செய்வது இலகுவானதாகக் காணப்படவில்லை. இதன் காரணமாகவே ஜனாதிபதியின் எதிர் நடவடிக்கைகள் தாமதப்பட்டிருந்தன.

இனப்பிரச்சினையை எழுதாது விடல்

இத்தகைய ஒரு பின்னணியில் அபிவிருத்தி லொத்தர் சபை கையேற்கப்பட்டமை பொ.ஐ.மு., ஜே.வி.பி. என்பவற்றிற்கிடையிலான அதிகரித்து வரும் இணக்கத்தைச் சுட்டி நிற்கின்றது. பக்கச் சார்பற்ற ஒரு நிலையிலான இவ்விரு கட்சிகளுக்கிடையிலான பிணக்கை நோக்குவோமாயின் அதற்கான எளிமையான தீர்வு, கையெழுத்திடப்படவுள்ள ஒப்பந்தத்தில் இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களைக் குறிப்பிடாது விடுதலாகும். இது ஜே.வி.பி.யின் "கௌரவத்திற்கு" சற்று இழுக்கை ஏற்படுத்துமேயாயினும் நடைமுறை ரீதியாக அவர்களுக்குப் பயனுடையது. இதன் அடுத்த பக்கம் யாதெனில் அதிகாரப் பகிர்வு, பேச்சுவார்த்தை என்பவற்றிற்கு எதிரான நிலைப்பாட்டை (எழுத்துருவில் பதிக்காமல்) நடைமுறையில் செயற்படுத்துவதாகும். எனவே புதிய அரசியல் கூட்டு நடைமுறைக்கு வருகின்றபோது சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நிச்சயமான, விரும்பத்தகாத தாக்கங்களைக் கொண்டிருக்கும்.

எனவே, அபிவிருத்தி லொத்தர் சபை ஜனாதிபதியால் கையேற்கப்-பட்டமை தனிமைப்படுத்தப்பட்ட ஒரு விடயம் அல்ல. அது அண்மைக்கால அரசியல் பரிமாணங்கள் பலவற்றுடன் தொடர்புடையது என்பதுடன் நீண்டு செல்லக்கூடிய இயலுமை உடைய நெருக்கடியின் ஆரம்பம் எனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படலாம். அதிதீவிர மட்டத்தில் அது புதிய தேர்தல் ஒன்றிற்கு வழிவிடக் கூடும் என்பதுடன், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்வதிலும் அல்லது மீண்டும் நாடு யுத்தப் பாதைக்கு இட்டுச் செல்லப்படுவதிலும் செல்வாக்கு செலுத்தக்கூடியது. அவ்வகையில் இந்நெருக்கடி நாட்டின் கவனத்தை குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு தன்னகத்தே வைத்திருக்கக் கூடியது.

(25. 05. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

டோக்கியோ மாநாடும் வட கிழக்கு அபிவிருத்தி நெருக்கடிகளும்

ஒரே நேரத்தில் பெருந்தொகையில் உயிரிழப்புக்கள் ஏற்படுவது இந்நாட்டில் ஒரு பழக்கமாகிவிட்டதாலோ என்னவோ, யுத்தமற்ற நிலையிலும் கூட நூற்றுக்கணக்கில் மக்களைப் பலி கொடுக்கவேண்டியதாயிற்று. இம் முறை துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பதிலாக இயற்கை காரணமாக அமைந்துவிட்டது. வெள்ள அனர்த்தம் குறிப்பாக தென் இலங்கையின் வறுமை கூடிய பகுதிகளிலேயே பெரிதும் தாக்கத்தையேற்படுத்தி இருப்பதனால் அழிவுகளைச் சரி செய்து கொள்ளவும், வாழ்க்கையை வழமை நிலைக்கு இட்டுச் செல்லவும் அதிக காலம் எடுக்கலாம். எமக்கிடையிலான வேறுபாடுகளை மனதிற் கொள்ளாமல் பாதிப்புற்ற மக்களுக்கு உதவ வேண்டியது அனைவரது கடமையுமாகும்.

வெள்ள அனர்த்தமும் நல்லெண்ணமும்

எவ்வாறாயினும், மனிதாபிமான ரீதியானதும், சமூகப் பொருளாதார ரீதியானதுமான இவ்வழிவின் அரசியல் முக்கியத்துவம் வடபகுதியிலிருந்து தென்பகுதி நோக்கி அனுப்பிவைக்கப்பட்ட உதவிப் பொருட்களாகும். ஒப்பீட்டளவில் அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருட்களின் அளவு சிறிதாயினும் அதன் அரசியல் முக்கியத்துவம் பெருமதிப்புடையதாகும். இந்நாட்டின் இனக் குழுக்களுக்கிடையிலான மோதல்களுக்கும் பிணக்குகளுக்குமான பிரதான காரணிகளில் ஒன்று, இரு தரப்புக்கும் இடையில் காணப்பட்ட அச்சமும், சந்தேகமுமாகும். கடந்த காலங்களில் இரு தரப்பினருக்கும் இடையிலான நல்லெண்ண நடவடிக்கைகள் மிகக் குறுகிய மட்டத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.யுத்தம் தீவிர நிலையை அடைந்த போது தொடர்புகள் முற்றாகவே அற்றுப் போனமை மோதலை மோசமான நிலைக்குக் கொண்டு சென்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டில் உண்மையான சமாதானம் அடையப்பட வேண்டுமாயின் அதற்கு அரசியல் ஒப்பந்தங்கள் மட்டும் போதுமானதாக இருக்கப் போவதில்லை. இதற்கு சாதாரண மக்களிடையே நம்பிக்கையும், நல்லிணக்கமும் ஏற்பட வேண்டியதவசியம். இந்த நம்பிக்கையும், நல்லிணக்கமும் அரசியல் ரீதியான பலன்களைக் கொண்டு வரக் கூடியவை. உதாரணமாக, அரசியல் ரீதியாக இறுதித் தீர்வு ஒன்று அடையப்படுமாயின் எமது அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மக்கள் அனுமதியின்றி அது அமுல்படுத்தப்பட முடியாது. அதாவது அடையப்படுகின்ற எந்தவொரு தீர்வும் மக்கள் தீர்ப்பு ஒன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனவே, ஒரு வகையில் நோக்குவோமாயின் "இறுதி முடிவு" மக்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.

எனவே, வெற்றிகரமான சமாதான முயற்சி ஒன்றிற்கு அடையப்படுகின்ற தீர்வை அங்கீகரிக்கின்ற வகையில் மக்கள் "தயார்" செய்யப்படுதல் அவசியம். துரதிஷ்ட வசமாக இவ்விடயம், தொடர்புடையவர்களினால் இதுவரை கவனத்தில் எடுக்கப்படவில்லை. உடனடி நிலையில் முற்றுமுழுதான கவனமும் உயர் மட்ட அரசியல் செயல்முறையிலேயே குவிக்கப்பட்டுள்ளது. இது புத்திசாலித்தனமான ஒரு அணுகு முறையல்ல.

அவ்வகையில் தென் பகுதியில் வெள்ள அனர்த்தத்தினால் குறிப்பாக சிங்களப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டவுடன் உதவிகளை அனுப்பத் தீர்மானித்தமை பாராட்டப்பட வேண்டிய மனிதாபிமானச் செயல்முறை என்பதுடன், அரசியல் ரீதியில் புத்திசாலித்தனமான ஒரு நடவடிக்கையுமாகும். இந்த நடவடிக்கை ஒரு சிறிய மட்டத்திலாயினும் தமிழ் மக்கள் மீதான தென்பகுதி மக்களின் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் அதிகரிக்கக்கூடியது.

இனி எமது பார்வையை அரசியல் மட்டத்திற்குத் திருப்புவோமாயின் துரதிஷ்டவசமாக, பெருநம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகள் எல்லா வகையிலும் செயற்பாடற்ற நிலையில் முடக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் வாஷிங்டனில் இடம் பெற்ற, ஜப்பான் மகாநாட்டிற்கு முன்னோடியான கூட்டத்தில் பங்கு பற்ற முடியாமையினால் ஏற்பட்ட இறுக்க நிலை இன்று மிக விரைவாக அபிவிருத்தியடைந்து இடைக்கால நிர்வாக சபை பற்றிய சிக்கலில் வந்து நிற்கின்றது.

சிறிய பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது அவற்றிற்கு உடனுக்குடன் தீர்வு காணப்படாவிடின் அவை எவ்விதம் பெரும் பிரச்சினைகளாக மாற்றமடைந்து நெருக்கடி நிலையை ஏற்படுத்தக் கூடும் என்பதற்கு இது நல்லதொரு உதாரணம் ஆகும். இலங்கை அரசு இத்தவறை மேற்கொள்வது இது முதற் தடவை அல்ல. தமிழர்கள் தமது அரசியல் பிரச்சினைகளை பாராளுமன்ற மட்டத்தில் முறையிடுகின்ற போது தீர்க்கதரிசனத்துடன் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் இன்று இந்நாடு முற்றிலும் வேறுபட்ட நிலையில் இருந்திருக்கக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடிப் பிரச்சினை

எவ்வாறாயினும், உடனடி நிலையில் எம்முன் இரண்டு பிரதான பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவை (1) விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்புவதுடன் ஜப்பான் மகாநாட்டில் கலந்து கொள்தல் (2) இடைக்கால நிர்வாக சபை தொடர்பிலான நெருக்கடி.இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாயினும் வெவ்வேறாக ஏற்பட்ட பிரச்சினைகள் ஆகும்.

புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொள்வதற்கு பின்னணியில் செயற்பட்ட பிரதான காரணி ஜப்பான் மகாநாட்டிற்கு முன்னோடியாக அமைந்த வாஷிங்டன் கூட்டத்தில் புலிகள் கலந்து கொள்ளமுடியாமற் போனமையாகும். ஜப்பானில் இடம் பெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மகாநாட்டிற்கு முன்னோடியாக ஒன்றிற்கு மேற்பட்ட கூட்டங்கள் வெவ்வேறு நகரங்களில் இடம்பெறும் என ஆரம்பத்தில் இணங்கப்பட்டிருந்தது. அவற்றில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் பங்கு பற்றுவதாகவும் இணங்கப்பட்டிருந்தது. எனினும், முன்னோடிக் கூட்டங்களாக அமைந்திருக்க வேண்டிய ஏனைய மகாநாடுகள் யாவும் ரத்துச் செய்யப்பட்ட நிலையில் வாஷிங்டன் கூட்டம் முக்கியமானதாக மாற்றமடைந்திருந்தது. அத்தகைய கூட்டத்தில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரும் சமமான மட்டத்தில் கலந்து கொண்டிருக்க வேண்டியதும் அவசியமானது.

வாஷிங்டன் கூட்டத்தில் புலிகள் கலந்து கொள்ளக்கூடிய சட்டரீதியான சூழ்நிலைகள் காணப்படவில்லை என்கின்ற வாதம் சரியானதேயாயினும், இத்தகைய செயற்பாட்டின் மூலம் பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட சுமூகத் தன்மையை அமெரிக்கா சேதப்படுத்தி விட்டது என்பதே உண்மையானது. இனமோதல் மற்றும் உள்ளூர் யுத்தம் என்பவை உக்கிரமான ஒரு நிலையில் தொடர்ந்து கொண்டிருந்த வேளையில், மோதலைச் சுமூகமாகத் தீர்க்கக்கூடிய எந்த ஒரு செயற்பாட்டிலும் அமெரிக்கா ஈடுபட்டிருக்கவில்லை. தனது தலைமையிலான, இருக்கின்ற அரசுகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச அமைப்பை அவ்விதமே பேணிக் கொள்கின்ற கொள்கையின் ஒரு விரிவுபடுத்தப்பட்ட செய்முறையே இராஜதந்திர, பொருளாதார மற்றும் இராணுவ ரீதியில் அமெரிக்கா இலங்கை அரசுக்கு அளித்து வந்த ஆதரவு ஆகும். இலங்கையின் இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதில் காட்டிய அக்கறையை சிறுபான்மைக் குழுக்களின் உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதை எடுத்துக் கூறுவதில் அமெரிக்கா காட்டியிருக்கவில்லை.

அவ்வகையில் அமெரிக்காவின் செயற்பாடு சமாதானப் பேச்சு வார்த்தைகளின் சுமூக நிலையைப் பாதித்தது என்பதுடன் அதற்கான விலையை இப்போது ஜப்பான் செலுத்த வேண்டியுள்ளது. எனினும், அமெரிக்காவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செயற்பாட்டைக் கண்டிக்கக் கூடிய நிலையில் நாம் காணப்படவில்லை. அதன் காரணமாகவே இலங்கை அரசு மீதான கண்டனங்கள் தீவிரத் தன்மை மிக்கவையாகக் காணப்பட்டன. எனினும், வாஷிங்டனுக்குத் தனித்துச் செல்வதன் மூலம் பேச்சுவார்த்தைகளின் சுமூகத் தன்மை பாதிக்கப்படும் என்பது தெரிந்தும், அதனை மேற்கொண்ட இலங்கை அரசுக்குத் தற்போதுள்ள சிக்கலைத் தீர்த்து வைப்பதில் அதிக பொறுப்பு உண்டு.

எவ்வாறாயினும், புலிகளின் பங்குபற்றுதல் அற்ற நிலையில் வாஷிங்டன் கூட்டம் முறையே நடந்தேறியுள்ளது என்பதும் எவ்வகையான உதவி அளிக்கப்படும் என்பது குறித்து உதவி வழங்கும் நாடுகளிடையே காணப்பட்டுள்ள மிதமான இணக்கப்பாடும், இச்செயன்முறையில் புலிகளின் முக்கியத்துவத்தைப் பலவீனப்படுத்தியுள்ளன என்பதில் சந்தேகமில்லை. எனவே, எதிர்ப்புகள் அற்ற நிலையில் புலிகள் ஜப்பான் மகாநாட்டில் கலந்து கொண்டிருப்பார்களேயாயின் அது இப்பலவீனத்தை உறுதிப்படுத்தியிருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

புலிகளின் அக்கறை

எனவே, ஏதோ ஒரு வகையில் தமது அதிருப்தியையும், எதிர்ப்பையும் வெளிப்படுத்த வேண்டிய ஒரு நிலையில் புலிகள் காணப்பட்டனர். அவர்களது கடந்தகால நடத்தைகளின் அடிப்படையில் நோக்குகையில் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக வெளியேறுவது போன்ற பாரிய தீர்மானங்களும், இறுக்கமான போக்கும் ஆச்சரியப்படத்தக்கவை அல்ல.

எனினும், புலிகளின் தீர்மானம் வாஷிங்டன் கூட்டத்துடன் மட்டும் தொடர்புடையது எனக் கருதுவது பொருத்தமற்றதாகும். ஏனெனில், ஜப்பான் மகாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பில் இதனிலும் முக்கியமான பிரச்சினைகள் காணப்பட்டிருந்தன.

சர்வதேச உதவி என்பது பொதுவாக நிபந்தனைகள் அற்ற வகையில் வழங்கப்படுவதில்லை. நிபந்தனைகள் பல்வேறு பட்டவையாக அமையலாம். உதாரணமாக, உலக வங்கி போன்றவை வழங்குகின்ற நிதியுதவிகள் பொருளாதார சீரதிருத்தம், தனியார் மயப்படுத்தல் போன்ற நிபந்தனைகளுடன் வழங்கப்படுவதுண்டு. ஆயினும், ஜப்பானில் நிபந்தனைகள் பெருமளவிற்கு மனித உரிமை, ஜனநாயகம், பல்லின அரசியல் போன்றவற்றை மையமாகக் கொண்டிருந்திருக்கலாம்.

குறிப்பாக, விடுதலைப் புலிகள் மட்டில் இத்தகைய நிபந்தனைகள், ஆயுதக் கையளிப்பு, வன்முறையைக் கைவிடல், ஜனநாயக வழிக்குத் திரும்புதல் போன்றவையாக இருப்பதற்கான சாத்தியங்கள் காணப்பட்டிருந்தன. எனவே, சர்வதேச உதவிகளை இலங்கை அரசுடன் இணைந்து பெற்றுக் கொள்கின்ற போது நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ புலிகள் சில நிபந்தனைகளுக்காயினும் இணங்க வேண்டியிருந்திருக்கும். இணங்குவதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணங்காதிருப்பதும் நிபந்தனைகளின் தன்மையைப் பொறுத்தது. எனினும், நிச்சயமான பொருளாதார நன்மைகள் அற்ற வகையில் நிபந்தனைகளுக்கு இணங்குவது ஒரு வகையான பொறியில் சிக்குவதைப் போன்றது. நிச்சயமான பொருளாதார நலன்கள் அற்ற வகையில் நிபந்தனைகளுக்கு இணங்குவது புத்திசாலித்தனமான நடவடிக்கையாக இல்லாதிருந்திருக்கலாம்.

இத்துடன் நெருக்கமான தொடர்புடையதே கிடைக்கின்ற நிதி மீதான விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு பற்றிய கேள்வி ஆகும். இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் நிதி எவ்விதம் பயன்படுத்தப்படும் எத்தகைய கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் என்பது போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரியவில்லை. இது தொடர்பில் இணக்கம் காணப்பட்டு ஏற்படுத்தப்பட்டிருந்த பிரதானமான நிறுவன அமைப்பு உடனடி மனிதாபிமான மற்றும் புனருத்தாரணத் தேவைகளுக்கான உப குழுவாகும் (SIHRN). இதன் நோக்கங்கள் ஓரளவு தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளதேயாயினும் அதன் செயற்பாடு பற்றிய நிச்சயமான ஏற்பாடுகள் இணங்கப்பட்டிருக்கவில்லை அல்லது அது தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

"சிரான்" போதுமான அதிகாரங்களையும், செயற்பாட்டுக் கட்டமைப்பையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன் வட - கிழக்கு புனருத்தாரணம் என்கின்ற பாரிய பொறுப்பைச் செயற்படுத்தக் கூடிய இயலுமை உடையதல்ல எனத் தற்போது விடுதலைப்புலிகள் கருதுகின்றனர். எனவே, கிடைக்கப் பெறுகின்ற நிதியை சரியான முறையில் வட - கிழக்கில் பயன்படுத்தக் கூடிய நிறுவனக் கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், அதில் தாம் மிகப் பிரதான பங்கு வகிக்க வேண்டும எனவும் விடுதலைப்புலிகள் கூறியுள்ளனர்.

இலங்கை பொதுத்துறையில் பொதுவாகக் காணப்படுகின்ற மெதுவான தன்மையும், இலங்கை அரசின் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பான கடந்த கால அணுகுமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் புனருத்தாரணம் பற்றிய இவ் அக்கறை நியாயமானதே.

எனினும், துரதிஷ்டவசமாக புலிகள் தமது முறைப்பாடுகளை முன்வைத்து குறிப்பிட்டளவு காலம் சென்றிருந்தும் அதனை ஆராய்ந்து நிவர்த்தி செய்யக் கூடிய எந்தவொரு காத்திரமான நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அது தற்போதைய அரசின் செயலற்ற தன்மைக்கு இன்னுமோர் உதாரணமாகும். எவ்வாறாயினும் அவதானிக்கப்பட வேண்டிய மற்றுமோர் விடயம் யாதெனில், நேரடிப் பேச்சுவார்த்தைகள் "கடித மூல" பேச்சுவார்த்தைகளாக மாற்றப்பட்டுள்ளமையாகும். ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது முக்கியமான விடயங்கள் பற்றி ஆராய்ந்து முடிவுகளை மேற்கொள்ளத் தவறிய பேச்சுவார்த்தைத் தரப்பினர், அதி முக்கிய விடயங்களை கடித மூலம் ஆராய்வது சாத்தியமான ஒரு போக்கு அல்ல. இப்போக்கு நிச்சயமாக மேலதிக தப்பபிப்பிராயங்களுக்கும் முறுகல் நிலைக்கும் இட்டுச் செல்லக் கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும், ஜூன் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள டோக்கியோ மகாநாட்டிற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்ற அதேசமயம், மகாநாடு பின்போடப்பட மாட்டாது எனவும் கூறப்பட்டு வருகின்றது. அதே மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென்கின்ற விடுதலைப் புலிகள் மீதான சர்வதேச அழுத்தமும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகின்றது. இதன் காரணமாக, சர்வதேச சமூகத்தின் முழுக் கவனமும் விடுதலைப் புலிகள் மீதே திரும்பியுள்ளது எனக் கூறப்படலாம். எனவே, அவர்கள் நிச்சயமாக மகா நாட்டில் கலந்து கொள்ளாமல் விடுவார்களேயானால் சில அவதானிகளால் கூறப்படுவது போன்று, அதன் சர்வதேச விளைவு பாரதூரமானதாக இருப்பதற்கான சாத்தியங்கள் அதிகமானதாகவே காணப்படுகின்றன.

அதேசமயம் விடுதலைப் புலிகள் அற்றவகையில் டோக்கியோ மகாநாடு திட்டமிட்ட வகையில் இடம் பெறுமாயின் அது பேச்சு வார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாவதற்கான சாத்தியத்தை பாரதூரமான வகையில் குறைத்துவிடும். அவ்வகையில் விடுதலைப் புலிகள் டோக்கியோவிற்குச் செல்வதற்கும், பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. எனினும் விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்கு சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்காவிடில் அவர்கள் டோக்கியோ மகாநாட்டிற்குச் செல்வதென்பது கடினமானதே. எனவே, அவசியமானது யாதெனில் மாநாட்டிற்கு முன்னராக புலிகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய மாற்றுத் திட்டமொன்றையாயினும் முன்வைத்து அவர்களது நிலையை மென்மைப்படுத்துவதாகும். இது தமிழ் மக்களின் பார்வையில் அவர்களது கௌரவத்தைப் பாதிக்காமல், விடுதலைப் புலிகள் உதவி வழங்கும் மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு உதவக் கூடியது.

(01. 06. 2005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

டோக்கியோ மகாநாடு ஒரு சர்வதேசப் பொறியா?
அதிகரிக்கும் சர்வதேச அழுத்தம்

வடக்கு, கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகசபை அமைப்பது பற்றிய விடயம் இந்த அளவு பாரிய ஒரு பிரச்சினையாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்வதில் ஒரு முட்டுக்கட்டையாகவும் வளர்ச்சியடைந்திருப்பது ஒரு வகையில் ஆச்சரியத்திற்குரிய ஒரு விடயமே ஆகும். ஏனெனில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது என்கின்ற எண்ணமே, இடைக்கால நிர்வாக சபை என்கின்ற எண்ணக்கருவின் அடிப்படையிலேயே தோற்றம் பெற்றிருந்தது. பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு முன்னரேயே ஐ.தே.க. அத்தகைய ஒரு வாக்குறுதியைத் தமக்கு அளித்திருந்ததாக புலிகள் தரப்பில் கூறப்படுகின்றது. ஐ.தே.க 2001 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிடுகின்ற போதே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு உடனடித் தந்திரோபாயமாக இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பது பற்றி தெளிவாக எடுத்தியம்பியிருந்தது.

இதற்குப் புறம்பாக, வடக்கு கிழக்கிற்கான இப்பொழுது நிர்வாக சபை என்பது இத் தடவையே முதற் தடவையாக ஆராயப்பட்டதன்று என்பதும் அனைவரும் அறிந்ததே. உதாரணமாக, 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகின்ற போது இடைக்கால நிர்வாக சபை ஒன்று இணங்கப்பட்டிருந்தது. யுத்த நிறுத்தத்திற்குப் பிரதியுபகாரமாக 10 ஆண்டுகளுக்குத் தேர்தல் அற்றவகையில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை, புலிகளுக்கு வழங்க தாம் முன்வந்ததாக ஜனாதிபதி பேட்டியொன்றில் கூறியிருந்தார். எனினும் இக் கூற்றின் நம்பகத்தன்மை பற்றிய மேலதிக தகவல்கள் போதியவையாகக் காணப்படவில்லை.

எவ்வாறாயினும், இடைக்கால நிர்வாக சபை என்பது சர்ச்சைக்கு உட்படக்கூடிய ஒன்றாக பேச்சுவார்த்தை ஆரம்பித்தபோது காணப்படவில்லை. எனினும் துரதிஷ்டவசமாக இன்று இடைக்கால நிர்வாக சபை என்பது பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைக்குரிய ஓர் அம்சமாக மாற்றமடைந்துள்ளது. அவ்வகையில் நோக்குகையில் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை வெற்றிகரமாக ஏற்படுத்தியிருக்கக் கூடிய சிறந்த சந்தர்ப்பம் ஒன்றை தரப்பினர் இழந்துள்ளனர் என்றே கூறப்படவேண்டும்.

பேச்சுவார்த்தைகளின் ஆரம்பத்தில் இடைக்கால நிர்வாகசபை பற்றிய விடயம் குறிப்பாக இரு தரப்புகளில் இருந்து விமர்சிக்கப்பட்டிருந்தது. ஒன்று, அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைமையிலான சமூக செயற்பாட்டாளர்கள், இரண்டாவது முஸ்லிம் மக்கள். சமூக செயற்பாட்டாளர்கள் அமைக்கப்படுகின்ற இடைக்காலச் சபை ஜனநாயக ரீதியானதாகவும், மனித உரிமைகளை மதிப்பதாகவும், இலங்கைச் சமூகத்தின் பல்லினத் தன்மையை பிரதிபலிப்பதாகவும் இருக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தனர். அதே சமயம் முஸ்லிம் மக்கள் இத்தகைய சபையில் தமக்கு நியாயமான பங்கு வழங்கப்பட வேண்டும் எனப்படுகின்ற ஒரு கோரிக்கையை முன்வைத்திருந்தனர். எனினும் முஸ்லிம்களின் பிரதானமான அபிப்பிராயம் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுவதற்கு எதிரானதாகவே காணப்பட்டது.

இவ்வெதிர்ப்பு "வடக்கு, கிழக்கு என்பவற்றிற்கு தனித்தனியான சபைகள் அமைக்கப்பட வேண்டும்" அல்லது "முஸ்லிம்களுக்கு தனியான ஒரு இடைக்கால சபை ஏற்படுத்தப்பட வேண்டும்" என்கின்ற கோரிக்கைகள் வடிவில் முன்வைக்கப்பட்டிருந்தன. இவற்றிற்குப் புறம்பாக ஏற்படுத்தப்படுகின்ற இடைக்கால நிர்வாக சபை "நிரந்தரமான இடைக்கால சபையாக" மாற்றமடைந்து விடும் என்கின்ற ஒரு அச்சமும் சிறிய ஒரு தரப்பினரிடையே இருந்து முன் வைக்கப்பட்டது.

இத்தகைய விமர்சனங்களையும் கோரிக்கைகளையும் நம்பிக்கையுடனும், புத்திசாலித்தனத்துடனும் கையாள்வதை விடுத்து பேச்சுவார்த்தைத் தரப்பினர் பிரச்சினையில் இருந்து தற்காலிகமாக தப்பித்துக் கொள்வதற்கான மார்க்கங்களை தேட ஆரம்பித்திருந்தனர். இதற்கான பிரதான காரணம் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றபோது அவற்றை அபிவிருத்தியடைவதற்கான மார்க்கங்களாகக் கருதாது உள்நோக்கம் கொண்ட, வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகளாக விளங்கிக் கொள்ளும் போக்கு ஆகும். எனவே பேச்சுவார்த்தைத் தரப்பினர் இடைக்கால நிர்வாக சபை பற்றிய விடயங்களைத் "தற்காலிகமாகக்" கைவிட்டு வேறு மார்க்கங்களை ஆராயத்தொடங்கினர். ஆரம்பத்தில் கூட்டுக் குழுக்கள் பற்றி விவாதிக்கப்பட்டு பின்னர் அது உபகுழுக்கள் என்பதாக மாற்றமடைந்தது. அதன் பலனாகவே சிரான் (SIRHN) அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல்

வடக்கு, கிழக்கு புனருத்தாரணம், அபிவிருத்தி என்பவற்றிற்கான பிரதானமான கருவி என்கின்ற வகையில் சிரான் பற்றிய விடுதலைப் புலிகளின் முக்கியமான குற்றச்சாட்டு அதன் செயலற்ற தன்மை ஆகும். அதன் காரணமாகவே சிரான் இல்லாது செய்யப்பட்டு இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் வற்புறுத்தி வருகின்றனர். இங்கு காணப்படுகின்ற பிரதான பிரச்சினை இரண்டு வேறுபட்ட "வேலைக் கலாசாரங்கள்" பற்றியதாகும்.

விடுதலைப் புலிகளின் வேலைக் கலாசாரம் இலங்கை அரசின் வேலைக் கலாசாரத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். இங்கு தீர்மானங்கள் தாமதம் அற்ற வகையில் மேற்கொள்ளப்படும். அத்தீர்மானங்கள் உடனடியாக உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தப்படும். பின்னர் அவை உடனடியாகவே நடைமுறைப்படுத்தப்படும். இத்தகைய ஒரு வேலைக்கலாசாரம் காணப்படுவதற்கு விடுதலைப் புலிகளின் நிறுவனக் கட்டமைப்பும், இராணுவப் பண்பும் முக்கிய காரணிகளாகும்.

மாறாக அரச பொதுத்துறைக் கட்டமைப்பு உலகில் காணப்படுகின்ற திறனற்ற, மெதுவான வேலைக் கலாசாரத்தின் ஒரு பகுதியாகும். ஒரு கதிரையை நகர்த்துவதற்குக் கூட "உத்தியோக பூர்வமாக" கடிதம் ஒன்றை எழுதிவிட்டு மாதக்கணக்கில் காத்திருப்பதை "சாதாரணம்" என எண்ண வைப்பதே இலங்கைப் பொதுத்துறையின் பிரதானமான பண்பாகும். இலங்கைப் பொருளாதாரத்தின் மந்த விருத்திக்கு இத் திறனற்ற, மெதுவான பொதுத்துறை பிரதானமான காரணி என்பதை எவரும் இலகுவாக மறுத்துவிட முடியாது.எனவே, காணப்படுகின்ற பிரச்சினை என்னவெனில் இவ்விரு வேலைக் கலாசாரங்களுக்கு இடையிலான இணங்க முடியாத இயல்பு ஆகும்.

வடக்கு, கிழக்கு புனருத்தாரணம், அபிவிருத்தி எனப்படுகின்ற மிக அவசரமான தேவைகள் இம் மோதலைத் தீவிரப்படுத்தியுள்ளன எனவும் கூறப்படலாம். எனவேதான் இலங்கைப் பொதுத்துறையின் திறனற்ற தன்மைக்குள் மூழ்கிவிடாது எமது புனருத்தாரணத் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்யக்கூடிய கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தித்தரப்பட வேண்டும் என்பதாக விடுதலைப் புலிகளின் வாதம் அமைந்துள்ளது.

இதற்குப் புறம்பாக விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக சபை நெருக்கடியை, டோக்கியோ மகாநாட்டில் தமது பங்குபற்றுதலுடன் தொடர்புபடுத்தியுள்ளதுடன் இலங்கையின் அரசியலமைப்பு கட்டமைப்புக்கு அப்பாற்பட்ட வகையில் இவ் இடைக்கால சபை அமைக்கப்பட வேண்டும் எனக்கூறியுள்ளனர். இவை இரண்டும் மிகச் சிக்கலான விடயங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதித்தேவை முக்கியமானது?

வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் துரிதமாக அபிவிருத்தி செய்யப்படவேண்டும என்கின்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே இடைக்கால நிர்வாக சபை நியாயப்படுத்தப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு புனருத்தாரணம் என்பது பெருந்தொகையான நிதித் தேவை உடையது. இத்தேவையை உள்ளூர் மட்டத்தில் அடைந்து கொள்வது இயலாதது என்பதன் காரணமாகவே இச்சமாதானச் செயன்முறையின் ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைகளின் போது இரு தரப்பினரும் ஒன்றாக இணைந்து சர்வதேச உதவிக்கான கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். எனவே, டோக்கியோவில் அளிக்கப்படுகின்ற நிதி இல்லாதவகையில் வடக்கு, கிழக்கு புனருத்தாரணம் அடையப்படுவது கடினமானதாகும்.

விடுதலைப்புலிகள் அற்றவகையில் டோக்கியோ மகாநாடு நடந்தேறுமாயின் தனது தனிமுயற்சியால் பெறுகின்ற நிதியை இலங்கை அரசு வட,கிழக்கில் செலவிடுமா? அத்தகைய நிதியை செலவிடுவதில் விடுதலைப் புலிகளுக்கு எத்தகைய பங்கு காணப்படும்? போன்ற கேள்விகளுக்கான. பதில்கள் தெளிவற்றவையாகவே உள்ளன.

இத்தகைய தெளிவற்ற பதில்கள் ஏற்படுத்துகின்ற தெளிவான ஒரு கேள்வி புலிகள் டோக்கியோ மகாநாட்டில் கலந்து கொள்ளாது விடுதல் தமிழ் மக்கள் நலனைப் பொறுத்து புத்திசாதுரியமானதா என்பதாகும். வடக்கு, கிழக்கு புனருத்தாரணம், அபிவிருத்தி என்கின்ற நோக்கில் இது மிக முக்கியமான ஒரு கேள்வி ஆகும்.

எவ்வாறாயினும் தற்போதைய நிலையில் இருந்து அவதானிக்கையில் டோக்கியோ மகாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்கின்ற தெளிவான நிலைப்பாட்டைப் புலிகள் மேற்கொண்டுள்ளது போன்றே தோற்றமளிக்கின்றது. இதற்கான பிரதான காரணி துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்ற விடுதலைப் புலிகளின் மீதான சர்வதேச அழுத்தம் ஆகும். விடுதலைப் புலிகள் டோக்கியோ மகாநாட்டில் கலந்து கொள்வார்களாயின், உதவி வழங்கும் நாடுகளின் நிர்ப்பந்தங்களுக்கும், அழுத்தத்திற்கும் முகம் கொடுக்க வேண்டியிருக்கும்.

இயல்பாகவே இதனை விடுதலைப் புலிகள் விரும்பியிருக்கவில்லை. அத்துடன் இத்தகைய ஒரு நிலை திட்டமிடப்பட்டவகையில் இலங்கை அரசினால் கட்டியெழுப்பப்படுவதாகவும் விடுதலைப் புலிகள் கருதுகின்றனர். இதனை ஒரு குற்றச்சாட்டாக பாலசிங்கம் தனது இறுதிக் கடிதத்தில் முன்வைத்திருக்கின்றார். எனவே, டோக்கியோ மகாநாட்டில் கலந்து கொள்வது "சர்வதேசப் பொறியில்" சிக்குவதற்கு ஒப்பானது என புலிகள் கருதுவது போன்றதாகவே தோற்றமளிக்கின்றது.

இந்நிலையை சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள் மோசமான நிலைக்குக் கொண்டு சென்றுள்ளன என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். வாஷிங்டன் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்வதை அமெரிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கவில்லை. எத்தகைய நிதியுதவி அளிக்கப்படும் என்பதும் மிதமான ஒரு மட்டத்தில் ஏற்கனவே இணங்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் கலந்து கொண்டாலும், கலந்து கொள்ளாது விடினும் டோக்கியோ மகாநாடு திட்டமிட்டவாறு நடந்தேறும் என ஜப்பான் கூறியுள்ளது. கடந்த வாரம் ஞாயிறு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் யசூசி அகாசி டோக்கியோவில் "இலங்கை அரசிற்கே நிதி வழங்கப்படுமென கூறியுள்ளார். அவ்விதமாயின் விடுதலைப் புலிகள் மகாநாட்டில் கலந்து கொள்வது ஏன் அவசியமானது என்பதை இதுவரை எவரும் தெளிவாக விளக்க முயற்சிக்கவில்லை. இத்தெளிவற்ற போக்கு இயல்பாகவே விடுதலைப் புலிகள் மத்தியில் சந்தேகத்தை தூண்டியுள்ளதுடன், கிடைக்கப் பெறுகின்ற நிதியைப் பயன் படுத்தக்கூடிய நிச்சயமான நிறுவனக் கட்டமைப்பு ஒன்று இல்லாதிருக்கின்றமை அவர்களது நிலைப்பாட்டை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தின் நிலை

இதற்குப் புறம்பாக இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பது தொடர்பில் அரசாங்கம் தேவைக்கு அதிகமான நெகிழ்வற்ற தன்மையைக் கடைப்பிடிப்பதாகவே தோன்றுகின்றது. இதன் காரணமாகவே நோர்வே அரசாங்கமும் கூட இதில் சற்றுக் கூடுதலான விட்டுக்கொடுப்பு அணுகு முறையைக் கையாளவேண்டுமென இலங்கை அரசாங்கத்தைக் கோர வேண்டியதாயிற்று. எவ்வாறாயினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை புலிகளுக்கு வழங்குவது தொடர்பில் தற்போது அரசாங்கம் கடினமான ஒரு நிலையில் உள்ளது என்றே கூறப்படவேண்டும்.

இப்போதிருக்கின்ற தென்னிலங்கை அரசியல் சூழ்நிலைகளின் அடிப்படையில் நோக்குகையில் இடைக்கால நிர்வாக சபையொன்று ஏற்படுத்தப்படுமாயின் அதனை தேசிய பாதுகாப்புக்கும், நாட்டின் இறைமைக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் என வர்ணித்து ஜனாதிபதி அரசாங்கத்தைக் கலைக்கமாட்டார் என்பதற்கு எத்தகைய உத்தரவாதமும் காணப்படவில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜனதா விமுக்தி பெரமுனவும் அரசியல் ரீதியாக நெருங்கி வருகின்ற ஒரு நிலையில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவது அரசாங்கத்தைக் கலைப்பதற்கான தகுந்த காரணத்தை ஜனாதிபதிக்கு வழங்குவதாக இருக்கலாம். இத்தகைய ஒரு சூழ்நிலை கடந்த ஆண்டு காணப்படவில்லை என்பதன் காரணமாகவே இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைப்பதற்கான அரிய சந்தர்ப்பம் ஒன்று தவறவிடப்பட்டதாகக் கருத வேண்டியுள்ளது.

இலங்கை அரசியலமைப்புக்கு அப்பாற்பட்ட வகையில் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டும் என்கின்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கை அரசாங்கத்தின் நெருக்கடியை மேலும் அதிகப்படுத்தியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. அரசியலமைப்பிற்கு அப்பாற்பட்ட வகையில் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சட்டத்திற்குப் புறம்பான வகையில்" என்பதாக அர்த்தப்படுத்தப்பட்டதுடன், அதே அடிப்படையில் இடைக்கால நிர்வாக சபை யோசனையை எதிர்க்க எதிர்க் கட்சிகள் முற்பட்டுள்ளன. எனவே, இக் கோரிக்கை தென்னிலங்கையில் இடைக்கால நிர்வாக சபைக்கு எதிரான அபிப்பிராயங்களைக் கூர்மைப்படுத்தியுள்ளது எனலாம். அரசியலமைப்பிற்கு அப்பாற்பட்ட வகையில் என்கின்ற கோரிக்கை எத்தகைய அர்த்தத்தில் கூறப்பட்டிருப்பினும் நாட்டின் சட்டக் கட்டமைப்பிற்குப் புறம்பாக எதனையும் புலிகளுக்கு வழங்கக் கூடிய நிலையில் இந்த அரசாங்கம் காணப்படவில்லை என்பது கவனத்தில் எடுத்துக் கொள்ளபடவேண்டும்.

இவை யாவும் இந் நாட்டின் எதிர்காலம் பொறுத்தும், இங்கு வாழ்கின்ற சகல இன மக்களின் நலன்கள் அடிப்படையிலும் மிக முக்கியமான பிரச்சினைகளாகும். எனினும், பேச்சுவார்த்தைத் தரப்பினர் இவற்றை கடிதங்கள் மூலமாகவும், செய்தியாளர் மகாநாடுகளினூடாகவும் விவாதிக்க முற்படுவது துரதிஷ்டவசமானது. இவை நிச்சயமாக மேலதிக தப்பபிப்பிராயங்களுக்கும், முறுகல் நிலைக்குமே இட்டுச் செல்லும். எனவே, இரு தரப்பினரும் தமது அடிப்படைப் பிரச்சினைகளை நேரடியாக ஆரம்பத்திலிருந்து பேசத் தொடங்குவது உகந்ததாகும்.

(08. 06. 2005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

டோக்கியோ மாநாட்டுக்குப் பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தையின் நிலை

டோக்கியோ உதவி வழங்கும் மாநாடு நடந்து முடிந்துள்ளது. எதிர்பார்க்கப்பட்டதிலும் மேலாக, ஏறத்தாழ நான்கரை பில்லியன் டொலர்கள் பெறுமதி மிக்க கடன்களும், நன்கொடைகளும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூட்டங்களோ அன்றி நிதி உதவிகளோ புதிய விடயங்கள் அல்ல.

ஆயினும், அண்மைக் காலங்களில் இம் மகாநாடுகளின் முக்கியத்துவம் பெரிதும் குறைந்து வந்துள்ளதுடன், வழங்கப்படுகின்ற உதவிகளின் பெறுமதியும் அருகி வந்துள்ளது. குறிப்பாகத் தொடர்ந்து கொண்டிருந்த அதி தீவிர யுத்தமும், அதன் காரணமாக ஏற்பட்டிருந்த பாதுகாப்பற்ற நிலைமைகளும், இன்னொரு மட்டத்தில் அதிகரித்து வந்த மனித உரிமை மீறல்களும் இத்தகைய சாதகமற்ற சூழ்நிலைக்கு இட்டுச் சென்றிருந்தன.

சம பங்கு

திடீரென இம்முறை உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், திருவிழாக் கோலம் பூண்டதொன்றாகவும் மாற்றமடைந்ததன் பிரதான காரணி நடைமுறையிலுள்ள சமாதான செயன்முறையே என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தட்டுத்தடுமாறி மரணத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த இந்நாட்டின் பொருளாதாரம் புதுப்பொலிவு பெற்றுள்ளது. குறிப்பாக தற்போது வழங்கப்பட்டுள்ள உதவிகள் அதன் வேகத்தை அதிகரிப்பதுடன் எதிர்காலம் குறித்து அதிக நம்பிக்கையை அளிப்பதாக உள்ளன. எனவே, இந் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும், சமாதான செயன்முறைக்கும் நெருங்கிய நேரடித் தொடர்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சமாதான செயன்முறை ஆரம்பிக்கப்படுகின்ற போது இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமமான பங்காளிகளாகவே அதில் இணைந்திருந்தனர். யுத்தம் காரணமாக நாட்டின் எல்லாப் பாகங்களும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டிருந்தமையினாலும், குறிப்பாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் உடனடியாக புனருத்தாரணம் செய்யப்பட வேண்டும் என்கின்ற அவசியம் உணரப்பட்டிருந்தமையினாலும் சர்வதேச பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் இரு தரப்பினரும் சேர்ந்து செயற்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாகவே இரு தரப்பினரும் "ஒன்றாக இணைந்து" சர்வதேச உதவிகளுக்கான வேண்டுகோளை முன்வைத்திருந்தனர்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை, ஆரம்பிக்கப்பட்டிருந்த அரசியல் பேச்சுவார்த்தைகள் என்பவற்றால் ஆர்வமடைந்திருந்த சர்வதேச சமூகம், இருதரப்பினரும் இணைந்து உதவிக்கான கோரிக்கைகளை முன் வைத்திருந்தமையினால், இயன்றளவு உறுதியான உதவிகளை தற்போதே வழங்குவதன் மூலம் சமாதான செயன்முறையை உறுதிப்படுத்த வேண்டும் என உணர்ந்திருந்தது. இதன் காரணமாகவே இருக்கின்ற நிச்சயமற்ற தன்மைகளுக்கிடையில், இறுதித் தீர்வு அடையப்படுகின்ற வரையில் காத்திராமல் உடனடியாக உதவிகளை வழங்க சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வந்திருந்தனர். அதன் விளைவே தற்போது வழங்கப்பட்டுள்ள பாரிய நிதி உதவிகளாகும்.

எனவே, இந்நிதியைப் பெற்றுக் கொள்வதில் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினருக்கும் சமமான பங்கு காணப்பட்டிருந்தது. இத்தகைய ஒரு நோக்கிலிருந்து ஆராய்கின்ற போது, இறுதி விளைவுகள் குறிப்பாக தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஏமாற்றகரமானவையாகவே அமைந்திருந்தன. ஏனெனில், வாஷிங்டனில் இருந்து டோக்கியோ வரை இலங்கை அரசாங்கமே நிதி தொடர்பில் தனித்துச் செயலாற்றியது போன்ற ஒரு தோற்றம் ஏற்பட்டிருந்ததுடன், தற்போது வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ள நிதிகள் யாவும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே விடப்பட்டுள்ளன. எனவே, சட்ட ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் நிதி எவ்விதம் செலவிடப்படும் என்பதைத் தீர்மானிப்பதில் அரசாங்கம் அதிகரித்த ஒரு உறுதி நிலையில் உள்ளது எனலாம். இந்நிலை நிதியை செலவிடுவது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக் கூடிய பேச்சுவார்த்தைகளிலும் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இது எவ்விதம் ஏற்பட்டது?

நிதியும், நிபந்தனையும்

ஒன்று, புலிகள் வாஷிங்டனுக்குச் செல்வது தடை செய்யப்பட்டிருந்தது, இரண்டாவது டோக்கியோவிற்குச் செல்வதற்குப் புலிகள் இணங்கியிருக்கவில்லை. இவற்றுள் முதலாவது விடயம் குறித்துப் புலிகளுக்கு எவ்வித தெரிவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படவில்லை. தமது பிரதிநிதிகளை வாஷிங்டன் மகாநாட்டில் அனுமதிப்பதில்லை என ஒரு வல்லரசு தீர்மானிக்கின்றபோது அது குறித்து தமிழ் மக்கள் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் எதுவும் காணப்படவில்லை. எனவே, வாஷிங்டன் கூட்டம் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற் பட்டதாகவே காணப்பட்டது.

எனினும், டோக்கியோவிற்குச் செல்வதா, இல்லையா என்பது குறித்த தீர்மானம் தொடர்பிலான முழுமையான தெரிவு எமது கட்டுப்பாட்டிலேயே காணப்பட்டது. எவ்வாறாயினும், டோக்கியோவிற்குச் செல்வதில்லை என்கின்ற முடிவை சில காலத்திற்கு முன்னரேயே புலிகள் நிச்சயமாக மேற்கொண்டிருந்தனர் என்றே தற்போது எண்ணத் தோன்றுகின்றது. இடைக்கால நிர்வாகம் அமைப்பது பற்றிய பிரச்சினை இதற்கான காரணியாக எடுத்துக் காட்டப்பட்ட போதும், டோக்கியோ மகாநாடும், அங்கு வழங்கப்படுகின்ற நிதி உதவிகளுடன் இணைக்கப்பட்டிருக்கக்கூடிய நிபந்தனைகள் தொடர்பிலான புலிகளின் சந்தேகங்களுமே டோக்கியோவிற்குச் செல்லாமல் இருந்தமைக்கான அடிப்படைக் காரணிகள் எனத் தற்போது பெரிதும் உணரப்படுகின்றது.

பிந்திக் கிடைக்கின்ற தகவல்கள் குறிப்பாகப் புலிகள் தொடர்பில் மிக நிச்சயமான நிபந்தனைகள் இணைக்கப்பட்டிருப்பதற்கான சாத்தியங்களைச் சுட்டிக் காட்டுகின்றன. நாம் இரு வாரங்களுக்கு முன்னர் கூறியிருந்தவாறு நிபந்தனைகள் மனித உரிமைப் பாதுகாப்பு என்பதிலிருந்து ஆயுதக் களைவு என்பது வரையான ஒரு பட்டியலைக் கொண்டிருந்திருக்கக் கூடும். எவ்வாறாயினும், ஆயுதக் களைவு நிகழ்ச்சி நிரல், எத்தகைய ஒரு நிலையிலும் சமாதான செயல்முறையில் இணைந்திருத்தல் போன்ற அம்சங்கள் இயல்பாகவே புலிகள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

எனவே, டோக்கியோ மநாட்டில கலந்து கொள்ளாதிருப்பதன் மூலம் "சர்வதேசப் பொறியில்" சிக்காதிருக்கப் புலிகள் முயற்சி செய்திருப்பார்களேயாயின், அதில் அவர்கள் ஓரளவு வெற்றியடைந்துள்ளனர் என்றே கருத வேண்டியுள்ளது. எதிர்காலப் பேச்சுவார்த்தைகளின் மூலம் இத்தகைய நிபந்தனைகளுக்கு உட்படாத வகையில் நிதிக் கட்டுப்பாடுகளை அவர்கள் பெற்றுக் கொள்வார்களாயின், அவர்களது தந்திரோபாயம் பெரு வெற்றி அடைந்துள்ளது எனக் கூறப்படலாம். எனினும், இது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டியதாகும்.

விளைவு

இத்தகைய ஒரு பெறுபேற்றிற்கு புலிகள் இரண்டு வகையான விலைகளைச் செலுத்த வேண்டியிருந்தது. முதலாவது விடயம் சர்வதேச அபிப்பிராயம் என்பதுடன் தொடர்புடையது. செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்கா மீதான தாக்குதல் விடுதலைப் போராட்டங்கள் பற்றிய சர்வதேச அபிப்பிராயத்தை பெரிதும் மாற்றியிருந்தது. பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் விடுதலைப் போராட்டங்களுக்கு எதிரான சர்வதேச சூழ்நிலை ஒன்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவித்திருந்தது. இதன் காரணமாகவே விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு முன்வந்திருந்தனர் எனக் கூற விழைவோர் பலர் உள்ளனர்.

எனினும், செப்டெம்பர் 11 ஆம் திகதிக்கு முன்னரேயே புலிகள் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர் என்பதும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தனர் என்பதும் முக்கியமானது. இதன் கருத்து சர்வதேச அபிப்பிராயம் பற்றிய அக்கறை அவர்களுக்கு இருக்கவில்லை என்பதல்ல. உண்மை நிலையில் தமக்கெதிராக மிகமோசமாக மாற்றமடைந்திருந்த சர்வதேச அபிப்பிராயத்தை சாதகமானதாக மாற்றிக் கொள்வது பற்றிய தீவிர அக்கறை ஒன்று புலிகளிடையே காணப்பட்டிருந்தது. ஏனெனில், நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் போராட்டத்தின் போக்கை நிர்ணயிக்கும் உறுதியான ஒரு காரணியாக சர்வதேச அபிப்பிராயம் அபிவிருத்தி யடைந்துள்ளது. சர்வதேச சமூகத்தின் அனுதாபம் இன்றி எத்தகைய ஒரு இனப் போராட்டமும் வெற்றியடைவது கடினம் என்பது தற்போது உணரப்பட்டுள்ளது.

எனவே, எத்தகைய நோக்கில் புலிகள் பேச்சுவார்த்தைக்கு இணங்கி இருப்பினும், சர்வதேச அபிப்பிராயத்தை தமக்குச் சாதகமாக மாற்றிக் கொள்வது அவற்றில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். பேச்சுவார்த்தைகளின் ஆரம்பத்தில் இத்தகையதொரு மாற்றம் நிச்சயமாக ஏற்பட்டிருந்தது. ஆயினும், டோக்கியோ மகாநாடு தொடர்பில் கடைப்பிடிக்கப்பட்ட நெகிழாத் தன்மை புலிகளின் உண்மையான நோக்கங்கள் குறித்த சந்தேகங்களை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் தோற்றுவித்துள்ளது. உண்மை நிலையில் அளிக்கப்பட்டுள்ள நிதி உதவியின் அளவு புலிகள் மீதான சர்வதேச சமூகத்தின் அதிருப்தியின் வெளிப்பாடு என ஒரு வகையில் கூறப்படலாம். ஆரம்பத்தில் மூன்று பில்லியன் டொலர்கள் வழங்க இணங்கப்பட்டிருப்பதாகவும், புலிகள் கலந்து கொள்ளாதுவிடின், இதனைப் பூரணமாகப் பெற்றுக் கொள்வது கடினமானது எனவும் கூறப்பட்டது. தற்போது புலிகள் இல்லாமலேயே நான்கு பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான உதவி உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. இது சர்வதேச சமூகத்தின் அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டைச் சுட்டி நிற்கின்றது.

மற்றையது, புலிகள் டோக்கியோ மகாநாட்டில் கலந்து கொள்ளாமை, வடக்கு, கிழக்கு புனருத்தாரணம் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கமாகும், தற்போது வழங்கப்பட்டுள்ள நிதியில் குறிப்பிடத்தக்க ஒரு தொகுதி வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு ஏலவே வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், முழு நாட்டிற்கும் என நிதி வழங்கப்பட்டிருப்பினும் கூட அதில் நியாயமான ஒரு பகுதியை வடக்கு, கிழக்கில் செலவிடவேண்டிய தார்மீகக் கடமை ஒன்று அரசாங்கத்திற்கு உள்ளது. எனினும், இத்தகைய தார்மீகக் கடமைகளை அரசாங்கங்கள் கடந்த காலங்களில் பெரிதும் மதித்திருப்பதற்கான ஆதாரங்கள் எதுவும் காணப்படவில்லை. இதன் காரணமாகவே தமிழ்ப் பகுதிகள் கடந்த காலங்களில் பொருளாதார ரீதியாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தன. உதாரணமாக, அரச,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்த பிரதேசங்கள் கூட அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை எனவே, எதிர்காலத்திலும் கூட அரசாங்கம் அபிவிருத்தியில் நியாயமான ஒருபங்கை தமிழ் மக்களுக்கு தானாகவே முன்வந்து வழங்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை.

நியாயமான ஒரு மட்டத்திலான நிதி வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கென செலவிடப்படுவதற்கு அரசாங்கத்தின் மீது உள் மற்றும் புற நிலைகளிலிருந்து அழுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம். உள்நிலை அழுத்தத்தின் பெரும்பகுதி விடுதலைப் புலிகளிடமிருந்தே தோன்றுமாகையினால், இடைக்கால நிர்வாக சபை தொடர்பிலான விவாதங்கள் மீண்டும் முக்கியத்துவம் பெறும். எனினும், நிதி அரசாங்கத்தினால் தனித்தே பெறப்பட்டமையினால் வடக்கு, கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைத்து அதில் விடுதலைப் புலிகளுக்கு பெருமளவிலான கட்டுப்பாட்டை அனுமதித்து, செலவிடுவதற்கான நிதியையும் வழங்க அரசாங்கம் உடனடியாக இணங்கிவிடும் என எதிர்பார்க்க முடியாது.

நெகிழ்ச்சி அணுகுமுறை

அமைக்கப்படுகின்ற இடைக்கால நிர்வாக சபையின் ஜனநாயக ரீதியான செயற்பாடு, அதில் வடக்கு, கிழக்கில் வாழுகின்ற ஏனைய குழுக்களின் பங்குபற்றல் போன்றவற்றில் அரசாங்கம் அதிக இறுக்கமான அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடிப்பதற்கான சாத்தியம் சற்று அதிகமாகவே காணப்படுகின்றது. எனவே, இடைக்கால நிர்வாக சபை தொடர்பிலும், நிதியைச் செலவிடுவது தொடர்பிலும் நீண்ட வாதப் பிரதிவாதங்களும், கலந்துரையாடல்களும் இடம்பெறக்கூடும். இவ்விதம் இடம்பெறுமாயின், அதன் முதலாவது விளைவு வடக்கு, கிழக்கு புனருத்தாரணம், அபிவிருத்தி என்பவை மேலும் தாமதப்படுவதாகும்.

எவ்வாறாயினும், இது தொடர்பில் விடுதலைப் புலிகளுக்குக் காணப்படுகின்ற முக்கியமான பலம், நிதி உதவிகள் சமாதான செயன்முறை தொடர்வதுடன், நேரடியாகத் தொடர்புபடுத்தப் பட்டிருப்பதாகும். அதாவது, வழங்கப்பட்டுள்ள நான்கு பில்லியன் டொலர்களுக்கு அதிகமான நிதி நான்கு ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்படுவதற்கே இணங்கப்பட்டுள்ளது. இக் காலப் பகுதியில் சமாதான செயன்முறை தொடர்ந்து இடம் பெறுவது அத்தியாவசியமானது. அவ்விதம் சமாதானச் செயன்முறை தொடர்ந்து இடம்பெறாத பட்சத்தில் இணங்கப்பட்ட நிதி தொடர்ந்து வழங்கப்படுவது பாதிக்கப்படலாம். எனவே, உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள நிதி உதவிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாயின், சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம்பெறுவதில் புலிகளுக்கு சமமான பங்கு உண்டு என்பதுடன், இதற்கு இடைக்கால நிர்வாகசபை ஒன்று உத்தரவாதப்படுத்தப்படுவது அவசியம் என அவர்கள் ஏற்கனவே தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர். எனவே, நிதி உதவிகளைத் தொடர்ந்து பெற்றுக் கொள்வதில் தமிழ்த் தரப்பினருக்கு இருக்கின்ற பலம் சரியான முறையில் புத்தி சாதுரியத்துடன் பயன்படுத்தப்படுவது அவசியம்.

செயற்பாடு அவசியம்

இவ்விடயம் அரசாங்கத்தினால் தெளிவாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளமையினாலேயே, புலிகள் மேலாதிக்கம் செலுத்தக் கூடிய இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பிரதமர் டோக்கியோவில் வலியுறுத்தியுள்ளார். இது பல்வேறு தரப்பினராலும் பாராட்டப்பட்டிருப்பது ஒரு வகையில் கேலிக்குரியதே. ஏனெனில், இடைக்கால சபை ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் தெளிவாக உணரப்பட்டமையினாலேயே, அது 2001 ஆம் ஆண்டு ஐ.தே.க தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்ந்துக்கொள்ளப்பட்டிருந்தது. ஐ.தே.க தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை வடக்கு, கிழக்கிற்கு வழங்குவதற்கான மக்கள் அனுமதி பெறப்பட்டிருந்தும் கூட, நடைமுறையில் அதனைச் செயற்படுத்துவதற்கான எந்தவிதமான உறுதியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

பேச்சுவார்த்தைகளின் ஆரம்பத்தில் இவ்விடயம் கைவிடப் பட்டமைக்கான அல்லது ஒத்திப்போடப்பட்டமைக்கான பின்னணி தெளிவில்லாதிருப்பதனால் இவ்விடயத்தில் ஒரு தரப்பை மட்டும் குறை கூறுவது நியாயமற்றதாயினும், புலிகளால் இவ்விடயம் மீண்டும் முன்வைப்பட்ட போது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அது தொடர்பில் போதிய ஆர்வத்தை வெளிப்படுத்தவில்லை என்பதே உண்மையானதாகும். எனவே, இவ்விடயத்தில் தேவையானது, செயற்பாடே அன்றி சர்வதேச தலைநகரங்களில் பேசப்படுகின்ற கவர்ச்சிகரமான வார்த்தைகள் அல்ல.

எவ்வாறாயினும், தற்போது டோக்கியோ அலைகள் ஓய்ந்து விட்டன. நிச்சயமாக நிதி உத்தரவாதங்களும் அளிக்கப்பட்டுவிட்டன. இனி கவனம் பேச்சுவார்தைகள் மீள ஆரம்பிக்கப்படுவது தொடர்பில் திருப்பப்படும். இதற்குப் புலிகள் எவ்விதம் பதிலளிப்பார்கள் என்பது சுவாரஸ்யமானது. பேச்சுவார்தைகளின் கவனம் இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் திருப்பப்படுமாயின், நாம் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பக் கோட்டிற்கே திரும்பி உள்ளோம் என்பது தெளிவாகும்.

(15. 06. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதிலான பிரச்சினைகள்

மீண்டும் ஒருமுறை அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய்வதற்கு முன்னரேயே சமாதானத்திற்கான அரசியல் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துவிடும் போன்றதொரு நிலை தோன்றியுள்ளது. ஒவ்வொரு தடவையும் பெரும் உற்சாகத்துடனும், ஆரவாரத்துடனும் ஆரம்பிக்கப்படுகின்ற பேச்சுவார்த்தைகள் அடிப்படைப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு முன்னரேயே முறிவடைந்து விடுவது துரதிஷ்டவசமானது. 1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் ஆறு மாதமளவிற்கே இடம்பெற்றிருந்தது. ஆயினும், தற்போது ஏறத்தாழ ஒன்றரை வருடங்கள் கடந்த பின்பும் நாம் முன்னோக்கி நகராதிருப்பதும், முட்டுக்கட்டை நிலையை அடைந்திருப்பதும் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளன.

இத்தடவை சமாதான முயற்சிகள் நீண்ட அதிதீவிர யுத்தம் ஒன்றிற்குப் பின்னரும் உயரிய மட்டத்திலான அதிருப்திகள், குற்றச்சாட்டுக்கள் என்பவற்றிற்கு மத்தியிலுமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனவே பேச்சுவார்த்தைகளை மிக வேகமாக எடுத்துச் செல்வது உகந்தது அல்ல. நிதானமான, படிப்படியான ஒரு அணுகுமுறை அவசியமானது என பலராலும் எடுத்துக் கூறப்பட்டிருந்தது. இது முற்றிலும் தவறான ஒரு வாதம் அல்ல. உடனடியாக நாம் கவனம் செலுத்த வேண்டியிருந்த ஒரே விடயம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த பிரதேசங்களின் புனருத்தாரணம் என்பது மட்டுமல்ல. அடிப்படையில் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரிடையேயும் ஏற்பட்டிருந்த அச்சங்களையும் அவநம்பிக்கைகளையும் போக்குகின்ற வகையிலான நம்பிக்கையைக் கட்டி எழுப்பும் நடவடிக்கைளுக்கான தேவை ஒன்றும் காணப்பட்டது.

இத்தகைய ஒரு நிலையில் உணர்வு பூர்வமானவையாகவும், பல சிக்கல்களையும், முரண்பாடுகளையும் தன்னகத்தே கொண்டிருந்த அடிப்படைப் பிரச்சினைகளை உடனடியாக மிகத்தீவிரமான வகையில் ஆராயத் தொடங்குவது உசிதமானது அல்ல எனவும் கூறப்பட்டது. இதற்குப் புறம்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாட்டிற்குரிய அடிப்படைப் பிரச்சினைகளை அன்றி, தீர்ப்பதற்கு இலகுவான, மென்மையான விடயங்களை முதலில் கையாள்வது கடினமான விடயங்களிலான பேச்சுவார்த்தைகளை இலகுபடுத்தும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. இப்பின்னணியிலேயே அடிப்படைப் பிரச்சினைகள் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பத்தில் அதிக முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கவில்லை.

சமஷ்டி

ஆயினும், திடுதிப்பென யாரும் எதிர்பாராத வகையில் ஒஸ்லோவில் இடம்பெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் சமஷ்டி அடிப்படையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ள முனைவதற்கு தயாராக இருப்பதாக மோதல் தரப்பினர் அறிவித்தனர். இது அரசியல் அவதானிகளை மட்டும் அன்றி இலங்கை வாழ் மக்களையும், சர்வதேச சமூகத்தையும் கூட வியப்பில் ஆழ்த்தியது. அதன் விளைவாக இது ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கை என பலராலும் பாராட்டப்பட்டிருந்தது.

மோதல் தீர்வு அடிப்படையில் நோக்குகையில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும் சரியான திசையிலுமான ஒரு நகர்வு ஆகும். ஏனெனில், இவ் அறிவிப்பு ஒற்றையாட்சி, தனிநாடு ஆகிய ஒரே தடவையில் அடைந்து கொள்ளப்பட முடியாத இலக்குகளில் இருந்து இரு தரப்பினரும் சாத்தியமான ஒரு புள்ளியை நோக்கி நகர்வதற்கு தயாராக இருப்பதைச் சுட்டி நிற்கிறது. இவ்விதம் சாத்தியமான ஒரு புள்ளியை நோக்கி இரு தரப்பினரும் நகராத பட்சத்தில் இலங்கை இனப் பிரச்சினைக்கு சமாதானமான தீர்வு அடையப்படமுடியாது. இதன் காரணமாகவே ஒஸ்லோவில் இருந்து வெளியிடப்பட்ட சமஷ்டி பற்றிய அறிவிப்பு முக்கியமானதாக அமைந்தது.

சமஷ்டி இலங்கை இனப் பிரச்சினைக்கு சமாதானமான முறையில் சாத்தியமான ஒரே தீர்வு என்பதனால், அது இப்பிரச்சினையின் அடி மட்டத்தைத் தொட்டு நிற்கின்றது. எனவேதான், எதிர்பாராத வகையிலாயினும் மோதல் தரப்பினர் சமஷ்டி பற்றிச் சிந்திக்கத் தயாராக இருந்தமை முன்னேற்றகரமானது என வர்ணிக்கப்படுகின்றது. ஆயினும், துரதிஷ்டவசமாக இடம்பெற்றது யாதெனில், இத்தகைய முற்போக்கான ஒரு செயற்பாட்டிற்குப் பின்னர் பேச்சுவார்த்தைகள் கிட்டத்தட்ட இயங்காத ஒரு நிலையில் முடக்கப்பட்டமையாகும். மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இடம்பெற்ற மேலதிகப் பேச்சுவார்த்தைகளில் முக்கியமான தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், அடிப்படைப் பிரச்சினைகளை இட்டு கவனம் செலுத்தியமைக்கான ஆதாரங்கள் எதுவும் காணப்படவில்லை.

இயல்பாக, நடைபெற்றிருக்க வேண்டியது யாதெனில், சமஷ்டி கட்டமைப்பிலான அரசியலமைப்பு மாற்றம் உட்பட அடிப்படை விடயங்களிலான ஏற்பாடுகள் பற்றி கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகும். ஆயினும், இவ்வித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. அவ்வகையில் பேச்சுவார்த்தைகளைக் காத்திரமான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கான நிச்சயமான சந்தர்ப்பம் ஒன்று தவறவிடப்பட்டிருந்தது.

காரணிகள்

குறிப்பாக, விடுதலைப் புலிகள் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிய பேச்சுக்களில் அதிக அக்கறை கொண்டிருக்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. இதற்கு தென் இலங்கையில் காணப்படுகின்ற அரசியல் யதார்த்தங்கள் ஒரு காரணியாக இருந்திருக்கலாம். தென் இலங்கையின் அரசியல் யதார்த்தம் யாதெனில், அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிச்சயமான பெரும்பான்மையைக் கொண்டிராத ஒரு நிலையில், குறிப்பாக, இறுதித் தீர்வில் அதி தீவிரமாக அதிருப்தி அடையக் கூடிய முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவில் தங்கி இருக்கின்றமையாகும். இதனிலும், முக்கியமானது அடையப்படுகின்ற எத்தகைய தீர்வையும் ஒரு நொடியில் தவிடு பொடியாக்கிவிடக் கூடிய நிறைவேற்று அதிகாரங்கள் யாவற்றையும் கொண்ட அதேசமயம், சமாதான செயன்முறைக்கு ஆதரவளிக்காத ஜனாதிபதியின் இருப்பு ஆகும். எனவே, எத்தகைய தீர்வையும் நடைமுறைப்படுத்தக் கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை என புலிகள் கருதி இருக்கக்கூடும். எனினும், இறுதித் தீர்வு ஒன்றை நோக்கி அரசாங்கத்தை அழுத்தத்திற்கு உட்படுத்துவது தமிழ்த் தரப்பினருக்கு சாதகமாக இருந்திருக்கக் கூடும்.

அதேசமயம், இறுதித் தீர்வு ஒன்றை நோக்கி வேகமாக நகர்வதற்குரிய ஆர்வம் அரசாங்க மட்டத்திலும் இல்லாதிருந்தமை கவனிக்கப்பட வேண்டியதாகும். விரைவாக, இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களில் முதலாவதாக இருந்திருக்கவில்லை. இவ்வரசாங்கம் பிரதானமாக இரு கோஷங்களின் அடிப்படையிலேயே பதவிக்கு வந்தது.

ஒன்று, பொருளாதார அபிவிருத்தி, மற்றொன்று சமாதானம், பொருளாதாரத்தைப் பொறுத்தவரை அது சாதகமான ஒரு திசையை நோக்கிக் திரும்பப்பட்டதே அன்றி உடனடியான பலாபலன்கள் எதனையும் மக்களுக்கு வழங்கக் கூடியதாக இருக்கவில்லை. விலைவாசி உயர்வும், ஏனைய பொருளாதார நெருக்கடிகளும் ஒரு மட்டத்தில் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன. உதாரணமாக கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒரு சிறிய அளவு சம்பள உயர்வாயினும் வழங்கப்படும் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், நூறு ரூபா உயர்வையாயினும் வழங்கக் கூடிய நிலையில் அரசாங்கம் காணப்படவில்லை. இதற்குப் புறம்பாகக் கூறிக் கொள்ளக் கூடிய அளவிற்கு எவ்வித பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளையும் அனுமதிக்கக் கூடிய நிலையில் திறைசேரி காணப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, அரசாங்கத்திற்கு மக்கள் முன் எடுத்துக் கூறக்கூடிய ஒரே விடயமாக இருந்தது சமாதானப் பேச்சுவார்த்தைகளே. நிச்சயமாக இறுதித் தீர்வு ஒன்றை அடைந்து கொள்ளக்கூடிய அரசியல் வலு இல்லாதிருந்த நிலையில் பேச்சுவார்த்தைகளை நீட்டிச் செல்வதே உகந்த உத்தியாயிருந்தது. ஐ.தே.க. 2005 ஆம் ஆண்டுவரை அரச இயந்திரத்தை ஒருவாறு இழுத்துச் சென்றுவிடுமாயின். அதன் பின்னர் அரசாங்கத்தின் அரசியல் பலம் சாதகமானதாக மாற்றமடையக் கூடும்.

ஜனாதிபதி சந்திரிகா அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட சட்டரீதியாகத் தகுதி இல்லாதவராவார். ஏனெனில், அரசியலமைப்பின் படி ஒருவர் இரண்டு தடவைகள் மட்டுமே ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியும். சந்திரிகாவிற்குப் பின்னர் ஐ.தே.கட்சிக்கு சவாலாக அமையக்கூடிய கவர்ச்சி வாய்ந்த ஜனாதிபதி வேட்பாளர்கள் யாருமில்லை. இத்தகைய ஒரு நிலையில் சமாதானம் சாத்தியம் என்கின்ற நம்பிக்கையுடன் பாரதூரமான அரசியல் மாற்றங்கள் அற்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாராயின் அவர் வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்பு பெருமளவிற்குக் காணப்படுகின்றது.

ஜனாதிபதிப் பதவியும், அரசாங்கமும் ஒன்றாக தமது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற போது தாம் விடுதலைப் புலிகளைத் தீர்க்கமான ஒரு முறையில் கையாளக் கூடும் அல்லது நிச்சயமான தீர்மானங்களை மேற்கொள்ள முடியும் என ஐ.தே.க கருதி இருக்கக்கூடும். இத்தகைய ஒரு பின்னணியிலேயே அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இறுதித் தீர்வு அடைவதற்கு சில ஆண்டுகள் செல்லலாம் எனக் கூறி இருந்தமை விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். எனவே, அடிப்படைப் பிரச்சினைகளை உடனடியாகக் கையாள்வதற்கோ அல்லது இறுதித் தீர்வு ஒன்றை நோக்கி விரைவாக நகர்வதற்கோ அரசாங்க தரப்பில் பெரிய ஆர்வம் எதுவும் காணப்படவில்லை.

இத்தகையதொரு போக்கு இன்று பேச்சுவார்த்தைகள் முறிவடைகின்ற ஒரு நிலையை நோக்கி சீர்குலைவதற்கு நிச்சயமான ஒரு காரணியாக அமைந்திருந்தது. மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்ட இணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதான பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப் பட்டிருக்குமாயின், இன்று இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் முட்டுக்கட்டை நிலையை அடைந்திருப்பதற்கான சாத்தியம் குறைவானதே.

தற்போது ஏற்பட்டுள்ள நிலையில் கவலைக்கிடமான விடயம் யாதெனில், இடைக்கால ஏற்பாடு ஒன்று தொடர்பில் இணக்கம் காண முடியாதுள்ள மோதல் தரப்பினர் எவ்விதம் அதி முக்கியம் வாய்ந்த விடயங்களில் இணங்க முடியும் என்பதாகும். இக்கேள்வி பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் குறித்து அதிக நம்பிக்கையை அளிப்பதாக இல்லை.

எவ்வாறாயினும் இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் காணப்படுகின்ற ஒரு சாதகமான நிலை, இரு தரப்பினருக்கும் இடையில் அத்தகைய ஏற்பாட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை இணங்கப்பட்டிருக்கின்றமையாகும். அதாவது இடைக்கால சபை ஒன்று பற்றி இரு தரப்பினருக்குமிடையில் கருத்து வேறுபாடு இல்லை. கருத்து வேறுபாடு எத்தகைய சபை என்பதிலேயே தான் உள்ளது. எத்தகைய சபை என்பது பேசித் தீர்மானிக்கப்பட வேண்டியதாகும். நேரடியாகப் பேசாமல் இத்தகைய நுணுக்கமான விடயங்களுக்குத் தீர்வு காண்பது கடினமானது.

நேரடிப் பேச்சு என்பது வெளிப்படையாக உத்தியோக பூர்வமாக இடம் பெற வேண்டும் என்கின்ற கட்டாயம் எதுவுமில்லை. இவை திரை மறைவிலே கூட மேற்கொள்ளப்படலாம். வெளிப்படையாகவோ அன்றி திரை மறைவிலோ நேரடியாகப் பேசிக்கொள்ளாமல் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது உசிதமானது எனத் தோன்றவில்லை. அரசாங்கம் தனது திட்டங்களை எழுத்து மூலமாக முன்வைப்பதும் அவற்றை புலிகள் நிராகரிப்பதும் அவசியமற்ற அழுத்தங்களுக்கும், அவப் பெயர்களுக்கும் இரு தரப்பையும் உட்படுத்துமே அன்றி நன்மைகள் எதனையும் கொண்டு வரப்போவதில்லை.

ஏனைய பிரச்சினைகள்.

பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான முட்டுக்கட்டை இடைக்கால நிர்வாக சபை தொடர்பிலானது மட்டுமல்ல, ஏனைய சில பிரச்சினைகளும் தற்போது முட்டுக்கட்டைப் பட்டியலில் இடம் பிடித்துள்ளன. அவற்றில் பிரதானமானவை தொடர்ந்து இடம் பெற்று வருகின்ற அரசியல் படுகொலைகள் மற்றும் கடற் பரப்பில் இடம் பெறுகின்ற அனர்த்தங்கள் என்பவையாகும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்ற அரசியல் படுகொலைகள் அதிர்ச்சியூட்டுபவையாகவும் விசனத்திற்குரியவையாகவும் மாறி வருகின்றன. ஆரம்பத்தில் இராணுவ உளவுத் துறையைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்பட்டவர்களும் பின்னர் ஏனைய தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக தென் பகுதியில் புலிகளே இக் கொலைகளுக்குப் பொறுப்பு எனக் கூறப்படுகின்ற அதேசமயத்தில், புலிகள் , அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம் பெறுகின்ற கொலைகளுக்கு அரசாங்கமே பொறுப்பு எனக் கூறியுள்ளனர்.

எவ்வாறாயினும் இக் கொலைகள் பேச்சுவார்த்தையின் சூழுகத் தன்மையைப் பாதிக்கும் என்பதுடன் புலிகள் தொடர்பில் இறுக்கமான போக்கு ஒன்றைக் கடைப்பிடிக்கும்படி அரசாங்கத்தின் மீது அழுத்தத்தை பிரயோகிப்பதற்கும் பயன்படுத்தப்படும். இக் கொலைகளின் தன்மையையும், போக்கையும் அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தைகள் முறிவுறும் கட்டத்தை அடைந்து விட்டன என பலர் முன்மொழியத் தொடங்கியுள்ளனர்.

அடுத்து, குறிப்பாக முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெறுகின்ற தொடர்ச்சியான வன்முறைகள் பேச்சுவார்த்தைகள் தொடர்வதில் பெரும் சவாலாக மாறி உள்ளன. கடந்த சில காலங்களாகவே புலிகளுக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படையினருக்கும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. கடற்படை இவ்விடயத்தில் அதிக முரட்டுத்தனத்துடன் நடந்து கொள்வதாகக் கூறப்படுகின்ற அதேசமயம், புலிகள் தமது பொருள் மற்றும் மனித வளங்களை இழந்து வருகின்றனர்.

யுத்த நிறுத்தத்தினதும், சமாதானப் பேச்சுவார்த்தைகளினதும் நோக்கம் மோதலின் இரு தரப்பினரும் வெற்றியடைவதாகும். ஒரு தரப்பு மட்டுமே வெற்றி அடைய வேண்டுமாயின், அது யுத்தத்தின் மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, யுத்த நிறுத்தம் ஒன்றின் கீழ் மோதலின் ஒரு தரப்பு தொடர்ச்சியான இழப்புகளைச் சந்தித்து வர ஒரு தரப்பு வெற்றியடைந்து வருமேயாயின், தோல்வியடையும் தரப்பு அத்தகைய யுத்த நிறுத்தத்தின் கீழ் தொடர்ந்து செயற்படும் என எதிர்பார்ப்பது கடினமானது. இவ்வெண்ணக்கரு சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்வதிலும் தொடராதிருப்பதிலும் முக்கியமான ஒரு காரணியாகச் செயற்படுமா இல்லையா என்பது விரைவில் தெளிவாகக்கூடும்.

(22 .06. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

ஸ்ரீ.ல.சு.க - ஜே.வி.பி. அரசியல் கூட்டணி

பதினேழு ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைத் தோற்கடிக்கும் முகமாகப் பல்வேறு கட்சிகளைக் கொண்ட ஒரு பெரும் கூட்டமைப்பாகத் தோற்றுவிக்கப்பட்டதே பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகும். அன்று (1994 ஆம் ஆண்டு) தனது நோக்கத்தில் பெருவெற்றியடைந்த கூட்டணி, அண்மைக் காலங்களில் ஐ.தே கட்சியை எதிர்கொள்வதில் அதிக வலுவுடையதாகக் காணப்படவில்லை.

இதன் பிரதான காரணம் கூட்டணியில் ஆரம்பத்தில் அங்கம் வகித்த சில கட்சிகள், அமைப்பில் இருந்து வெளியேறியுள்ள அதேசமயம், லங்கா சமசமாஜக் கட்சி போன்ற சிறிய கட்சிகள் வாக்குச் சேகரிக்கும் தொழிலில் சக்திமிக்கவையாகக் காணப்படவில்லை. அதேசமயம் தனித்து ஐ.தே.கட்சியை தோற்கடிக்கக்கூடிய நிலையில் சுதந்திரக் கட்சியும் காணப்படாமையினாலேயே ஜனதா விமுத்தி பெரமுனவுடன் கூட்டுச் சேர்வது பற்றிச் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் அக்கட்சிக்கு ஏற்பட்டிருந்தது.

பழைய கூட்டு

எவ்வாறாயினும், சுதந்திரக் கட்சி, ஜனதா விமுக்தி பெரமுன கூட்டு என்பது புதியதொரு விடயம் அல்ல என்பது யாவரும் அறிந்ததே. 2000 ஆம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸின் ஹக்கீம் பிரிவு அரசாங்கத்தில் இருந்து விலகியதைத் தொடர்ந்து ஆட்டம் கண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை தக்க வைத்துக் கொள்கின்ற நோக்கில் இவ்விரு கட்சிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டுக் கொண்டமையும், "தகுதிகாண்" அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டமையும் நினைவிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகுதிகாண் அரசாங்கம் அதிக காலம் நிலைக்காமையினால் இவ்விரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டும் இல்லாது போயிருந்தது. எனினும் அக்கூட்டின் எஞ்சியிருந்த அச்சங்களின் காரணமாகவும், தற்போதுள்ள அரசியல் யதார்த்தங்கள் காரணமாகவுமே இவ்விரு கட்சிகளும் மீண்டும் ஒருமுறை கூட்டுச் சேர்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் சமாதான முயற்சிகளில் அதிருப்தியுற்றுள்ள சிங்கள மக்களுக்கு நம்பிக்கையை அளிப்பதற்கு முயற்சிக்கின்ற பேச்சுவார்த்தை தரப்பினர் இன்னும் ஓர் இணக்க நிலையை அடைய முடியவில்லை எனினும் இக்கூட்டு நடைமுறைக்கு வந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துமாயின் இலங்கை அரசியல் வரலாற்றில் அதிமுக்கியம் வாய்ந்த ஓர் அரசியற் செயற்பாடாக மாற இடமுண்டு.

பிரச்சினைகள்

கூட்டமைப்பை ஏற்படுத்த இணங்குவதில் இவர்களுக்கிடையில் மூன்று பிரதான பிரச்சினைகள் காணப்படுகின்றன (1) அதிகாரப் பரவலாக்கல், குறிப்பாக விடுதலைப் புலிகள் தொடர்பிலான கொள்கை (2) ஆசனப்பகிர்வு ஏற்பாடு, (3) கூட்டமைப்பின் தலைமைப் பதவிகளின் பகிர்வு.

இவற்றுள் முதலாவது அம்சம், அதாவது இனப்பிரச்சினை தொடர்பில் இவ்விரு கட்சிகளுக்கும் அடிப்படையில் அதிக வேறுபாடுகள் காணப்படுவதாக தோன்றவில்லை. இரு கட்சிகளும் இயலுமாயின் இராணுவத் தீர்வு ஒன்றை அடைய விரும்புவதுடன், நீதி, சமத்துவம் என்கின்ற பாரிய கோட்பாடுகளின் கீழ் அதிகாரத்தை நிறுவன ரீதியாகப் பகிர்ந்தளிக்காமல் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விருப்பம் கொண்டுள்ள கட்சிகளாகும்.

ஆயினும் வேறுபாடு யாதெனில், ஜே.வி.பி.யுடன் ஒப்பிடுகையில் இவ்விருப்பத்தைக் கொள்கை ரீதியாகச் செயற்படுத்த முடியாத ஒரு நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. உள்ளூர் ரீதியாகவும், குறிப்பாக சர்வதேச ரீதியாகவும், இனப்பிரச்சினைக்கான தீர்வு அரசியல் பேச்சுவார்த்தைகளூடாக அடையப்படவேண்டும் என்பதுடன், நிறுவன ரீதியான அதிகாரப் பரவலாக்கலை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதற்கு முற்றும் மாறாகச் செயற்படக்கூடிய நிலையில் சுதந்திரக் கட்சி காணப்படவில்லை. குறிப்பாக அது ஒரு பெரிய கட்சி என்பதனாலும், அதிலும் முக்கியமாக நாட்டின் ஜனாதிபதி அக்கட்சியைச் சார்ந்தவர் என்பதினாலும் சர்வதேச மற்றும் உள்ளூர் யதார்த்தங்களின் அழுத்தத்திற்கு இலகுவாக உட்படக் கூடிய நிலையில் சுதந்திரக் கட்சி காணப்படுகின்றது.

இதன் வெளிப்பாடாகவே சுதந்திரக் கட்சி அல்லது தற்போது பொதுஜன முன்னணி புலிகளுடனான அரசியல் பேச்சுவார்த்தைகள், அரசியல் தீர்வு என்பவற்றைக் கோட்பாட்டளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. மேலும், ஜே.வி.பியுடன் கூட்டு அமைத்துக் கொள்கின்ற பட்சத்திலும் கூட புலிகளுடனான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தைகள் தொடரும் என எடுத்துக்காட்ட ஜனாதிபதியும், சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் பெரும் பிரயத்தனம் செய்வதும் இதனாலேயே ஆகும். எனவே, சர்வதேச அழுத்தம் என்பது வேறுபட்ட வகையில் இலங்கையிலுள்ள எல்லா அரசியற் குழுக்களின் மீதும் தாக்கம் செலுத்துவதாகவே காணப்படுகின்றது.

ஆயினும், இத்தகைய அழுத்தங்களுக்கு இலகுவாக உட்படவேண்டிய நிலையில் ஜே.வி.பி காணப்படவில்லை என்பது முக்கியமானது.ஒன்று, அதன் ஆதரவுத்தளம் இனரீதியாகக் கடும் போக்குடைய சிங்களவர் மத்தியிலேயே அமைந்துள்ளது. இதன் காரணமாக உள்ளூர் மிதவாதிகளின் அபிப்பிராயங்-களுக்கு அடிபணிய வேண்டிய அவசியம் அதற்குக் காணப்படவில்லை. உண்மையில் உள்ளூர் மிதவாதிகளின் அபிப்பிராயங்களுக்கு எதிரான கடும் போக்கைக் கடைப்பிடிப்பதன் மூலம் கடும் போக்காளர்களுக்கிடையேயான ஆதரவை வலுப்படுத்திக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் ஜே.வி.பி செயற்படுவதாகவே தோன்றுகின்றது.

இந்த அணுகுமுறையிலான பிரச்சினை யாதெனில் ஜே.வி.பி ஒரு மட்டத்தில் தனது எண்ணிக்கையை பாராளுமன்றத்தில் அதிகரித்துக் கொள்ள முடியுமேயாயினும், ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வது என்பது சாத்தியமானதல்ல. இதன் காரணமாகவே ஜே.வி.பி.யும் கூட சுதந்திரக் கட்சியுடனான கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்வதில் அக்கறை உடையதாய் உள்ளது. கூட்டணி ஒன்று இல்லாத நிலையில் அரசியல் அதிகாரத்தை அனுபவிப்பதென்பது ஜே.வி.பி.யைப் பொறுத்தவரை நீண்டகாலக் கனவாகவே அமையும்.

உடனடி அக்கறை

இரண்டாவது, ஜே.வி.பி.யின் உடனடி அக்கறை தனது பாராளுமன்றப் பலத்தை அதிகரித்துக் கொள்வதே அன்றி, ஆட்சியை முற்றாகக் கைப்பற்றிக் கொள்வது அல்ல. எனவே சர்வதேச அபிப்பிராயம் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவேண்டிய அவசியம் அதற்கு இல்லை. ஜே.வி.பி தனித்து ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய ஒரு சக்தியாக வளர்ச்சியடையுமாயின், விரும்பியோ, விரும்பாமலோ, சர்வதேச அபிப்பிராயத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியம் அதற்கு ஏற்படும்.

எனவே, இனப்பிரச்சினை தொடர்பிலான அணுகுமுறையில் இரு கட்சிகளுக்கும் இடையில் பாரதூரமான வேறுபாடுகள் காணப்படுகின்றன எனினும் இவ்விடயம் தமது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் சாத்தியத்தை இல்லாமற் செய்துவிடக்கூடாது என இரு தரப்பினரும் உணர்ந்துள்ளமையினால் இவ்வேறுபாடுகள் தற்காலிகமாகத் தள்ளிப்போடப்பட்டுள்ளன.

எனினும், ஜே.வி.பி.யைப் பொறுத்து அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை கூட்டணிக்குள்ளான ஆசனப் பகிர்வும் பதவிப் பகிர்வும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்கால பத்திரிகை அறிக்கைகளின்படி தற்போது பாராளுமன்றத்தில் 16 ஆசனங்களைக் கொண்டுள்ள ஜே.வி.பி.30 இற்கும் மேற்பட்ட ஆசனங்களையும், கூட்டணியினுள் இரண்டாவது முக்கிய பதவியையும் கோருவதாகக் கூறப்படுகின்றது. அத்துடன், இது மிக அதிகமான ஒரு விலை எனச் சுதந்திரக் கட்சியினுள் ஒரு பிரிவினர் கருதுவதாகவும், தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. இவ்விடயங்களில் இரு தரப்பினரும் கடுமையான நிலைப்பாடுகளையும், தந்திரோபாயங்களையும் கடைப்பிடிக்கின்ற மையினாலேயே இலங்கை அரசியலில் இன்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்ற முக்கிய விடயங்களில் ஒன்றான சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டு தாமதம் அடைந்து வருகின்றது.

எவ்வாறாயினும் இனப்பிரச்சினை தொடர்பான அணுகுமுறையுடன் ஒப்பிடுகையில் பதவி மற்றும் ஆசனப் பகிர்வு என்பவை தீர்ப்பதற்கு அதிக கடுமையான விடயங்கள் அல்ல. எனவே கால தாமதமாயினும் கூட இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டு என்பது சாத்தியம் அற்ற ஒன்று அல்ல. இன்னொரு வகையில் கூறுவதாயின் இரு கட்சிகளும் கூட்டணி ஒன்றை மிக அண்மைக் காலத்தில் வெற்றிகரமாக அமைக்கக்கூடிய சாத்தியங்கள் அதிகமானதாகவே காணப்படுகின்றன. இத்தகைய ஒரு கூட்டணி நடைமுறைக்கு வருமாயின் உடனடி நிலையில் இரண்டு விளைவுகள் ஏற்படலாம்.

(1) பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கின்ற இடதுசாரிகள் மேலும் தனிமைப்படுத்தப்படுதல்.

(2) ஆட்சி மாற்றத்திற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுதல்.

இடதுசாரிகள் நிலை

இலங்கை இடதுசாரிக் கட்சிகள் பதவிக்காகவும், அரசியல் இலாபங்களுக்காகவும், தமது அடிப்படைக் கோட்பாடுகளையும், கௌரவத்தையும் கூடவிட்டுக்கொடுப்பது புதிய ஒரு விடயம் அல்ல. இதற்கு சிறந்த உதாரணம் முற்போக்குவாதிகளாக இருந்திருக்க வேண்டிய கம்யூனிஸ்டுகளும், சோஷலிஸ்டுகளும் இலகுவாக பழைமை வாதிகளிலும் மோசமான இனவாத அரசியல் நடத்தியமையாகும்.

இன்று பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டினுள் இருக்கின்ற இடதுசாரிக் கட்சிகளின் பயன்பாடு பற்றி கூட்டணியின் தலைவியான ஜனாதிபதிக்கு அதிக நம்பிக்கை காணப்படவில்லை. இதன் காரணமாகவே அவர்களை உதாசீனம் செய்கின்ற ஒருபோக்கை ஜனாதிபதி கொண்டிருந்தார். ஜே.வி.பி.உடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டபோது இப்போக்கு உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. இந்நிலையில் இயல்பாக இடதுசாரிக் கட்சிகள் கூட்டணியில் இருந்து ஒதுங்கியிருக்கவேண்டும். ஆயினும் அவ்விதம் இடம்பெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது ஜே.வி.பி. உடனான கூட்டு ஏற்படுமாயின் அது சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பி.யிற்கும் இடையிலானதாக இருக்குமே அன்றி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பி.யிற்கும் இடையிலான தாக இருக்காது. எனவே புதிய கூட்டு ஏற்படுகின்ற போது (பொ.ஐ.மு) கூட்டு தானாகவே இல்லாதொழியும். புதிய கூட்டு ஏற்படாவிடின் இடதுசாரிக் கட்சிகள் தொடர்ந்து சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து செயற்படும். இந்நிலை பொதுஜன முன்னணியில் அங்கம் வகிக்கின்ற இடதுசாரிகளின் கௌரவம், மரியாதை என்பவற்றையிட்டு நல்லெண்ணத்தை ஏற்படுத்துபவையாகக் காணப்படவில்லை.

அரசியல் அதிகாரம்

அடுத்து இப்புதிய கூட்டணியின் நோக்கம் அடுத்த தேர்தலுக்காகக் காத்திருப்பதல்ல. மாறாக உடனடி நிலையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். இவ்விதம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதாயின் அதற்கான அதிகாரங்கள் ஜனாதிபதியிடம் நிறையவே காணப்படுகின்றன. ஆயினும் நாம் கவனத்தில் எடுக்கவேண்டிய முக்கிய அம்சம் யாதெனில் அரசியல் அமைப்பு ரீதியான அதிகாரம் உள்ளது என்கின்ற ஒரே காரணத்தினால் ஜனாதிபதி எதேச்சாதிகாரமான நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்பதாகும். பிரச்சினைகள் அடிப்படையில் அரசியல் ரீதியானவை என்பதனால் அதிகாரப் பிரயோகம் அரசியல் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

அதாவது ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஜனாதிபதி ஈடுபடுவாராயின், அச்செயற்பாடுகள் அரசியல் ரீதியாக நியாயப்படுத்தப்பட வேண்டும். நாம் கடந்த ஒன்றரை ஆண்டுகால இலங்கை அரசியலை உன்னிப்பாக அவதானிப்போமாயின், அரசாங்கத்திற்கு எதிரான அபிப்பிராயத்தைத் திட்டமிட்ட வகையில், தந்திரோபாயமாக ஜனாதிபதி கட்டியெழுப்பி வந்துள்ளது புலப்படும். உதாரணமாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம் புலிகளுக்கு அதிகளவான விட்டுக்-கொடுப்புகளை மேற்கொண்டுள்ளதுடன், நாட்டின் இறைமைக்கும், பிராந்திய ஒருமைப்பாட்டிற்கும் குந்தகம் விளைவித்திருப்பதாகக் குற்றம் சாட்டி வந்துள்ளார்.

அத்துடன், மந்திரிசபை கூட்டங்கள் உட்பட ஏனைய அரசாங்கத் தீர்மானங்கள் யாவும் தனது அறிவுக்கு அப்பாற்பட்டவகையில், தனது ஒப்புதல் இன்றியே மேற்கொள்ளப்பட்டுள்ள என மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர். இதன்மூலம் அரசாங்கச் செயற்பாடுகளிலிருந்து வெற்றிகரமாகத் தன்னை வேறுபடுத்திக் கொண்டுள்ளார். மேலும் வரலாற்றில் எப்பொழுதும் இல்லாதவாறு கடற்படைத் தளபதிக்கு மூன்றாண்டு காலப் பதவி நீடிப்பை வழங்கியதன் மூலம் கடற்படையை முற்றாகத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்குப் புறம்பாக அபிவிருத்தி லொத்தர் சபையை அமைச்சரவை அனுமதி இன்றித் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததன் மூலம் தனது அதிகாரப் பிரயோகத்தின் விளைவுகளைப் பரிசீலனை செய்துள்ளார். இப்பரிசோதனையின் மூலம் தெளிவாகியுள்ள விடயம் யாதெனில், இத்தகைய ஒரு நிலையில் அரசாங்கம் பலாத்காரப் பிரயோகத்தையே நாடும் என்பதுடன், மக்கள் மத்தியிலிருந்து பாரதூரமான எதிர்ப்புகள் எதுவும் எழவாய்ப்பில்லை என்பதாகும். இவை ஜனாதிபதியின் கணிப்புகளுக்கு சாதகமானவையாகும். அவ்வகையில் ஜனாதிபதி தனது நிலையை திட்டமிட்ட வகையில் பலப்படுத்தி வந்துள்ளார் என்றே கூறப்படவேண்டும.

இத்தகைய ஒரு பின்னணியில் புதிய கூட்டு ஏற்படுமாயின் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் இரண்டு விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.(1) பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதியதேர்தல் ஒன்றை நடாத்துதல் (2) அரசாங்கத்தைக் கலைத்துப் புதிய கூட்டணி அரசாங்கத்தை ஏற்படுத்த முயற்சித்தல். இவற்றுள் இரண்டாவது விடயத்தையே ஜனாதிபதி முதலில் முயற்சிக்கக் கூடும். ஏனெனில் புதிய தேர்தல் ஒன்று மேலதிக சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும் என்பதுடன் முடிவுகளும் நிச்சய மற்றவையாகும்.

எனவே, புதிய கூட்டணி வெற்றி அளிக்குமாயின் அது நேரடி ஆட்சி மாற்றத்தையே முயற்சிக்கக்கூடும். அம்முயற்சி தோல்வியுறும் பட்சத்தில் புதிய தேர்தல் ஒன்றை நோக்கி இலங்கை மக்கள் நிர்ப்பந்திக்கப்படுவர்.

எவ்வாறாயினும் தற்போது பேச்சுவார்த்தை மட்டத்தில் காணப்படுகின்ற சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டிற்கான முயற்சி வெற்றியடையுமாயின் அது இலங்கை அரசியலில் பாரதூரமான தாக்கத்தைக் கொண்டிருக்கும். அத்தகைய முக்கியத்துவமுடைய ஒரு அபிவிருத்தி ஏற்படுமா இல்லையா அல்லது எவ்வளவு விரைவாக ஏற்படும் என்பது அண்மைய எதிர்காலத்தில் தெளிவாகும்.

(13. 06. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

இந்தியா தலையிடுவது சமாதான முயற்சியின் சுமுகமான முன்னேற்றத்துக்கு பாதகமானது

1988 ஆம் ஆண்டுகளிலிருந்து இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்களில் ஒன்று, இனமோதல் தீர்வு என்பதில் இந்தியாவின் பங்கு பற்றிய இங்குள்ள இனங்களுக்கிடையேயான கருத்து மாற்றமாகும். 80 களில் இனப் பிரச்சினைத் தீர்வில் இந்தியா தீவிரமாக பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணம் தமிழ் மக்களிடையே உறுதியாக வேரூன்றி இருந்தது. ஆயினும் இன்று அத்தகைய தீவிர ஆர்வம் ஒன்று அவர்களிடையே காணப்படவில்லை.

அதேசமயம் இந்தியாவின் தலையீட்டை கடந்த காலங்களில் வன்மையாக எதிர்த்த சிங்கள மக்கள், குறிப்பாக சிங்கள இனவாத சக்திகள் இன்று இந்தியாவின் தலையீட்டை வலியுறுத்துகின்ற நிலைக்கு மாற்றமடைந்துள்ளனர். இதற்கான காரணம் யாது?

தமிழரின் நண்பன்?

இலங்கைத் தமிழருக்கும், தமிழக மக்களுக்கும் இடையிலான தொடர்புகளின் காரணமாகவும் அந்நியோன்யத்தன்மை காரணமாகவும் ஆரம்ப காலம் தொட்டே இலங்கைத் தமிழர் இந்தியாவுடனான உணர்வு ரீதியான பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். இதன் காரணமாகவே இந்தியாவைத் தாய்நாடு என அழைக்கின்ற ஒரு மரபு தோற்றம் பெற்றிருந்தது. இத்துடன் இணைந்து ஏற்பட்டிருந்த இன்னுமோர் நம்பிக்கை இலங்கைத் தமிழர்களின் அரசிற்கு எதிரான போராட்டத்தில் இந்தியா தமிழ்த் தரப்பை ஆதரித்து உதவும் என்பதுடன் இறுதி இலக்கான தனிநாடு அல்லது பிராந்திய சுயாதீனம் என்பதை பெற்றுக் கொடுக்கும் என்பதுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரின் போராட்டம் தனது ஆரம்ப காலத்தில் இந்தியா மீதான பூரண நம்பிக்கையைக் கொண்ட தொன்றாகவே காணப்பட்டிருந்தது. இது வீணான ஒரு நம்பிக்கை எனக் கூறுவதற்கில்லை. ஏனெனில் பிராந்திய சுயாதீனத்திற்கான அகிம்சைப் போராட்டம், ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்தபொழுது அதற்கான அடிப்படை ஆதரவு இந்தியாவிலிருந்தே கிடைக்கப் பெற்றிருந்தது. அக்காலத்தில் காணப்பட்ட பிரதான இயக்கங்கள் யாவும் இந்தியாவில் தளங்களைக் கொண்டிருந்ததுடன் நிதி உதவிகளையும், இராணுவப் பயிற்சி-களையும் கூட பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றிற்குப் புறம்பாக ஆயுத உதவிகளும், உளவியல் ரீதியான ஊக்குவிப்புகளும் கிடைக்கப் பெற்றிருந்தன.

இத்தகைய உதவிகளுக்கும், ஊக்குவிப்புகளுக்கும் இந்தியா இலங்கைத் தமிழர் மீது கொண்டிருந்த பற்றும் பாசமும் எந்த அளவிற்கு பங்களித்திருந்தன என்பது நிச்சயமில்லாததாக இருப்பினும் நிச்சயமான ஏனைய சில காரணிகள் காணப்பட்டிருந்தன. அவற்றுள் பிரதானமானவை இந்திய பிராந்திய மேலாதிக்கமும், அதன் தேசிய பாதுகாப்பு அக்கறைகளுமாகும்.

கெடுபிடி யுத்த சர்வதேச சூழ்நிலைகளின் கீழ் இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகள் சாதகமானவையாகக் காணப்படவில்லை. ஆயினும், 1977 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்தன பதவிக்கு வந்ததன் பின்னர் இலங்கை மீதான அமெரிக்காவின் அக்கறைகளும் பிரசன்னமும் அதிகரித்து வந்துள்ளன. இதற்கான ஒரு சிறந்த உதாரணம் ஜே.ஆர்.ஜயவர்தன காலத்தில் இலங்கையிலிருந்த அமெரிக்காவின் குரல் (வொய்ஸ் ஒப் அமெரிக்கா) நிலையம் பெருமளவில் விஸ்தரிக்கப்பட அனுமதிக்கப்பட்டமையாகும். குறிப்பாக இந்நிலையம் இந்தியாவின் இராணுவ நிலைகளை வேவு பார்க்கப் பயன்படுத்தப்படலாம் எனவும், பொதுவாக அதிகரித்து வரும் அமெரிக்கப் பிரசன்னம் இந்திய நலன்களுக்கு எதிராக அமையலாம் எனவும் இந்தியா அச்சம் கொண்டிருந்தது. எனவே, இலங்கை அரசாங்கத்தின் அமெரிக்கச் சார்பு வெளிவிவகாரக் கொள்கையைக் கையாளும் ஒரு தந்திரோபாயமாகவே வடபகுதியிலான ஆயுதக் கிளர்ச்சிக்கு ஆதரவு வழங்கப்பட்டிருந்தது என வாதிடுவோரும் உளர்.

இவற்றிற்குப் புறம்பாகச் செயற்பட்ட தெளிவான ஒரு காரணி தமிழ் நாட்டின் அரசியல் சூழ்நிலைகளாகும். இக்காலப் பகுதியில் தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழருக்கு ஆதரவான ஒரு நிலையும், போராட்டத்திற்கு உதவுவதற்கான விருப்பமும் காணப்பட்டிருந்தன. உதாரணமாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.போன்ற பெரும் அரசியல் தலைவர்கள் போராளிக் குழுக்களுக்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர். இத்தகைய நிலையில் பிரதமராக இருந்த இந்திரா காந்தி தென்னக அரசியல்வாதிகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கைத் தமிழ்ப் போராளிகளை ஆதரிக்க வேண்டிய ஒரு நிலை காணப்பட்டிருந்தது. இந்திரா காங்கிரஸ் போன்ற தேசியக் கட்சிகள் 1960 ஆம் ஆண்டுகளின் பின்னர் தமிழ் நாட்டுத் தேர்தல்களில் குறிப்பிடத்தக்க வெற்றிகள் எதனையும் பெறமுடியவில்லை என்ற பின்னணியில் இது அதிக முக்கியத்துவ முடையதாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படைக் கொள்கை

இத்தகைய காரணிகளின் அடிப்படையில் இந்தியா தமிழர் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்த போதும், இவ்வாதரவு மட்டுப்-படுத்தப்பட்ட ஒன்றாகவே காணப்பட்டிருந்தது. இந்தியாவைப் பொறுத்த வரை தமிழ்ப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதென்பது வேறு, அவர்களின் இறுதி இலக்கான தனிநாடு என்பதற்கு ஆதரவு வழங்குவது என்பது வேறு.இந்தியா தனது ஆதரவை முதலாவது அம்சத்திற்கு மட்டும் மட்டுப்படுத்திக் கொண்டது. ஏனெனில் தனது தென் முனையில் அமைந்துள்ள சிறிய தீவில் இரண்டு அரசுகள் அமைவதை அது என்றுமே விரும்பி இருக்கவில்லை. இதற்குப் பின்னணியில் பல்வேறு காரணிகள் செயற்பட்டிருந்தன. அவற்றுள் பிரதானமானது தமிழர் போராட்டத்தின் வெற்றி தமிழகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என இந்தியா கருதியமையாகும்.

இலங்கைத் தமிழர் போராட்டம் வெற்றி அடைந்து அவர்களுக்கு எனத் தனியான ஒரு அரசு அமையுமாயின் அது தமிழகத்தில் தேசியவாதச் சக்திகளை எழுச்சியுறச் செய்யலாமென்றும், இலங்கையில் ஏற்படுகின்ற தமிழ் அரசு தமிழ்நாட்டில் தனி அரசு ஒன்றுக்கான அடித்தளமாகச் செயற்படலாம் என்றும் இந்தியா கருதியிருந்தது. இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் யாதெனில், தமிழ்நாடு தான் இந்தியாவில் தனிநாடு கோரிய முதலாவது மாநிலம் என்பதாகும். பஞ்சாப் போன்றவை பிற்பட்ட காலங்களிலேயே அத்தகைய ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. எவ்வாறாயினும் காலப்போக்கில் தமிழ்நாட்டின் தனிநாட்டுக் கோரிக்கை பலமிழந்து போனதுடன், தற்போது தமிழ்நாடு இந்தியாவின் தேசிய அரசியலில் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தமிழ்நாட்டில் தனிநாட்டிற்கான விருப்பம் பூரணமாக அழிந்துவிடவில்லை எனவும், அங்குள்ள மிகச் சிறிய குழுக்கள் மத்தியில் அத்தகையதோர் விருப்பம் இன்றும் காணப்படுகிறது எனவும் நம்பப்படுகின்றது.

இன்னுமோர் மட்டத்தில் ஈழம் உருவாவது தமிழ் நாட்டிற்கும் அப்பாற்பட்ட வகையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனக் கருதப்பட்டது. இந்தியாவில் அசாம், பஞ்சாப் போன்ற பல பிரதேசங்களில் தனிநாடு அல்லது பிராந்திய சுயாதீனம் என்பதற்கான போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

இந்நிலையில் ஈழம் உருவாவதன் மூலம் பிரிவினைவாத எழுச்சி இந்தியாவின் ஏனைய பிரதேசங்களிலும் பிரிவினைவாதத்தை மேலும் தூண்டுகின்ற தொடர்ச்சியான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

எனவே, இங்கு நாம் கவனத்திற் கொள்ள வேண்டியது யாதெனில், இலங்கையில் தமிழர்களுக்கென தனிநாடொன்று அமைவதை இந்தியா தனது பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாகக் கருதுவதாகும். இதுவே தமிழர் போராட்டம் தொடர்பான இந்தியக் கொள்கையின் அடித்தளமாகும். இதன் காரணமாகவே 1987 ஆம் ஆண்டு தமிழர்களுக்குப் பாரிய அதிகாரப்பரவலாக்கம் எதனையும் வழங்காத திட்டம் ஒன்றிற்காக போராட்டத்தை விட்டுக்கொடுக்க இந்தியா இணங்கி இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வொப்பந்தத்தின் பின்னணியிலான முக்கியமான இன்னொரு விடயம் திருகோணமலை துறைமுகத்தை இந்தியாவிற்கு எதிரான நாடுகளின் பாவனைக்கு அனுமதிப்பதில்லை, அமெரிக்காவிற்கு இலங்கையில் வழங்கப்பட்டிருந்த வசதிகள், இந்திய இராணுவ நலன்களுக்கு எதிராக பயன்படுத்தப்படலாகாது என்பதை உத்தரவாதப்படுத்தல் என்பன போன்ற ஏற்பாடுகளுக்கு இந்தியா, இலங்கை அரசை இணங்கச் செய்திருந்தமையாகும். எனவே, 1987 ஆம் ஆண்டு இந்தியாவின் நடவடிக்கைகள் எந்த அளவிற்கு தமிழர்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன என்பது கேள்விக்குரியதே.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்னர் இடம்பெற்ற விடயங்கள் உதாரணமாக இந்திய அமைதிகாக்கும் படை இலங்கைக்கு அனுப்பப்பட்டமை, இப் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம், ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டமை போன்றவை இன்று வரலாறாகும். இங்கு குறிப்பிடத்தக்கது. யாதெனில் இத்தகைய அபிவிருத்திகளின் பின்னர் இந்தியா இலங்கையில் தலையிடாகக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக் கொள்வதாகும்.

இது ஓரளவிற்கு உண்மையேயாயினும் பூரணமான ஒரு தலையிடாகக் கொள்கையல்ல. ஏனெனில், தற்போதும் கூட இலங்கை இனப்பிரச்சினையிலான இந்தியாவின் அடிப்படைக் கொள்கையில் மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. அதாவது இந்திய பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கக் கூடியது என இந்தியா கருதக்கூடிய எந்த விதமான அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தையும் இந்தியா அங்கீகரிக்கப் போவதில்லை.எனவே மறைமுகமான ஒரு செயற்பாடு தொடர்கிறது எனக் கருதப்படலாம்.

தற்போதைய நிலை

இதன் காரணமாகவே இன்று சிங்கள தீவிர தேசியவாதக் குழுக்கள் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் பங்கை அல்லது தலையீட்டை தீவிரமாக வலியுறுத்தி வருகின்றன. ஏனெனில், இக்குழுக்களினதும், இந்தியாவினதும் அடிப்படை நிலைப்பாடுகளில் அதிக வேறுபாடுகள் காணப்படவில்லை. இந்தியா ஏற்க்கக் கூடிய அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கம் என்பது இந்திய மாதிரியிலான சமஷ்டி ஒன்றே ஆகும். இது தமிழ்த் தரப்பை தற்போதைய நிலையில் திருப்தி செய்யக்கூடிய ஒரு தீர்வு அல்ல என்பது ஏற்கனவே வெளிப்படையாகியுள்ளது. எனவே, சிங்கள தீவிர தேசியவாதக் குழுக்கள் இந்தியத் தலையீட்டை வலியுறுத்துவது ஆச்சரியமான ஒரு விடயம் அல்ல.

ஆச்சரியத்திற்குரிய விடயம் யாதெனில், சில தமிழ்க் கட்சிகளும் கூட இத்தகைய தலையீட்டை ஆதரிப்பதாகும். இவ்விதம் தமிழ்க் கட்சிகள் இனமோதல் தீர்வில் அல்லது சமாதான செயல்முறைகளில் இந்தியத் தலையீட்டை ஆதரிப்பதற்கு இரண்டு காரணிகள் இருக்கலாம் (1) தற்கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல் சிந்தனைகள் (2) இக்கட்சிகளுக்கு இந்தியத் தலையீட்டின் மூலம் குறுகிய இலாபங்கள் இருத்தல் இங்கு குறுகிய இலாபங்கள் என்பது தனிப்பட்ட மற்றும் கட்சி நலன்களையேயாகும்.

எவ்வாறாயினும், இந்தியா ஒரு வலிமை மிக்க பிராந்திய வல்லரசு என்பதை மறந்து விட முடியாது. அதேநேரத்தில் இந்தியாவின் நேரடித் தலையீடு சமாதான செயன்முறையின் சுமூகமான முன்னேற்றத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனையும் நாம் மறந்து விடலாகாது. ஏனெனில், இந்தியத் தலையீடு அதிகாரப் பிரயோகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்குமே அன்றி இணக்கத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிராது.

எனவே, மேற்கொள்ளப்படக்கூடிய புத்தி சாதுரியமான நட்வடிக்கை யாதெனில், பேச்சுவார்த்தைகள் தொடர்பான முக்கிய அபிவிருத்திகளை அதற்கு உடனுக்குடன் அறியத்தரும் அதேசமயம் பாதுகாப்பான ஒரு தூரத்தில் அதனை பேணிக் கொள்வதாகும். இவ்வணுகுமுறை இந்தியாவின் சந்தேகங்களையும், அக்கறைகளையும் நிவர்த்தி செய்ய உதவுவதுடன் தனது இருப்பு மதிக்கப்படுகிறது என்கின்ற திருப்தியையும் இந்தியாவிற்கு அளிக்கும். அவ்வகையில் இலங்கை அரசாங்கமும், மூன்றாம் தரப்பாகிய நோர்வேயும் டெல்லிக்குச் சென்று இந்திய அரசியல் தலைவர்களைச் சந்திப்பதும் கலந்துரையாடுவதும் சரியான திசையிலான நடவடிக்கைகளாகும்.

(20. 07. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

தீர்வில் மூன்றாந் தரப்பாக இந்தியாவும் நோர்வேயும்

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கருதுகின்ற பிரிவினர் சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே காணப்படுகின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு தற்போதைய சமாதான முயற்சியில் ஒரு மூன்றாந் தரப்பாக இந்தியாவின் தலையீடு விரும்பத்தக்கதல்ல என கடந்த வாரம் வாதிட்டிருந்தோம். இவ்வாதம் இலங்கை இன மோதல் தீர்வில் இந்தியாவின் அடிப்படைக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டிருந்தது. அதாவது இந்தியப் பிராந்திய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடியது என இந்தியா கருதக்கூடிய தீர்வுகளை அது அனுமதிக்கப் போவதில்லை எனவும், அது ஆதரிக்கக்கூடிய அதிக பட்ச தீர்வு இந்திய மாதிரியிலான சமஷ்டி முறை ஒன்றே எனக் கூறப்பட்டிருந்தது. தற்போதைய நிலையில் இலங்கையில் இந்திய மாதிரியிலான சமஷ்டி போதுமான அதிகாரப் பரவலாக்கல் முறையாக இல்லாமையினால் இந்தியத் தலையீடு விரும்பத்தக்கதல்ல என வாதிடப்பட்டிருந்தது.

இதற்குப் புறம்பாக, இந்தியத் தலையீட்டின் கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையிலும் கூட, ஒரு மூன்றாந் தரப்பாக அதன் செயற்பாடுகள் சாதகமான விளைவுகளைக் கொண்டு வரக்கூடிய சாத்தியங்கள் அரிதாகவே காணப்படுகின்றன. அவ்வகையில் ஒரு மூன்றாந் தரப்பாக இந்தியாவின் செயற்பாடுகளை ஆராய்வது பயனுடையதாக இருக்கும் எனக் கருதப்பட்டமையினால், அது குறித்து இக்கட்டுரையில் கவனம் செலுத்தப்படுகின்றது.

அழைப்பு

மூன்றாந் தரப்பு தலையீடு ஒன்றில் அடிப்படையான ஒரு அம்சம், அத்தகைய தலையீட்டாளர் மோதலில் ஈடுபட்டுள்ள பிரதான தரப்பினரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் ஆகும். அவ்விதமான இணக்கம் இல்லாது ஒரு மூன்றாந் தரப்பு தலையீட்டை மேற்கொள்ளுமாயின் அது அந்நாட்டின் அல்லது சமூகத்தின் உள் விவகாரங்களில் தலையிடுவதாகவே வர்ணிக்கப்படும். இவ்வடிப்படையில் அத்தலையீடு நிராகரிக்கப்படும். எனவே, மூன்றாந்தரப்பு என்று உள்ளோர் இன மோதல் ஒன்றில் தலையிடுவதற்கு முன்னர் மோதலில் ஈடுபட்டுள்ளோரிடமிருந்து அத்தகைய அழைப்பு ஒன்றைப் பெற்றுக் கொள்வது உகந்தது.

உதாரணமாக நோர்வேயின் மூன்றாந் தரப்புத் தலையீட்டை எடுத்துக் கொள்வோமாயின் தான் அத்தகைய செயல்பாட்டில் ஈடுபட வேண்டுமாயின், விடுதலைப்புலிகளும், இலங்கை அரசாங்கமும் உத்தியோக பூர்வமாக அழைப்பு ஒன்றை முன்வைக்க வேண்டும் என நோர்வே கூறியிருந்தது. அதற்கமைய 2000 ஆம் ஆண்டு ஜனாதிபதி குமாரதுங்கவின் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் அத்தகைய வேண்டுகோளை முன்வைத்ததன் பின்னரே நோர்வே தனது மத்தியஸ்த முயற்சிகளை ஆரம்பித்திருந்தது.

எனினும், இந்தியத் தலையீடு இத்தகைய வேண்டுகோள்கள் எதனையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. ஆயினும் இக்காலத்தில் தமிழ்த் தரப்பினர் தமது இலங்கை அரசிற்கு எதிரான முறைப்பாடுகளை இந்தியாவிற்கு எடுத்துச் சென்றமையும், தமக்கு உதவும் படி இந்தியாவைத் தொடர்ந்து வேண்டி வந்தமையும் தமிழர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாகக் கருதப்படலாம். எனினும் இலங்கை அரசாங்கம் இத்தகைய அழைப்புகள் எதனையும் விடுக்காதது மட்டுமன்றி, இந்திய நடவடிக்கைகளை தமது உள் விவகாரங்களிலான தலையீடாகவே வர்ணித்து வந்தது. இவ்விதம் மோதலில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரதும் இணக்கத்தைப் பெறாதிருந்தமையும் இந்தியா வெற்றிகரமான ஒரு மூன்றாந் தரப்பாகச் செயற்பட முடியாமைக்கு ஒரு காரணியாகும்.

ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்குப் பின்னர், இன்று நிலைமை தலைகீழாக மாற்றமடைந்துள்ளது. இன்று இந்தியா மூன்றாந் தரப்பாகச் செயற்பட விரும்பின் இலங்கை அரசாங்கத்தின் இணக்கத்தை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியுமேயாயினும் தமிழ்த் தரப்பினரிடமிருந்து குறிப்பாக விடுதலைப் புலிகளிடமிருந்து அத்தகைய அழைப்பைப் பெறுவது கடினமானது. இதற்கான பிரதான காரணி, அண்மைக் காலங்களில் இந்திய அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அபிவிருத்தி அடைந்து வந்துள்ள உறவின் தன்மை ஆகும்.

இங்கு அமைதிகாக்க வந்த இந்தியப் படைகள் மிக விரைவில் விடுதலைப் புலிகளுடன் தீவிர யுத்தம் ஒன்றில் ஈடுபட வேண்டிய அரசியல் சூழ்நிலை ஒன்று அபிவிருத்தி அடைந்திருந்தது. இந்த யுத்தத்தின் விளைவுகள் இந்திய உளவியலில் பாரிய காயங்களை ஏற்படுத்தியிருந்தன எனக் கூறின் அது மிகையாகாது. யுத்தம் இந்தியப் படையினருக்கு மனிதவள மற்றும் பொருள்வள நட்டத்தை மட்டும் ஏற்படுத்தியிருக்கவில்லை. மாறாக அதன் சர்வதேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தஸ்தையும், கௌரவத்தையும் காயப்படுத்தியிருந்தது. இதற்குப் புறம்பாக, அமைதிப்படை மீதான தாக்குதல்களை இந்தியா ஒரு நன்றி மறந்த செயலாகவே இன்றும் கருதி வருகின்றது. மேலும் ராஜீவ் காந்தியின் கொலை விடுதலைப்புலிகள் மீது இந்தியாவில் ஒரு தேசிய காழ்புணர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து புலிகள் இந்தியாவில் ஒரு தடை செய்யப்பட்ட இயக்கமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதும் அவ்விதமே பேணப்படுவதும் யாவரும் அறிந்த விடயமே ஆகும்.

எனவே, இயல்பாகவே இந்தியாவின் நோக்கங்கள் குறித்த அச்சமும், சந்தேகமும் தமிழ்த் தரப்பினருக்கு இருக்கக்கூடும், இதன் காரணமாக இந்தியத் தலையீடு விரும்பப்படாதிருக்கக் கூடும். எனவே இந்தியாவை ஒரு மூன்றாந் தரப்பாகச் செயற்படும் படி விடுதலைப் புலிகள் உண்மையான அழைப்பொன்றை முன்வைப்பார்கள் என எதிர்பார்ப்பதற்கில்லை. இந்நிலையில் இந்தியா ஒரு மூன்றாந்தரப்பாகச் செயற்பட வேண்டுமாயின் பலவந்தமாகவே அவ்வித செயற்பாட்டில் ஈடுபட வேண்டியிருக்கும். அது ஏற்கனவே சிக்கலான நிலையை அடைந்துள்ள இனமோதலை மேலும் சிக்கலானதாக மாற்றும்.

பக்கச் சார்பின்மை

மூன்றாந் தரப்பு தலையீட்டில் காணப்படுகின்ற இன்னுமோர் ஒன்றிணைந்த பண்பு, மூன்றாந் தரப்பின் பக்கச் சார்பற்ற நிலையாகும். முற்றிலும் நடு நிலையான மூன்றாந்தரப்பை அடைந்து கொள்வது கடினமானதாக இருந்தாலும், ஒரு சமாதான செயன்முறை வெற்றியடைய வேண்டுமாயின் மூன்றாந் தரப்பு ஒப்பீட்டளவிலாயினும் பக்கச் சார்பற்றதாக இருத்தல் வேண்டும்.

இலங்கையின் அரசியல் அனுபவத்தை எடுத்து நோக்குவோமாயின் கடந்த காலங்களில் பிரித்தானியா, பிரான்ஸ், தென்னாபிரிக்கா போன்ற பல்வேறு நாடுகள் இலங்கை இனமோதல் தீர்வுக்கு உதவ விரும்புவதாக அறிவித்துள்ளன. எனினும் இவை யாவும் இலங்கை அரசாங்கத்தினால் அல்லது விடுதலைப் புலிகளினால் நிராகரிக்கப்பட்டிருந்தன. இதற்கான காரணம் இவை மறுதரப்பிற்கு ஆதரவாகச் செயற்படக் கூடும் என ஒரு தரப்பு அச்சம் கொண்டிருந்தமையாகும். எனவே, ஒரு மூன்றாந் தரப்பு வெற்றிகரமாகச் செயற்பட வேண்டுமாயின் அது இரு தரப்பினரதும் நம்பிக்கையைப் பெற்றிருக்க வேண்டியதவசியம்.

உதாரணமாக, நோர்வே தமக்குத் தீங்கை ஏற்படுத்தக்கூடிய வகையில் அடுத்த தரப்பிற்குச் சார்பாக நடந்து கொள்ளாது என இரு தரப்பினரும் கருதுவதனாலேயே தற்போது மோதல் தரப்பினர் அதனை மூன்றாந் தரப்பாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இலங்கை உள்ளூர் அரசியல் அபிவிருத்திகளினால் ஏற்பட்டுள்ள சவால்களுக்கு மத்தியில் தனது பக்கச் சார்பின்மையைப் பேணிக் கொள்ள நோர்வே அரும்பாடுபட்டு வருகின்றது. எனினும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள ஒரு தரப்பின் அல்லது மறு தரப்பின் நம்பிக்கையை ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்தில் நோர்வே இழந்து விடுமாயின் அது வெற்றி பெறக்கூடிய சாத்தியத்தையும் இழந்து விடும்.

எனினும், இந்தியா மூன்றாந் தரப்பாகச் செயற்பட்டபோது இவ்விடயம் தொடர்பில் எவ்வித அக்கறையையும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. தனது தலையீட்டின் ஆரம்ப காலத்தில், குறிப்பாக இந்திரா காந்தி பிரதம மந்திரியாக இருந்த போது, இந்தியா வெளிப்படையாகவே தமிழர்களுக்கு ஆதரவாக செயற்பட்டிருந்தது. இவ்வகையில் தமிழ்க் குழுக்களுக்கு நிதி உதவி, ஆயுத உதவி மற்றும் ஆயுதப்பயிற்சி போன்றவை வழங்கப்பட்டிருந்தன.

பிற்பட்ட காலத்தில், குறிப்பாக ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னரும் ரொமேஸ் பண்டாரி போன்றோர் இனப் பிரச்சினைத் தீர்வில் முக்கிய செயற்பாட்டாளர்களாக மாற்றமடைந்ததன் பின்னரும், இந்தியா அரசாங்க சார்புக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடிக்க ஆரம்பித்திருந்தது. எனவே இந்தியத் தலையீட்டின் எந்த ஒரு கட்டத்திலும் அது பக்கச் சார்பற்ற மூன்றாந்தரப்பாக இருந்ததில்லை. இந்திய முயற்சிகள் இங்கு தோல்விடையந்தமைக்கு இதுவும் ஒரு காரணி எனக் கூறப்படலாம். எதிர் காலத்திலும் கூட இந்தியா பக்கச் சார்பற்ற ஒரு மூன்றாந் தரப்பாக நடந்து கொள்ளும் என்றோ, அல்லது ஆகக் குறைந்தது இவ்விடயத்தில் கரிசனை உடையதாய் இருக்குமென்றோ எதிர்பார்ப்பதற்கில்லை. குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கும், இந்தியாவிற்கும் இடையிலான உறவின் பண்பை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், அது சாத்தியமற்றதாகவே தோன்றுகின்றது.

சமத்துவம்

மூன்றாந் தரப்பின் பக்கச் சார்பின்மை என்பதுடன் இணைந்த இன்னுமோர் விடயம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோர் இடையிலான சம அந்தஸ்து என்பதாகும். இலங்கையில் இனங்களுக்கிடையில் இடம் பெறுகின்ற மோதல், அடிப்படையில் சமத்துவத்திற்கான போராட்டமாகும். இந்நோக்கம் இயல்பாகவே பேச்சுவார்த்தை மேசைக்கும் விஸ்தரிக்கப்படுகின்ற ஒரு போக்கு காணப்படுகின்றது. இதன் காரணமாகவே பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கமும், புலிகளும் சமமான பங்காளிகளாகச் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இலங்கை அரசாங்கங்கள் கடந்த காலங்களில் இத்தகைய அங்கீகாரத்தை வழங்குவதற்குத் தொடர்ச்சியாக மறுத்து வந்துள்ளன.

எனவேதான் கடந்த கால அமைதிப் பேச்சுவார்த்தைகள் யாவற்றிலும் தமிழ்த் தரப்பிலிருந்து உயர்மட்டக் குழுக்கள் கலந்துகொள்ள அரசாங்க சார்பில் அனுப்பப்பட்டோர் சட்டத்தரணிகளும், மத குருக்களும், கட்டிடக் கலைஞர்களும் மட்டுமேயாவர். கடந்த காலங்களில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட தமிழ்ப் போராளிக் குழுக்களின் முக்கியத்துவத்தை மறுக்கும் ஒரு தந்திரோபாயமாகவே கொழும்பிலிருந்து உயர்மட்ட அரசியல் பிரதிநிதித்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படாதிருந்தது. இது கடந்த கால பேச்சுவார்த்தைகளில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்துவதாக இருந்தது.

நடைமுறை யதார்த்தத்தை கவனத்தில் எடுத்து நோக்குகையில், ஒரு அரசுக்கும், அரசு அற்ற ஆயுதக் குழுவுக்கும் இடையிலான அதிகார இடைவெளி நிச்சயமானதும், நிரந்தரமானதுமாகும். அதாவது ஒரு அரசுக்கு சமமான நிலையை அரசு அற்ற ஆயுதக் குழு அடைந்து கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது. எனினும், ஒரு சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றியடைய வேண்டுமாயின், ஓரளவிற்காயினும் சமத்துவம் அடையப்பட வேண்டும் என்பதுடன் தரப்பினர் சமமாக நடத்தப்படவும் வேண்டும். அரசும், அரசுஅற்ற நிறுவனமும் இயல்பாகவே அதிகார சமநிலை அற்றவை என்கின்ற ஒரே காரணத்தினால் அவை பேச்சுவார்த்தை மேசையில் வேறுபட்ட தராதரத்தில் நடத்தப்படுமாயின், அத்தகைய பேச்சுவார்த்தைகள் நியாயமான தீர்வுக்கு வழிவிடும் எனவோ அல்லது வெற்றியடையும் எனவோ எதிர்பார்க்க முடியாது. எனவே, பேச்சுவார்த்தைகள் வெற்றியடைய வேண்டும் என்பதுடன் அவை நியாயமான தீர்வுக்கு வழிவகுக்க வேண்டுமாயின் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகின்ற தரப்பினர் குறிப்பாக மூன்றாந் தரப்பு மத்தியஸ்தரினால் சமமாக மதித்து நடத்தப்படுதல் அவசியம்.

இவ்வெண்ணக்கருவை நோர்வே சரியாகப் புரிந்து கொண்டுள்ளமையினாலேயே அது பேச்சுவார்த்தை மேசையில் இரு தரப்பினரையும் சமமான பங்காளிகளாக நடத்துகின்றது. இதற்கான சிறந்த உதாரணம், முதலாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இடம்பெற்ற பத்திரிகையாளர் கூட்டத்தில் ஜி.எல்.பீரிசும், அன்ரன் பாலசிங்கமும் எவ்விதம் நோர்வே அனுசரணையாளர்களினால் கையாளப்பட்டனர் என்பதாகும். இலங்கை அரசாங்கமும் இவ்விடயத்தின் முக்கியத்துவத்தைச் சரியாகப் புரிந்து கொண்டுள்ளமையினால் அதி உயர் மட்டக் குழு ஒன்றை பேச்சுவார்த்தைக்கு அனுப்பி வைத்துள்ளது. இவ்வித அணுகுமுறை அல்லது தந்திரோபாயம் இதுவரை பேச்சுவார்த்தைகளின் அபிவிருத்தியில் சாதகமான விளைவுகளையே ஏற்படுத்தி உள்ளது என்பதில் சந்தேகமில்லை.

எனினும், இந்தியா இத்தகைய ஒரு அணுகுமுறையில் நம்பிக்கை கொண்டிருக்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை. நாம் முன்னர் கூறியது போன்று இந்திய மத்தியஸ்தம் அதிகாரப் பிரயோகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்குமே அன்றி, மோதல் தரப்பினரிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிராது. கடந்த காலங்களிலும் கூட இந்தியா, இலங்கை அரசாங்கத்தையும் தமிழ்க் குழுக்களையும் மிக வேறுபட்ட அந்தஸ்திலேயே வைத்துக் கையாண்டு வந்திருந்தது. குறிப்பாக போராளிக் குழுக்கள் "பையன்கள்" என்கின்ற விதமாகவே எப்பொழுதும் கருதி மதிக்கப்பட்டு வந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறை மட்டம்

இறுதியாக, கடந்தமுறை இந்திய தலையீட்டால் ஏற்பட்ட விளைவுகள், மீண்டும் ஒரு முறை வெற்றிகரமான மூன்றாந் தரப்பாக அதனுடைய இயலுமையை சந்தேகத்திற்குள்ளாகி உள்ளது. ஆரம்பத்தில் தமிழ்த் தரப்பையும், இலங்கை அரசாங்கத்தையும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்தும் மத்தியஸ்தராகவே இந்தியா தனது பணியை ஆரம்பித்திருந்தது. எனினும், இச்செயன்முறையில் ஏற்பட்ட விரக்தியின் காரணமாக இந்தியா மத்தியஸ்தர் என்கின்ற நிலையிலிருந்து மாற்றமடைந்து தானே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. அவ்வகையில் தமிழர் சார்பாக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஒப்பந்தம் ஒன்றையும் கைச்சாத்திட்டுக் கொண்டது. இது எந்த ஒரு மூன்றாந் தரப்பு செயன்முறையினுள்ளும் உள்ளடக்கப்படக்கூடிய நடத்தை அல்ல. ஒரு வகையில் நோக்குகையில், பேச்சுவார்த்தைகளில் தற்போது ஏற்பட்டுள்ள மந்தகதி காரணமாக நோர்வே விரக்தியுற்று தமிழர் சார்பாகத் தானே ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டால் எப்படி இருக்குமோ அது போன்றதாகவே இந்தியாவின் நடத்தை அமைந்தது. இதன் காரணமாகவே அவ் ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அத்துடன் தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தை தமிழர் ஏற்றுக் கொள்ளாமையினால் விரக்தியுற்ற இந்தியா புலிகளுடன் யுத்தம் ஒன்றில் ஈடுபட்டதன் மூலம் இந் நாட்டில் ஏற்கனவே இருந்த வன்முறையின் மட்டத்தையும். பண்பையும் தீவிரப்படுத்தியிருந்தது. அதாவது, இந்திய நடவடிக்கைகள் உள்நாட்டு யுத்தம் ஒன்றை பிராந்திய யுத்தமாக மாற்றியிருந்தன. இத்தகைய ஒரு நிலை மீண்டும் ஏற்படுமிடத்து அதனைத் தாங்கிக் கொள்ளக் கூடிய இயலுமை இந்நாட்டிற்கு இருக்கப் போவதில்லை. எனவே, எவ்வகையில் நோக்கினும் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடாதிருத்தல் உகந்தது என்றே கருதத் தோன்றுகின்றது.

(27. 07. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

அரசின் புதிய யோசனைகள் புலிகளால் ஏற்கக் கூடியவையா?

இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் பேச்சுவார்த்தைகள் பின்தள்ளப்பட்ட போது சற்றும் பதற்றமடையாத ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தனது யோசனைகளை இரு மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பித்திருந்தது. இந்த யோசனைகள் காலதாமதமின்றி, சரியாகக் கூறுவதானால் 24 மணித்தியாலங்களினுள் விடுதலைப் புலிகளினால் நிராகரிக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் மீண்டும் புதிய யோசனைகள் அதிக விபரங்களுடன் முன்வைக்கப்படும் எனக் கூறப்பட்ட போதும் அது தொடர்பில் எத்தகைய அவசர நடவடிக்கைளும் அரசாங்கத் தரப்பிலிருந்து காட்டப்படவில்லை. இன்று தயாராகிவிடும், நாளை தயாராகிவிடும் எனக் கூறப்பட்ட யோசனைகள் இறுதியாக கடந்த வாரம் புலிகளுக்கு "இரகசியமாக" அனுப்பப்பட்டிருந்தன.

யோசனைகள் இரகசியமானவையாக அனுப்பப்பட்டிருந்தமையினால், அவை பொதுமக்கள் பார்வைக்கோ அல்லது தகைமை வாய்ந்தவர்களின் ஆய்விற்கோ உட்படக்கூடிய இயலுமை காணப்படவில்லை. எனினும் குறிப்பிட்ட ஒரு ஆங்கில வாரப்பத்திரிகை மட்டும் அரசாங்கத்தின் யோசனைகள் எனக்கூறப்பட்ட ஆவணம் ஒன்றை பிரசுரித்திருந்தது. இதனை ஆதாரமாகக் கொண்டு அரசியல் மட்டத்திலும், கல்வியியல் மட்டத்திலும் சில கருத்துக்களும், விமர்சனங்களும் ஏற்கனவே முன்வைக்கப்பட்டிருந்தன. இவ்விதம் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றபோது, குறிப்பாக ஒரு பத்திரிகையினால் மட்டும் அத்தகைய தகவல்கள் வெளியிடப்படுகின்றபோது, அதிக கவனத்துடனும், அவதானத்துடனும் அத்தகைய கருத்துக்கள் முன்வைக்கப்பட வேண்டியதவசியம்.

இதற்கான எளிய காரணம் யாதெனில் இலங்கையில் வெளியிடப்படுகின்ற பெரும்பாலான பத்திரிகைகள், குறிப்பாக இனப்பிரச்சினை தொடர்பில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் சித்தாந்தங்களின் அடிப்படையில் செயற்படுகின்றனவே அன்றி, பத்திரிகை தர்மம் பற்றி அதிகம் அக்கறை உடையனவாய் தோன்றவில்லை. அதிலும் குறிப்பாக தேசிய பத்திரிகைகள் எனக் கூறப்படுகின்ற சில ஆங்கிலப் பத்திரிகைகள். இலங்கையின் இறைமையையும் பிராந்திய சுயாதீனத்தையும் காக்கும் கடமை இராணுவத்திலும் அதிகமாக தமக்கு இருப்பதான ஒரு மனோபாவத்துடன் செயற்படுவதால், பக்கச் சார்பின்மை போன்ற பத்திரிகை தர்மங்களில் அதிக அக்கறை உடையனவாய் காணப்படவில்லை. இலங்கையில் உள்ள பெரும்பான்மை ஆங்கிலப் பத்திரிகைகள் இனப்பிரச்சினையில் ஒரு தரப்பின் நிலைப்பாட்டை முழுமையாக ஆதரிப்பவையாகவும், அடுத்த தரப்பை எதிர்ப்பவையாகவுமே காணப்படுகின்றன. இவ்வாறான இனத் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட "பத்திரிகைத்துவம்" பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உள்நோக்கம் கொண்ட தலையங்கங்களுக்கும், செய்திகளுக்கும் இடமளிப்பதுண்டு. எனவே, இவற்றில் வெளியிடப்படுகின்ற தகவல்கள் மிகவும் நிதானத்துடனும், அவதானத்துடனும் கையாளப்பட வேண்டியதவசியம்.

எனினும் தற்போது, அமைச்சரும், பிரதம பேச்சாளருமாகிய ஜீ.எல்.பீரீஸ் முன்வந்து புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட "இரகசிய" யோசனைகளும் ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாகிய பிரதியும் ஒன்றே எனக் கூறியுள்ளமையினால், இந்த யோசனைகளை ஆராயவும் அவை பற்றிய கருத்துக்களை முன் வைக்கவும் கூடிய இயலுமை பொதுமக்களுக்கும் ஏனையவர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாக சபை பற்றிய கருத்துகள் ஆரம்பமாகிய போது அது விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படுகின்ற ஒன்றாகவே கருதப்பட்டு வந்திருந்தது. உதாரணமாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தான் ஒரு நிர்வாக சபையை வழங்க முன்வந்ததாகக் கூறிய போது அதை தேர்தல்கள் அற்ற வகையில் விடுதலைப் புலிகளுக்கு வழங்க முன்வந்ததாகவே கூறியிருந்தார். ஐ.தே.முன்னணி விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கின்ற காலத்திலும் இடைக்கால சபை விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படும் என்ற விதமாகவே கருத்துக்கள் கூறப்பட்டு வந்துள்ளபோதும், தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தான் வடக்கு, கிழக்கில் இடைக்கால சபை ஒன்றை நிறுவ முன்மொழிவதாகக் கூறியிருந்தது. இது தந்திரோபாயமான ஒரு கூற்றாக இருந்த போதும் நடைமுறையில் அமைக்கப்படுகின்ற இடைக்கால சபையின் பெருமளவிலான கட்டுப்பாடு புலிகளின் கீழ் இருக்கும் என்பதாகவே அர்த்தப்படுத்தப்பட்டிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் இத்தகைய அபிப்பிராயங்களையோ, யதார்த்தங்களையோ இட்டு பெரிதும் கவலைப்பட்டிராத அரசாங்கம், இடைக்கால சபை ஒன்றை நடைமுறையில் புலிகளிடம் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டபோதே அதன் முக்கியத்துவத்தையும், தீவிரத் தன்மையையும் உணர்ந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில், ஜனநாயக அரசியல் முறைமை ஒன்றில் ஒரு சமூகத்தின் அல்லது பிராந்தியத்தின் பல்லினத்தன்மையை கவனத்தில் எடுக்காது அதன் நிர்வாகத்தை ஒரு அமைப்பிடம் வழங்குவது அரசியல் ரீதியாகச் சாத்தியமானதாகக் காணப்படவில்லை. எனவேதான், கடந்த காலங்களில் இடைக்கால சபைக்கான யோசனைகளை முன்வைத்த போது புலிகளின் கட்டுப்பாடு என்கின்ற விடயத்தில் மட்டுமன்றி ஏனைய எந்த ஒரு விடயத்திலும் தெளிவான முன்மொழிவுகளை மேற்கொள்ள அரசாங்கம் தவறி இருந்தது. இது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட ஒரு அணுகுமுறையாக இருந்திருக்கக்கூடியதுடன், ஒரு புத்திசாலித்தனமான நடவடிக்கையாகவும் அரசாங்கத்தினால் கருதப்பட்டிருக்கக்கூடும்.

எனினும், இந்த யோசனை உடனடியாகவே விடுதலைப் புலிகளினால் நிராகரிக்கப்பட்டமையினால் மீண்டும் ஒரு புதிய யோசனை பற்றி சிந்திக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. எனினும், இது பற்றி அரசாங்கம் அதிக அவசரத்தைக் காட்டியிருக்கவில்லை. ஏனெனில், இருக்கின்ற அரசியல் சூழ்நிலை அரசாங்கத்தின் யோசனைகளுக்கு சாதகமாகவே அமைந்துள்ளது. இருக்கின்ற அரசியல் சூழ்நிலை யாதெனில், யுத்தமும் அற்ற சமாதானமும் அற்ற ஒரு நிலை ஆகும். இங்கு அதிக செலவீனத்தையும் அழிவையும் ஏற்படுத்தக்கூடிய யுத்தத்தில் ஈடுபடவேண்டிய ஒரு நிலை இல்லாததுடன், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நிச்சயமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய தேவை ஒன்றும் ஏற்பட்டிருக்கவில்லை.

இந்நிலை அரசாங்கத்திற்கு சாதகமானது, ஏனெனில் அத்தகைய உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய நிலையில் அரசாங்கம் காணப்படவில்லை. இந்நிலை 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுடன் மாற்றமடையலாம் என்பதனால் இக்காலம் வரை பாரதூரமான நடவடிக்கைகளில் ஈடுபடாதிருக்கவே அரசாங்கம் விரும்புகின்றது. எனவே எத்தகைய பாரதூரமான அபிவிருத்திகளும் இல்லாதிருக்கின்ற நிலையை, அரசாங்கம் விரும்புகின்றது. இவ்வடிப்படையிலேயே நிதானமாகத் தனது யோசனைகளை முன்வைத்திருந்த அரசாங்கம், தற்போதும் கூட தனது யோசனைகளை ஒரு நிகழ்ச்சித் திட்டமாக முன்வைக்கவில்லை. மாறாக மேலதிக பேச்சுவார்த்தைகளுக்கான, அடிப்படைகளாகவே இவை முன்வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் தற்போது இடைக்கால சபைக்கான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் குழு ஒன்று அனுமதிக்கப்பட வேண்டும் என்பதுடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது யோசனைகளை முன்வைக்க அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இருதரப்பு பேச்சுவார்த்தை முத்தரப்பு பேச்சுவார்த்தைகளாக மாற்றமடைகின்ற போது, பேச்சுவார்த்தைகள் நிச்சயமாக நீண்டு செல்லும். அத்துடன் புதிய முஸ்லிம் யோசனைகள் அடிப்படையில் புலிகளின் விருப்பங்களுக்கு மாறானவையாக இருக்கக் கூடிய சாத்தியக்கூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமையினால் மேலதிக வாதப் பிரதிவாதங்களையும், கலந்துரையாடல்களையும் வேண்டி நிற்பவையாக இருக்கலாம். மேலும், பிரதமர் அண்மையில் இடைக்கால நிர்வாக சபைக்கான புலிகளின் யோசனைகள் கிடைக்கப்பெற்ற பின்னர் தென் பகுதியில் உள்ள ஏனைய பிரதான தரப்பினர்களது யோசனைகளும், அபிப்பிராயங்களும் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் கூறியுள்ளார். இதனை எந்த அளவிற்கு உண்மையாக அவர் கூறியுள்ளார் என்பது தெளிவில்லாத போதும், அத்தகைய ஒரு செயற்பாடு மேற்கொள்ளப்படுமாயின் அது தீர்மானங்களில் மேலும் தாமதத்தை ஏற்படுத்தலாம். எனவே, உடனடி நிலையில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைத்து நடைமுறைப்படுத்த அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளது என்பது நிச்சயமற்றதாகும்.

எவ்வாறாயினும் புலிகளிடையேயும் தமிழ் அரசியல் அவதானிகளிடையேயும் தற்போது முன் வைக்கப்பட்டுள்ள யோசனைகள் போதுமானவை அல்ல என்கின்ற கருத்தொன்று காணப்படுகின்றது. எவ்வாறாயினும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில், முன்னர் முன் வைக்கப்பட்ட யோசனைகளில் இருந்து முன்னேற்றகரமான ஒரு யோசனையே தற்போது முன் வைக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக நோக்குவோமாயின் முன்னர் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டு புலிகளால் நிராகரிக்கப்பட்ட யோசனைகள், உயர்மட்ட சபை ஒன்றை முன்மொழிந்திருந்ததுடன் அதில் புலிகளின் பங்கு என்ன என்பது பற்றி தெளிவாகக் கூறப்பட்டிருக்கவில்லை. மாறாக சபையின் அங்கத்துவம் இனவிகிதாசாரப்படி நிர்ணயிக்கப்படும் எனக்கூறப்பட்டிருந்ததுடன், மக்களின் உண்மையான பிரதிநிதிகள் அதில் அங்கம் வகிப்பர் எனக் கூறப்பட்டிருந்தது. இது இடைக்கால சபையின் நோக்கங்களுக்கு எதிரானதாகக் காணப்பட்டது. ஏனெனில், ஒரு சமூகத்தின் உண்மையான பிரதிநிதிகள் தேர்தல் ஒன்றின் மூலமே தெரிவு செய்யப்படலாம். எனவே, இச்சபையின் அங்கத்துவர்கள் தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்கின்ற கருத்தை அரசாங்கம் கொண்டிருந்ததா என்பது தெளிவில்லாததாகக் காணப்பட்ட போதும், நிச்சயமாகப் புலிகள் ஏக பிரதிநிதிகள் என்கின்ற எண்ணக்கருவிற்கு எதிரானதாகக் காணப்பட்டது.

இது புலிகளின் சந்தேகத்தைத் தூண்டியது என்பதுடன் நிராகரிப்பிற்கான ஒரு காரணமாகவும் அமைந்தது என்பதில் சந்தேகமில்லை. இக்குழுவின் தலைவராக விசேட ஆணையாளர் ஒருவர் செயற்படுவார் என்பதுடன் விசேட ஆணையாளர் உட்பட ஏனைய எல்லா நியமனங்களும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் எனக் கூறப்பட்டிருந்தது. இந் நியமனங்களின் போது புலிகளின் ஆலோசனைகள் பெறப்படும் எனக் கூறப்பட்டிருந்த போதும் இத்தகைய ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதற்கு எத்தகைய உத்தரவாதமும் காணப்படவில்லை.

மேலும் வடக்கு, கிழக்கின் நிர்வாகம் வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கும், மத்திய அரசாங்கத்தினதும் அதிகாரத்திற்குட்பட்டது எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டிருந்தது. எனவே, முன்னைய யோசனைகள் புலிகளுக்கு மட்டுமின்றி தமிழ் மக்களுக்கும் எந்தவிதமான விசேட அதிகாரங்களையும் வழங்கியிருக்கவில்லை. அவ்வகையில் இந்த யோசனைகள் நிராகரிக்கப்படும் என அரசாங்கம் எதிர்பாராதிருந்திருக்கும் எனக் கூற முடியாது. இருந்தும் அவை சமர்ப்பிக்கப்பட்டமைக்கான காரணம் யாதெனில் அத்தகைய நிராகரிப்பினால் ஏற்படக்கூடிய கால தாமதம் அரசாங்கத்தின் நலன்களுக்கு உகந்தது என்பதனாலேயே ஆகும்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் மீண்டும் ஒரு சபையை முன்மொழிந்துள்ளதுடன், அச்சபையின் அங்கத்தினரின் எண்ணிக்கை இருதரப்பினராலும் நிர்ணயிக்கப்படும் எனக்கூறியுள்ளது. இவ் அங்கத்தினர்கள் அரசாங்கம், புலிகள், முஸ்லிம் காங்கிரஸ் என்பவற்றினால் நியமிக்கப்படுவார்களாயினும், அதில் புலிகளின் பெரும்பான்மை உத்தரவாதப் படுத்தப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. இச்சபைக்குத் தீர்மானம் மேற்கொள்ளும், நடைமுறைப்படுத்தும் மற்றும் மேற்பார்வை செய்யும் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கும். எனினும், இச்சபைக்கு பொலிஸ், பாதுகாப்பு, நிலம், வரி தொடர்பான அதிகாரங்கள் காணப்படாது. இது ஒரு பாரிய குறைபாடாகக் காணப்படுவதனால் புலிகளால் ஏற்றுக் கொள்ளப்படாதிருப் பதற்கான சாத்தியங்கள் உண்டு. இத்தகைய கருத்துக்களை புலிகள் ஏற்கனவே முன்வைத்துள்ளனர். எனினும், முன்னொரு சந்தர்ப்பத்தில் செய்தது போல் இத்தடவை யோசனைகளை அவர்கள் உடனடியாக நிராகரித்தமையும் சட்டவிடயங்களில் நிபுணத்துவமுடைய ஒரு குழுவை அமைத்து யோசனைகளை ஆராய்ந்து வருகின்றமையும் பாராட்டத்தக்கது. ஏனெனில், யோசனைகள் நிராகரிக்கப்பட்டிருக்குமாயின் அது சர்வதேச மற்றும் உள்ளூர் மட்டத்தில் புலிகளின் நோக்கங்கள் மீதான சந்தேகத்தை அதிகரிக்கும். அத்துடன், இத்தகைய ஒரு செயற்பாடு சமாதான செயன்முறை தொடர்வதிலான சாத்தியத் தன்மையை மேலும் பலவீனப்படுத்தும்.

இதனுடைய கருத்து பற்றாக்குறையான ஒரு யோசனையை அவ்விதமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. மாறாக முன் வைக்கப்பட்டுள்ள யோசனைகள் போதுமானவை அல்ல என்று நிச்சயமாக உணரப்படுமாயின், மேலதிக கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டு அதனடிப்படையில் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படலாம். அவ்வடிப்படையில் புலிகள் மிக அதிகபட்ச கோரிக்கைகளை முன்வைப்பார்களாயின் பேச்சுவார்த்தைகள் இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் இணக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடும்.

இங்கு கவனத்திலெடுக்கப்பட வேண்டிய இன்னுமோர் முக்கிய விடயம் யாதெனில், யோசனைகள் அவ்விதமே நிராகரிக்கப்படுமாயின், அது அரசாங்கத்தின் மீதான அழுத்தங்களை பெருமளவிற்கு இல்லாமற் செய்துவிடும். மாறாக புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகளை அவ்விதமே அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட வகையில் ஏற்றுக்கொள்வார்களாயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் மீதான நெருக்கடிகள் அதிகரிக்கும். ஏனெனில், யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பட்சத்தில் அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை யாதெனில் யோசனைகளை அமுல்படுத்துவதாகும். ஆயினும் பாரதூரமான எந்த ஒரு தீர்மானத்தையும் இலகுவாக அமுல் செய்யக்கூடிய அரசியல் சூழ்நிலை ஒன்று தெற்கில் காணப்படவில்லை என்பதே உண்மையாகும்.

(03. 08. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

இடைக்கால சபை யோசனைகளின் அரசியல் பரிமாணங்கள்

இறுதியாக அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள இடைக்கால சபை ஒன்றிற்கான யோசனைகளை விடுதலைப் புலிகள் நிபுணர் குழுவொன்றை அமைத்து ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது. விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கும் இந் நிபுணர் குழுவிற்குமிடையிலான கூட்டமும் கலந்துரையாடல்களும் இம்மாத இறுதிக்கு முன்னர் ஐரோப்பாவில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, யோசனைக்கான புலிகளின் பதிலும், அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளும் அவசரமாக நடந்தேறப் போவதில்லை என்பது புலப்படுகின்றது. ஆயினும் யோசனைகளின் அடிப்படையில் பல்வேறு அரசியல் பரிமாணங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இத்தகைய அரசியற் பரிமாணங்களின் தாற்பரியங்களை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இடைக்கால சபையின் தேவை

இடைக்கால சபை ஒன்றின் தேவைக்கான காரணங்கள் பல முன்வைக்கப்பட்டிருக்கலாம். அவற்றில் பிரதானமானது யாதெனில், இறுதித்தீர்வொன்றிற்கு இணங்கி அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியம் உடனடி நிலையில் காணப்படவில்லை என்பதாகும். தற்போதைய நிலையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள தரப்பினர் சமஷ்டி அடிப்படையில் தீர்வொன்றை அடைந்துகொள்ள இணங்கியுள்ள போதும், அது எத்தகைய சமஷ்டி என்பது நிச்சயமாக பிரச்சினைக்குரியதாக இருக்கும். இன்று உலகில் இந்திய சமஷ்டி தொடங்கி, கனேடிய சமஷ்டி வரை மிக வேறுபட்ட சமஷ்டி முறைமைகள் காணப்படுகின்றன. இவற்றுள் சிறந்தது யாது? அல்லது எமது தனித்துவமான தேவைகளுக்கமைவான சமஷ்டி ஏற்பாடுகள் யாவை எனத் தீர்மானித்து இணங்குவதற்கு அதிக காலம் எடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இணங்கப்படுகின்ற தீர்வு எத்தகையதாக இருப்பினும், அது இருக்கின்ற அரசியலமைப்பில் அடிப்படையான மாற்றங்களை வேண்டி நிற்கும் என்பது நிச்சயமானது. இருக்கின்ற அரசியலமைப்பில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்துவதில் பல்வேறு நிபந்தனைகள் காணப்படுகின்றன. இவற்றுள் பிரதானமானது.

(1) மாற்றம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்

(2) அது சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்

பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றின் முடிவுகள் பற்றி நிச்சயமான முன்மொழிவுகளைக் கூற இயலாவிடினும் கூட, தற்போது இருக்கின்ற அரசியல், சூழ்நிலைகளின் அடிப்படையில் நோக்குகையில் மூன்றில் இரண்டு என்பது நிச்சயமாக சாத்தியமற்றதாகும். எனவே இறுதித் தீர்வொன்றை அடைந்து கொள்வது இலகுவானது அல்ல என்பது தெளிவானது. அதேசமயம் மனிதாபிமான அடிப்படையில் நோக்குகையில் நீண்டகாலம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் நிச்சயமற்ற இறுதித் தீர்வொன்றை எதிர்பார்த்து நீண்டகாலம் காத்திருக்க வேண்டுமென எதிர்பார்ப்பது பொருத்தமற்றது. எனவே இறுதித்தீர்வு ஒன்று அடையப்படுகின்றவரை தமது விவகாரங்களை நிர்வகித்துக்கொண்டு, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு தமது வாழ்வை வளப்படுத்திக்கொள்ள வழங்குகின்ற சந்தர்ப்பமாக இடைக்கால நிர்வாக சபை ஒன்று அவசியமானது. இவ் அடிப்படையில் நோக்குகையில் இடைக்கால சபை என்பது இறுதித்தீர்வு என்பதுடன் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுவும் நியாயமான ஒரு நிபந்தனையாகும்.

அதிகாரங்கள்

முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள், இடைக்கால சபைக்கு வழங்குகின்ற அதிகாரங்கள் தெளிவற்றவையாகவே காணப்படுகின்றன. ஏனெனில்,

(1) பொலிஸ், பாதுகாப்பு, காணி மற்றும் வரி அறவிடுதல் என்பவை தவிர்ந்த எல்லா விடயங்களிலும் தீர்மானம் மேற்கொள்ளுதல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றில் "பங்குபற்றும்" இயலுமை சபைக்கு இருக்கும் எனப் பொதுவாகக் கூறப்பட்டுள்ளது. ஆயினும், பங்குபற்றுதல் என்பது எதனைக் குறிக்கின்றது என்பது தெளிவற்றதாக உள்ளது.

(2) இவை தொடர்பில் இறுதி ஏற்பாடுகள் இரு தரப்பினருக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளினடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டுள்ளது. இவ் அடிப்படையில் சபையின் அதிகாரங்கள் தொடர்பில் பல கேள்விகள் காணப்படுகின்றன. இவற்றிற்கு தெளிவான வகையில் பதில்கள் வரையறுக்கப்பட வேண்டியதவசியம்.

எனினும், கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒரு விடயம் யாதெனில் யோசனைகள், பொலிஸ், பாதுகாப்பு, காணி மற்றும் வரி அறவிடுதல் தவிர்ந்த "எஞ்சிய" அதிகாரங்களை சபைக்கு வழங்க முன்வந்துள்ளது போன்று தோன்றுவதாகும். இது உண்மையாயின், யோசனைகள் ஒரு வகையில் முன்னேற்றகரமானவை என கருதப்படலாம். ஏனெனில் சமஷ்டி முறைமைகளில் அதிகாரம் பிரிவினை செய்யப்படுகின்ற பொழுது மாநிலங்களின் அதிகாரங்களை தெளிவாகக் கூறி எஞ்சியவை மத்திய அரசிற்கு உரியது என்றோ, அல்லது மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை எடுத்தியம்பி எஞ்சிய அதிகாரங்களை மாநிலங்களுக்குரியது என்றோ கூறுகின்ற போக்கு ஒன்று உள்ளது. எஞ்சிய அதிகாரங்கள் எந் நிறுவனத்திற்கு வழங்கப்படுகின்றதோ அந் நிறுவனம் பலமுடையதாக இருக்கும் எனப் பொதுவாக நம்பப்படுகின்றது.

இவ் அடிப்படையில் நோக்குகையில், எஞ்சிய அதிகாரங்கள் வடக்கு, கிழக்கு இடைக்கால சபைக்கு வழங்கப்படுமாயின் அது முன்னேற்றகரமானது எனக் கருதப்பட வேண்டும். எனினும் யோசனைகள் உண்மை நிலையில் எஞ்சிய அதிகாரங்களை சபைக்கு அளிக்க முன்வந்துள்ளனவா என்பதை நிச்சயம் செய்ததன் பின்னரே இது குறித்து தீர்மானத்திற்கு வருதல் அவசியம்.

அதேசமயம், வழங்கப்பட்ட அதிகாரங்கள் தெளிவற்றதாகக் காணப்பட்ட போதும் வழங்கப்படாத அதிகாரங்கள் யாவை என்பது தெளிவாகவே காணப்படுகின்றன. நாம் ஏற்கனவே கூறியுள்ளது போன்று பொலிஸ், பாதுகாப்பு, காணி, வரி என்பவற்றில் இச்சபைக்கு அதிகாரங்கள் எதுவும் காணப்படாது எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. உடனடி நிலையில் இவற்றுள் பொலிஸ், வரி அறவிடுதல் என்பவை பிரச்சினைக்குரியவையாக மாற இடமுண்டு. ஏனெனில் விடுதலைப் புலிகள் ஏற்கனவே தமது பொலிஸ் படையொன்றை அமைத்து செயற்படுத்தி வருகின்றமையும், வரி அறவிட்டு வருகின்றமையும் யாவரும் அறிந்ததே. உதாரணமாக பொலிஸ் அதிகாரங்களை எடுத்துக் கொள்வோமாயின், யோசனைகள் அவ்விதமே ஏற்றுக் கொள்ளப்படுகின்ற பட்சத்தில், புலிகளின் பொலிஸ் படையின் அந்தஸ்து என்ன? அது கலைக்கப்பட வேண்டுமா? அல்லது ஸ்ரீ லங்கா பொலிசுடன் இணைந்து செயற்படுமா? இணைக்கப்படுமாயின் அவ்விணைப்பின் பண்பு யாது? அல்லது இரு நிறுவனங்களுக்குமிடையிலான உறவு எத்தகையது? போன்ற கேள்விகள் எழும். அதேபோன்று புலிகளின் வரி அறவிடுகின்ற முறை தொடர்பான கேள்விகளும் எழும்.

ஏனைய இரண்டு விடயங்கள், குறிப்பாக காணி அதிகாரங்கள் என்பவை உடனடி நிலையில் அதிக சர்ச்சை அற்றதாக இருக்கக்கூடுமேயாயினும் இறுத்தித் தீர்வில் சேர்க்கப்படுமாயின் பிரச்சினைக்குரியதாக மாறும். இலங்கை இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணிகளுள் ஒன்று அரசாங்கத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையற்ற, உள்நோக்கம் கொண்ட காணிக்கொள்கைகள் ஆகும். இக் கொள்கையின் காரணமாக வடக்கு, கிழக்கில் பல பிரதேங்களில் தமிழ் மக்கள் தமது குடிப்பரம்பல் பலத்தை இழந்துள்ளனர். எனவே அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படுகின்றபொழுது காணி அதிகாரங்கள் (வடக்கு, கிழக்கு) பிராந்திய நிறுவனத்திடம் வழங்கப்பட வேண்டும் என தமிழ்த் தலைவர்கள் விரும்புவர் என்பதில் சந்தேகமில்லை.

அதேசமயம், இடைக்கால சபை ஒன்று அமைக்கப்படுமாயின், அது இறுதித் தீர்வின் தன்மையில் பாரிய செல்வாக்குச் செலுத்தக் கூடியதாக விருக்கும். குறிப்பாக இடைக்கால சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களிலும் குறைவான அதிகாரங்களை இறுதித் தீர்வில் முன்மொழியக்கூடிய இயலுமை அரசாங்கத்திற்கு இருக்காது என்பதுடன் இறுதித் தீர்வு பெருமளவு இடைக்கால சபையை ஒத்ததாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் காணப்படுகின்றன. எனவே இடைக்காலத் தீர்வில் எதனை ஏற்றுக் கொள்கின் றோம் என்பது குறித்து அதிக அவதானத்துடன் இருக்க வேண்டிய அவசியம் உள்ளது.

சிறுபான்மைப் பாதுகாப்பு

முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளின் சிறப்பியல்புகளில் ஒன்று "சிறுபான்மைப் பாதுகாப்பு" என்பது தொடர்பில் அரசாங்கம் கொண்டுள்ள அக்கறை ஆகும். அமைக்கப்படவுள்ள இடைக்கால சபை தமிழரின் மேலாதிக்கத்தில் இருக்கும் என்பதனால் வடக்கு, கிழக்கில் வாழுகின்ற சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் நல் வாழ்வு, பாதுகாப்பு என்பவற்றை உத்தரவாதப் படுத்தும் முகமாக சில யோசனைகளை முன்வைத்துள்ளது.

முதலாவது யோசனை, "சபையின் தலைவர் என்பதுடன் தொடர்புடையது. இங்கு அரசாங்கம் இரண்டு மாற்று வழிகளை முன்வைத்துள்ளது. ஒன்று அரசாங்கம் மற்றும் புலிகளால் சபையில் இருந்து தெரிவு செய்யப்படுகின்ற இரண்டு தலைவர்கள் இருப்பர். இருவருக்கும் சபைத் தீர்மானங்கள் தொடர்பில் "வீட்டோ" அதிகாரம் காணப்படும். இங்கு புலிகளால் தெரிவு செய்யப்படுகின்ற தலைவர் தமிழராக இருக்க, அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்படுகின்ற தலைவர் ஒன்றில் சிங்களவராகவோ அன்றி முஸ்லிமாகவோ இருப்பார். எனவே, குறிப்பிட்ட ஒரு தீர்மானம் தனது இனக்குழுவிற்கு அல்லது பிராந்தியத்தின் சிறுபான்மையினருக்கு எதிரானது என இரு தலைவர்களில் ஒருவர் உணரும் பட்சத்தில் அவர் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி சிறுபான்மையினருக்கு எதிரான தீர்மானங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இரண்டாவது மாற்று, சபையின் பெரும்பான்மையினரால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தலைவர் காணப்படுவார். இவ் ஏற்பாடு ஏற்றுக் கொள்ளப்படுகின்ற பட்சத்தில் பின்வரும் இரண்டு ஏற்பாடுகள் இணைக்கப்படும். அதாவது சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை பாதிக்கக் கூடிய தீர்மானங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படுகின்றபோது அத்தீர்மானங்கள்

(1) சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களாலும்.

(2) குறிப்பிட்ட தீர்மானம் எச்சமூகத்துடன் தொடர்புடையதோ, அதனடிப்படையில் சிங்கள அல்லது முஸ்லிம் சமூக உறுப்பினர்களின் பெரும்பான்மையினராலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இதுவும் ஒரு வகையில் சிறுபான்மையினரின் கரிசனைக்குரிய விடயங்களில் அவர்களுக்கு "வீட்டோ" அதிகாரத்தை வழங்குகின்ற ஒரு ஏற்பாடு எனக் கருதப்படலாம்.

இது சுவாரஷ்யமானதும், பல் பரிமாணங்களைக் கொண்டதுமான ஒரு யோசனையாகும். அவ்வகையில் இந்த யோசனை சபையின் செயற்பாட்டில் அடிப்படைச் சிக்கல்களை ஏற்படுத்தலாம். உதாரணமாக, வடக்கு, கிழக்கு பிரதேசம் குறிப்பாக கிழக்கு மாகாணம் பல்லினத் தன்மை வாய்ந்த, சிக்கலான குடிப்பரம்பல் முறைமையைக் கொண்ட ஒரு பிராந்தியம் என்பதால், பெரும்பான்மையான தீர்மானங்கள் குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்குரியதென தெளிவாகத் தரம்பிரிப்பது கடினமானதாக இருக்கும். உதாரணமாக குறிப்பிட்ட ஒரு தீர்மானம் தமிழர்களுக்கு மட்டுமே உரியது ஏனைய சமூகத்தினரை எவ்விதத்திலும் அது பாதிக்காது எனத் தெளிவாகக் கூற முடியாதிருக்கலாம். இவ்வாதத்தின் அடிப்படையில் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் தமது சமூகத்தைப் பாதிக்கக் கூடியவை எனக் கூறி சிங்களப் பிரதிநிதிகளோ, அல்லது முஸ்லிம் பிரதிநிதிகளோ பெரும்பாலான அல்லது எல்லாத் தீர்மானங்களையும் வீட்டோ செய்கின்ற ஒரு நிலை ஏற்படலாம். இத்தகைய ஒரு நிலை ஏற்படுமாயின் சபையின் செயற்பாடுகள் முழுமையாகவே பாதிக்கப்பட இடமுண்டு.

அடுத்து, இவ் ஏற்பாடு பிரதிநிதிகளை நியமிக்கின்ற தரப்பினர் அடுத்த சமூகத்திலிருந்து சபைக்கு உறுப்பினர்களை நியமிக்கக் கூடிய சாத்தியத்தை இல்லாமற் செய்யலாம். அதாவது, சபையின் உறுப்பினர்கள் இன ரீதியாகவே தமது வாக்குகளைப் பயன்படுத்துவர் என்பது இவ் ஏற்பாடுகளின் மூலம் உத்தரவாதப்படுத்தப்படுவதால். உதாரணமாக விடுதலைப் புலிகள் முஸ்லிம்களையோ, அன்றி முஸ்லிம் காங்கிரஸ் தமிழர்களையோ நியமிக்கத் தயங்கலாம். அவ்வகையில் இவ் ஏற்பாடுகள் இனமுரண்பாடுகளை கூர்மைப்படுத்தக் கூடியவையே அன்றி ஐக்கியத்தை ஏற்படுத்தக் கூடியவை அல்ல.

அடுத்து தமிழ் ஆர்வலர்கள் பலர் சுட்டிக் காட்டியுள்ள ஒரு விடயம் வடக்கு, கிழக்கில் சிறுபான்மைப் பாதுகாப்பில் அதீத அக்கறை காட்டுகின்ற அரசு கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பாதுகாப்பு பற்றி எவ்வித அக்கறையும் காட்டவில்லை என்பதாகும். கடந்த காலங்களில் தமிழ் சிறுபான்மையினரின் பாதுகாப்புப் பற்றி எவ்வித அக்கறையும் அரசாங்கத் தரப்பில் இருந்து காட்டப்படாதது மட்டுமன்றி, ஏற்கனவே பிரித்தானியர்களினால் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமற் செய்யப்பட்டிருந்தன. எனவே, தமிழ் ஆர்வலர்களின் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை அற்றவை அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், நாம் கருத்திற் கொள்ளவேண்டியது யாதெனில், கடந்த கால அரசாங்கங்களின் செயற்பாடுகளுக்காக இவ்வரசாங்கத்தைச் சாடுவது முழுமையாகப் பொருத்தமானது அல்ல என்பதாகும். அடுத்து கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பாதுகாப்பு உதாசீனம் செய்யப்பட்டமையினாலேயே இன்று இத்தகைய அழிவுத்தன்மை வாய்ந்த யுத்தம் ஒன்றிற்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் இத்தகைய சாத்தியக் கூறுகளைத் தவிர்ப்பது எமது கடமையும் ஆகும். எனவே, அரசாங்கத்தின் சிறுபான்மைப் பாதுகாப்பு, அக்கறைகள், மோதல் தவிர்ப்பு ஏற்பாடுகளாகவும் கருதப்படலாம். இவ்வகையில் நோக்குகையில் சிறுபான்மை பாதுகாப்பு எண்ணக்கரு பாராட்டப்பட வேண்டியதே ஆயினும், அது பிராந்தியத்தில் வாழும் பெரும்பான்மையினருக்கு பாதகமான வகையில் செயற்படுத்தப்படக் கூடாது என்பது உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

இவ் ஏற்பாடுகளில் காணப்படுகின்ற இன்னுமோர் சாதகமான பண்பு தேசிய ரீதியில் அரசியலமைப்பு மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது, இப்போது முன்வைக்கப்பட்டுள்ள சிறுபான்மைப் பாதுகாப்பு மாதிரியிலான ஏற்பாடுகள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் எனத் தமிழர்களும், ஏனைய சிறுபான்மையினரும் கோரக்கூடிய நிலையை இந்த யோசனைகள் ஏற்படுத்தி உள்ளன என்பதாகும் ஏனெனில், மத்திய அரசிற்கு ஒரு நீதி, பிராந்தியங்களுக்கு ஒரு நீதி என இருக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை.

(10. 08. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

கூர்மையடையும் தமிழ்-முஸ்லிம் முரண்பாடுகள்: மூன்றாவது தரப்பினராக முஸ்லிம்கள்?

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற "இனத்துவம்" பற்றிய மகாநாடு ஒன்றில் இக்கட்டுரை ஆசிரியர் பங்கு பற்றியிருந்தார். கூட்டத்தில், இலங்கையில் வாழ்கின்ற இனக்குழுக்கள் பற்றி பிரஸ்தாபிக்கப்படுகையில், சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் எனக் கூறப்பட்டது. இது இந்நாட்டில் வாழ்கின்ற எமக்கு இது சாதாரணமாகப்பட்ட பொழுதும் இந்தியாவில் இருந்து வந்து கூட்டத்தில் கலந்து கொண்ட ஆய்வாளர் ஒருவருக்கு அவ்விதம் காணப்படவில்லை. அதன் காரணமாக "இம் மூன்று குழுக்களில் முதல் இரண்டும் இனரீதியாக நிர்ணயிக்கப்பட, மூன்றாவது குழு (முஸ்லிம்கள்) மட்டும் ஏன் மத ரீதியாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என இவ் இந்திய ஆய்வாளர் கேள்வியெழுப்பினார்.

இவரது வாதம் யாதெனில், ஒன்றில் எல்லாக் குழுக்களும் மொழி ரீதியாகப் பிரிக்கப்பட வேண்டும் அல்லது மத ரீதியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்பதாகும். அவ்வகையில் முஸ்லிம்கள் தனியான பிரிவாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமாயின் பாகுபாடு பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் என்பதாக இருக்க வேண்டுமே அன்றி, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்பதாக இருக்கக் கூடாது என்பது இவ் இந்திய நண்பரது வாதமாக அமைந்தது. இவரது சிந்தனை இந்தியச் சமூக முறைமையை மையமாகக் கொண்டு முன்வைக்கப்பட்டது என்பதுடன், அதில் கோட்பாட்டு ரீதியான நியாயம் ஒன்றும் காணப்பட்டது என்பதில் சந்தேகமில்லை.

அதேசமயம், அது இந்நாட்டில் காணப்படுகின்ற சமூக, அரசியல் யதார்த்தங்கள் பற்றிய போதிய, தெளிவின்மை காரணமாக முன்வைக்கப்பட்ட ஒரு கருத்து என்பதிலும் எவ்வித சந்தேகமுமில்லை. ஏனெனில், இலங்கை வாழ் முஸ்லிம்கள் தாங்கள் ஒரு தனியான (இனக்) குழுவாக மதித்து நடத்தப்பட வேண்டும் எனக் கருதுவதுடன் அவ்விதம் நடத்தப்படுவதற்கான உரிமை அவர்களுக்குக் காணப்படுகின்றது. இதன் காரணமாக இங்குள்ள பெரும்பாலானோரினால் தனியான ஒரு சமூகக் குழுவாக முஸ்லிம்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஒரு போக்கில் தற்போதைய நிலையில், சிங்கள மக்களுக்கு அதீத அக்கறைகள் எதுவும் காணப்படவில்லை. உண்மையில் முஸ்லிம்கள் தனியான குழுவாக அங்கீகரிக்கப்படுதல் அரசியல் ரீதியில் சிங்கள மக்களுக்கு இலாபகரமானதே அன்றி வேறில்லை. ஆயினும், தமிழ் மக்களைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் தனியான சமூகக் குழுவாக அங்கீகரிக்கப்படுதல், ஒருவகையில் அநாவசியமான, பிரச்சினையாக இருந்துள்ளது. ஏனெனில், வரலாற்று ரீதியாக தமிழர்கள் முஸ்லிம்களை "இஸ்லாமியத் தமிழர்களாகவே" கருதி வந்துள்ளனர். இதன் அடிப்படை முஸ்லிம்களும் தமிழர்களே என்பதாகும். இதற்குப் பல காரணிகள் பங்களித்திருக்கக் கூடுமே ஆயினும், இரண்டு பிரதானமான காரணிகள் காணப்பட்டன.

(1) முஸ்லிம்களிடையே தாம் தனியான ஒரு இனம் என்கின்ற தேசியவாதம் உறுதியாக வளர்ச்சியடைந்தமை, ஒப்பீட்டளவில், அண்மைக்காலப் போக்கு ஆகும்.

(2) முஸ்லிம்கள் தமிழ் பேசும் முஸ்லிம்கள், சிங்களம் பேசும் முஸ்லிம்கள் என மாற்றமடைந்தமையும் ஒப்பீட்டளவில் அண்மைக்கால நிகழ்வு ஆகும்.

இவற்றுள் முதலாவது அம்சத்தை எடுத்துக் கொள்வோமாயின், முஸ்லிம்கள் தனியான ஒரு குழு என்கின்ற கருத்து இராமநாதன் காலத்திலேயே இருந்ததாயினும், சாதாரண முஸ்லிம் மக்களிடையே அத்தகைய "மிக உறுதியான" தனியான தேசியவாதம் காணப்பட்டிருக்கவில்லை. ஆரம்ப காலத்திலேயே தனியான முஸ்லிம் தேசியவாதம் மிக உறுதியாக இருந்து வந்திருக்குமாயின், முன்னாள் மு.கா.தலைவர் அஷ்ரப், தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளில், அண்ணன் அமிர்தலிங்கம் தமிழ் ஈழத்தை விட்டுக் கொடுத்தாலும், தம்பி அஷ்ரப்அதை அடைந்தே தீருவேன் என்பது போன்ற கருத்துக்களைக் கூறியிருப்பார் என எதிர்பார்க்க முடியாது.

இரண்டாவதாக, தற்காலத்தில் பெரும்பாலான முஸ்லிம்கள் குறிப்பாக, நகர்ப்புற முஸ்லிம்கள் சிங்களத்தைத் தமது கற்பிப்பு மொழியாகவும், வீட்டு மொழியாகவும் ஏற்றுக் கொள்கின்ற தீவிரமான ஒரு போக்கு காணப்படுகின்றது. இதன் காரணமாக இன்று இலங்கையில் சிங்கள மொழி பேசுகின்ற பெருந்தொகையான முஸ்லிம்கள் காணப்படுகின்றனர். ஆயினும், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இத்தகைய ஒரு நிலை காணப்படவில்லை. அன்று முஸ்லிம்களில் மிகப் பெரும் பான்மையானோர் தமிழ் மொழி பேசுபவர்களாகவே இருந்துள்ளனர்.

இவை காரணமாகவே, தமிழர்களிடையே முஸ்லிம்களைத் தமிழர்களாகவே கருதுகின்ற போக்கு காணப்பட்டிருக்கலாம். ஆயினும், இன்று பெரும்பாலான முஸ்லிம்கள், தமிழர்கள் தங்களைத் தமிழர்களாகக் கருதியதை, தமது தனித்துவத்தை அங்கீகரிக்க மறுக்கின்ற ஒரு செயற்பாடாகவும், இன்னுமொரு வகையில் தம்மை அடக்கி ஆள்வதற்கு தமிழர்கள் கையாண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தந்திரோபாயமாகவும் கருதுகின்றனர். இத்தகைய போக்குகளின் கருத்து யாதெனில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையில் பொதுப் பண்புகள் படிப்படியாக மறைந்து அவர்களுக்கிடையிலான முரண்பாடுகள் கூர்மையடைந்து வருகின்றன என்பதாகும்.

இவ்விதம் கூர்மையடைந்து வருகின்ற முரண்பாடுகள் தற்போது முஸ்லிம்களை இன மோதலில் முக்கியமான ஒரு தரப்பினராகத் தரமுயர்த்தியுள்ளது. மரபு ரீதியாக இலங்கை இன மோதலில் இரு முக்கிய தரப்பினர்களாக சிங்களவர்களும். தமிழர்களுமே கருதப்பட்டு வந்துள்ளனர். முஸ்லிம்கள் மோதலின் ஒரு தரப்பாக எப்பொழுதும் கருதப்பட்டதில்லை. மாறாக, அவர்கள் மோதலினால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஒரு தரப்பினராகவே இருந்து வந்துள்ளனர்.

முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட ஒரு தரப்பினர் என்பதில் எவ்வித சந்தேகங்களுமில்லை. தற்கால முஸ்லிம் சிந்தனைகள் தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளையும். அநியாயங்களையும் தெளிவாகப் பட்டியலிட்டு வருகின்றன. அவற்றுள் பிரதானமானவை, கிழக்கு மாகாணத்தில் இழைக்கப்பட்ட வன்முறைகளும், வட மாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்டமையுமாகும். வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் மிகக் குறுகிய அறிவித்தலுடன் வெளியேற்றப்பட்டமையே அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மிகப் பெரும் அநீதியாகக் கருதப்பட்டு வருகின்றது. இச் செயற்பாட்டின் காரணமாக பெருந்தொகையான முஸ்லிம் மக்கள் அகதிகளாக இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

அதேசமயம், முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ் மக்களின் குற்றச் சாட்டுக்களின் பட்டியல் ஒன்றும் காணப்படுகின்றது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். தமிழ்ப் போராட்டத்திற்கு எதிராக இலங்கை இராணுவத்துடன் முஸ்லிம்கள் செயற்படுகின்றனர் என்கின்ற பொதுவான குற்றச்சாட்டு ஒன்று காணப்படுகின்றது. இராணுவத்துடனான முஸ்லிம்களின் ஒத்துழைப்பு கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் பொருளாதார அபிவிருத்திக்குப் பாதகமாக அமைந்திருந்ததாகவும் கூறப்படுகின்றது. அத்துடன், மோதலின் அல்லது யுத்தத்தின் உச்சக்கட்டத்தில் தமிழர்களுக்குச் சேர வேண்டிய தொழில் வாய்ப்புகள், உதாரணமாக அரச தொலைத் தொடர்புச் சாதனங்கள், பொலிஸ்படை போன்றவற்றில், முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதன் காரணமாகத் தமிழர்கள் முஸ்லிம்களால் பாதிப்படைந்துள்ளனர் என்ற கருத்துக்களும் தமிழர்களிடையே காணப படுகின்றன. இவ்வித பரஸ்பர குற்றச்சாட்டுக்கள் இவ்விரு இனக் குழுக்களிடையே கூர்மையடைந்து வருகின்ற முரண்பாடுகளைச் சுட்டி நிற்பதாகக் கருதப்படலாம்.

எவ்வாறாயினும், இன்று முஸ்லிம்கள் இனமோதலில் முக்கியமான ஒரு தரப்பாக தரமுயர்த்தப்பட்டுள்ளனர் என்பது யதார்த்தமானதாகும். அதனடிப்படையிலேயே உயர்மட்டப் பேச்சுவார்த்தை மேசையில் ஒரு தனித் தரப்பாகக் கலந்து கொள்ள தாம் அனுமதிக்கப்பட வேண்டும் என்கின்ற ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கை அவர்களிடையே வலுவடைந்து வருகின்றது. அவ்வகையில், முஸ்லிம்கள் மோதலின் ஒரு தரப்பாக ஏற்றுக்கொள்ளப்படுவார்களாயின், அவர்களது அரசியல் நிலைப்பாடுகள் யாவை? அவர்களது அடிப்படைக் கோரிக்கைகள் யாவை? என்பன போன்ற விடயங்கள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டியதவசியம்.

துரதிஷ்டவசமாக இவை தொடர்பில் அதிக தெளிவான விடைகள் காணப்படவில்லை என்பதுடன், முஸ்லிம் மக்களிடையே கூட ஒருமித்த கருத்துக்கள் காணப்படுவது போன்று தோன்றவில்லை. இது இயல்பான ஒரு நிலையாகும். ஏனெனில், மோதலில் புதிதாக அனுமதி பெற்றுள்ள ஒரு தரப்பு என்கின்ற வகையில், தமது அரசியல் நிலைப்பாடுகள் பற்றிய விவாதம் ஒன்று முஸ்லிம் அரசியல்வாதிகளிடையேயும், கல்விமான்களிடையேயும் தற்பொழுதே தான் இடம்பெற்று வருகின்றது. அதன் காரணமாகத் தெளிவான விடைகள் கிடைக்கப்பெற சில காலம் செல்லலாம்.

எவ்வாறாயினும், இடம்பெற்று வருகின்ற விவாதங்களின் அடிப்படையில் நோக்குகையில், இரண்டு பிரதானமான மாற்று யோசனைகள் விவாதிக்கப்பட்டு வருவது போன்று தெரிகின்றது.

(1) பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தை மையமாகக் கொண்ட தனியான பிராந்திய அலகு ஒன்று, அல்லது

(2) வட.கிழக்கு முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்களை உள்ளடக்கிய (நிலத் தொடர்பற்ற) அலகு ஒன்று முஸ்லிம்களுக்கு என வழங்கப்படவேண்டும் என்கின்ற யோசனைகள் விவாதிக்கப்பட்டு வருகின்றன.

இதன் தாற்பரியம் யாதெனில், தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட (அல்லது தமிழர்களின் மேலாதிக்கமுடைய) நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் முஸ்லிம்கள் வாழ விரும்பவில்லை என்பதாகும். இதன் காரணமாகவே யோசனைகள் முன்வைக்கப்படுகின்ற பொழுது சிங்களப் பிராந்தியங்கள் பற்றிய எத்தகைய அக்கறைகளும் அற்ற வகையில் அவை வடக்கு, கிழக்கு என்பதை மட்டும் அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன.

முஸ்லிம் அரசியல் நிலைப்பாடுகளின் இன்னுமோர் பிரதான பண்பு, அது இருக்கின்ற யதார்த்தத்தை நீடிக்க விரும்புவதாகும். இருக்கின்ற அரசியல் யதார்த்தத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படுவதை முஸ்லிம்கள் விரும்புவதாகக் கூற முடியாது. இதன் காரணமாகவே "தமிழர்களுக்கு சமஷ்டி அலகு வழங்கப்படுமாயின் முஸ்லிம்களுக்கு தனியான அலகு வழங்கப்பட வேண்டும்" அல்லது "தமிழர்களுக்கு இடைக்கால நிர்வாக சபை வழங்கப்படுமாயின் முஸ்லிம்களுக்கும் தனியான சபை வழங்கப்பட வேண்டும்" என்பன போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. அதாவது, முஸ்லிம்களின் கோரிக்கைகள் தன் நிலையில் சுயாதீனமாக ஏற்படுபவையாக அன்றி தமிழர்களின் கோரிக்கைகளுக்கான எதிர்க் கோரிக்கைகளாகவும், ஒரு வகையில் தமிழர்களின் கோரிக்கைகளைத் தடை செய்பவையாகவும் அமைந்துள்ளன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பத்தில் இடைக்கால சபை பற்றிய விடயங்கள் விவாதிக்கப்பட்ட பொழுது, முஸ்லிம்கள் தமக்கெனத் தனியான சபை ஒன்று வழங்கப்பட வேண்டும் என்ற கோரியம்மையும், பின்னர் புலிகள் இடைக்காலசபைக் கோரிக்கையை கைவிட்ட போது, முஸ்லிம்களும் இடைக்காலசபைக் கோரிக்கையை வலியுறுத்தாதிருந்தமையும் இங்கு கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். எனவே "தமிழர்களுக்கு வழங்கப்பட்டால்" என்கின்ற போக்கு இவ்விரு இனங்களுக்கிடையேயான குரோதத்தை மேலும் ஊக்குவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தற்போதை நிலையில் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் இடைவெளியைத் தூண்டுகின்ற பிரதான காரணி, அவர்களுக்கு எதிராகக் கிழக்கு மாகாணத்தில் இடம்பெறுகின்ற வன்முறைகளாகும். இவை விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. முஸ்லிம் அரசியல் கட்சிகளும் உடனடியாகவே இரண்டாவது சிந்தனையற்ற வகையில் அத்தகைய முடிவிற்கே வந்துள்ளன. இவை புலிகளால் மேற்கொள்ளப்படுகின்ற கொலைகளாயின், உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். ஏனெனில், இவற்றின் காரணமாக (1) தமிழ் - முஸ்லிம் உறவுகள் மோசமான நிலைக்குத் தள்ளப்படுகின்றன, (2) சமாதானப் பேச்சுவார்த்தைகளின் நம்பகத் தன்மை பாதிப்படைகின்றது, (3) சர்வதேச அபிப்பிராயம் தமிழ் மக்களுக்கு எதிராகத் திருப்பப்படுகின்றது. அத்துடன் இவை மனிதாபிமானமற்ற செயற்பாடுகளாகும். எனவே, இவை ஏற்றுக் கொள்ளக் கூடிய செயற்பாடுகளல்ல.

ஆயினும், கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம் யாதெனில், இது உள்நோக்கமுடைய மூன்றாந் தரப்பு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கான ஆகக் குறைந்தது, ஒரு வீதச் சந்தர்ப்பமாயினும் உள்ளது என்பதாகும். மேற்கூறிய அதே காரணங்களுக்காக மூன்றாந்தரப்பு ஒன்று இதனை மேற்கொண்டிருக்கக் கூடிய மிகக் குறைந்த சாத்தியக்கூறு ஒன்று உள்ளமையினால், இக் கொலைகள் பற்றி அவசர முடிவுகளுக்கு வரமுன்னர் தீவிர விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய கடமை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உண்டு. ஏனெனில், தற்போது பெரிதும் கூறப்படுவதுபோன்று, தமது பாதுகாப்பிற்காக முஸ்லிம்கள் ஆயுதம் தாங்க முடிவு செய்வார்களேயாயின் அது இரு சமூகங்களுக்கும் மிகப் பெரும் அழிவுகளைக் கொண்டு வருவதாக அமையும்.

(24. 08. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

இரட்டைப் புறக்கணிப்புக்கு உள்ளாகும் நிலையில் தமிழர்

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையிலான உறவின் இறுக்க நிலை படிப்படியாக ஆனால் ஒரே சீராக அதிகரித்து வருவதாக முன்னர் கூறப்பட்டது. குறிப்பாக, இந் நிலை கிழக்கு மாகாணத்தில் மோசமான நிலையை எட்டியிருப்பதுடன் இரு குழுக்களுக்கும் இடையில் தீவிர மட்டத்திலான வன்முறைப் பயன்பாட்டிற்கு இட்டுச் செல்லக்கூடிய அபாய நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு இன்று தோற்றம் பெற்றுள்ள இரு பிரதான நெருக்கடிகள்,

(1) முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கென தனியான முஸ்லிம் பொலிஸ் அணியைத் தோற்றுவிப்பது அல்லது வேலைக்கமர்த்துவது என்ற தீர்மானம்,

(2) தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரித்தல் வேண்டும் என்கின்ற வகையில் முன் வைக்கப்பட்டுள்ள யோசனைகள் என்பவை ஆகும். இவ்விரு விடயங்கள் தொடர்பிலான அரசியல் பரிமாணங்களை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

கிழக்கு வன்முறை

எவ்வாறாயினும் நாம் விடயத்திற்கு செல்லுமுன்னர், கிழக்கில் இடம்பெறக்கூடிய வன்முறை பற்றி சிறிது நோக்குவது உகந்ததாக இருக்கக் கூடும். கடந்த வாரம் சில ஆங்கிலப் பத்திரிகைகளில் கிழக்கில் முஸ்லிம் தீவிரவாத இயக்கங்கள் ஏற்கனவே தோற்றம் பெற்றிருப்பதாகவும், சில பகுதிகளில் பயிற்சி நடவடிக்கைகள் கூட இடம் பெறுவதாகவும் கூறப்பட்டிருந்தது. இவ் அறிக்கைகளின் நம்பகத்தன்மை எத்தகையது என்பது தெளிவற்றதாகக் காணப்பட்ட போதும், ஆயுதம் தாங்குவதற்கான அதிதீவிர விருப்பம் ஒன்று கிழக்கு முஸ்லிம் இளைஞர்களிடையே உயரிய ஒரு மட்டத்தில் காணப்படுகின்றது என்பது வெளிப்படையானதாகும். இதனை அடிப்படையாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நோக்குகையில் துரதிஷ்டவசமாக பத்திரிகை அறிக்கைகள் உண்மையானவையாக இருப்பதற்கான சாத்தியங்கள் பெரிதும் காணப்படுகின்றன என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

எவ்வாறாயினும் தோற்றம் பெறுகின்ற பிரதானமான கேள்வி யாதெனில், ஆயுதம் தாங்கல் யாருக்கு எதிராக என்பதாகும். 1970 களின் இறுதிக்காலப் பகுதியில் தமிழ் வாலிபர்கள் ஆயுதம் தாங்க முற்பட்ட போது "எதிரி" யார் என்பது தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தது. அது இலங்கை அரசு ஆகும். இப்பொழுது முஸ்லிம்களின் எதிரி யார் என்பது தெளிவாக வரையறுக்கப்பட்டதாகக் காணப்படவில்லை. ஆயினும் எதிரி நிச்சயமாக இலங்கை அரசோ அல்லது சிங்கள மக்களோ இல்லை என்பதால் எஞ்சி இருப்பது தமிழ் மக்களே ஆகும். அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகளாக இருக்கக்கூடும். ஆயினும், விடுதலைப் புலிகளுடன் யுத்தம் செய்வதென்பது இலகுவானது அல்ல என்பதால் இலகுவான இலக்காக கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் அமையக்கூடும்.

இவ்விதம் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் வன்முறைப் பயன்பாடு இடம் பெறுமாயின், அது தமிழ் - சிங்கள வன்முறையிலும் மோசமான அழிவுகளைக் கொண்டுவரக் கூடும் என்பது கரிசனைக்குரியவர்களால் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதவசியம். ஏனெனில், விடுதலைப் புலிகளுக்கும் - அரச இராணுவத்திற்கும் இடையிலான யுத்தத்தில் தெளிவற்ற வகையிலாயினும் வரையறுக்கப்பட்ட எல்லைகள் காணப்பட்டன. இவ்வித எல்லைகளின் இருப்பு வன்முறையின் மட்டத்தையும் பண்பையும் மட்டுப்படுத்துவதில் ஒரு காரணியாக செயற்பட்டுள்ளது. ஆயினும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் அவ்வித வரையறுக்கப்பட்ட எல்லைகள் காணப்படவில்லை. அவர்களின் இருப்பு புவியியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக பிணைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. எனவே தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் ஒரு ஆயுதப் போராட்டம் இடம் பெறுமாயின் அது பாரிய அழிவுகளையும் இழப்புகளையும் ஏற்படுத்தக் கூடும் என்பதுடன் இன்னுமோர் மட்டத்தில் இனச் சுத்திகரிப்பிற்கும் கூட வழிவிடக் கூடும்.

எனவே, இவ்விடயத்தில் தொடர்புடைய தரப்பினர் அதிக கவனம் செலுத்துவதுடன் கிழக்கில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்துவதற்கான நியாயமான ஜனநாயக ரீதியான நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுப்பதும் அத்தியாவசியமானதாகும்.

இரட்டைப் புறக்கணிப்பு

இலங்கையில் சிங்கள - தமிழ் மக்களுக்கிடையில் இனமோதல் ஒன்று தோற்றம் பெற்றமைக்கும் அது ஒரு யுத்தமாக மாற்றமடைந்தமைக்குமான காரணிகளில் ஒன்று தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற புறக்கணிப்பு ஆகும். சுதந்திரத்திற்கு முன்னர் ஆங்கிலேயர்களினால் தமிழ் மக்களுக்கு அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலுகைகள் வழங்கபட்டிருந்தன. தமிழர்கள் தமக்கு சேரவேண்டியதிலும் அதிகமான அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரத்தையும், நலன்களையும் அனுபவித்து வந்துள்ளனர் எனக் கருதிய சிங்கள மக்கள், சுதந்திரம் வழங்கப்பட்டபோது அரசியல் அதிகாரம் தமது கைகளுக்கு மாற்றப்பட்டமையினால், தமக்கு இழைக்கப்பட்டதாக கருதிய அநீதிகளை சரிப்படுத்திக் கொள்ள விழைந்தனர். இவ்வடிப்படையிலேயே சிங்களம் மட்டும், சிங்களமயமாக்கல் போன்ற தமிழ் மக்களுக்கு எதிரான கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. எனவே, முதல் முறையாக தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டபோது சிங்கள மக்களின் நலன்களுக்காகவே அவர்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

எனினும், தற்போது இடம்பெறுகின்ற அரசியல் நிகழ்வுகளை அவதானிக்கையில், இரண்டாவது தடவையும் அரச புறக்கணிப்புக்கு உள்ளாகக் கூடிய நிலையில் தமிழ் மக்கள் காணப்படுகின்றனர். ஆயினும், இத்தடவை அது சிங்கள மக்களின் நலன்கள் என்ற அடிப்படையிலன்றி முஸ்லிம் மக்களின் நலன்களுக்காக இடம்பெறக்கூடியதாகக் காணப்படுகின்றது.

இனரீதியான ஆட்சேர்ப்பு

இப்புறக்கணிப்பின் முதலாவது அம்சம் கிழக்கில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் வகையில் சிலநூறு "தமிழ் பேசும்" பொலிஸாரை நியமிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள முடிவு ஆகும். இங்கு "தமிழ் பேசும்" என்பது, முலாம்பூசப்பட்ட ஒரு சொற்பதம் ஆகும். ஏனெனில் அதன் உண்மையான கருத்து "முஸ்லிம்" என்பதாகும். இவ்விதம் முஸ்லிம் பொலிஸாரை விசேடமாகப் படையில் சேர்த்துக் கொள்வதற்கு சில தமிழ்க் கட்சிகள் ஏற்கனவே தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. இக்கட்சிகள், கிழக்கில் தமிழ் பொலிஸார் பெருமளவில் காணப்படவில்லை எனவும், முஸ்லிம்கள் ஏற்கனவே பெருமளவில் காணப்படுவதாகவும் வாதிட்டுள்ளன. இது உண்மையாயின் முஸ்லிம்கள் மேலதிகமாகப் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவது கிழக்கில் தமிழர்களின் பாதுகாப்பை பலவீனப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. அதாவது, தமிழர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான வகையில் முஸ்லிம்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முயற்சிப்பது புத்திசாலித்தனமாகாது. ஏனெனில், இந்நடவடிக்கை பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாகப் புதிய சிக்கல்களைத் தோற்றுவிக்கக் கூடியதாகும்.

இதற்குப் புறம்பாக இம்முடிவில் அடிப்படையான பிரச்சினைகள் சில காணப்படுகின்றன. அவற்றில் முதலாவது, சமாதான செயன்முறையின் அடிப்படை நோக்கம் தொடர்பிலானது. நடைமுறையில் உள்ள சமாதான செயன்முறையின் அடிப்படைக் கோட்பாடு, வன்முறை முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டும், பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்பட வேண்டும் என்பதாகும். ஆயினும், புதிதாக ஒரு தொகுதி நபர்களை பொலிஸ் படையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்துக் கொள்வதென்பது இதுவரை வன்முறைகளுடன் அதிக தொடர்பு அற்ற ஒரு தொகை நபர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து, ஆயுதங்கள் வழங்கி அவர்களை சமூகத்திற்கு அனுப்புவதாகும். இது வன்முறையைக் குறைக்கின்ற நோக்கிலான ஒரு செயற்பாடு அல்ல. மாறாக அதனை அதிகரிக்கின்ற ஒன்றாகும்.

சமாதான செயன்முறையின் இன்னுமோர் அடிப்படை கோட்பாடு பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்வதென்பதாகும். இந்நாட்டின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய இனமோதல் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தி தீர்வுகாண முடியும் என்கின்ற ஒரு நம்பிக்கை ஏற்பட்டுள்ள நிலையில் பிராந்திய ரீதியாக ஏற்பட்டுள்ள ஒரு நெருக்கடிக்கு அரசியல் ரீதியில் தீர்வு காணமுடியாது எனக் கூறுவது பொருத்தமற்றதாகும். குறிப்பாக, இவ்விடயம் பற்றி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதும் கூட்டாக செயற்படக்கூடிய ஒரு ஏற்பாட்டிற்கு வருதலும் அவசியம். ஏனெனில், கிழக்கில் ஏற்படுகின்ற அரசியல் அபிவிருத்திகளில் விடுதலைப் புலிகள் முக்கியமான ஒரு செயற்பாட்டாளர்கள் என்பது மறுக்கப் படுவதற்கில்லை.

அடுத்து, கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் நோக்கில் முஸ்லிம் பொலிஸாரை மேலதிகமாக நியமிக்கும் தீர்மானம் ஏற்படுத்துகின்ற இன்னுமோர் கேள்வி, கிழக்கிலுள்ள தமிழர்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவது யார் என்பதாகும். அரசு தமிழர்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துமா? அல்லது அது விடுதலைப் புலிகளினால் பொறுப்பேற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றதா? அல்லது தமிழ் மக்கள் தமது பாதுகாப்பை தாமே உத்தரவாதப்படுத்திக் கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றதா என்பன போன்ற பல கேள்விகள் தொக்கி நிற்கின்றன. இத்தகைய கேள்விகள் எழுவதற்கான அடிப்படைக் காரணம் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு இன ரீதியான தீர்வுகள் முன் வைக்கப்படுகின்றமையாகும்.

அடுத்து, இத்தீர்மானத்தின் இன்னுமோர் அடிப்படை எண்ணக்கரு முஸ்லிம்களுக்கான பாதுகாப்பு அச்சறுத்தல் தமிழ் மக்களிடமிருந்து குறிப்பாக விடுதலைப் புலிகளிடம் இருந்து தோற்றம் பெறுகின்றது என்பதாகும். இதன் காரணமாகவே இடம்பெறுகின்ற எல்லாக் கொலைகளும் ஆட்கடத்தல்களும் விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்படுகின்றன. இது தவறான ஒரு அணுகுமுறையாகும். ஏனெனில், இக்கொலைகளையும், ஆட்கடத்தல்களையும் விடுதலைப் புலிகள் மேற்கொள்வதற்கான சாத்தியம் எந்த அளவிற்கு காணப்படுகின்றதோ அதேயளவு சாத்தியம் வேறொரு குழு மேற் கொண்டிருப்பதற்கும் காணப்படுகின்றது. வேறொரு குழு எனப்படுகின்ற பொழுது பல்வேறு விதமான அரசியல் மற்றும் இனக் குழுக்கள் கவனத்தில் எடுக்கப்படலாம்.

கிழக்கில் பெருமளவு பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய இச்செயற்பாடுகளை யார் மேற்கொள்கின்றார்கள் என்பது சரியாக நிர்ணயிக்கப்படுகின்ற போது மட்டுமே பிரச்சினைக்கான தீர்வு யாது என்பது சரியாக நிர்ணயிக்கப்படலாம். ஆயினும், அத்தகைய அழமான ஆணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடிப்பதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதளவான ஆர்வம் ஒன்று எமது அரசியல்வாதிகளிடம் காணப்படுவதாகத் தோன்றவில்லை. அவசரமான முடிவுகளுக்கு வருதல் அரசியல் ரீதியாக இலகுவானதும், இலாபமுடையதுமான நடவடிக்கை என்பதனால் இவ்விதம் மேற்கொள்ளப்படுவதாயிருக்கலாம்.

கிழக்கு மாகாணத்தில் தற்காலத்தில் இடம்பெறுகின்ற கொலைகளும் ஆட் கடத்தல்களும் அதன் காரணமாக எற்படுகின்ற பதற்ற சூழ்நிலையும், இன வன்முறைகளும் இலங்கை அரசியலில் மிகப் பலமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகள் ஆகும். குறிப்பாக தேசிய இன மோதலுக்கு தீர்வை அடைந்து கொள்ளும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதான செயன்முறைகளின் வெற்றியை அல்லது தோல்வியை நிர்ணயிக்கக் கூடியதாக ஏன் சமாதான செயன்முறைகளின் இருப்பையே நிர்ணயிக்கக் கூடிய இயலுமை உடையதாக இன்று கிழக்கு மாற்றமடைந்துள்ளது. எனவே, கிழக்கின் நிலைமையைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க வேண்டியது மிக அவசியமானதாகும். அவ்வகையில் அங்கு பதற்றத்தை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளை யார் மேற்கொள்வதாய் இருப்பினும் அவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அவ்விதம் அன்றி இவை அரசியல் மற்றும் இன ரீதியான உள்நோக்கமுடைய செயற்பாடுகளாயிருப்பின் இச்செயற்பாடுகளின் தோற்ற மூலம் இனம் காணப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது அவசியம். அத்துடன் கிழக்கின் நிலை மிகுந்த முக்கியத்துவமுடையது என்பதனால் மிக நிதானமான அணுகுமுறை ஒன்று கடைப்பிடிக்கப்பட வேண்டியதும் அவசியமானதாகும்.

(31 . 08 . 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

வடக்கு, கிழக்கு பிரிப்பு பேச்சுவார்த்தை முறிப்பிற்குச் சமமானது

கிழக்கில் முஸ்லிம் பாதுகாப்பு என்கின்ற பெயரில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படக் கூடிய இன்னுமோர் புறக்கணிப்பு வடக்கையும், கிழக்கையும் பிரிக்க வேண்டும் என்கின்ற வகையில் குறிப்பாக ஜனாதிபதியால் முன்வைக்கப்படுகின்ற யோசனையாகும். கடந்த சில வாரங்களில் கிழக்கில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான வகையில் இடம்பெற்ற நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு சில முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மிடம் வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென கோரியிருப்பதாகவும், அதன் காரணமாக தற்போது ஒன்றாகவுள்ள மாகாணங்களை பிரிவினை செய்ய தாம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் ஜனாதிபதியின் தரப்பில் இருந்து கூறப்பட்டது.

அரசியல்வாதிகள் முன்வைக்கின்ற எல்லாக் கருத்துக்களும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையானவைகளாகவோ அல்லது கரிசனைக் குரியவைகளாகவோ இருப்பதில்லை. அரசியல்வாதிகள் சில சந்தர்ப்பங்களில் அரசியல் லாபங்கருதி, குறிப்பாக எதிர்க்கட்சிகளின் கவனத்தைத் திசை திருப்பக் கூடிய உள் நோக்கமுடைய கருத்துக்களைக் கூறுவதுண்டு. இது அரசியல் நாடகம் எனக் கூறப்பட முடியும். அவ்வகையில் ஜனாதிபதியின் இக்கருத்தும் ஒரு பெரும் அரசியல் நாடகத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்குப் பெருமளவான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இருப்பினும் ஜனாதிபதியின் வடக்கையும், கிழக்கையும் பிரிப்பதற்கான யோசனை ஒரு அரசியல் நாடகம் எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாத நிலையில் இக்கூற்றைப் பாரதூரமானதாகக் கருத வேண்டிய இக்கட்டான ஒரு நிலையில் தமிழ் சமூகம் உள்ளது. அத்துடன் ஜனாதிபதியின் இக்கருத்து அல்லது யோசனை ஒரு அரசியல் நாடகமாக அன்றி உண்மையானதாக இருப்பின் இந்நாட்டின் அரசியல் எதிர்காலத்திலும், குறிப்பாக சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போக்கிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இயலுமை உடையதாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு

ஜனாதிபதியின் திடீர் அறிவிப்பின் காரணமாக பத்திரிகைகளிலும் பொதுமக்கள் மத்தியிலும் வடக்கு, கிழக்கு "பிரிப்பு" பற்றி பெருமளவாகப் பேசப்படுகின்றது. இருப்பினும் இப்பிரச்சினையுடன் தொடர்புடைய நுணுக்கங்கள் பொது அறிவுக்கு எட்டியதாக இல்லை. அதாவது இப்பிரச்சினையின் தாற்பரியங்கள் பற்றி கேள்விகள் நிறையவே காணப்படுகின்றன.

வடக்கும் கிழக்கும் தமது "மரபுரீதியான தாயகம்" என்பது தமிழ் மக்களின் அடிப்படையான எண்ணக்கரு ஆகும். அது அதிகாரப் பகிர்வுக்கான தமிழ் போராட்டத்தின் ஒரு அடிப்படையாகவும் செயற்பட்டு வந்துள்ளது. 1948 ஆம் ஆண்டில் இருந்தே வடக்கும், கிழக்கும் இணைந்த ஒரு அலகு பற்றி தமிழ் அரசியல் தலைவர்கள் பேசி வந்துள்ளனர். அவ்வகையில் இந்தியாவின் தலையீட்டின் காரணமாக தீர்வு ஒன்று அடையப்படக் கூடிய சாத்தியம் 1987 ஆம் ஆண்டு காணப்பட்ட போதும் வடக்கும், கிழக்கும் இணைந்த அலகை அடிப்படையாக்க் கொண்டதாக அதிகாரப் பிரிவினை இருக்கவேண்டும் என்பதை தமிழ் தரப்பினர் இந்தியாவிடம் வலியுறுத்தி இருந்தனர். எனவே, முதற் தடவையாக 1987 ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் வடக்கும், கிழக்கும் இணைந்த ஒரு நிர்வாக அலகாக அங்கீகரிக்கப்பட்டது.

எனினும், 1987 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட இணைப்பு தற்காலிகமானதே என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைப்பு நிரந்தரமாக்கப்பட வேண்டுமாயின் "கிழக்கு வடக்குடன் இணைந்திருக்க வேண்டுமா அல்லது தனியான ஒரு அலகாக செயற்பட வேண்டுமா" என்பதைத் தீர்மானிக்கும் வகையில் "கிழக்கில்" கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும். ஒப்பந்தத்தின்படி இணைப்பை அல்லது பிரிப்பைத் தீர்மானிப்பதற்கான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆயினும் அதே ஒப்பந்தத்தின் மூலம் கருத்துக் கணிப்பை தள்ளிப்போடுவதற்கான சந்தர்ப்பம் ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டிருந்தமையினால் இதுவரை கருத்துக் கணிப்பு வெற்றிகரமாகப் பின் போடப்பட்டு வந்துள்ளது.

பலவீனமான இணைப்பு

1987 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வடக்கு, கிழக்கு இணைப்பு பலவீனமான அடிப்படையைக் கொண்டது. இதற்குப் பல காரணிகள் காணப்படுகின்றன. இவற்றுள் பிரதானமானது கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நிபந்தனையும், அதனைப் பின்போடுவதற்கான ஜனாதிபதியின் இயலுமையும் ஆகும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இணங்கப்பட்டதன் பிரகாரம் கருத்துக் கணிப்பு கிழக்கு மாகாணத்தில் மட்டுமே இடம் பெறவேண்டும். அவ்விதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறுகின்ற பட்சத்தில் முடிவு நிச்சயமாக இணைப்பிற்கு எதிரானதாகவே இருக்கும். ஏனெனில், தற்போதைய நிலையில் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள இன மக்கள் ஏறத்தாழ சமமான நிலையில் வாழ்கின்றனர். அதாவது ஒவ்வொரு இனக் குழுவும் மொத்த சனத்தொகையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது.

எனவே, கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்று இடம்பெறுகின்ற போது, கிழக்கிலங்கையில் உள்ள மக்கள் இன ரீதியாக வாக்களிப்பர் என்கின்ற எடுகோளின் அடிப்படையில் நோக்குகையில், இணைப்பிற்கு ஆதரவாக ஏறத்தாழ 35% வாக்குகள் வழங்கப்பட, எதிராக ஏறத்தாழ 70% வாக்குகள் கிடைக்கப்பெறும், கருத்துக் கணிப்பின் முடிவு சாதாரண பெரும்பான்மையின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படும் என்பதால், ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது போல வாக்கெடுப்பு இடம்பெறுகின்ற பட்சத்தில் இணைப்பு நிச்சயமாகத் தோல்வியடையும். இதன் காரணமாகவே, சர்வசன வாக்கெடுப்பு எனக் கூறப்பட்ட உடனேயே தமிழ் மக்கள் மத்தியிலும், தமிழ் அரசியல்வாதிகள் மத்தியிலும் ஒருவித பதற்றமும், அதிருப்தியும் தோற்றம் பெறுகின்றன. இங்கு முக்கியத்துவமுடைய இன்னுமோர் விடயம் யாதெனில், 87 ஆம் ஆண்டிலும் கூட கிழக்கில் தமிழ் மக்களின் சனத்தொகை விகிதாசாரம் ஐம்பது விகிதத்திலும் குறைவானதாகவே காணப்பட்டிருந்தது என்பதாகும். இதன் கருத்து இணங்கப்பட்டிருந்தவாறு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு 1988 ஆம் ஆண்டு இடம்பெற்றிருப்பினும் கூட இணைப்பு பெருமளவிற்குத் தோல்வியடைந்தே இருக்கும் என்பதாகும்.

அவ்வாறாயின், தமிழ்த் தரப்பினர் ஏன் "கிழக்கில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு" என்கின்ற நிபந்தனைக்கு இணங்கினர் என்பது முக்கியமான பிரச்சினையாகும். இதற்கு தமிழ் தரப்பில் இருந்து முன்வைக்கப்படுகின்ற பதில் யாதெனில் "இணைப்பை நிர்ணயிப்பதற்கான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்று இடம்பெறாது என இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி (இரகசியமான முறையில்) தமிழ்த் தலைவர்களிடம் வாக்களித்திருந்தார்" என்பதாகும். இது சட்டரீதியாகவோ அன்றி அரசியல் ரீதியாகவோ ஆதாரமற்ற ஒரு வாதம் என்பதுடன், அவ்விதம் ராஜீவ் காந்தி வாக்களித்தது உண்மையாயின், தமிழ்த் தலைவர்கள் அதனை ஏற்றுக்கொண்டது தூர நோக்கற்றதும், அரசியல் சாணக்கியம் குறைந்ததுமான ஒரு செயற்பாடு ஆகும். ஏனெனில், ராஜீவ்காந்தி அவ்விதம் வாக்களித்திருப்பாரேயானால், அவருக்கும், ஜனாதிபதி ஜயவர்த்தனவிற்கும் இடையில் இது தொடர்பில் இரகசியமான ஓர் உடன்பாடு இருந்திருக்கும். ஜனாதிபதி ஜயவர்தன இவ்வுடன்பாட்டின் காரணமாகவே கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை தொடர்ச்சியாகத் தள்ளிப்போட்டு வந்திருக்கலாம். ஆயினும், ஜயவர்தனவிற்குப் பின்னர் வேறொருவர் ஜனாதிபதியாக வருகின்றபோது நிலை என்ன என்கின்ற கேள்வி எழுந்திருக்க வேண்டும். ஜயவர்தனவே எப்பொழுதும் ஜனாதிபதியாக இருப்பார் எனக் கருதப்பட்டதா? குறிப்பாக அதிகாரப் பகிர்வு, மரபு ரீதியான தமிழர் தாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனபோன்ற எண்ணக்கருக்களுக்கு எதிரான ஒருவர் ஜனாதிபதியாக வருகின்ற பொழுது கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நிபந்தனை தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாம் என்பது அப்பொழுதே உணரப்பட்டிருக்க வேண்டும். அப்பொழுது அவ்விதம் உணராதிருந்தமையே இப்பொழுது நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இணைப்பு ஏன் பலவீனமானது என்பதற்கு இன்னுமோர் காரணம் அதற்குச் சட்டரீதியான அந்தஸ்து எதுவும் கிடையாது என்பதாகும். 1987 ஆம் ஆண்டு ஒப்பந்தத்துடன் தொடர்புடைய இரு பிரதான சட்டங்கள், அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தம், 1987 ஆம் ஆண்டின் மாகாணசபைகள் சட்டம் என்பவை ஆகும். இவ்விரு சட்டக் கூறுகளும் வடக்கு, கிழக்கு இணைப்புத் தொடர்பிலான எத்தகைய ஏற்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை. கூறப்பட்டுள்ளது யாதெனில், பொதுவான எல்லைகளைக் கொண்டுள்ள மாகாணங்கள் விரும்பினால் ஒன்றிணைந்து ஒரு மாகாண சபையை அமைத்துக் கொள்ளலாம் என்பதாகும். எனவே வடக்கு, கிழக்கு இணைப்பிற்கு எந்தவிதமான சட்டரீதியான அந்தஸ்தும் கிடையாது.

இதன் கருத்து யாதெனில், வடக்கு, கிழக்கு இணைப்பிற்கான ஒரே அடிப்படை இலங்கை - இந்திய ஒப்பந்தமே ஆகும். ஆயினும் வடக்கு - கிழக்கு ஒப்பந்தம் செயற்படாத அல்லது இல்லாத ஒரு ஒப்பந்தமாக மாற்றமடைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே, இல்லாத ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருக்கின்ற இணைப்பும் பலவீனமானதே என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இவ்விரு மாகாணங்களும் ஒரே (மாகாண சபை) நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் இயங்கிவருகின்றன என்பதே அவை இணைக்கப்பட்ட மாகாணங்கள் என்பதன் அடிப்படையாகும்.

இருப்பினும் இவ்விரு மாகாணங்களும் இணைக்கப்பட்டுவிட்டன, வடக்கும், கிழக்கும் ஒரு மாகாணம் ஆகும் என்பவை குறிப்பாக வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் மனதில் மிக ஆழமாக வேருன்றி விட்டன. எனவே, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை இணைப்புப் பற்றியது அன்று, மாறாக பிரிப்புப் பற்றியது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இணைந்த மாகாணங்கள் என்பதே யதார்த்தம் ஆகும். எனவே அவற்றைப் பிரிக்க முயல்வது அவர்களது அரசியல் அபிலாசைகளில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது.

சமாதானப் பேச்சுவார்த்தை

மேலும், வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணங்கள் என்கின்ற எடுகோளின் அடிப்படையிலேயே நடைமுறையில் உள்ள சமாதான பேச்சுவார்த்தைகள் இடம் பெறுகின்றன. வடக்கும் கிழக்கும் ஒரே மாகாணம் என்பதனுள் சில சிறிய மாற்றங்கள் சாத்தியமே ஆயினும்கூட இணைந்த அலகு என்பதே அடிப்படையானதாகும். ஏனெனில், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிக இணைப்பு என்பதே கூட பெரும் தியாகங்களின் காரணமாக அடையப்பட்ட "வெற்றி" ஆகும். அதனை இலகுவில் விட்டுவிட அவர்கள் தயாராக இருக்க மாட்டார்கள். எனவே வடக்கு, கிழக்கு பிரிப்பு என்கின்ற திட்டம் செயற்பாட்டு வடிவம் பெருமாயின் அரசியற் தீர்விற்கான பேச்சுவார்த்தைகளின் அர்த்தம் தமிழ் மக்களிடையே கேள்விக்குறியாக மாறிவிடும்.

அத்துடன் ஒருதலைபட்சமான முடிவுகள் இது விடயத்தில் மேற்கொள்ளப்படுமாயின் விடுதலைப் புலிகளும் கூட பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல விரும்ப மாட்டார்கள் என்பது தெளிவானது.இதில் காணப்படுகின்ற பிரதான பிரச்சினை யாதெனில், பிரிவினைத் திட்டம் செயற்படுத்தப்படுமாயின், அது ஜனாதிபதியின் விருப்பின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும். அரசாங்கம் அத்தகைய ஒரு திட்டத்தில் தமக்கு உடந்தை இல்லை எனக் கூறியுள்ளதுடன், இவ்விதம் தன்னிச்சையான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என ஜனாதிபதியை வேண்யுள்ளது. எனவே பிரிப்பிற்கான ஏற்பாடுகள் இடம்பெறுமாயின், அவற்றை தடுக்கக் கூடிய வலுவற்ற ஒரு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் என்ன நன்மை இருக்கப் போகின்றது என்கின்ற கேள்வி நியாயமானதாகவே இருக்கும். எனவே, வடக்கும், கிழக்கும் பிரிக்கப்பட வேண்டும் என்கின்ற ஜனாதிபதியின் கருத்து தீவிரமடைந்து, செயற்பாட்டு வடிவம் பெறுமாயின் அது சமாதானப் பேச்சுவார்த்தைகளின் அடித்தளத்தை நொறுக்கிவிடும் என்பது நிச்சயமானது.

(07. 09 . 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

இன்றைய அரசியல் யதார்த்தம் ஜே.வி.பி. யின் அரசியல் பலத்தை பெருமடங்கு பெருப்பித்துள்ளது

இலங்கை அரசியலில் காணப்பட்ட யதார்த்தங்களையும், இன யுத்தத்தின் தாற்பரியங்களையும் சரியாகப் புரிந்து கொண்ட இந் நாட்டு மக்களில் பெருந்தொகையினர், மோதல் தீர்விற்கான அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆதரித்திருந்தனர். அதன் பிரதிபலிப்பே 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற்றமையாகும். ஆயினும், இங்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளை எதிர்க்கின்ற, சமமான அளவு பலமுடைய ஒரு தொகை மக்கள், குறிப்பாக தமிழர் அல்லாத இனக்குழுக்களிடையே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவர்களில் குறிப்பிடத்தக்க ஒரு தொகையினர் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இறுதியில் நாட்டைப் பிளவுபடுத்தி விடும் என்கின்ற உண்மையான நம்பிக்கையை கொண்டுள்ளனர். எனவே, சிங்கள மக்களின் ஒரு தொகையினர் தேசப்பற்று என்பதன் அடிப்படையிலேயே சமாதான முயற்சிகளை எதிர்த்துள்ளனர்.

நோக்கம்

அண்மைக்காலங்களில் இத்தகையோர் எதிர்பார்த்திருந்த பிரதான அரசியல் அபிவிருத்தி சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் முயற்சிக்கப்பட்டிருந்த "சந்தானய" ஆகும். சிலர் எதிர்பார்த்த வண்ணமும் பலர் எதிர்பாராத வண்ணமும் புதிய கூட்டிற்கான முயற்சிகள் தோல்வியடைந்து விட்டதாகக் கூறப்படுகின்றது. இது ஜே.வி.பி யின் கொள்கைப் பரப்பு செயலாளர் விமல் வீரவன்ச கூறியுள்ளது போன்று பலரை ஏமாற்றத்திற்-குள்ளாக்கியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கம் காணப்பட முடியாத பல அம்சங்கள் காணப்பட்ட போதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவான இலக்கை அடைந்து கொள்ளும் நோக்கில் ஒன்றிணைவர் எனப் பலரும் எதிர்பார்த்திருந்தனர். பொதுவான இலக்கு யாது?

பொதுவான இலக்கு, "தாய் நாட்டைப் பாதுகாத்துக் கொள்வது" எனக் கூறப்படுகின்றது. அவ்வாறு தாய் நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதாயின் சமாதானப் பேச்சுவார்த்தைகளையும், ஏன் ஐக்கிய தேசிய முன்னணியின் பதவிக்காலத்தையும் கூட முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். எனவே, ஐ.தே.மு. அரசாங்கத்தை பதவி கவிழ்ப்பதன் மூலம் நாட்டைப் பாதுகாக்கப் போவதாக "சந்தானய"வை (கூட்டை) தோற்றுவிக்க முனைந்தோர் கூறிவந்துள்ளனர். தேசப்பற்றினடிப்படையில் ஒரு அரசியல் முயற்சி மேற்கொள்ளப்படுகின்ற போது அதற்கு குறுக்காக எது வரமுடியும்? எனவே, சந்தானய நிச்சயம் தோற்றம் பெறும் என அதீத நம்பிக்கை கொண்டிருந்தோர் பலர் காணப்பட்டனர். சந்தானய தோல்வியடைந்ததன் மூலம் ஏமாற்றமடைந்தோர் இவ்விதம் அதீத நம்பிக்கை கொண்டிருந்தோர் மட்டுமே ஆகும்.

அரசியல் அதிகாரம்

இதனுடைய கருத்து யாதெனில் தேசப்பற்று என்பதற்குப் புறம்பாக முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய அம்சங்கள் புதிய அரசியல் கூட்டிற்கான பேச்சுவார்த்தைகளுடன் தொடர்புபட்டிருந்தன என்பதாகும். அவ்விதம் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுக்குள் முக்கியத்துவம் வாய்ந்தது பதவிப் பகிர்வின் பண்பு என்பதாகும்.

கூட்டிற்கான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்து விட்டதாகக் கூறப்பட்டதன் பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் கூட்டு ஒன்று ஏற்பட வேண்டுமாயின் கூட்டில் இடம் பெறுகின்ற கட்சிகள் சமமானவையாக மதிக்கப்பட வேண்டும் என ஜே.வி.பி. தலைவர்கள் கூறியிருந்தனர்.இதன் கருத்து யாதெனில், புதிய கூட்டின் பதவிப்பகிர்வில் சமமான பங்கினை, அல்லது பெருமளவான ஒரு பங்கினை ஜே.வி.பி உரிமை கோரியிருக்கக் கூடும் என்பதாகும்.

இவ்விதம் அரசியல் அதிகாரத்தின் பெரும்பகுதிக்கு உரிமை கோரும் தகுதி ஜே.வி.பி. இற்கு உண்டா? பாராளுமன்றத்தின் ஆசனப் பகிர்வை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற போது இத்தகைய தகுதி ஜே.வி.பி இற்கு நிச்சயமாக இல்லை எனக் கூறப்படலாம். ஏனெனில் பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்றத்தில் எழுபத்தேழு (77) ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், அது பிரதான எதிர்க்கட்சியுமாகும். இந்நிலையின் பெரும் பகுதி சுதந்திரக் கட்சியையே சாரும். ஏனெனில், பொ.ஐ.முன்னணியில் கூறிக்கொள்ளக் கூடிய அளவிற்கு வேறு எந்தவொரு கட்சியும் காணப்படவில்லை. அதேசமயம், ஜே.வி.பி. பாராளுமன்றத்தில் பதினாறு (16) ஆசனங்களை மட்டுமே கொண்டிருக்கின்ற சிறிய கட்சிகளுள் ஒன்று மட்டுமே ஆகும். அத்துடன், தனித்து ஆட்சியமைப்பது பற்றிக் குறுகிய காலத்தில் கனவு காணும் இயலுமை கூட ஜே.வி.பி. இற்கு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதார்த்தம்

எனவே, இத்தகைய ஒரு சிறிய கட்சிக்குக் கூட்டினுள் சமமான அதிகாரத்தினை வழங்க சுதந்திரக் கட்சி இலகுவில் இணங்கிவிடும் என எதிர்பார்ப்பதற்கில்லை. எனினும், இருக்கின்ற அரசியல் யதார்த்தங்கள் ஜே.வி.பி. யின் உண்மையான அரசியல் பலத்தைப் பெருமடங்கு பெருப்பித்துள்ளன என்பதில் சந்தேகமில்லை. இருக்கின்ற யதார்த்தம் யாதெனில் ஜே.வி.பி. யின் ஒத்துழைப்பு இன்றி அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது பொ.ஐ.மு. வைப் பொறுத்தவரை சாத்தியமற்றதாகும். அதிலும் குறிப்பாக ஆட்சி மாற்றத்திற்கான முயற்சிகள் புதிய தேர்தல் ஒன்றிற்கு வழிவிடுமாயின் ஐ.தே.கட்சி மிக இலகுவாக பொதுசன ஐக்கிய முன்னணியைத் தோற்கடித்துவிடும். மேலும், உடனடி நிலையில் அதாவது தமது கட்சி சார்ந்த ஒருவர் ஜனாதிபதியாக இருக்கையிலேயே அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளாவிடின் சுதந்திரகட்சி எதிர்க்கட்சி ஆகவே இருக்க நீண்ட காலம் வேண்டியிருக்கும்.

ஏனெனில், உடனடி நிலையில் பாரிய அரசியல் மாற்றங்கள் எதுவும் நிகழாவிடின், முதலில் வருவது (2005 ஆம் ஆண்டு) ஜனாதிபதி தேர்தல் ஆகும். இத்தேர்தலில் (துரதிஷ்டமான நிகழ்வுகள் எதுவும் இடம் பெறாத பட்சத்தில்) ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவார். எனினும் சுதந்திரக் கட்சி சார்பில் யார் போட்டியிடுவது என்பது தொடர்பில் நெருக்கடிகள் தோன்றக்கூடும். ஏனெனில், சட்ட ரீதியாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போட்டியிடத் தகுதி அற்றவராவார். (ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக பதிவி வகிக்க முடியாது என இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு விதித்துள்ளது). எனவே, யார் வேட்பாளர் என்பதில் அநுர பண்டாரநாயக்கவிற்கும், மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் தோன்றக்கூடிய மோதல் கட்சியை ஓரளவு பலவீனப்படுத்த இடமுண்டு.

இதன் காரணமாக, கட்சி பலவீனப்பட்டாலும், இல்லாவிட்டாலும் இந்த இருவருமே ரணில் விக்கிரமசிங்காவிற்கு சவாலாக இருக்கப் போவதில்லை. அதாவது பிரதமரை ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கத் தேவையான அரசியல் கவர்ச்சி பண்டாரநாயக்கா, ராஜபக்ஷ ஆகிய இருவருக்குமே காணப்படவில்லை. எனவே, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைவது பாரிய பிரச்சினையாக இருக்கப்போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றிக் கொண்டவுடன் அனேகமாக உடனடியாகவே பொதுத் தேர்தலை நடாத்த முடிவுசெய்யும். அத்தகைய ஒரு தேர்தலில் நிச்சயம் ஐ.தே.கட்சி வெற்றியடையும். ஏனெனில், தேர்தல் வெற்றிகளுக்காக தமது அரசியல் அதிகாரத்தை எவ்விதம் பயன்படுத்த வேண்டும் என எமது அரசியல்வாதிகளுக்கு யாரும் பாடம் நடத்த வேண்டிய அவசியம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு முக்கியமானது யாதெனில், ஜனாதிபதி சந்திரிகாவின் அதிகாரங்களைப் பயன்படுத்தி உடனடிநிலையில் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தைப் பதவி கவிழ்த்து அதிகாரத்தைக் கைப்பற்றாவிடின், அது மிக நீண்ட காலத்திற்கு பாராளுமன்றத்தின் எதிர்த்தரப்பு ஆசனங்களில் அமர்ந்திருக்க வேண்டியிருக்கும் என்பதாகும். உடனடி நிலையில் ஆட்சியைக் கைப்பற்றுவது என்பது ஜே.வி.பி. யின் உதவியின்றி சாத்தியமற்றது என்பதனால் ஜே.வி.பி.யின் பலம் உண்மை நிலையிலும் அதிகமாக பெருப்பிக்கப்பட்டுள்ளது. அது இவ் இரு கட்சிகளுக்கும் இடையிலான "சந்தானய" விற்கு பாதகமாக மாற்றமடைந்துள்ளது.

வரவேற்பு

எவ்வாறாயினும், "சந்தானய" சரிந்து விட்டது என்கின்ற செய்தி கிடைக்கப் பெற்றதும் சமாதான ஆர்வலர்களிடையே, அதிலும் குறிப்பாக, தமிழ் மக்களிடம் பெரியளவிலான மகிழ்ச்சி ஆரவாரம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இச்சரிவு சமாதான முயற்சிகளுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகப் பலராலும் வர்ணிக்கப்படுகின்றது. கூட்டிற்கான முயற்சிகள் தோல்வியடைந்தமை நிச்சயமானதாக இருப்பின், அது சமாதான முயற்சிகளிலான பிரதானமான தடைக்கற்களில் ஒன்றை நீக்கியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. எனினும், கூட்டு முறிவடைந்தமை நிச்சயமானதும், நிரந்தரமானதும் ஆகும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

எந்த ஒரு அரசியல் நோக்கத்திற்காகவும் பேச்சுவார்த்தை நடத்துவோர் பேச்சுவார்த்தை மேசையில் மட்டுமன்றி, அதற்கு வெளியேயும், அப் பேச்சுவார்த்தைகளின் முடிவை செல்வாக்கிற்கு உட்படுத்தக் கூடிய தந்திரோபாயங்களில் ஈடுபடுவதுண்டு. அவற்றுள் ஒன்று, பேச்சுவார்த்தைகளில் இருந்து வெளியேறிவிடுவோம் என்கின்ற அச்சுறுத்தலைப் பயன்படுத்துவது அல்லது உண்மையில் அவ்விதமே வெளியேறுவது. இதனுடைய நோக்கம், பேச்சுவார்த்தைகள் வெற்றியடைய வேண்டும் என்பதில் அதிக அக்கறை உடைய தரப்பை அதிகரித்த விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்ள உந்துவதாகும். உதாரணமாக, தம்முடைய இடைக்கால நிர்வாகத்திற்கான யோசனைகள் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்படாவிடின், தாம் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலக நேரிடும் என்ற தொனியில் பாரிஸில் இருந்து விடுதலைப்புலிகளின் தலைவர்கள் கூறியுள்ளமை இத்தகைய தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாகும்.

எனவே, "சந்தானய"விற்கான முயற்சிகள் தோல்வியடைந்தமை ஒரு முடிவாக அன்றி செயன்முறையின் தொடர்ச்சியாகக் கூட இருக்கலாம். இதனை உறுதி செய்கின்ற வகையிலேயே கூட்டு முறிவடைந்திருப்பினும் இரு கட்சிகளுக்கிடையிலும் தேர்தலை அடிப்படையாகக் கொண்ட ஒத்துழைப்பு சாத்தியமானது, "எதிர்த்தரப்பு தமது அடிப்படைக் கொள்கைகளை அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கைகளை மாற்றிக் கொண்டால் கூட்டிற்கான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது சாத்தியமானது" என்கின்ற கருத்துகள் அமைந்துள்ளன. இவ்வடிப்படையில் நோக்குகையில், இலங்கை வாழ் கடும் போக்காளர்களிடமிருந்து சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்குத் தோன்றியுள்ள அச்சுறுத்தல் பூரணமாக நீங்கியுள்ளது எனக் கூற முடியாது.

புலிகளின் யோசனைகள்

இவற்றிற்குப் புறம்பாக, இன்றைய அரசியலின் முக்கியமான இன்னுமோர் அபிவிருத்தி, விடுதலைப் புலிகளின் பாரிஸ் கூட்டம் முடிவடைந்துள்ளமையும், புலிகள் தமது சொந்த யோசனைகளைக் கொண்ட ஆவணமொன்றைத் தயார் செய்துள்ளனர் என்பதுமாகும். நிபுணர்களால் தயார் செய்யப்பட்டுள்ள இந்த யோசனைகள் புலிகளின் தலைவரின் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. எனினும் புலிகளின் தலைவர் இவற்றில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியிருக்காது. ஏனெனில். யோசனைகளின் மார்க்கம் பாரிஸ் - வன்னி அல்ல. மாறாக, வன்னி - பாரிஸ் - வன்னி என்பதாகும்.

அதாவது, புலிகளின் நிபுணர் குழு பாரிஸ் செல்கின்ற பொழுது பிரபாகரனின் அபிப்பிராயங்களை அடிப்படைகளாக எடுத்துச் சென்றிருப்பர். எனவே, நிபுணர்களின் ஆவணம், பிரபாகரனின் அபிப்பிராயங்களின் மீது கட்டியெழுப்பப்பட்டதாகவே இருக்கும். இதன் காரணமாக அதில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியம் அவருக்கு இருக்காது.

எவ்வாறாயினும், இடைக்கால நிர்வாகம் தொடர்பிலான நெருக்கடியில் இம்முறை விடுதலைப் புலிகள் பொறுப்புடன் நடந்து கொண்டுள்ளார்கள் என்றே கூறப்பட வேண்டும். ஏனெனில், ஒரு பொறுப்புடைய நிறுவனம் என்கின்ற வகையில், எதிர்த் தரப்பின் யோசனைகள் நிராகரிக்கப்படுகின்ற பொழுது, மாற்று யோசனைகளை முன்வைக்க வேண்டிய கடப்பாடு புலிகளுக்கு இருந்தது. அது இம்முறை செவ்வனே செயற்படுத்தப்படுகின்றது எனக் கருதப்படலாம்.

எனினும், பேச்சுவார்த்தைகள் என்பவை விட்டுக் கொடுப்புகளை அடிப்படையாகக் கொண்டவை என்பது புலிகளால் கவனத்தில் எடுக்கப்படுவது அவசியமானது. ஒரு பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிவடைகின்றபோது இரு தரப்பினரும் தாம் கோரியதில் சற்றுக் குறைவானதற்கே இணங்க வேண்டியிருக்கும். அதாவது, விரும்பத்தக்க ஒரு சூழ்நிலையில், அரசாங்கம் சமர்ப்பித்துள்ள யோசனைகளுக்கும் விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கவுள்ள யோசனைகளுக்கும் இடைப்பட்ட ஒரு புள்ளியில் இணக்கம் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, விடுதலைப் புலிகள் தமக்கு எது தேவை எனக் கருதுகின்றனரோ அதிலும் உயர் மட்டத்திலான யோசனைகளை முன்வைக்க வேண்டியதவசியம். பின்னர் பேச்சுவார்த்தைகளின் போது சிறிய விட்டுக் கொடுப்புக்களை முன்வைக்க முடியும். இத்தகைய அணுகுமுறையில் வேறு பல நன்மைகளும் உண்டு. உதாரணமாக, இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுவார்த்தைகளில் புலிகள் தமது யோசனைகளை முன்வைத்து, பின்னர் விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்வது தென்பகுதியில் அவர்கள் மீதான நம்பிக்கையை அதிகரிப்பதாக அமையும். மாறாக, புலிகள் தமது யோசனைகளை முன்வைத்து, அது அவ்விதமே வழங்கப்படவேண்டும் என்கின்ற கடும் போக்கைக் கையாள்வர்களேயானால், உள்ளூர் மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் அவர்கள் மீதான அபிப்பிராயம் தீவிரமாகப் பாதிக்கப்படும்.

(14 . 09 . 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18

சமாதான முயற்சிகளில் ஜப்பான்

இருபது ஆண்டுகள் இலங்கையின் வட பகுதியில் யுத்தம் ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அதன் அழிக்கும் தன்மை அதி உக்கிரமானதாகவே இருந்தது. யுத்தத்தின் காரணமாக வடக்கு - தெற்கு, தமிழ் - சிங்களம் என்கின்ற பாகுபாடின்றி, இந்நாட்டில் சமூக, அரசியல், பொருளாதார நிறுவனங்கள் தகர்க்கப்பட்டிருந்தன.

அத்தகைய ஒரு துரதிஷ்டவசமான சந்தர்ப்பத்தில் சர்வதேச சமூகத்தின் கவனம் மிக மிகக் குறைவான ஒரு அளவிலேயே இலங்கை மீது திருப்பப்பட்டிருந்தது. அல்லது சர்வதேச சமூகத்திற்கு இலங்கை மீது எத்தகைய அனுதாபமும் இருக்கவில்லை என்று கூறப்படக் கூடிய, ஒரு மூலையில் இடம் பெறுகின்ற முக்கியத்துவமற்ற பிரச்சினைகளில் ஒன்றாகவே கருதப்பட்டிருந்தது.

எண்ணெய் இன்மை

இத்தகைய ஒரு நிலைக்குப் பல்வேறு காரணிகள் காணப்பட்டிருந்தன. அவற்றுள் பிரதானமானது சர்வதேச சமூகம் என்பது அமெரிக்காவினால் தலைமை தாங்கப்பட்டிருந்தமை மட்டுமன்றி அதனால் வரையறுக்கப் பட்டதாகவும் இருந்தது. அதாவது நாம் சர்வதேச சமூகம் எனக் கூறுகின்ற போது உண்மை நிலையில் அமெரிக்காவை அர்த்தப்படுத்துவது போன்ற ஒரு யதார்த்தமே நிலவி இருந்தது.

ஆயினும் எண்ணெய் வளம் அல்லது அது போன்ற ஏதாயினும் ஒரு நலன் அற்ற நாடுகளிலும், அல்லது தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவமற்ற நாடுகளிலும் இடம் பெறுகின்ற பிரச்சினைகள் பற்றி அமெரிக்கா சாதாரணமாகப் பெரிதும் அலட்டிக் கொள்வதில்லை. அதன் காரணமாகவே இலங்கை இனப்பிரச்சினை பற்றி பெரியளவான அக்கறை கடந்த தசாப்தத்தில் சர்வதேச அரங்கில் காணப்பட்டிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் இன்று நிலைமை தலை கீழாக மாற்றமடைந்துள்ளது. அதாவது இன்று நாம் எதிர்பார்க்காத ஒரு மட்டத்தில் சர்வதேச கவனம் இந்நாட்டின் மீது திருப்பி விடப்பட்டுள்ளது. அதன் பிரதிபலிப்பாகவே சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கின்ற குரல்கள் ஏறத்தாழ சர்வதேச அரங்கின் அனைத்து மூலைகளில் இருந்தும் முன்வைக்கப்பட்டிருந்தன. ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து ஐரோப்பிய யூனியன் வரையும், அமெரிக்காவில் இருந்து அவுஸ்திரேலியா வரையும் இன்று சமாதான முயற்சிகளை உத்தியோக பூர்வமாக அங்கீகரித்துள்ளன. இதன் உச்சக்கட்டமாகவே அதாவது சமாதான முயற்சிகளுக்கான ஒரு அங்கீகாரமாகவே டோக்கியோ மகாநாட்டில் இலங்கைக்கு பெருமளவிலான நிதி உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தது.

இதனுடன் இணைந்த சுவாரஷ்யமான இன்னுமோர் விடயம் யாதெனில், முற்றிலும் இல்லாதிருந்த சர்வதேசக் கவனம் முற்றாக இலங்கை மீது திருப்பி விடப்பட்ட போது, உதவியாக இருந்திருக்க வேண்டிய அது உபத்திரவமாக மாறிவிடுமோ என்கின்ற அச்சத்தை தோற்றுவித்திருந்தமையாகும். இங்கு அதிகரித்து வருகின்ற சர்வதேச சமூகத்தின் அழுத்தம் பற்றிய தமது அதிருப்தியை விடுதலைப் புலிகள் அண்மையில் வெளிப்படையாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் குறிப்பிடத்தக்கது யாதெனில், அண்மைக் காலங்களில் இலங்கையில் அதிகரித்து வருகின்ற ஜப்பானின் செயற்பாடுகள், அதிகரித்து வரும் சர்வதேசத் தலையீட்டின் ஒரு பரிமாணமே என்பதாகும். அவ்வகையில் இலங்கையில் ஜப்பானின் தற்கால செய்பாடுகளுடன் தொடர்புடைய சில பரிமாணங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நோக்கம்

ஒரு இன மோதலில் தீர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு நாடு அல்லது ஒரு நிறுவனம் தலையிடுகின்ற போது எழுகின்ற முதலாவது கேள்வி, குறிப்பிட்ட ஒரு நாடு அல்லது நிறுவனம் ஏன் அத்தகைய தலையீட்டை மேற்கொள்கின்றது என்பதாகும்.

இத்தகைய கேள்வி ஒன்று முன்வைக்கப்படுகின்ற பொழுது அத் தலையீட்டில் உள் நோக்கம் எதுவுமில்லை எனக் கூறப்படுமாயின் அது நிச்சயம் தவறான பதிலாகவே அமையும். ஏனெனில், உள் நோக்கம் அற்ற மூன்றாந் தரப்பு தலையீட்டாளர் ஒருவர் நடைமுறையில் இருக்க முடியாது. அதாவது எல்லா மூன்றாம் தரப்பிற்கும் உள் நோக்கங்கள் நிச்சயம் காணப்படும். ஆயினும், உள் நோக்கங்கள் யாவும் தீமையானவையாக இருக்க வேண்டும் என்கின்ற நிபந்தனை எதுவுமில்லை. உதாரணமாக சுய விளம்பரம், ஒரு நோபல் சமாதானப் பரிசு போன்ற காரணிகளுக்காகக் கூட சில சந்தர்ப்பங்களில் மூன்றாந் தரப்பினர் இன மோதல்களில் தலையிடுவதுண்டு. எனினும், மூன்றாந் தரப்பின் உள் நோக்கம் மோதற் தரப்பினரது நலன்களுக்கு எதிரானதாக இருப்பின் அத்தகைய தலையீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டும். மாறாக மூன்றாந் தரப்பு ஒன்று உதாரணமாக, நோபல் சமாதானப் பரிசைப் பெற்றுக் கொள்வதற்காக சமாதான முயற்சிகளில் ஈடுபடுமாயின் அது மோதல் தரப்பினருக்குப் பாரிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தப் போவதில்லை.

ஜப்பானைப் பொறுத்தவரை, அது சர்வதேச அரங்கில் தனது பொருளாதார வல்லமையின் காரணமாக முக்கியமான இடத்தைப் பிடித்துக் கொண்ட ஒரு நாடு மட்டுமன்றி, இதுவரை காலமும் வறிய மூன்றாம் உலக நாடுகளுக்கு தாராளமாக பொருளாதார உதவிகளையும் வழங்கி வந்துள்ளது. உதாரணமாக இலங்கையையே எடுத்துக் கொள்வோமாயின், கடந்த கால் நூற்றாண்டில் இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் பிரதானமான நாடாக ஜப்பான் மாற்றமடைந்துள்ளது. ஜப்பானின் தாராள குணத்தைப் பறை சாற்றும் வகையில் பல அரசாங்க நிறுவனங்களும் (ரூபவாஹினி, ஜயவர்தனபுர வைத்தியசாலை) அபிவிருத்தித் திட்டங்களும் காணப்படுகின்றன.

இவ்விதம் ஜப்பான் மூன்றாம் உலக நாடுகளுக்கு தாராளமாக நிதியுதவி அளித்துள்ள போதும், ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாதிருக்கின்ற ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து வந்துள்ளது. இக் கொள்கை சர்வதேச, குறிப்பாக அரசியல் விவகாரங்களில் தீவிரமாகப் பங்கு கொள்ளாத ஒரு செயற்பாட்டு வடிவமாக வெளிப்பட்டுள்ளது. ஜப்பான் சர்வதேச விவகாரங்களில் தலையிட்டுள்ள சந்தர்ப்பங்களிலும் கூட அதன் பங்கு பெருமளவிற்கு நிதியுதவி அளிக்கின்ற அளவில் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. இதன் காரணமாகவே ஒரு பொருளாதார வல்லரசாக இருந்தும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவம் இன்மை பற்றி அது பெரிதும் அலட்டிக் கொண்டிருக்கவில்லை. அதேசமயம் இந்தியா போன்ற நாடுகள் பாதுகாப்புச் சபை நிரந்தர ஆசனம் பற்றி அதீத அக்கறை செலுத்தி வந்துள்ளன.

இருப்பினும், அண்மைக் காலங்களில் ஜப்பானின் வெளி விவகாரக் கொள்கையில் பாரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. அதன் அடிப்படை ஜப்பான் சர்வதேச அரங்கில் நியாயமான பங்களிப்பைச் செலுத்த வேண்டும் என்கின்ற விருப்பம் ஆகும். தற்போது ஜப்பான் ஒரு பொருளாதார வல்லரசு என்கின்ற அந்தஸ்தை நிலைநிறுத்த முற்பட்டுள்ளதுடன், முக்கிய சர்வதேச விவகாரங்களில் தீவிர ஈடுபாட்டையும் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது.சர்வதேச விவகாரங்களில் நியாயமான பங்குபற்றுதல் என்பது தனது சொந்தப் பிராந்தியத்தில் இருந்து தொடங்கப்படுவதே புத்திசாலித்தனமானது என்பதால் ஆசியக் கண்டத்தின் விவகாரங்களில் ஜப்பான் முன்னரிலும் தீவிரமாகப் பங்குபற்றத் தொடங்கியுள்ளது. இதன் ஒரு பகுதியே இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஜப்பானின் புதிய ஈடுபாடாகும். அவ்வகையில் ஜப்பானின் நோக்கங்கள் ஒரு வகையில் இலங்கை இன மோதல் தரப்பினரின் நலன்களுக்கு எதிரானது அல்ல என்பது மகிழ்ச்சிக்குரியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை

இலங்கை இன மோதல் தீர்விலும், குறிப்பாக நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் ஜப்பான் போன்ற நாடுகளின் பங்களிப்பு மிக அவசியமானது. ஏனெனில், தற்போதுள்ள சமாதான முயற்சிகளின் பயனாக தீர்வு ஒன்று அடையப்படுமாயின் உடனடி நிலையில் நாம் இரண்டு பிரதான பிரச்சினைகளை எதிர் நோக்கலாம் (1) தீர்வை நடைமுறைப்படுத்தல் (2) யுத்தத்தின் பின்னரான மீள்கட்டமைப்பு.

முதலாவது அம்சத்தைப் பொறுத்தவரை அது நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் நாம் வரலாற்றில் இருந்து கற்ற பாடம் யாதெனில் இங்கு ஒப்பந்தங்களை அடைந்துகொள்வது கடினமானது அல்லது மாறாக நடைமுறைப்படுத்தலே கடினமானது என்பதாகும். இங்கு பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம் போன்ற பலவற்றை நாம் நினைவு கூற முடியும்.

எனவே இம்முறையும் நடைமுறைப்படுத்தல் என்பது பெரும் பிரச்சினைக்குரியதாக இருக்கும். இப்பொறுப்பு மோதற் தரப்பினரையே சாருமாயின் அது பலவீனமான ஒரு கட்டமைப்பாகவே இருக்கும். எனவே இம்முறை ஆகக் குறைந்தது நடைமுறைப்படுத்தலை உத்தரவாதப்படுத்தவாயினும் சர்வதேச கட்டமைப்பு ஒன்றை நாடவேண்டியிருக்கும்.

இரண்டாவது, யுத்தத்தின் பின்னரான மீள் கட்டமைப்பு என்பதும் மிக முக்கியமானதாக அமையும். சமாதானம் ஏற்பட்டவுடன் மக்கள் மட்டுமன்றி யுத்தத்தில் நேரடியாக ஈடுபட்ட இராணுவத்தினரும், போராளிகளும் மிக விரைவாக இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பக் கூடிய வகையில் இயலுமையுடைய மீள் கட்டமைப்புத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம். மீள் கட்டமைப்பில் ஏற்படக் கூடிய தாமதம் நாட்டை மீண்டும் யுத்தப் பாதைக்கு இட்டுச் செல்வதாக அமையக்கூடும். எனவே மீள் கட்டமைப்பு என்பது அவசரமானதாக இருக்கும் என்பது மட்டுமன்றி பெருந்தொகை நிதி வளத்தை வேண்டி நிற்பதாக இருக்கும். அத்தருணத்தில் ஜப்பான் போன்ற வளமுடைய நாட்டின் பங்களிப்பு மிகப் பயனுடையதாயமையும்.

தற்போதைய நிலையில் நோர்வே சமாதான முயற்சிகளுக்கான மத்தியஸ்தராக அல்லது அனுசரணையாளராகச் செயற்பட்டு வருகின்றது. இம் முயற்சிகளில் நோர்வே தனித்தே ஈடுபட்டுள்ளது. எனினும் தீர்வு ஒன்று பேச்சுவார்த்தை மூலம் அடையப்படுமாயின் அதனை காத்திரமான ஒரு மட்டத்தில் தக்கவைத்துக் கொள்வதற்கும், நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் நோர்வேயின் தனியான முயற்சி போதுமானதாக இராது. அப்பொழுது சர்வதேச சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களது உதவி பெரும் பயனுடையதாய் அமையும். அத்தகைய ஒரு நிலையில் ஜப்பான் போன்ற நாடுகளின் பங்களிப்பு பெறுமதியுடையதாய் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக இந்நிலை எமக்கு ஏற்கனவே ஏற்பட்டுள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதில் நோர்வே ஒரு அனுசரணையாளராக தனித்தே செயற்பட்டிருந்தது. எனினும் அதனைக் கண்காணிக்க ஏனைய நாடுகளின் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு நோர்டிக் நாடுகளின் உறுப்பினர்களைக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

சிக்கல்

எனவே ஜப்பானின் ஈடுபாடும், தலையீடும் ஒரு மட்டத்தில் எமக்கு உதவிகரமானதாக அமையப் பெருமளவான சாத்தியம் உண்டு. அதே சமயம் அது நடைமுறை ரீதியான சிக்கல்கள் சிலவற்றைத் தோற்றுவிக்கக் கூடிய சாத்தியமும் உண்டு.

அவற்றுள் பிரதானமானது இலங்கை மோதல் பற்றிய ஜப்பானின் புரிந்துணர்வும், மோதலில் ஈடுபட்டுள்ளோரின் தேவைகள் தொடர்பிலான அதன் அனுதாபமும் ஆகும். இதுவரை மேற் கொள்ளப்பட்டுள்ள ஜப்பானின் செயற்பாடுகளின் அடிப்படையில் நோக்குகையில் ஜப்பான் இவ்விடயங்களில் பலவீனமான ஒரு நிலையில் உள்ளது போன்றே தோன்றுகின்றது.

முதலாவது, ஜப்பான் இயல்பாகவே பொருளாதார அபிவிருத்தி, புனருத்தாரணம் ஆகியவற்றை மிக அடிப்படையானவையாகக் கருதுகின்றது. எனவே அபிவிருத்திக்கான நிதி வழங்கப்படுகின்ற பொழுது சமாதானத்தை ஏற்படுத்துவது சாத்தியமானது எனக் கருதுகின்றது. அதாவது பணத்தாலடிக்கலாம் என ஜப்பான் கருதுவதாகத் தோன்றுகின்றது. அத்தகைய அபிப்பிராயம் இருக்குமாயின் அது யதார்த்தத்தை புரிந்து கொள்ளாமையைப் புலப்படுத்துகின்றது. இதன் கருத்து அபிவிருத்தி, நிதி என்பவை முக்கியமற்றவை என்பதல்ல. மாறாக, இங்கு மோதலில் ஈடுபட்டுள்ளோர் தமது இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அபிவிருத்தி, நிதி என்பவற்றை இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் புறக்கணித்து வந்துள்ளனர். என்வே, மோதலில் ஈடுபட்டுள்ளோர் அபிவிருத்தி, நிதி என்பவற்றுக்காக உடனடியாக தமது மனோபாவங்களை மாற்றிக் கொள்வதென எதிர்பார்ப்பது தவறான நடத்தைகளுக்கு வழிவிடலாம்.

இத்தகைய ஒரு நிலையே விடுதலைப் புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ள மறுக்கின்ற போது ஜப்பான் காலக்கெடு விதிக்கின்ற நிலையைத் தோற்றுவித்திருந்தது. இவ்விதம் ஜப்பான் காலக்கெடு விதித்தமை பேச்சுவார்த்தைகள் முறிந்து விடுமோ என்கின்ற அளவிற்கு பதற்றத்தைத் தோற்றுவித்திருந்ததுடன், மோதலில் ஈடுபட்டுள்ளோரின் தேவைகள் தொடர்பில் ஜப்பானின் அனுதாபமற்ற பண்பை வெளிப்படுத்தியிருந்தது. அது மற்றுமோர் நிலையில் ஜப்பான் தனது கலாசார நிலையில் மாறாதிருக்கின்ற (நேரத்திற்கு வேலை செய்கின்ற) இறுக்க நிலையை வெளிப்படுத்தி இருந்தது. மாறாக வெற்றிகரமான ஒரு அனுசரணையாளர் இதிலும் அதிகமான விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்ளக் கூடியவராக இருந்திருப்பார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அத்துடன் குறிப்பாக ஜப்பானின் பங்கு யாது என்பது பற்றி பெருமளவான தெளிவின்மைகள் காணப்படுகின்றன. நோர்வேயைப் போன்றே ஜப்பானும் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவரை நியமித்துள்ளது. அத்துடன் யசூசி அகாசி மோதலுடன் தொடர்புடைய தரப்பினரைச் சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிவதுடன் அவற்றை மற்றத் தரப்பினருக்குத் தெரியப்படுத்துகின்ற செயற்பாட்டையும் மேற்கொண்டு வருகின்றார். அவ்வகையில் நோக்குகையில் அகாசி ஏற்கனவே ஒரு அனுசரணையாளர் போன்று அல்லது மத்தியஸ்தர் போன்று செயற்பட ஆரம்பித்துள்ளார். இதன் காரணமாக ஜப்பான் உயர் மட்ட அரசியல் பேச்சுவார்த்தைகளிலும் ஒரு அனுசரணையாளராகச் செயற்பட விருப்பம் கொண்டுள்ளது போன்று தோன்றுகின்றது. அவ்வாறாயின் நோர்வேயின் அந்தஸ்து, நிலை யாது? அல்லது பேச்சுவார்த்தைகளில் அனுசரணை இரு நாடுகளினாலும் இணைந்து மேற்கொள்ளப்படுமா போன்ற கேள்விகள் தோற்றம் பெறும்.

எனினும், தற்போதைய நிலையில் இருந்து நோக்குகையில், தலையீடு தொடர்பில் நோர்வேயிற்கும் ஜப்பானுக்கும் இடையில் அதிகளவான ஒருங்கிணைப்பு இருப்பதாகத் தெரியவில்லை. இரு தரப்பினரும் தத்தமது செயற்பாடுகளில் தனித்தனியே ஈடுபட்டுள்ளது போன்றே தோன்றுகின்றது. அவ்விதமாயின் இவ்விரு நாடுகளிடையேயும் அணுகுமுறை தொடர்பில் முரண்பாடுகள் ஏற்பட இடமுண்டு. எனவே இவ்விரு நாடுகளும் தமது செயற்பாடுகள் தொடர்பில் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்வதும், ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதும் உகந்தது. அவ்வாறில்லாமல் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக நோர்வேயிற்கும் ஜப்பானுக்கும் இடையே தோன்றக்கூடிய முரண்பாடுகளைத் தீர்க்க இலங்கை ஒரு மூன்றாந் தரப்பு அனுசரணையாளராகச் செயற்பட வேண்டியிருக்கும்.

(21. 09 . 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

சமாதான முயற்சிகளின் முதலாவது சாவு மணி?

கடந்த வாரம் இடம்பெற்ற பிரதானமான அரசியல் நிகழ்வு தேசாபிமான தேசிய இயக்கம் என்கின்ற போர்வையில் ஜனதா விமுக்தி பெரமுன ஏற்பாடு செய்திருந்த பாத யாத்திரையாகும். சமாதான முயற்சிகளின் காரணமாக நாடு பிளவுபட்டு விடுவதைத் தடுப்பதற்காகவே இப் பாத யாத்திரையை ஏற்பாடு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இதனை இதற்கு முன்னரும் எங்கோ கேட்டது போன்ற ஓர் உணர்வு, ஆம் நாட்டைக் காப்பதற்காக கண்டியில் இருந்து பாத யாத்திரை நடத்தப்படுவது இது முதற் தடவை அல்ல. உண்மையில் கண்டியில் இருந்து பாத யாத்திரை நடாத்தும் "பார்மூலா" ஜே.வி.பி. யுடையதே அல்ல. அது ஐக்கிய தேசியக் கட்சியினுடையதாகும். அது இப்பொழுது அதற்கு எதிராகவே பிரயோகிக்கப்படுகின்றது. வினை விதைப்பவன் வினை அறுப்பான்.

ஜே.ஆர். இன் பாத யாத்திரை

1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டம் என்கின்ற கோஷத்தின் அடிப்படையில் தேர்தலில் வெற்றியீட்டினார். மிக விரைவாகவே சிங்களம் (மட்டும்) இலங்கையின் உத்தியோகபூர்வ மொழியாக்கப்பட்டது. எனினும் சமஷ்டிக் கட்சியின் போராட்டங்கள் காரணமாக, சமஷ்டிக் கட்சித் தலைவர் செல்வநாயகம் அவர்களுக்கும் பண்டாரநாயக்கவிற்கும் இடையில் ஓர் புரிந்துணர்வு ஏற்பட்டிருந்தது. இப் புரிந்துணர்வின் அடிப்படையில், பிராந்திய சபைகளை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தம் ஒன்று (பண்டா - செல்வா ஒப்பந்தம்) இரு தலைவர்களுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டிருந்தது.

அப்போது எதிர்க் கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி இந்த ஒப்பந்தத்தையும், அதன் மூலம் மேற்கொள்ளப்படவிருந்த அதிகாரப் பரவலாக்கலையும் எதிர்த்திருந்தது. இது ஐ.தே.கட்சியின் கொள்கை என்பதிலும் பார்க்க ஜே.ஆர்.இன் கோட்பாடு என்றே கூறப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது ஐ.தே.கட்சியின் பிரதான தலைவர்களாயிருந்த டட்லி சேனநாயக்க, ஜோன் கொத்தலாவல போன்றோருடன் ஒப்பிடுகையில் இரண்டாம் மட்டத்திலான ஒரு தலைவராக மட்டுமே விளங்கியிருந்த ஜே.ஆர். பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கான எதிர்ப்பை தனது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொண்டிருந்தார். எனவே, பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கான ஐ.தே.கட்சியின் கொள்கைள் ஜே.ஆர். இனாலேயே வடிவமைக்கப்பட்டு உருக்கொடுக்கப்பட்டிருந்தன.

அவ்வகையில் ஒப்பந்தத்திற்கு எதிராக பாரிய ஒரு எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ள விரும்பிய ஜே.ஆர். மகா சங்கத்தின் ஆசீர்வாதத்துடன் கண்டியிலிருந்து கொழும்புக்கு பாரிய பாத யாத்திரை ஒன்றைத் திட்டமிட்டார். 1957 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடந்தேறிய ஜே.ஆர்.இன் பாத யாத்திரைக்கும், ஜே.வி.பி. யின் பாதயாத்திரைக்குமிடையில் சில பாரிய ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

இனவாதம்

ஜே.வி.பி. தனது தேசாபிமான தேசிய இயக்கத்தை ஒரு மக்கள் இயக்கமாக எடுத்துக்காட்ட முற்படுகின்ற போதும், அது உண்மையில் சிங்கள அதி தீவிரவாத தேசியவாதத்தை ஆதரிப்பவர்களையே பெரிதும் கொண்டிருந்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதனால் இப்பாதயாத்திரை மூலம் சிங்கள இனவாதத்தின் புதிய தலைமைத்தவத்தை ஜே.வி.பி. ஏற்றுக் கொண்டுள்ளது என்கின்ற அடிப்படையில் மகஜன எக்சத் பெரமுன, சிஹல உறுமய போன்ற ஏனைய சிறிய இனவாதக் குழுக்களை தனது தலைமையின் கீழ் செயற்பட நிர்ப்பந்தித்துள்ளது. அத்துடன் அஞ்சான் உம்மா போன்ற சில முஸ்லிம் அரசியல் வாதிகள் பேரணியின் முன் வரிசையில் காணப்பட்டபோதும் இது ஒரு சிங்கள இயக்கம் என்பதில் சந்தேகமில்லை.

எவ்வாறாயினும், இப்போராட்டத்தில் ஜே.வி.பி.யின் அடிப்படை அல்லது பிரதான ஆயுதம் சிங்கள மக்களின் நாடு பிளவுபட்டுவிடும் எனும் அச்சம் ஆகும். இப்பாதயாத்திரை பொதுவாக சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும், குறிப்பாக இடைக்கால நிர்வாக ஏற்பாட்டிற்கும் எதிரானது என்கின்ற வகையில், இவை இரண்டும் இறுதி நிலையில் நாட்டைப் பிளவுபடுத்திவிடும் என வாதிடுகின்றது. எனவே "தாய்நாட்டைப் பாதுகாப்பதற்காக" அரசாங்கத்தைக் கவிழ்ப்பது அவசியம் என ஜே.வி.பி. வாதிடுகின்றது, எனவே, சிங்கள மக்களின் அச்சம்தான் ஜே.வி.பி.யின் பலம், பலவீனம் எல்லாம்.

ஒரு வகையில் இது ஜே.ஆர். இடமிருந்து ஜே.வி.பி. கற்றுக் கொண்ட பாடமே ஆகும். இவ்விரு கண்டி பாதயாத்திரைகளுக்கும் இடையிலான ஒருமைப்பாடுகள் ஆச்சரியப்பட வைப்பனவாக உள்ளன. அன்று ஜே.ஆரும், பண்டா - செல்வா ஒப்பந்தம் தனித் தமிழ் நாட்டிற்கான முதற்படி மட்டுமே என்றும் இறுதி நிலையில் அது நாட்டைப் பிளவுபடுத்தி விடும் என்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலேயே தனது வியூகங்களை அமைத்திருந்தார். உண்மையில் இன்று ஜே.வி.பி.யும், சிஹல உறுமயவும் பாடுகின்ற எல்லா இனவாதப் பாட்டுகளும் ஜே.ஆரினால் எடுத்துக் கொடுக்கப்பட்டவையே என்பது ஜே.ஆரின் ஆரம்பகால அரசியல் வரலாற்றை ஆராயும் போது தெளிவாகும்.

அவ்வகையில் ஒரு அதிதீவிர மார்க்சிச இயக்கம் அல்லது அவ்விதம் கூறிக் கொள்கின்ற இயக்கம் எவ்வளவு சிறப்பாக ஒரு அதிதீவிர முதலாளித்துவக் கட்சியிடம் இருந்து படிப்பினை பெற்றுக்கொள்ள முடிகின்றது என்பது ஆச்சரியப்படத்தக்கது. ஏனெனில் சாதாரண நிலையில் மார்க்சிசமும் முதலாளித்துவமும் இணங்கக்கூடியவை அல்ல. இலங்கையில் இவை இணங்கக் கூடியவையாக இருப்பின் அது அரசியல் சந்தர்ப்பவாதமே அன்றி வேறில்லை.

புதிய தலைமை

ஜே.ஆர். இன் கண்டி பாதயாத்திரையின் இன்னுமோர் சிறப்பம்சம் அது ஜே.ஆர். இன் எழுச்சியின் ஆரம்பத்தைச் சுட்டிநின்றமை ஆகும். இதுவரை காலம் ஜே.ஆர்.ஐ.தே.கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்களில் ஒருவராகவே இருந்தார். கண்டி பாதயாத்திரை போன்ற தீவிர சிங்கள தேசியவாத, மற்றும் ஐ.தே.கட்சிகளு இதுவரை பரிச்சயமில்லாத போராட்ட முறைமையை அறிமுகப்படுத்திய போது, டட்லி சேனநாயகா, ஜோன் கொத்தலாவல போன்ற பிரதான தலைவர்கள் அதில் தீவிர பங்கெடுத்துக் கொண்டிருக்கவில்லை. எனவே, யாத்திரைக்கு பூரணமான தலைமைத்துவத்தை வழங்க வேண்டிய பொறுப்பு ஜே.ஆரைச் சார்ந்ததாக அமைந்தது. இது ஜே.ஆரை இலங்கை அரசியலில் முன்னிலைக்குக் கொண்டு வந்திருந்ததுடன், பிற்பட்ட காலங்களில் ஐ.தே.கட்சியின் தலைமைத்துவத்திற்காக சேனநாயக்கவிற்கும், ஜே.ஆர். இற்கும் இடையில் ஏற்பட்ட போட்டியில், மக்கள் ஆதரவுடைய ஒரு தலைவன் என்கின்ற ரீதியில் ஜே.ஆர், இன் நிலைமையை பலப்படுத்தியிருந்தது. இத் தலைமைத்துவப் போட்டியில் ஜே.ஆர். இன் வெற்றி இறுதியில் அவரை இந்நாட்டின் ஜனாதிபதியாக அதாவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக தரமுயர்த்தியதனால், ஜே.ஆர்.இன் கண்டி பாதயாத்திரை இலங்கை அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

அதேபோன்று தற்போதைய கண்டி பாதயாத்திரையும் இலங்கையின் பிற்கால அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இயலுமையுடையது எனக் கருதப்படலாம். குறிப்பாக இம்முறையும் பாத யாத்திரை புதிய அரசியல் தலைமைத்துவத்தை சுட்டி நிற்பது போன்று தெரிகின்றது. இம்முறை இந்த எழுச்சியின் மூலம் பயன்பெறப் போவது ஜே.வி.பி.யும் அதன் கொள்கை பரப்பு செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய விமல் வீரவன்சவுமே ஆகும். குறிப்பாக இப்பாதயாத்திரை வீரவன்சவின் எழுச்சியின் ஆரம்பமாக அமைய இடமுண்டு. ஜே.வி.பி.யினுள் இருக்கின்ற ஏனைய தலைவர்கள் குறிப்பாக ரில்வின் சில்வாவை இரண்டாம் தரத்திற்கு தள்ளி, வீரவன்ச ஏற்கனவே முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டுள்ளது போன்று தோன்றுகின்றது. வீரவன்சவின் தந்திரோபாயங்களையும் உரைகளையும் நோக்குகின்ற போது, அவர் 1950 களில் ஜே.ஆர். பின்பற்றிய அதே பாணியைப் பின்பற்றுவது தெளிவாகின்றது. அதே போன்று எவ்விதம் சிங்களம் மட்டும் கொள்கைக்கு ஆதரவான, பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கு எதிரான சிங்கள தீவிர தேசியவாதிகள் ஜே.ஆர். எழுச்சிக்கு அடிப்படையாக அமைந்தனரோ, அதே போன்று இம்முறை இடைக்கால நிர்வாக சபை, சமாதானப் பேச்சுவார்த்தை என்பவற்றிற்கு எதிரான நவீன சிங்கள தீவிர தேசியவாதிகள் வீரவன்சவின் எழுச்சிக்கு துணைபுரியக் கூடும்.

சாவு மணி

அத்துடன், ஜே.ஆர். பாதயாத்திரை உடனடியாக பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமையாவிடினும், அதன் முதலாவது சாவு மணியாக அமைந்தது என்பதில் சந்தேகமில்லை. அதேபோன்று ஜே.வி.பி.யின் பாத யாத்திரையும் கூட உடனடி நிலையில் இலங்கை அரசியலில் பாரிய மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. இதன் கருத்து அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய இயலுமை இப்பாத யாத்திரைக்கு இருக்கவில்லை என்பது அல்ல.

ஒரு வகையில் நோக்குகையில் நாம் விரும்பியோ விரும்பாமலோ இப்பாத யாத்திரை வெற்றிகரமான ஒன்று என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம். ஜே.ஆரின் யாத்திரையுடன் ஒப்பிடுகையில் இந்த யாத்திரை கண்டி முதல் கொழும்பு வரை எவ்வித சோர்வோ அன்றி தடங்கல்களோ இன்றி நடந்தேறியுள்ளது. ஆனால், ஜே.ஆர். யாத்திரை கொழும்பை வந்தடைவதே கடினமானதாகக் காணப்பட்டது. உண்மையில் ஜே.ஆர். தன் சகாக்களுடன் தனித்தே கொழும்பை வந்தடைய வேண்டி இருந்தது.

எனவே, ஜே.வி.பி. இப்பாதயாத்திரைக்காகக் கொண்டு வரக் கூடியதாக இருந்த அல்லது கவரக் கூடியதாயிருந்த மக்கள் தொகை பிரமிப்பூட்டுவதே ஆகும். அதுவே, ஜே.வி.பி.யைக் பொறுத்தவரை ஒரு வெற்றியாகக் கருதப்பட வேண்டும். ஆனால், துரதிஷ்ட வசமாக இப் பெரும் கூட்டம் சமாதான முயற்சிகளுக்கு எதிரானது என்பதே கவலைக்குரியது.

சு.க. பிளவு

ஜே.வி.பி. தந்திரோபாயத்தின் வெற்றி யாதெனில், உடனடி நிலையில் அது சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தியுள்ளது என்பதாகும். சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.யிற்கும் இடையிலான கூட்டிற்கான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த போது, சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எவரும் கூட்டை ஆதரித்துப் பேசவோ அல்லது ஜே.வி.பி கூட்டங்களில் கலந்து கொள்ளவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது என ஜனாதிபதி கட்டளை இட்டிருந்தது நினைவிருக்கலாம். எனினும் இக் கட்டளை சுதந்திரக் கட்சியின் முன்னணி உறுப்பினர்கள் சிலரின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. எனவே, ஜே.வி.பி.யின் பாத யாத்திரையில் கலந்து கொள்ள தாம் அனுமதிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதியின் மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் காரணமாக ஜனாதிபதி தனது கட்டளையை மென்மைப்படுத்த வேண்டியதாயிற்று.

எனவே, தேசப்பற்றினடிப்படையில் அனுர பண்டாரநாயக்க, மங்கள, சமரவீர, மௌலானா, அர்ஜுன ரணதுங்க போன்ற சுதந்திரக் கட்சியின் முன்வரிசை உறுப்பினர்கள் பலரும், பெருந் தொகையான உள்ளூராட்சி நிறுவனங்களின் சு. கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர். இது உண்மை நிலையில் ஜனாதிபதியின் வீழ்ச்சியடைந்து செல்லும் செல்வாக்கையும், ஜே.வி.பி.யின் சுதந்திரக் கட்சி மீதான வளர்ச்சியடைந்து வரும் பலத்தையும் காட்டி நிற்கின்றது.

அதேசமயம், சுதந்திரக் கட்சியின் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, தென்னிலங்கையில் தனது சொந்த எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்திக் கொண்டிருந்தார். ராஜபக்ஷ, ஜே.வி.பி. பாதயாத்திரையில் கலந்து கொள்ளாமையும், ராஜபக்ஷவின் எதிர்ப்பு ஊர்வலத்தில் அனுர பண்டாரநாயக்க, மங்கள சமரவீர போன்ற ஜே.வி.பி அனுதாபிகள் கலந்து கொள்ளாமையும் சுதந்திரக் கட்சியினுள்ளான தெளிவான பிளவை எடுத்துக் காட்டுகின்றன.

இப்பிளவு ஐ.தே.கட்சிக்கான ஒரு இலாபம் என்பதிலும் பார்க்க, ஜே.வி.பி. க்கான ஒரு வெற்றி எனக் கருதப்பட வேண்டும். ஏனெனில், ஒன்று, ஜே.வி.பி.யின் அழுத்தம் காரணமாக ஜே.வி.பி.யும் சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைய வேண்டும். அல்லது ஜே.வி.பி. இற்கு நிகரான கடினப் போக்கை சுதந்திரக் கட்சி இனப் பிரச்சினை தொடர்பில் பின்பற்ற வேண்டும். இவை இரண்டுமே சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எதிர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாகும். இரண்டு, மேற்கூறிய இரண்டும் இடம் பெறாத படசத்தில் சுதந்திரக் கட்சியினுள்ளான கடினப் போக்காளர்களின் ஆதரவு ஜே.வி.பி. இற்கு மாற்றமுறும். அது ஜே.வி.பி.யின் பாராளுமன்ற ஆசனங்களை அடுத்த தேர்தலில் அதிகரிக்க உதவலாம். எனவே, ஒரு வகையில் நோக்குகையில் ஜே.வி.பி.யின் கண்டி - கொழும்பு பாத யாத்திரை சமாதான முயற்சிகளுக்கு அடிக்கப்பட்ட முதலாவது சாவு மணியாக இருப்பதற்கு பெருமளவான சாத்தியங்கள் உள்ளன

(05. 10. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

புலிகளின் இடைக்கால சபை யோசனைகளும் தென்பகுதியின் நெருக்கடியும்

புலிகளின் இடைக்கால சபை யோசனைகளைத் தயார் செய்வதற்கான பாரிஸ் கலந்துரையாடல்கள் முடிவடைந்தவுடன் இம்மாத நடுப்பகுதியில் யோசனைகள் வெளியிடப்படுமென உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்களில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. இத்தகைய தொனியில் புலிகளின் தலைவர்கள் வன்னியில் கருத்து வெளியிட்டிருந்ததுடன், குறிப்பாக நோர்வே அரச பிரதிநிதிகளும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இக்கருத்தைக் கூறிவந்துள்ளனர். இதன் காரணத்தினாலேயே பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான சூழ்நிலைகள் மீண்டும் தோன்றியிருப்பதாக நம்பப்பட்டது.

எனினும் யோசனை நகலில் மேலதிக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்கின்ற காரணத்தின் அடிப்படையில் மீண்டுமோர் முறை தமது நிபுணர்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமெனக் கூறி புலிகள் டப்ளினில் (அயர்லாந்து) கூடினர். தற்போது டப்ளின் கலந்தாலோசனைகளை முடித்துக் கொண்டு வேறு சில ஐரோப்பிய பயணங்களை மேற்கொண்டுள்ளனர். புலிகளின் குழு நாடு திரும்பிய சில நாட்களினுள் யோசனைகள் முன்வைக்கப்படுமென மீண்டும் கூறப்படுகின்றது. எனினும், புலிகளின் குழு நாடு திரும்பியவுடன் இம்முறை நிச்சயமாக யோசனைகள் வெளியிடப்படும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. புலிகள் இராணுவத் தாக்குதல்களில் எவ்விதம் "திடீர்" தந்திரோபாயங்களைக் கையாண்டனரோ, அதே போன்றதொரு தந்திரோபாயத்தை அரசியற் பேச்சுவார்த்தைகளிலும் கடைப்பிடிப்பது தெளிவாகின்றது.எனினும், இதன் மூலம் தெளிவாகின்ற பிரதான விடயம்

(1) புலிகள் தென்பகுதியின் அரசியற் கணிப்பீடுகள் அல்லது சர்வதேச எதிர்' ர்ப்புகளுக்கு ஏற்ப அன்றி தமது சொந்தக் கணிப்பீடுகள் மற்றும் தேவைகளின் அடிப்படையிலேயே செயற்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை சமர்ப்பிப்பதிலோ அல்லது அத்தகைய ஒரு அலகை நிறுவிக் கொள்வதிலோ எவ்வித அவசர நிலையிலும் அவர்கள் காணப்படவில்லையென்பதும். இது ஒரு இழுத்தடிப்பு தந்திரோபாயம் என சில மட்டங்களிலிருந்து விமர்சிக்கப்படுவதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

சர்வதேச அபிப்பிராயம்

ஆயினும், இவ்வித அவசரமற்ற அணுகுமுறைக்கான பிரதானமான காரணியாக சுட்டிக் காட்டப்படுவது தம்மட்டில் உள்ள சர்வதேச அபிப்பிராயம் பற்றி புலிகளுக்குள்ள அக்கறை ஆகும். இத் தாக்கம் அடிப்படை அற்ற ஒன்று அல்ல. கடந்த தசாப்தத்தில் புலிகள் இராணுவ வெற்றிகளில் அதீத அக்கறை கொண்டிருந்தமையால் தம்மீதான சர்வதேச அபிப்பிராயம் பற்றி போதிய அக்கறை கொண்டிருக்கவில்லை. மாறாக, இக் காலகட்டத்தில் அவர்களுக்கு எதிரான சர்வதேச அப்பிராயம் பெரிதளவு அதிகரித்து வந்துள்ளதுடன், இறுதி நிலையில் ஒரு பயங்கரவாத இயக்கமாகப் பல்வேறு நாடுகளில் அவர்கள் தடை செய்யப்படுவதற்கும் இட்டுச் சென்றிருந்தது. இது புலிகளின் இறுதி இலக்கில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இயலுமையுடையதாகவும் இருந்தது.

இதனுடைய கருத்து யாதெனில், ஒரு விடுதலைப் போராட்ட இயக்கம் தனித்து தனது ஆயுத பலத்தினால் மட்டும் சுதந்திரத்தை அடைந்து கொள்ள முடியாது என்பதாகும். அத்தகைய ஒரு போராட்டம் சர்வதேச ஆதரவு இன்றி வெற்றி பெறவே முடியாது என்கின்ற ஒரு நிலை புதிய உலக ஒழுங்கமைப்பில் ஏற்பட்டிருந்தது. ஒரு பிந்திய அபிவிருத்தி என்கின்ற வகையில் கிழக்குத் தீமோர் இதற்கான ஒரு சிறந்த உதாரணமாகும். உண்மை நிலையில் கிழக்குத் தீமோர் ஒரு சுதந்திர நாடாக உருவெடுப்பதில் அதற்குச் சார்பாக இருந்த சர்வதேச அபிப்பிராயம் மிகப் பிரதானமானதொரு பங்கை வகித்திருந்தது. இலங்கையுடன் ஒப்பிடுகையில் பலவீனமான ஒரு சுதந்திரப் போராட்டத்தைக் கொண்டிருந்த தீமோர் சர்வதேச அபிப்பிராயத்தின் காரணமாகவே தனியரசாக உருவாகக் கூடியதாய் இருந்தது.

இந்நிலையில் சர்வதேச அபிப்பிராயத்தின் முக்கியத்துவத்தை பிற்காலத்தில் அவர்கள் சரியாக உணர்ந்து கொண்டனர் எனக் கூறப்படலாம். எனவே, புலிகள் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதற்கான பல்வேறு காரணிகளில் ஒன்று, சர்வதேச அபிப்பிராயத்தை தமக்குச் சார்பாக மாற்றிக் கொள்வதாகும். குறிப்பாக பிரதானமான பல நாடுகளில் தமக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கிக் கொள்வது உயர் மட்டத்திலான ஒரு நோக்கமாக இருந்திருக்கலாம். இதற்கான ஒரு முதற்படியாகவே பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தம் மீதான தடை இலங்கையில் நீக்கப்பட வேண்டுமென்பதை அவர்கள் ஒரு நிபந்தனையாகவே முன்வைத்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, "சர்வதேச உறவு" ஒரு நோக்கமாக இருந்திருக்குமாயின், அதில் புலிகள் பெரிதளவு முன்னேற்றம் கண்டிருந்தனர் எனக் கூறப்படவேண்டும். சர்வதேச ரீதியில் மிக உயர் மட்டத்திலான சந்திப்புகள் வன்னியிலே கூட இடம் பெற்றிருந்தன. அத்துடன் புலிகள் தமது சர்வதேசப் பயணங்களின் போது பல உயர்மட்ட அரசியல் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டிருந்தனர். இதற்கான ஒரு உதாரணம் அயர்லாந்து பாராளுமன்றம் போன்ற உயர் அரசியல் நிறுவனங்களுக்கும் கூட அவர்கள் அழைக்கப்பட்டிருந்தமையாகும்.

அமெரிக்கத் தடை

எனினும், இத்தகைய போக்கில் கடந்த வாரம் ஒரு பாரிய பின்னடைவு ஏற்பட்டிருந்தது என்றே குறிப்பிட வேண்டும். கடந்த வாரம் அமெரிக்கா தனது வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலை வெளியிட்ட போது விடுதலைப் புலிகளின் பெயர் மீண்டும் அப்பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது. இது புலிகளின் விருப்பத்திற்கு மாறான ஒரு செயற்பாடு என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஏனெனில், இம்முறை அமெரிக்க வெளிநாட்டு பயங்கரவாதிகள் பட்டியலிலிருந்து புலிகளின் பெயர் நீக்கப்பட்டிருக்குமாயின் அது அவர்களுக்குக் கிடைத்த ஒரு பெரும் வெற்றியாகக் கருதப்பட்டிருக்கும்.

யுத்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற - அல்லது இன்னும் முறிந்து விடாதிருக்கின்ற - ஒரு நிலையில் அமெரிக்கா மீண்டும் புலிகளின் பெயரைப் பட்டியலில் சேர்த்துக் கொண்டிருப்பது இலங்கை அரசாங்கத்துடனான அதன் இறுக்கமான உறவைக் காட்டுகின்றதே அன்றி புலிகளின் மீது அமெரிக்காவிற்கிருக்கின்ற நம்பிக்கையுடனோ அல்லது அவநம்பிக்கையுடனோ தொடர்புடையது அல்ல. ஒரு வகையில் நோக்குவோமாயின் புலிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டமையே வியப்புக்குரியது.

ஏனெனில், இவ்விதம் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான மூன்று நிபந்தனைகளில் முக்கியமானது, அக்குறிப்பிட்ட அமைப்பின் செயற்பாடுகள் "அமெரிக்க பிரஜைகளுக்கோ அல்லது அதன் தேசிய பாதுகாப்பு உட்பட தேசிய நலன்களுக்கோ அச்சுறுத்தலாய் அமைந்திருக்க வேண்டும்" என்பதாகும். ஆயினும், புலிகளின் நடவடிக்கைகள் எந்த ஒரு நிலையிலும் அமெரிக்க நலன்களுக்கு எதிராக அமைந்திருக்கவில்லையென்பது வெளிப்படையானது. அவ்வகையில் நோக்குகையில் புலிகளின் பெயர் பட்டியலிலிருந்து இம்முறை நீக்கப்படாதது வியப்பிற்குரியதல்ல. பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டமையும், இம்முறை நீக்கப்படாமையும் இலங்கை அரசுடனான அதன் உறவின் காரணமாக ஏற்பட்ட விளைவுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதச்சார்பற்ற பட்டியல்

அத்துடன் நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய இன்னுமோர் விடயம் யாதெனில் அமெரிக்க வெளிநாட்டு பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலிலிருந்து புலிகளின் பெயர் நீக்கப்படுவது நடைமுறையில் இலகுவாக இருக்கப் போவதில்லையென்பதாகும். ஏனெனில், புலிகள் போன்ற இஸ்லாம் சாராத இயக்கங்களின் பெயர்களை தொடர்ந்து பட்டியலில் வைத்திருப்பதில் அமெரிக்காவிற்குக் குறிப்பான நலன்கள் அல்லது நோக்கங்கள் உண்டு. இப்பட்டியலை உன்னிப்பாக அவதானிக்கின்ற எவருக்கும் புலப்படக்கூடிய ஒரு விடயம், இவற்றுள் மிகப் பெரும்பான்மையான இயக்கங்கள் மத்திய கிழக்கு சார்ந்த இஸ்லாமிய இயக்கங்கள் என்பதாகும். தமிழீழ விடுதலைப் புலிகள், ரியல் ஐ.ஆர்.ஏ., கொலம்பிய புரட்சிகர இராணுவம் போன்ற ஒரு சில இயக்கங்களே விதிவிலக்கானவையாகும்.

அமெரிக்காவின் சர்வதேசப் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரான ஒன்றே எனப் பொதுவாக நம்பப்படுகின்றமையினால், அது இஸ்லாமியருக்கு எதிரான யுத்தம் அல்ல என எடுத்துக்கூற அமெரிக்கா பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது. அத்தகைய ஒரு நிலையில் பயங்கரவாதப் பட்டியல் தனித்து இஸ்லாமிய இயக்கங்களை மட்டுமே கொண்டிருக்குமாயின் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் இஸ்லாமியருக்கு எதிரான யுத்தமே என்கின்ற நம்பிக்கை வலுப்பட்டுவிடும்.அவ்வகையில் விடுதலைப் புலிகள், ரியால் ஐ.ஆர்.ஏ. போன்ற இயக்கங்களின் இருப்பு அமெரிக்கப் பயங்கரவாதப் பட்டியலுக்கு ஒரு மதச்சார்பற்ற பண்பை வழங்குகின்றது. எனவே, விடுதலைப் புலிகள் போன்ற இஸ்லாம் சாராத இயக்கங்களின் பெயரைப் பட்டியலிலிருந்து நீக்குவது இலகுவாக அமைந்துவிடப் போவதில்லை. ஏனெனில், அது அமெரிக்க நலன் என்பதுடன் நேரடியாகத் தொடர்புபட்டதாகும்.

மாவீரர்தின உரை

இதற்குப் புறம்பாக புலிகள் தமது யோசனைகளை சமர்ப்பிப்பதைத் தாமதிப்பதற்கு இன்னுமோர் காரணமும் கூறப்படுகின்றது. அது புலிகளின் மாவீரர் வாரத்துடனும், அவர்களது தலைவரின் உரையுடனும் தொடர்புடையது. பிரபாகரனின் மாவீரர் தின உரை கொள்கை விளக்க உரை போன்றதொரு முக்கியத்துவத்தைப் பெற்றுவிட்டது. இவ்வுரையில் பிரபாகரன் தனது இயக்கத்தின் முக்கிய பல தீர்மானங்களை வெளியிடுவதை வழமையாகக் கொண்டுள்ளமையினால் இன்று உள்ளூர் ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாக மாவீரர் தின உரை மாற்றமடைந்துள்ளது. அவ்வகையில் புலிகளின் இடைக்கால நிர்வாக அலகிற்கான யோசனைகள் அதிமுக்கியத்துவம் வாய்ந்த அரசியல் அபிவிருத்தி என்பதனால் அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபாகரனின் மாவீரர் நாள் உரையில் வெளியிடப் புலிகள் விரும்புவதாகத் தென்பகுதியில் கூறப்படுகின்றது. எனவே, இது உண்மையாயின் புதிய யோசனைகளின் தாற்பரியங்களை அறிந்துகொள்ள நாம் கார்த்திகை இறுதி வரை காத்திருக்க வேண்டியிருக்கும்.

மேலும், யோசனைகள் வெளியிடப்பட்டு பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படுவதனால் அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடிய சர்வதேச உதவிகளை தாமதித்துக் கொள்ளல், தென்பகுதியின் அரசியல் போக்கைச் சரியாக நிர்ணயித்துக் கொள்ளல் போன்ற காரணிகளுக்காகவே புலிகள் தமது யோசனைகளைத் தாமதிக்கின்றனர் என்பது போன்ற பல்வேறு அபிப்பிராயங்கள் பரவலாக முன்வைக்கப்படுகின்றன.

நெருக்கடி

தாமதத்திற்கான உண்மையான காரணி எதுவாக இருப்பினும் ஐ.தே.கட்சி அரசாங்கம் அதனை ஒரு சாதாரணமான அம்சமாகக் காட்ட முயற்சிப்பது அரசியல் ரீதியில் சுவாரசியமானது. உண்மையில் புலிகளின் யோசனைகளைச் சமர்ப்பிப்பதிலான தாமதம் அரசாங்கத்தின் நலன்களுக்குச் சாதகமானதாகவே அமைந்துள்ளது. ஏனெனில் புலிகளின் யோசனைகள் முன்வைக்கப்படுகின்ற-பொழுது, உடனடியாகவோ அல்லது சற்றுத் தாமதமாகவோ அது தொடர்பில் ஏதாயினும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்படும். ஆயினும் அத்தகைய செயற்பாட்டில் ஈடுபடக்கூடிய அரசியல் பலம் தென்பகுதியில் அரசாங்கத்திற்குக் காணப்படவில்லை. எனவே உடனடியாக யோசனைகள் சமர்ப்பிக்கப்படாதிருப்பது அரசாங்கத்திற்கு உகந்தது என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக புலிகளின் யோசனைகள் மிகப் பரந்த அதிகாரங்களை வேண்டி நிற்பதுடன், புலிகளிடம் பெருமளவிலான கட்டுப்பாடு கையளிக்கப்பட வேண்டும் எனக் கோருவதற்குப் பெருமளவு சாத்தியமுண்டு. அத்தகைய யோசனையை அமுல்படுத்த முடியாத நிலையிலேயே அரசாங்கம் காணப்படும். எனவே யோசனைகள் சமர்ப்பிக்கப்படினும் கூட அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய யுக்தி யாதெனில் யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கூறி மேலும் காலத்தை இழுத்தடிப்பதாகும். எனவே யோசனைகள் முன்வைக்கப்பட்டு பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படுமாயின் அது அர்த்த புஷ்டியானதாக இருத்தல் வேண்டும் என்கின்ற அழுத்தம் பேச்சுவார்த்தைத் தரப்பினர் மீது இருத்தல் அவசியம்.

அத்துடன், புலிகளால் முன் வைக்கப்பட இருக்கும் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தின் மீதான நெருக்கடி ஒன்று தென்பகுதியில் அபிவிருத்தியடைந்து வருகின்றது. ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய போன்றவை இவ்வரசாங்கம் நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகக் கூறி அதிகரித்த வகையில் நடத்திவரும் போராட்டங்களுக்கு மேலாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் கொள்கைகளும், செயற்பாடுகளும் நாட்டைப் பிளவுபடுத்திவிடும் என்கின்ற வகையிலான ஒரு அபிப்பிராயத்தை ஜனாதிபதி திட்டமிட்ட வகையில் கட்டியெழுப்பி வருகின்றார். இத்தகைய ஒரு செயற்பாடு அரசாங்கத்தைக் கலைப்பதற்கான ஒரு தீர்மானத்தை ஜனாதிபதி மேற்கொள்ளும் பட்சத்தில் மிகப் பயனுடையதாய் இருக்கும். அவ்வகையில் புலிகளின் யோசனைகள் நாடு பிளவு பட்டுவிடும் என்கின்ற அபிப்பிராயத்தை அல்லது அச்சத்தை ஊக்குவிக்கக் கூடியதாகையினால், யோசனைகள் சமர்ப்பிக்கப்படுகின்ற போது அரசாங்கத்தின் மீதான நெருக்கடிகளும் அதிகரிக்கும்.

(19. 10. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21

ஆட்சி மாற்றத்துக்கான பொ.ஐ.மு. வின் நடவடிக்கைகள்

இலங்கை அரசியலில் அண்மைக் காலத்தில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட விடயங்களில் ஒன்று விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபைக்கான மாற்று யோசனைகள் ஆகும். இதற்கான பிரதானமான காரணம் தமது இருபது ஆண்டுகால யுத்தத்திலும் இடையிடையே இடம் பெற்ற பல்வேறு பேச்சுவார்த்தைகளிலும் தனி நாடு என்பதற்கு மாற்றாக தாம் எற்றுக் கொள்ளக்கூடிய மாற்று ஏற்பாடு யாது என்பது குறித்து புலிகள் ஒருபோதும் தமது யோசனைகளை அல்லது கருத்துக்களை எடுத்துக் கூறியதில்லை. மாற்று யோசனைகள் அரசிடமிருந்து தோற்றம் பெற வேண்டும் என்பதே அவர்களது நிலைப்பாடாக இருந்துள்ளது.

எனினும், முன்னைய சமாதான முயற்சிகளின் போது, தெளிவான மாற்று யோசனைகளை முன்வைக்கக் கூடிய இதய சுத்தியுடன் அரசாங்கங்கள் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருக்கவில்லை. அல்லது அவ்விதமான போசனைகளைப் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கக் கூடிய அரசியல் பலமோ அல்லது மனோபலமோ இந்த அரசாங்கங்களுக்கு இருந்ததில்லை. எனினும், இம்முறை சூழ்நிலை பெரிதும் மாற்றடைந்திருந்தது. அதாவது, இம்முறை அரசாங்கம் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பதற்கான ஒரு யோசனையை அல்ல மாறாக மூன்று யோசனைகளை முன்வைத்திருந்தது. அவை யாவும் புலிகளின் எதிர்பார்ப்புகளைத் திருப்திப்படுத்தத் தவறியிருந்தமையினால், தமக்குத் தேவையானது யாதெனத் தெளிவாக எடுத்துக் கூற வேண்டிய நிர்ப்பந்தம் புலிகளுக்கு ஏற்பட்டிருந்தது.

அதாவது, இறுதி யோசனை நிராகரிக்கப்பட்ட பொழுது மீண்டும் யோசனையை அரசாங்கமே முன்வைக்க வேண்டும் என வற்புறுத்தக் கூடிய நிலையில் புலிகள் காணப்படவில்லை. அதேசமயம், அரசாங்கம் முன் வைத்த யோசனைகளும் சுய விருப்பத்தினால் முன் வைக்கப்பட்டவை அல்ல என்பது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அரசாங்கத்தினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கப்பட்ட யோசனைகள் ஏற்பட்டிருந்த அரசியல் சூழ்நிலைகளாலும், புலிகளின் அழுத்தங்களாலுமே முன்வைக்கப்பட்டிருந்தன. எனவே, இரு தரப்பினாலும் மாற்று யோசனைகள் முன்வைக்கப்படுவதன் பின்னணியில் ஒருவித அழுத்தம் நிச்சயமாகச் செயற்பட்டிருந்தது.

அத்துடன், புலிகளின் யோசனைகள் பெரிதும் எதிர்பார்க்கப் பட்டமைக்கான இனனுமோர் காரணி அதன் நீண்டகால முக்கியத்துவமாகும். உண்மை நிலையில், யோசனைகள் இடைக்கால சபை ஒன்றிற்கானதாக இருப்பினும் அதன் தாற்பரியம் இடைக்காலத் தாக்கத்தை மட்டும் உடையதன்று. அதாவது இந்த யோசனைகள் மிக நீண்ட காலத்தில் இலங்கை அரசியலிலும் அதிலும் குறிப்பாக, தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்திலும் பாரிய செல்வாக்குச் செலுத்தக் கூடிய இயலுமை உடையவையாகும்.

அதாவது, இந்த யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படினும், ஏற்றுக் கொள்ளப்படாவிடினும், நடைமுறைப்படுத்தப்படினும், நடைமுறைப் படுத்தப்படாவிடினும் தமிழ் மக்களின் அரசியல் போக்கை மிக நீண்ட காலத்தில் வழி நடத்திச் செல்லக் கூடிய அல்லது நிர்ணயிக்கக் கூடிய இயலுமை உடையதாய் இருக்கும்.

அதாவது, திம்புக் கோட்பாடுகள் எவ்விதம் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளுக்கு ஒரு நிச்சயமான கோட்பாட்டு அடிப்படையை வழங்கி இருந்ததோ, அதே போன்று புலிகளின் இடைக்கால நிர்வாக சபைக்கான யோசனைகள் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் அதிகாரத்திற்கான கட்டமைப்பை வழங்குவதற்கான சாத்தியம் உண்டு. எனவே, புலிகளின் இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் இடைக்கால முக்கியத்துவத்தை மட்டும் உடையதல்ல என்பதால் அக்கறையுடையோரால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இறுதியாக இப்பொழுது புலிகளின் யோசனைகள் தயாராகி விட்டதாகவும், இம்மாத இறுதியில் அவை நோர்வே அரசினூடாக அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அத்துடன், யோசனைகளின் அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் மீள ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகளும் தென்பட ஆரம்பித்துள்ளன. இதன் கருத்து பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான எல்லாத் தடைக்கற்களும் நீக்கப்பட்டு விட்டதென்பதல்ல. குறிப்பாக, தென்பகுதியின் அரசியல் சூழ்நிலைகள் சமாதான செயன்முறையின் தொடர்ச்சியை கேள்விக்குறியாக்கு வதாகவே உள்ளன.

அதாவது, ஜனாதிபதியால் அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியால் இவ்வரசாங்கம் இதுவரை கவிழ்க்கப்படாமல் இருக்கின்ற போதும், அது உடனடி நிலையில் கவிழ்க்கப்பட வேண்டும் என்கின்ற சுதந்திரக் கட்சியின் விருப்பத்தில் எவ்விதமான தொய்வும் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. அதன் காரணமாக அரசைக் கலைப்பதற்கான முயற்சியில் அது தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டுள்ளது என்பதிலும் எவ்வித சந்தேகமுமில்லை. எனவே, ஜே.வி.பி. யுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து செயற்படுவதற்கான சாத்தியங்கள் முறிவடைந்ததைத் தொடர்ந்து சுதந்திரக் கட்சி அரசாங்கத்தைக் கலைப்பதற்கான மாற்று வழிமுறைகளில் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அம்மாற்று வழிமுறை ஐ.தே.கட்சியை நேரடியாகத் தாக்குதல் என்பதாகும். நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகவோ அன்றி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்திற்கு எதிராகவோ பாரதூரமான எவ்வித எதிர்ப்பும் இதுவரை ஏற்பட்டிருக்கவில்லை. இதற்கான பிரதான காரணம் அரசியல் அபிவிருத்திகள் யாவும் அல்லது பெருமளவானவை ஐ,தே.கட்சிக்கு சாதகமானவையாக நடந்து வந்திருப்பதாகும். இதன் கருத்து ஐ.தே.கட்சியினுள் அதிருப்தியாளர்கள் இருக்கமாட்டார்கள் என்பதல்ல. நிச்சயமாக ஒரு சிறு பிரிவினராயினும் குறிப்பாக சமாதான முயற்சிகளின் போக்கினால் அதிருப்தியடைந்தவர்களாக இருப்பர்.

குறிப்பாக, அரசாங்கம் புலிகளுக்குத் தேவைக்கு அதிகமான விட்டுக் கொடுப்புகளை மேற்கொண்டு வருகின்றது என்கின்ற அபிப்பிராயம் தென்பகுதியில் பொதுவாக நிலவுவதனாலும், பிரச்சினை பொதுவாக தேசியவாதத்துடன் தொடர்புடையது என்பதாலும் அதிருப்தியாளர்கள் இருப்பதற்கான சாத்தியம் அதிகமாகவே உள்ளது. எனவே, இவர்களை இலக்கு வைத்துத் தாக்குவதே அதாவது தம் பக்கம் இழுக்க முனைவதே பொதுஜனஐக்கிய முன்னணியின் திட்டமாகும்.

இதன் தாற்பரியம் தேர்தல் ஒன்று அற்ற நிலையில் அரசாங்கத்தை மாற்ற முயல்வதாகும். ஐ.தே.கட்சியில் இருந்து ஒரு சிறு பிரிவினர் பொதுஜன முன்னணிக்குத் "தாவ" முற்படுவார்களாயின், முன்னணி ஜே.வி.பி.யில் தங்கியிருக்க வேண்டிய அவசியம் குறைவானதாகவேயிருக்கும். அத்துடன், அரசாங்கத்தை மாற்று வதற்கான முயற்சியில் "நாட்டுப்பற்றினடிப்படையில்" ஒத்துழைப்பதற்கு தாம் எப்பொழுதும் தயாராக இருப்பதாக ஜே.வி.பி.யினர் கூறிவருகின்றனர். மேலும், அரசாங்கம் மாறுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்தவுடன் பாராளுமன்றத்தில் உள்ள சிறிய ஆனால் பலம் வாய்ந்த கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன பொ.ஐ.முன்னணியின் பக்கம் "சாய்வதற்கான" சாத்தியமும் அதிகரிக்கும்.

தற்போதைய நிலையில் நோக்குகையில், இவற்றுள் அதாவது முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. என்பவற்றில் ஒப்பீட்டளவில் முஸ்லிம் காங்கிரஸ் பொ.ஐ.முன்னணிக்கு ஆதரவளிக்கக்கூடிய சாத்தியம் அதிகம் இருப்பதாகவும், இ.தொ.கா.வின் சாத்தியம் குறைவாக இருப்பதாகவும் எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில், முஸ்லிம் காங்கிரஸின் தனித் தரப்பாக பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றும் கோரிக்கை முக்கியமானதாகவும், உணர்ச்சிவசப்படுத்தக் கூடியதாகவும் மாற்றமடைந்துள்ளது. ஏதாயினும், ஒருவகையில் அரசாங்கம் இக்கோரிக்கையைத் திருப்திப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடின் முஸ்லிம் காங்கிரஸ் தீவிர அதிருப்திக்குள்ளாவதற்கும், தனது தெரிவுகளை ஆராய்வதற்குமான சாத்தியம் அதிகம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேசமயம், உடனடி நிலையில், இ.தொ.கா. மாற்று அரசாங்கமொன்றிற்கு ஆதரவளிப்பதற்கான சாத்தியம் குறைவானதே. ஏனெனில், இருவாரங்களுக்கு முன்னர் பிரஜா உரிமை அற்ற 3 இலட்சம் (?) இந்தியத் தமிழர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை சட்டமாக்கியதன் மூலம் ஒரு வகையில் அரசாங்கம் இ.தொ.கா.வின் கைகளைக் கட்டிப் போட்டுள்ளது எனக் கருதலாம். இச்சட்டம் அரை நூற்றாண்டுக்கு மேல் அநீதிக்கு உட்பட்ட மக்களுக்கு அவர்களது அடிப்படை உரிமை ஒன்றையே "திருப்பி" வழங்கியிருந்த போதும் இதனை ஒரு வரப்பிரசாதமாகப் பலர் கருதுகின்றனர். எனவே, மலையக மக்களைப் பொறுத்தவரை இப்பிந்திய சட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நலன் ஆகும். அத்தகைய நலனை வழங்கிய அரசாங்கத்திற்கு உடனடியாக "துரோகமிழைக்க" இ.தொ.கா. விற்குச் சற்றுக் கடினமானதாகவே இருக்கும். இதன் கருத்து இ.தொ.கா. பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒன்றிற்கு ஆதரவளிக்காது என்பதல்ல. மாறாக அத்தகைய ஒரு தீர்மானம் பொ.ஐ.மு. மாற்று அரசாங்கத்தை அமைப்பது பூரணமாகத் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்படும்.

இவையாவும் மிகச் சிக்கலான அரசியல் அபிவிருத்திகளாகும். எனினும், ஐ.தே.கட்சியில் இருந்து ஒரு சிறுதொகையினர் வெளிப்படையாக பொ.ஐ.முன்னணிக்கு கட்சி மாறுவார்களாயின் திடீரென்று சாத்தியமாகக் கூடியவையாகும்.

இங்கு கடைசியாக இடம் பெற்ற ஆட்சி மாற்றத்தை நினைவு கூர்வது சற்றுப் பொருத்தமாகும். பொ.ஐ.முன்னணிக்கும், ஜே.வி.பி.யிற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அதன்படி நன்னடத்தை அரசாங்கமொன்று ஏற்படுத்தப்பட்ட போது, அரசாங்கத்திற்கு எவ்வித ஆபத்தும் இல்லை என்பது போன்ற ஒரு தோற்றம் ஏற்பட்டிருந்தது. ஆயினும், பந்துல குணவர்தன ஒரு நாள் அரசாங்கத் தரப்பிலிருந்து எதிரக்கட்சி ஆசனத்திற்கு மாறியவுடன் பன்டோராவின் பெட்டியைத் திறந்து விட்டது போன்று பீரிஸ், திசாநாயக்க உட்பட ஒரு குழு எதிர்க்கட்சிக்குத் தாவியதைத் தொடர்ந்து அரசாங்கம் கலைக்கப்பட்டு புதிய தேர்தல்கள் நிர்ணயிக்கப்பட்டன. தேர்தலில் ஐ.தே.மு. ஆட்சியமைத்தது. எனவே, தற்போதைய நிலையில் ஆட்சி மாற்றம் என்பது பூரணமாக சாத்தியமற்றது அல்ல.

அவ்விதம் ஆட்சி மாற்றம் ஏற்படுமாயின் உடனடி நிலையில் மீள யுத்தம் ஆரம்பிக்கப்படாவிடினும் கூட, பேச்சுவார்த்தைகளை உடனடியாக மீள ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் இல்லாதொழியும். ஏனெனில் கொள்கையளவில் பொ.ஐ.முன்னணி அரசியல் பேச்சு வார்த்தைகளுக்கு எதிரானதல்ல. மாறாகத் தாம் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்படுகின்ற தன்மையையும், குறிப்பாக, யுத்த நிறுத்த உடன்படிக்கையில் உள்ள அம்சங்களையும் எதிர்ப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவர்கள் கூறி வருகின்றனர். எனவே, பொது ஜன ஐக்கிய முன்னணி மாற்று அரசாங்கத்தை அமைக்கக் கூடிய இயலுமை உடையதாய் இருப்பின் சமாதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறையிலும், குறிப்பாக, யுத்த நிறுத்த உடன்படிக்கையிலும் அடிப்படை மாற்றங்களை வேண்டி நிற்கும் என்பதில் சந்தேகமில்லை. இது புலிகளின் சம்மதத்தை இலகுவாகப் பெற்ற விடாது என்பதனால் அரசாங்கம் மாற்றமுறுமானால் பேச்சுவார்த்தைகள் உடனடியாக முறிவடையாவிடினும் அது மீள ஆரம்பிப்பதை நிச்சயமாகத் தாமதப்படுத்தும். அதேசமயம், அத்தகைய புதிய அரசாங்கத்தில் ஜே.வி.பி.யும் முக்கிய ஒரு அங்கமாக இருக்குமாயின் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படமாட்டாது என்பதற்கான ஆதாரங்களே பெரிதும் காணப்படுகின்றன.

(26 . 10. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22

சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல்: ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக?

நாம் ஒரு சமூகம் என்கின்ற வகையில் முக்கியமான ஒரு வரலாற்றுக் காலகட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளோம் என்பது கடந்தவார அரசியல் அபிவிருத்திகளினால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. புலிகளின் யோசனைகள் தயாராகிவிட்டன என்பது மட்டுமல்ல, கசியவும் ஆரம்பித்து விட்டன. சில ஆங்கிலப் பத்திரகைகள் கடந்த வாரம் இத்தகவல்களை விபரமாகப் பட்டியலிட்டிருந்தன. இவை சரியானவையாகவோ அல்லது தவறானவையாகவோ இருக்கலாம். உண்மை எது என்பது அடுத்த வாரம் தெரியக்கூடும்.

ஜனாதிபதி

எனினும், நிச்சயமான அரசியல் நடவடிக்கைகள் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து மேற் கொள்ளப்பட்டிருந்தன. இவை சமாதானம் என்கின்ற நோக்கில் இருந்து அவதானிக்கையில் உற்சாகமூட்டக் கூடியன அல்ல என்பதுடன் சமாதான ஆர்வலர்கள் மத்தியில் ஆழ்ந்த கரிசனையையும் ஏற்படுத்தியுள்ளன. ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான சக வாழ்வு என்பது எப்பொழுதும் உண்மையானதாக இருந்திருக்கவில்லை. உண்மையில் இரு தரப்பினரும் சகவாழ்வை உத்தரவாதப்படுத்தும் வகையில் நடந்து கொண்டிருக்கவில்லை.

ஆயினும், சகவாழ்விற்கான பாரிய அச்சுறுத்தல்கள் ஜனாதிபதி யிடமிருந்தே தோன்றியிருந்தன என்பதில் சந்தேகமில்லை. கடந்த இரு வாரங்களில் இப்போக்கில் ஒரு தீவிரத்தன்மை ஏற்பட்டுள்ளது. அதாவது, அரசாங்கத்தின் விருப்பத்திற்கு எதிராக நடந்து கொள்ளும் ஜனாதிபதியின் போக்கு தீவிரமடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வடிப்படையில் கடற்படைத் தளபதிக்கு ஒரு ஆண்டு கால பதவி நீடிப்பு மட்டுமே அரசாங்கத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த போது, அவர் மூன்று ஆண்டுகளுக்கு பதவி நீடிக்கப்பட்டமை அரசாங்கத்தின் பூரண ஆதரவு இன்றி இராணுவத் தளபதியின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டது மட்டுமன்றி, அவர் கூட்டுப்படைகளின் தளபதியாகவும், நியமிக்கப்பட்டமை, பொலிஸ் மா அதிபரின் பதவிக் காலத்தை ஓராண்டு நீடிக்கப்படும் என உள்துறை அமைச்சினால் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டதன் பின்னரும், இறுதி நேரத்தில் அவரது பதவி நீடிப்பை நிராகரித்தமை போன்றவை சுட்டிக் காட்டப்படக் கூடியவை.

அபிவிருத்தி லொத்தர் சபை ஜனாதிபதியால் கையேற்கப்படுவதாக அறிவித்தமை, இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிற்கான புதிய உறுப்பினர்களை நியமிப்பதில் ஜனாதிபதி காட்டி வரும் தயக்கம் போன்ற அரசாங்கத்தின் விருப்பத்திற்கு மாறான நடவடிக்கைகளிலும் ஜனாதிபதி ஈடுபட்டிருப்பினும் கூட அவரது அதீத கவனம் பொலிஸ், இராணுவம் ஆகியவற்றில் காணப்படுவது வெளிப்படையானது.

இது தற்செயலானது அல்ல, மாறாக திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் என்றே கருதப்பட வேண்டும். அதாவது பொலிஸ், இராணுவம் ஆகிய முக்கிய துறைகளில் அதி உயர் பதவிகளில் தனக்கு விசுவாசமாக இருக்கக் கூடியவர்கள் எனத் தான் கருதும் நபர்களை வைத்திருப்பதை உத்தரவாதப்படுத்தும் நடவடிக்கைகளாகவே இவை தோற்றமளிக்கின்றன. இது அரச அதிகாரத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர ஜனாதிபதி தீர்மானிக்கின்ற ஒரு பட்சத்தில் மிகப் பயனுடையதாய் இருக்கும்.

அவ்விதம் அரச அதிகாரத்தை ஜனாதிபதி மீளக் கைப்பற்றுவதாயின் பொலிஸ், இராணுவம் என்பவற்றின் மீதான கட்டுப்பாடு முக்கியமானது என்பது உண்மை. இருந்த போதும், அதனிலும் முக்கியமானது பொதுசன அபிப்பிராயமாகும். ஏனெனில், நாம் வாழ்வது இலகுவாக மீறி விட முடியாத ஜனநாயக முறைமை ஒன்றிலாகும். எனவே, பொதுசன அபிப்பிராயத்தை தனக்குச் சார்பாக கட்டியெழுப்புவதும், கட்டுப்படுத்துவதும் ஜனாதிபதிக்கு மிக அவசியமானவையாகும். அரசாங்கத்திற்கு எதிராக பொதுசன அபிப்பிராயத்தை கட்டி எழுப்ப ஜனாபதி தேர்ந்தெடுத்திருக்கும் (துரதிஷ்டவசமான) ஆயுதம் சமாதான முயற்சிகள் ஆகும்.

சமாதான முயற்சிகளில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மட்டுமல்ல, மாறாக எல்லா அம்சங்களுமே நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எதிராகச் செயற்படுகின்றன என்கின்ற வகையில் இத் தந்திரோபாயம் பெருப்பிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியே கண்காணிப்புக் குழுவிற்கு எதிராக அல்லது அதன் தலைவருக்கு எதிராகக் கடந்த வாரம் ஜனாதிபதி மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்காணிப்புக் குழு விவகாரம்

புலிகளின் ஆயுதக் கப்பல் என சந்தேகிக்கப்பட்ட கப்பல் ஒன்றை பரிசோதிக்க கடற்படை மேற்கொண்ட நடவடிக்கைகளை கண்காணிப்புக் குழு குறிப்பாக, அதன் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சன் புலிகளுக்கு அறிவித்தமையினால் ஆயுதக் கப்பல் தப்பி விட்டதாகக் கடற்படை வெளியிட்ட அறிக்கை ஒன்றை ஆதாரமாகக் கொண்டு ஜனாதிபதி இரண்டு மிகப்பாரதூரமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்,

(1) ரெலிவ்சனை கண்காணிப்புக் குழுவின் தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டுமெனக் கோரி உத்தியோகபூர்வ கடிதம் ஒன்றை நோர்வே அரசாங்கத்திற்கு அனுப்பியமை,

(2) இனிமேல் கண்காணிப்புக் குழுவின் அறிவுறுத்தல்களை ஏற்க வேண்டாம் எனும் கட்டளையை ஆயுதப் படையினருக்கு அனுப்பியமை.

இவற்றுள் முதலாவது விடயத்தை எடுத்துக் கொள்வோமாயின், நடவடிக்கை மிகப் பாரதூரமானதாக இருப்பினும் யுத்த நிறுத்த ஒப்பந்ததிற்கு உட்பட்டதே என்பது குறிப்பிடத்தக்கது. ஒப்பந்தத்தின் படி கண்காணிப்புக் குழுவின் தலைவரை நியமிக்கும் அதிகாரம் நோர்வே அரசாங்கத்திற்கே உரியது. இத்தீர்மானத்தில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய எந்தவொரு ஏற்பாடும் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக, நோர்வே அரசாங்கம் மோதல் தரப்பினரின் ஆலோசனையுடனேயே கண்காணிப்புக் குழுவின் தலைவரை நியமிக்க வேண்டும் என்கின்ற வகையிலான சரத்துக்கள் காணப்படவில்லை.

எனவே, ஜனாதிபதி ரெலிவ்சன் நீக்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்தபோது அதனை மேற்கொள்ளும்படி (உடன்படிக்கையின் படி) நோர்வே அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளாரே அன்றி தன்னளவில் நேரடியான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. மாறாக, ஜனாதிபதி விரும்பி இருப்பின் தனது அதிகாரங்களைப்பயன்படுத்தி ரெலிவ்சனை விரும்பத்தகாதவர் எனப் பிரகடனப்படுத்தி வெளியேற்றியிருக்க முடியும். இதனை மேற்கொள்ளாமைக்கு பிரதானமான காரணம் சர்வதேச அபிப்பிராயம் தொடர்பாக அவருக்குள்ள அச்சமாக இருந்திருக்கலாம். எனவே, இங்கு அடிப்படையான விடயம் யாதெனில், ரெலிவ்சனை நீக்குமாறு கோரியமை உடன்படிக்கையை மீறும் செயல் அல்ல என்பதாகும்.

அத்துடன், நாம் கவனத்தில்கொள்ள வேண்டிய இன்னுமோர் விடயம், இது தொடர்பில் (பத்திரிகைச் செய்திகளின் படி) கண்காணிப்புக் குழு முன்வைக்கின்ற விளக்கமாகும். தாம் கடற்படையினரின் நடவடிக்கைகள் பற்றி புலிகளுக்கு தகவல்கள் எதனையும் வழங்கவில்லை. மாறாக, அப்பிரதேசத்தில் அவர்களது கப்பல்கள் ஏதாயினும் உள்ளனவா என வினவியதாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியுள்ளார். இது உண்மையாயின் யூகிக்கக் கூடியது யாதெனில், அத்தருணத்தில் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று அப்பிராந்தியத்தில் இருக்கின்ற நிலையில் கண்காணிப்புக் குழுவிடம் இருந்து இத்தகைய ஒரு வினா எழுந்திருக்குமாயின் புலிகள் உடனடியாகவே அபாயத்தை உணர்ந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பர் என்பதாகும். எனவே, இங்கு கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகளும் பூரணமாக சர்ச்சைக்கு அப்பாற் பட்டதல்ல.

எனினும், தற்போதைய நிலையில் உண்மை எது என்பது தெளிவானதாகக் காணப்படவில்லை. இச் செயற்பாடுகள் யாவும் கடற்படையின் அறிக்கையின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப் பட்டுள்ளன. எனினும், கடற்படைக்கும் கண்காணிப்புக் குழுவிற்கும் இடையிலான உறவு பெரும்பாலும் கசப்பானதாகவே இருந்து வந்துள்ளது. குறிப்பாக, ரெலிவ்சன் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில தீர்மானங்கள் கடற்படையின் விருப்பத்திற்கு இணங்கியதாக இருக்கவில்லை. உதாரணமாக, சீன மீன்பிடிப் படகு ஒன்று தாக்கி அழிக்கப்பட்ட பொழுது அதற்கு புலிகள் பொறுப்பு அல்ல; மூன்றாவது ஒரு தரப்பு அதனை மேற்கொண்டுள்ளது எனக் கூறியமை மற்றும் புலிகள் தமது கடற்படைப் பயிற்சிகளை மேற்கொள்ளத் தனியான ஒரு கடற்பகுதி ஒதுக்கிக் கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற வகையிலான சில முன்யோசனைகள் கடற்படையை கோபத்திற்கு உள்ளாகியிருந்தன.

ஒரு கட்டத்தில் தாம் இனி கண்காணிப்புக் குழுவின் அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என கடற்படை அறிக்கை வெளியிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. எனவே, கடற்படையின் கண்காணிப்புக் குழு பற்றிய அதிருப்தி வெளிப்படையானது. இந்நிலையில் கடற்படையின் அறிக்கையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இப்பாரிய நடவடிக்கையை மேற்கொண்டது புத்திசாலித்தானமானது அல்ல. ஜனாதிபதி இத்தகைய நடவடிக்கைகளை தீவிர விசாரணையின் பின்னரும், குறிப்பாக, அரசாங்கத்துடன் கலந்தாலோசித்ததன் பின்னருமே மேற்கொண்டிருக்க வேண்டும் என்பது பொதுவான அபிப்பிராயமாகும்.

எனினும், நடைபெறுவது யாதெனில் ஜனாதிபதி தனது நோக்கங்களுக்காகக் கடற்படையைப் பயன்படுத்துவதும், கடற்படை தனது நோக்கங்களுக்காக ஜனாதிபதியைப் பயன்படுத்துவதுமாகும். இப்பரஸ்பர பயன்பாடு தேசிய நலன் என்கின்ற தூய விருப்பத்தை வெளிப்படுத்தவில்லை.

எவ்வாறாயினும், தற்போதைய நிலையில் மிகப் பாரதூரமானது ரெலிவ்சனை வெளியேற்றும் கோரிக்கை அல்ல. மாறாக, கண்காணிப்புக் குழுவின் அறிவுறுத்தல்களை ஏற்க வேண்டாம் என ஜனாதிபதி பாதுகாப்புப் படையினருக்கு விடுத்துள்ள கட்டளையாகும். ஏனெனில், இக்கட்டளை யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையையே தகர்க்கக் கூடியது. பாதுகாப்புப் படைகளின் பிரதம தளபதி என்கின்ற வகையில் அவரது கட்டளைகள் உடனடியாக ஏற்றுச் செயற்படுத்தப்பட வேண்டியவை ஆகும். அவ்விதம் ஏற்றுச் செயற்படுத்தப்படுமாயின் அது உடனடியாகவே யுத்த நிறுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்படிக்கையைப் பாதிக்கும். எனவே, இக்கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படாது என்பதை உத்தரவாதப்படுத்தக் கூடிய இயலுமையும், திட்டங்களும் அரசாங்கத்திடமும் இருப்பது அவசியம். யுத்த நிறுத்த உடன்படிக்கையின் இருப்பும், சமாதானப் பேச்சு வார்த்தைகளின் வெற்றியும் அரசாங்கத்தின் இயலுமையிலேயே தங்கியுள்ளன.

அத்துடன், மிக முக்கியமாக இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் சமாதான செயல்முறையில் அரசாங்கம் மேற்கொள்கின்ற தீர்மானங்களை கவனத்தில் எடுக்காத வகையில் அவற்றிற்குப் புறம்பாக தன்னால் செயற்பட முடியுமென ஜனாதிபதி நிரூபித்து வருகின்றார். இத்தகைய ஒரு நிலையில் எந்த நம்பிக்கையில் உடனடி நிலையில் ஐ.தே.கட்சி அரசாங்கத்துடன் தீர்மானங்களையோ அல்லது ஒப்பந்தங்களையோ செய்துகொள்வது என்கின்ற கேள்வி எழுமாயின், அது நியாயமானதே.

சர்வதேச வலைப்பின்னல்

இங்கு கவனிக்கப்பட வேண்டிய இன்னுமோர் முக்கியமான விடயம், ஜனாதிபதி மாளிகையில் இருந்து நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்பதாகும். கடந்த வாரம் ஜனாதிபதி மேற்கொண்ட திடீர் நடவடிக்கைகளுக்குப் புறம்பாக, இவ்வார இறுதியில் ஜனாதிபதியிடம் இருந்து தனிப்பட்ட கடிதம் ஒன்று ஒவ்வொரு வீட்டிற்கும் அனுப்பப்பட்டி இருப்பதாகவும், அடுத்த வாரம் அவர் டில்லிக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருப்பதாவும் செய்திகள் கூறுகின்றன.

இவை ஒரு வேளை விரைவில் ஏற்படக் கூடிய ஆட்சி மாற்றம் ஒன்றிற்கான அறிகுறிகளாகவும் இருக்கலாம். அவ்விதமான ஒரு திட்டம் ஜனாதிபதி மாளிகையில் இருக்குமாயின், அதற்கு எதிராக அரசாங்கத்திடம் (உடனடியாக) இருக்கின்ற ஒரே ஆயுதம் சர்வதேச அழுத்தம் என்பது மட்டுமேயாகும். இத்தகைய ஒரு பின்னணியிலேயே பிரதம மந்திரியின் இந்திய விஜயமும், இந்திய - இலங்கை அரசாங்கங்களினால் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையும், முன்னெடுக்கப்பட இருப்பதாகக் கூறப்படுகின்ற இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தமும், அடுத்த வாரம் இடம்பெறவுள்ள ரணில் - புஷ் சந்திப்பும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். எனவே, சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் புலிகளுக்கு எதிரானது மட்டுமல்ல, அது ஜனாதிபதிக்கு எதிரானதும் கூட.

(02. 11. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23

புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகள்

உள்ளூர் ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டிருந்த புலிகளின் இடைக்கால நிர்வாகத்திற்கான யோசனைகள் வெளிவந்து விட்டன. சில மட்டங்களில் முன்வைக்கப்பட்டுள்ள நகல் அதிர்ச்சியூட்டுவதாக அமைந்திருப்பினும் இலங்கை அரசியலின் தாற்பரியத்தை நன்கறிந்திருந்த பெருமளவானோர் எதிர்பார்த்தபடியே இவை காணப்பட்டன.

அதிகாரப் பரவலாக்கம் நாட்டைப் பிளவுபடுத்திவிடும் என்கின்ற வகையில் தென்பகுதியில் காணப்படுகின்ற அச்சத்தை புலிகளின் யோசனைகள் மேலும் தீவிரப்படுத்தும் என முன்னைய கட்டுரையொன்றில் நாம் குறிப்பிட்டிருந்தோம். இவ்விடயத்திற்கு நாம் பின்னர் வரலாம்.

யோசனைகளின் இடைவெளி

கடந்த ஜூலை மாதம் புலிகள் கோரிய இடைக்கால சபைக்கான அடிப்படை யோசனைகள் என்ற வகையில் நகல் வரைபு ஒன்றை அரசாங்கம் முன்வைத்திருந்தது. இந்த யோசனைகள் புலிகளின் எதிர்பார்ப்புகளைச் சந்திக்காமையினால் அவர்களால் நிராகரிக்கப் பட்டிருந்தன. தம்மால் நிராகரிக்கப்பட்ட யோசனைகளுக்கு மாற்றாகவே புலிகள் தமது நகல் யோசனைகளைத் தற்போது முன்வைத்துள்ளனர்.

புலிகளின் யோசனைகள் வெளியானவுடன் அவதானிகளுக்கு புலப்பட்ட அதேசமயம் அரசாங்கத்தால் சுட்டிக்காட்டப்பட்ட விடயம், இவை இரண்டிற்குமிடையில் பாரிய இடைவெளிகள் காணப்படுகின்றன என்பதாகும். ஆயினும், இது ஆச்சரியப்படத்தக்க ஒரு விடயமல்ல. ஏனெனில், கோருவோர் அதிகபட்ச கோரிக்கைகளை முன்வைப்பதும், வழங்குவோர் குறைந்தபட்ச திட்டங்களை முன்வைப்பதும் சாதாரணமானது. குறிப்பாக உள்ளூர் மோதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வு பேச்சு வார்த்தைகளில் இவ்விதம் இடம்பெறுவது மிகச் சாதாரணமானது. எனினும், நியாயமான தீர்வு பேச்சு வார்த்தைகளின் மூலம் அடையப்பட வேண்டும்.

எவ்வாறாயினும் இவ்விரு யோசனைகளுக்குமிடையிலான வேறுபாடுகளை சுருக்கமாக விளங்கிக் கொள்வது எதிர்காலப் பேச்சு வார்த்தைகளில் ஏற்படக்கூடிய சிக்கல்களைப் புரிந்து கொள்ள உதவக்கூடும். அவ்வகையில் முதலாவதாக அரசாங்கத்தினுடைய ஆவணம் மேலதிக பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படை நகலாகவே முன்வைக்கப் பட்டிருந்தமையினால் தெளிவற்ற ஒரு ஆவணமாக அமைந்திருந்தது. இதன் கருத்து யாதெனில் இடைக்கால சபைக்கான விடயங்களில் பெரும்பாலானவை பேசித்தீர்க்கப்பட வேண்டியவை எனக் கருதப்பட்டிருந்தது. ஆயினும், விடுதலைப் புலிகளின் ஆவணம் பெரிதும் வரையறுக்கப்பட்டு ஒரு ஒப்பந்த வடிவில் முன்வைக்கப்பட்டிருந்தன.

உதாரணமாக அதிகாரங்களை எடுத்துக் கொள்வோமாயின் அரசாங்க யோசனைகளில் பொலிஸ், பாதுகாப்பு, காணி மற்றும் வரி அறவிடுதல் தவிர்ந்த ஏனைய விடயங்களிலான அதிகாரங்கள் அமைக்கப்படவுள்ள இடைக்கால சபைக்கு இருக்கும் எனப் பொதுவாக கூறப்பட்டிருந்தது.புலிகளின் வரைபு, அதேசமயம் ஒவ்வொரு விடயத்தையும் தனித்தனியே எடுத்து அவ்விடயம் தொடர்பில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான அதிகாரம் யாதென எடுத்தியம்பியிருந்தது. நிர்வாகம், தண்ணீர் பயன்பாடு, இயற்கை வளங்கள், காணி, நிதி என்பவை தனித்தனியே எடுத்துரைக்கப்பட்டிருந்தன.

உதாரணமாக தேசிய வளங்கள் என்ற விடயத்தை எடுத்துக் கொள்வோமாயின், வட., கிழக்கு பிராந்தியத்தின் இயற்கை வளங்கள் மீதான கட்டுப்பாடு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையிடம் காணப்படும். இத்தகைய இயற்கை வளங்கள் தொடர்பிலான ஏற்கனவே, செய்யப்பட்ட உடன்படிக்கைகள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும். இவ்வுடன்படிக்கைகளின் கீழ் சேரவேண்டிய நிதிகள் யாவும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு வழங்கப்படுவதை இலங்கை அரசாங்கம் உத்தரவாதப்படுத்தும். இத்தகைய உடன்படிக்கைகளிலான எதிர்கால மாற்றங்கள் யாவும் இ.த.அ.ச.யின் இணக்கத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். எதிர்கால உடன் படிக்கைகள் இ.த.அ. சபையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்குப் புறம்பாக அரசாங்க ஆவணத்தில் பொலிஸ், பாதுகாப்பு, காணி, வரி அறவிடுதல் என்பவற்றிலான அதிகாரங்கள் இடைக்கால சபைக்கு வழங்கப்படமாட்டாது எனக் கூறப்பட்டிருந்தது. பாதுகாப்பு தொடர்பில் புலிகளின் யோசனைகள் மௌனமாக இருந்த போதும் ஏனைய மூன்று விடயங்களிலான அதிகாரங்கள் இ.த.அ. சபைக்கு வழங்கப்படுவது அவசியமானது என வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், புலிகளின் யோசனைகள் சபையின் தலைவர் சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படுவார் (எனவே, புலிகளால் தெரிவு செய்யப்பட்டவராக இருப்பார்). அவர் பிராந்தியத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருப்பதுடன் பிராந்தியத்தின் பிரதான நிர்வாகியையும், ஏனைய உத்தியோகத்தர்களையும் நியமிக்கும் அதிகாரமுடையவராக இருப்பார் எனக் கூற, அரசாங்கத்தின் யோசனைகள் தலைவருக்கான இரு மாற்று யோசனைகளை முன்வைத்திருந்தன. இது தலைவருக்கு நிச்சயமான நிறைவேற்று அதிகாரங்களை வழங்காததுடன் பிராந்தியத்திலான சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கு அதீத உத்தரவாதத்தை வழங்குவதாக இருந்தது.

அத்துடன், அரசாங்கத்தின் யோசனைகள் அதி உயர் மட்டத்தில் "விசேட ஆணையாளர்" என்கின்ற பதவியை முன்மொழிந்திருந்ததுடன் விசேட ஆணையாளர் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்படுவார் எனக் கூறியிருந்தது. இது இடைக்கால சபையின் அதிகாரங்களைப் பெரிதும் மட்டுப்படுத்துகின்ற ஒரு ஏற்பாடு என்பதில் சந்தேகமில்லை.

மேலும், அரசாங்கத்தின் யோசனைகளில் சிறுபான்மைப் பாதுகாப்பு என்கின்ற அம்சம் பெரும் முக்கியத்துவமுடையதாக விளங்கியது. அது ஒரு வகையில் சிங்கள மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு சபை நடவடிக்கைகளின் மீது "வீட்டோ" அதிகாரத்தை வழங்கியிருந்தது. ஆயினும், புலிகளின் யோசனைகளில் சிறுபான்மை பாதுகாப்பிற்கான நேரடியான முன்மொழிவுகள் எதுவும் காணப்படவில்லை. மாறாக பிராந்தியத்திலான சகல மக்களையும் பாதுகாக்கக் கூடிய சில சரத்துகள் சிறுபான்மையினருக்கும் பாதுகாப்பளிக்கும் எனக் கருதப்பட்டிருக்கலாம். உதாரணமாக புலிகளின் நகல் அமைக்கப்படவுள்ள இடைகால சபை மதச் சார்பற்றதாகவும், மனித உரிமைகளை சர்வதேச தராதரத்திற்கேற்ப பேணுவதாகவும், மதம், இனம், சாதி, பிராந்தியம், பால், வயது என்பவற்றினடிப்படையில் புறக்கணிப்பிற்குள்ளாகாதிருப்பதை உத்தரவாதப்படுத்தும் எனவும் எடுத்துக் கூறியுள்ளது. இவை (செயற்படுத்தப்படுமாயின்) பிராந்தியத்தின் எல்லா மக்களுக்கும் பாதுகாப்பை வழங்கக் கூடியவையாகும்.

பிரதிபலிப்புகள்

புலிகளின் யோசனைகள் வெளியிடப்பட்டு சில மணித்தியாலங்களுக்குள்ளாகவே அது தொடர்பிலான அபிப்பிராயங்களும், வாதப் பிரதிவாதங்களும் வெளிப்படத் தொடங்கிவிட்டிருந்தன. குறிப்பாகத் தமிழ் மக்களிடையே இந்நகல் யோசனைகள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது போன்று தோன்றுகின்றது. இதற்குச் சார்பான கருத்துக்களை தமிழ் பொது மக்களிடையே காணக் கூடியதாக இருக்கின்ற அதே சமயம், தமிழ் அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளில் பெரும்பாலானவையும் யோசனைகளை வரவேற்றுள்ளன. தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற எல்லாக் கட்சிகளும் ஆதரவான அபிப்பிராயங்களை வெளிப்படுத்தி வருவதுடன், விடுதலைப் புலிகளுடன் சுமூகமான உறவைக் கொண்டிராத சில கட்சிகளும் கூட யோசனைகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதனால் தாம் அவற்றை ஆதரிப்பதாக அல்லது அங்கீகரிப்பதாகக் கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை, புலிகளின் யோசனைகள் அரசாங்கத்தின் நெருக்கடி நிலைமையை அதிகரிக்கும் என நாம் முன்னரே கூறியிருந்தோம். அத்தகைய நெருக்கடிகளின் வடிவம், பண்பு யாது என்பது உடனடி எதிர்காலத்தில் தெரியவரக்கூடும். எனவே, அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில், தமது யோசனைகளில் இருந்து புலிகளின் யோசனைகள் பெரிதும் மாறுபட்டிருப்பதாகவும், அவை தொடர்பில் புலிகளுடன் தாம் பேச விரும்புவதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. அவ்வகையில் அரசாங்கம் பிரச்சினையை தற்போதைக்கு ஒத்திப்போட்டு அதனை பேச்சுவார்த்தைகள் வரையில் தள்ளிவைத்துள்ளது.

இதற்குப் புறம்பாக, தென்னிலங்கையில் லங்கா சமசமாஜக் கட்சி போன்ற சிறிய கட்சிகள் தவிர்ந்த ஏனைய முக்கியமான கட்சிகள் யாவும் யோசனைகளை நிராகரித்துள்ளன. அவ்வகையில் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜனதா விமுக்திப் பெரமுனவும் முக்கியமானவை. தென்னிலங்கை அரசியலின் "சண்டியனாகிய" சிஹல உறுமயவின் அபிப்பிராயங்கள் ஊடகங்களில் பரபரப்பாக அடிபடுமே ஆயினும், உண்மை நிலையில் முக்கியமானவை அல்ல. பாராளுமன்றத்தில் ஒரு ஆசனம் கூட இல்லாத சிஹல உறுமயவின் அபிப்பிராயங்களுக்கு ஊடகங்கள் கொடுத்து வரும் முக்கியத்துவம் நியாயமற்றது மட்டுமல்ல, துரதிஷ்டவசமானதும் கூட எனவே, சிஹல உறுமயவின் அபிப்பிராயங்கள் பற்றி ஆராய்வதை அவர்கள் தமது பலத்தைப் பாராளுமன்றத்தில் நிரூபிக்கும் வரை ஒத்திப் போடுவது உகந்தது.

எனவே, பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும் யோசனைகளை நிராகரித்திருப்பது முக்கியமானது. இவை இந்த யோசனைகளுக்கு எதிராக பல எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாகக் கூறப்படுகிறது. ஆயினும், இக்கட்சிகளின் நோக்கங்களை அடைந்து கொள்ள எதிர்ப்பியக்கங்கள் மட்டுமே போதுமானதாக இருக்கப்போவதில்லை. குறிப்பாக ஜே.வி.பி.யைப் பொறுத்தவரை இந்நகல் யோசனைகள் பற்றிய எவ்வித கரிசனையும் அற்றபடி அவற்றை நிராகரித்துள்ளது. அது மட்டுமன்றி இந்த ஆவணம் "குப்பைக் கூடைக்குள் தூக்கி எறியப்பட வேண்டியது" எனவும் கூறியுள்ளது. ஆயினும், தொக்கி நிற்கின்ற கேள்வி யாதெனில் தூக்கி எறிந்துவிட்டு என்ன செய்வது என்பதாகும். இதற்கான பதில் நிச்சயம் ஜே.வி.பி.யிடம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும் யோசனைகள் அதிதீவிர சிங்களத் தேசிய வாதிகளினால் நிராகரிக்கப்படுவதற்கான அடிப்படைக் காரணிகளில் ஒன்று, அவை ஈழம் என்கின்ற தனி நாட்டிற்கான முதற்படி என்கின்ற அச்சம் ஆகும். அவ்வகையில் எழுப்பப்படக்கூடிய இன்னுமோர் கேள்வி உண்மையாகவே புலிகளின் யோசனைகள் தனிநாடு என்பதை நோக்கி நகரக்கூடிய அம்சங்களைக் கொண்டுள்ளனவா என்பதாகும்.

புலிகள் இடைக்கால சபைக்கு சூட்டியுள்ள பெயரே தென்னிலங்கையின் அச்சத்தைத் தூண்டக் கூடியாதாகும். "இலங்கைத் தீவின் வட, கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை" இங்கு அதிகார சபை என்றவுடன் நினைவிற்கு வருவது ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளின் விளைவாக இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனியர்களுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட "பலஸ்தீன அதிகார சபை" என்பதாகும். சுதந்திர பலஸ்தீன தனி அரசு அமைக்கப்படும் வரையிலான ஒரு இடைக்கால ஏற்பாடாக தோற்றுவிக்கப்பட்டதே பலஸ்தீன அதிகார சபையாகும்.

எனவே, அதிகார சபை என்கின்ற பெயரைப் புலிகளும் தேர்ந்தெடுத்திருப்பது தற்செயலானதாக இருக்காது எனக் கருத இடமுண்டு.

இதற்குப் புறம்பாக புலிகளின் யோசனைகளில் அடங்கியுள்ள பல அம்சங்கள் அதற்கு சுதந்திரமான அரசு என்கின்ற தோற்றத்தை வழங்கக் கூடியதாக இருக்கின்றன. உதாரணமாக புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வெளிநாடுகளில் இருந்து உதவிகளையும், கடன்களையும் நேரடியாகப் பெறக்கூடிய அதிகாரம் கொண்டிருப்பதுடன், சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடக்கூடிய இயலுமையுடையதாகவும் இருக்கும். அத்துடன், வடக்கு, கிழக்குத் தொடர்பான எல்லா விவகாரங்களிலுமான எதிர்கால ஒப்பந்தங்கள் இ.த.அ.ச. உடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், இலங்கை அரசாங்கத்திற்கும், இ.த.அ.சபைக்கும் ஏற்படக்கூடிய பிணக்குகளைத் தீர்ப்பதற்கான சபையின் தலைவரை நியமிப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டால் தரப்பினர், இத்தலைவரை நியமிக்கும்படி சர்வதேச நீதிமன்றத்தைக் கோரமுடியும். அத்துடன், பிணக்குகளைத தீர்ப்பதற்கான சபை இவ்விவகாரங்களில் இலங்கை அரசையும், புலிகளையும் சமமாக மதித்தல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இங்கு சர்வதேச நீதிமன்றத்தின் பயன்பாடு சுவாரஸ்யமானது. ஏனெனில், சுதந்திரமான அரசுகளே சர்வதேச நீதி மன்றத்தின் முன் செல்ல முடியும். மேலும், சமமாகக் கருதப்படல் வேண்டும் என்பதன் மூலம் புலிகள் இ.த.அ.சபையை இலங்கை அரசுக்குக் கீழாக அன்றி சமமாக நிலைநிறுத்த முனைகின்றனர். இதுவும் இடைக்கால சபை சுதந்திர ஈழத்திற்கான முதற்படி என்ற அச்சத்தை சிங்களவர் மத்தியில் ஊக்குவிக்கக் கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலம்

எவ்வாறாயினும் இவைகள் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் மட்டுமேயன்றி நிச்சயமான ஏற்பாடுகள் அல்ல என்பது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அத்துடன், புலிகள் மிக உயர்மட்டத்திலான கோரிக்கைகளை முன்வைக்கின்ற அதேசமயம் இவை பற்றி இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தாம் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளமையும் முக்கியமானது. அத்துடன், முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் முற்றிலும் பூரணமானவை அல்ல. மாறாக, நிரப்பப்படக் கூடிய இடைவெளிகள் காணப்படவே செய்கின்றன. இவை யாவும் பேச்சுவார்த்தைகள் மூலமே நிரப்பப்பட வேண்டியதவசியம். அவ்விதமான எல்லாத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இடை நிரப்புதல்களும், மாற்றங்களும் மேற்கொள்ளப்படுகின்றபோது, இது நடை முறைப்படுத்தப்படக்கூடிய ஒரு ஆவணமாக மாற்றமடையலாம்!

(09. 11. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24

தேசிய நல்லிணக்க அரசும் அரசியலமைப்பு சதிப் புரட்சியும்

புலிகளின் மாற்று யோசனைகள் சமர்பிக்கப்பட்டவுடன் அரசாங்கத்தின் நெருக்கடி நிலை அதிகரிக்கும் என்பதுடன் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து முடுக்கி விடப்பட்டுள்ள நடவடிக்கைகள் ஆட்சி மாற்றம் ஒன்றிற்கான அறிகுறிகளாக இருக்கலாம் எனவும் நாம் முன்னரே இப் பகுதியில் கூறியிருந்தோம். எனவே மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்கின்ற ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகள் சிலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்குமே ஆயினும், இது எதிர்பார்க்கப்படாத ஒன்று அல்ல.

உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியிலிருந்து நீக்குவதற்கான திட்டங்களை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பிரமுகர்கள் சில காலமாகவே தீட்டி வருவது வெளிப்படையான ரகசியம்.

புலிகளின் யோசனைகள்

2002 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதிக்குப் பின்னர் சட்டரீதியாக ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொள்வதற்கான அரசியலமைப்பு அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்த போதும் பிரச்சினை அரசியல் ரீதியானது என்பதனால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சாதகமான அரசியல் சூழ்நிலையை எதிர்பார்த்து சுதந்திரக் கட்சித் தலைவர்கள் காத்திருந்தனர். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை புலிகளின் யோசனைகள் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டமையினாலேயே, யோசனைகள் வெளியிடப்படுகின்ற போது அரசாங்கத்தின் நெருக்கடி அதிகரிக்கும் எனக் கூறியிருந்தோம்.

அதேசமயம், எதிர்க்கட்சிகள் குறிப்பாக ஜனாதிபதி அலுவலகம் இத்தகைய சந்தர்ப்பத்திற்கான அத்திவாரத்தை மெதுவாக ஆனால், கவனமாக கட்டி எழுப்பி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் சமாதான செயன்முறையும் குறிப்பாக யுத்த நிறுத்த உடன்படிக்கையும் நாட்டை பிளவுபடுத்திவிடும் என்கின்ற அபிப்பிராயம் திட்டமிடப்பட்ட வகையில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. அதன் ஒரு உச்சக்கட்டமாகவே முன்னாள் அமைச்சரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் வழங்கிய பத்திரிகையாளர் மகாநாடு இடம் பெற்றது.

நேரடியாகவே (விசேடமாக) ஒலிபரப்பப்பட்ட இச் செய்தியில் புலிகளின் நகல் ஒரு யோசனை போல் அன்றி ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தம் போல் வர்ணிக்கப்பட்டது. சிங்கள மக்களின் நாடு பிளவுபட்டுவிடும் என்கின்ற அச்சத்தை தமது அதிகார துஷ்பிரயோகங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் இந் தந்திரோபாயம் தவறாக இட்டுச் செல்லக்கூடியது மட்டுமல்ல, தேர்தல் ஒன்றை மனதிற் கொண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையுமாகும்.

உண்மை யாதெனில் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள உயர்மட்ட அதிகாரப் பரவலாக்கத்திற்கான கோரிக்கைகள் ஒரு யோசனைகளின் நகல் மட்டுமே அன்றி இறுதித் தீர்மானம் அல்ல. முக்கியமானது யாதெனில் தமது யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு தாம் தயார் என புலிகள் கூறியிருப்பது ஆகும். இதன் மூலம் யூகிக்கக்கூடியது யாதெனில் இடைக்கால சபையின் இறுதிவடிவம் பற்றி சில விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ள அவர்கள் தயாராக இருக்கின்றார்கள் என்பதாகும்.அதேசமயம் அரசாங்கமும் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கத் தயாராக இருந்தமை சமாதான முன்னெடுப்புகளை மீள ஆரம்பிப்பதற்கான சிறந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் சமாதான செயன்முறையில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தக் கூடியவை என்பதில் சந்தேகமில்லை.

சதிப்புரட்சி ?

ஜனாதிபதியின் நடவடிக்கைகள் சட்டரீதியானவையாக இருப்பினும் ஒரு இராணுவ சதிப்புரட்சிக்கு ஒப்பான அம்சங்கள் பலவற்றைக் கொண்டிருந்தமை கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். அதன் காரணமாகவே பல ஆங்கில செய்தி அறிக்கைகள் இதனை ஒரு அரசியலமைப்பு சதிப்புரட்சி என சித்திரிக்கத் தலைப்பட்டுள்ளன. எனினும் புரட்சி பூரணமடைவதற்கு முன்னர் தோல்வியடைந்து விட்டது போன்றதொரு நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்காகவே தான் பாதுகாப்பு, உள் விவகார (பொலிஸ்) மற்றும் ஊடக அமைச்சுக்களை கையேற்றுக் கொண்டதாக தொடர்ந்தும் ஜனாதிபதி கூறி வருகின்ற போதும் முழுமையான திட்டமே இவ் அமைச்சுக்களைக் கையேற்றுக் கொள்வது மட்டும்தான் எனக் கருத முடியாது. மாறாக அமைச்சுக்களின் கையேற்பு ஆட்சி மாற்றத்திற்கான பாரிய திட்டமொன்றின் ஆரம்பம் மட்டுமே ஆகும்.

அதன் தொடர்ச்சி யாதெனில், ஜனதா விமுக்தி பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, மற்றும் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவளிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் ஆதரவுடன் பாராளுமன்றத்தின் பெரும் பான்மையை ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதாகும். இந்த இடத்திலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியின் கணிப்பீடுகள் தவறி விட்டதாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆயினும், மேலதிக பாராளுமன்ற உறுப்பினர்களை தம்வசம் இழுத்துக் கொள்கின்ற செயன்முறைக்கு உதவக்கூடிய விதத்திலேயே பாராளுமன்றம் 19 ஆம் திகதி வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். எனவே, தனது பேரம்பேசுகின்ற நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்வதற்கான அவகாசம் பாராளுமன்றம் மீளக் கூடும் வரை சுதந்திரக் கட்சிக்கு இருக்கும். எனினும் ஐ.தே.கட்சியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களை தம்வசம் இழுத்துக் கொள்வது பொதுசன முன்னணிக்கு இலகுவாக இருக்கப் போவதில்லை, ஏனெனில் ஐ.தே.கட்சியின் அரசியல் கலாசாரம் இலகுவான கட்சித்தாவலுக்கு சாதகமானதல்ல.

தேசிய அரசாங்கம்

தமது முதலாவது திட்டம் அதாவது அரசாங்கத்தை முழுமையாக மாற்றுகின்ற திட்டம் பெருமளவு தோல்வி அடைந்துவிட்டுள்ள ஒரு நிலையிலேயே தேசிய அரசாங்கத்திற்கான கோஷங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. தனது அரசியலமைப்பு சதிப்புரட்சியின் பின்னர் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அத்தகைய பொதுவான அழைப்பை முன்வைத்திருந்ததுடன் இவ்விடயம் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பல கட்சித் தலைவர்களையும் சந்தித்து வருகின்றார்.

தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்று அமைவதில் ஜனாதிபதிக்கு தனிப்பட்ட நலன் ஒன்று உள்ளது. இது தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடியின் முக்கியமான ஒரு அம்சமாகக் கருதப்பட்டு ஆராயப்பட வேண்டியதவசியம். அதாவது அரசியலமைப்பின் படி ஒருவர் ஜனாதிபதியாக இரு தடவைகள் மட்டுமே பதவி வகிக்க முடியும். அதன் பின்னர் அவர் எவ்விதமான பொதுப் பதவிகளையும் வகிக்க முடியாது. இதனால் இரு தடவைகள் பதவி வகித்த ஒருவர் அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு பெற வேண்டியிருக்கும்.

அவ்வகையில் ஜே.ஆர். ஜயவர்தன இரு பதவிக்காலங்களுக்குப்பின்னர் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டமை இங்கு சுட்டிக்காட்டப்-படக்கூடியது. ஆயினும், சந்திரிகா பண்டாரநாயக்க மேலும் பல ஆண்டுகள் தொடர்ந்து அரசியலில் ஈடுபடுவதற்கான வயதும், வலிமையும் தனக்கு இருப்பதாகக் கருதுவதாகக் கூறப்படுகின்றது. எனவே அரசியலமைப்பு மாற்றம் ஏற்பட்டு நாம் பழையபடி பாராளுமன்ற முறைமைக்குத் திரும்புவோமாயின் அவர் உடனடி நிலையில் எதிர்க்கட்சித் தலைவராகவோ அன்றி பிரதம மந்திரியாகவோ "அரசியல் அதிகாரத்தை" அனுபவிக்க முடியும்.

ஆயினும், தற்போதைய நிலையில் அது சாத்தியமில்லை. ஏனெனில், அரசியலமைப்பை மாற்றக் கூடிய மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் எக்கட்சிக்கும் காணப்படவில்லை. மாறாக பிரதான கட்சிகள் இணைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் தேசிய அரசு ஒன்று அமையுமாயின் அதற்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கும். அத்தகைய நிலையில் ஜனாதிபதி முன்வைக்கக்கூடிய முதலாவது முன்மொழிவு அரசியலமைப்பை மாற்றுவதாகும். பாராளுமன்ற முறைமைக்கு மாறுவதென்பது பெரும்பான்மைக் கட்சிகள் யாவற்றினாலும், குறிப்பாக மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமையினால் அதனை நிராகரிப்பது ஐ.தே.கட்சிக்கு சாத்தியமானதல்ல.

எனவே, தேசிய நல்லிணக்க அரசு என்பது ஒரு வகையில் சந்திரிக்காவின் அரசியல் வாழ்வை நீடிப்பதற்கு சமமானதாகும். இது ஐ.தே.கட்சிக்கு சாதகமானதல்ல. ஏனெனில், சந்திரிக்காவிற்குப் பின்னர் ஐ.தே.கட்சியை அச்சுறுத்தக்கூடிய அரசியல் கவர்ச்சி மிக்க தலைமை ஒன்று காணப்படவில்லை. எனவே, தேசிய அரசு என்கின்ற கோரிக்கைக்கு ஐ.தே.கட்சி இணங்கப் போவதில்லை. இதற்குப் புறம்பாக இலங்கையில் காணப்படுகின்ற அரசியல் கலாச்சாரம் சுதந்திரக் கட்சி, ஐ.தே.கட்சி இணைந்த தேசிய அரசு ஒன்றை ஏற்படுத்த உகந்ததல்ல என்பதும் இம்முயற்சி ஏன் வெற்றி அடையாது என்பதற்கு இன்னுமோர் காரணி ஆகும்.

சர்வதேச வலைப்பின்னல்

எவ்வாறாயினும் ஜனாதிபதியின் முயற்சிகள் வெற்றி அடையாமைக்கு நடைமுறையிலுள்ள சமாதான செயல்முறையும் ஒரு காரணி என்பது முக்கியமானது. தனது அதிரடி நடவடிக்கையின் பின்னர் பாராளுமன்றத்தை ஒத்தி வைத்தல், அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தல் போன்ற சில ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஜனாதிபதி ஈடுபட்டிருந்ததுடன் அவை போன்ற மேலும் சில நடவடிக்கைகளில் ஈடுபட இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அத்தகைய நிலையில் பிரித்தானியா, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், இந்தியா போன்றவை கொடுத்த அழுத்தத்தின் காரணமாகவே இந்நடவடிக்கைகள் கைவிடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அரசாங்கம் கட்டி எழுப்பி வருகின்ற சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் புலிகளுக்கு எதிரானது மட்டுமல்ல. அது ஜனாதிபதிக்கு எதிரானதும் கூட என நாம் முன்னரே சுட்டிக் காட்டி இருந்தோம். அவ்வலைப்பின்னல் தற்போது அரசாங்கத்திற்கு உதவியுள்ளது.

இவ்விதம் சர்வதேச அழுத்தம் ஜனாதிபதி மீது பிரயோகிக்கப்பட்டமைக்கான பிரதானமான காரணி சமாதான செயல்முறை தொடர வேண்டும் என்கின்ற சர்வதேச சமூகத்தின் விருப்பமாகும். அத்துடன், அது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் மீது அவை கொண்டுள்ள நம்பிக்கையையும் பிரதிபலிக்கின்றது. அவ்வகையில் தற்போதைய அபிவிருத்திகள் சமாதான முயற்சிகளைக் குழப்பிவிடும் என அவர்கள் கருதுவதாகப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்து தவறானது அல்ல. ஏனெனில், தற்போது ஜனாதிபதி குழப்பகரமான கருத்துக்களையும், சமிக்ஞைகளையும் வெளியிட்டு வருகின்ற போதும் அடிப்படையில் அவர் சமாதான முயற்சிகளின் தன்மையை விரும்பவில்லை என்பது தெளிவானது. அவ்வகையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் சட்ட விரோதமானது, சமாதான முயற்சிகள் நாட்டைப் பிளவுபடுத்திவிடும் எனக் கூறி வருகின்ற அதேசமயம் ஒப்பந்தம் தொடர்ந்து அமுலில் இருக்கும், சமாதான முயற்சிகளை நான் தொடர்ந்தும் முன்னெடுப்பேன் போன்ற முரண்பட்ட கருத்துகளைக் கூறி வருகின்றார். இவற்றில் பிந்திய கருத்துக்கள் பெருமளவிற்கு சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்துவதற்காக கூறப்படுபவை ஆகும். எனவே, ஆட்சி அதிகாரம் பூரணமாக ஜனாதிபதியிடம் செல்லுமாயின் அவர் யுத்த நிறுத்த உடன்படிக்கையிலும் சமாதான முயற்சிகளிலும் பாரதூரமான மாற்றங்களை வேண்டி நிற்பார் என்பதில் சந்தேகமில்லை. அது செய்முறையின் தொடர்ச்சியையும், சமூகத்தன்மையையும் பாதிக்கக்கூடியது.

(16. 11. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25

அநாதையாக்கப்பட்டுள்ள சமாதான செயன்முறை

ஜனாதிபதியின் அதிரடி அரசியலமைப்பு சதிப்புரட்சியுடன் தூண்டிவிடப்பட்ட இலங்கை அரசியல், அரசியல் ஆய்வாளர்களால் உடன் கையாள முடியாத அளவு சூடு பிடித்துள்ளது. இதன் காரணமாக எழுதப்படுகின்ற விடயங்கள் அச்சுக்குப் போவதற்கு முன்னர் எழுதியது பழைய கதையாகி விடுகின்றன. அந்தளவு வேகமாக அரசியல் மாற்றங்கள் நடைபெற்று வருவது நாம் முக்கியமானதொரு வரலாற்றுக் காலகட்டத்தில் நின்று கொண்டிருப்பதை உணர்த்துவதே அன்றி வேறில்லை.

எனினும் இவ்வதிரடி மாற்றங்கள் பொதுவான அரசியல் போக்கை தெளிவுபடுத்துவதற்குப் பதிலாக மேலதிக நிச்சயமற்ற தன்மைகளையே ஏற்படுத்தி வருகின்றன. இந்த நிச்சயமற்ற தன்மைகளின் அடிப்படையில் எழுகின்ற இரு பிரதானமான கேள்விகள்

(1) தென்னிலங்கை அரசியலில் தோன்றியுள்ள நெருக்கடியின் தீர்வு யாது?

(2) சமாதான முயற்சிகளின் எதிர்காலம் யாது? என்பவையாகும். இக்கட்டுரை முதலாவது வினாவை ஆய்வு செய்கின்றது.

ஆட்சி மாற்றம்

ஜனாதிபதி மூன்று அமைச்சுப் பொறுப்புகளையும் கையேற்றுக் கொண்ட போதும், அதுவே முழுத்திட்டம் அல்ல. மாறாக ஆட்சி மாற்றம் என்கின்ற பாரிய திட்டத்தின் ஆரம்பம் மட்டுமே என்பது ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனினும் எதிர்பார்த்தபடி திட்டம் நிறைவேறவில்லை. அதற்கான பிரதானமான காரணம் ஆளும் தரப்பில் இருந்து போதிய அங்கத்தினர்களை பொதுஜன முன்னணியினால் வென்றெடுக்க முடியவில்லை.

ஒரு கூட்டரசாங்கத்தின் ஒற்றுமையை தக்க வைத்துக் கொண்டமைக்கான பாராட்டு பிரதமரையே சாரும்எனினும், அதில் தமிழ் தேசியக்

noolaham.org | aavanaham.org

கூட்டமைப்பின் பங்கு குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல. இவ் அரசாங்கத்தின் இருப்பு அச்சுறுத்தப்பட்ட போதெல்லாம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்திற்கான தனது நிச்சயமான ஆதரவை தெளிவாக எடுத்துரைத்து வந்துள்ளது. இத்தகைய ஒரு நிலையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின், பதினைந்திற்கு மேற்பட்ட அங்கத்தினர்களை ஒரே நேரத்தில் வென்றெடுக்க வேண்டிய அவசியம் இருந்தது. தற்போதைய நிலையில் இது ஒரு மலையைப் புரட்டுவதற்குச் சமமான காரியம் ஆகும்.

இதே காரணியினாலேயே ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கின்ற சிறு கட்சிகளும் கூட ஜனாதிபதியின் முயற்சிகளையிட்டு பெரும் பரபரப்படைந்திருக்கவில்லை. த.தே. கூட்டமைப்பின் அரசாங்கத்திற்கான ஆதரவு சமாதான முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டதென்பதில் சந்தேகமில்லை. இதே காரணத்தினடிப்படையிலேயே சர்வதேச சமூகமும் கூட ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்திற்காதரவாக செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. எனவே, இன்றுவரை அரசாங்கத்தின் ஆயுள் தக்கவைத்துக் கொள்ளப்பட்டுள்ளதெனில், அது சமாதான முயற்சிகளினாலேயே என்பது தெளிவானது. இது தென்னிலங்கை அரசியலில் பண்பு ரீதியாக ஏற்பட்டுள்ள சுவாரசியமான மாற்றம் ஆகும்.

ஜனாதிபதியின் ஆட்சி மாற்றத்திற்கான முயற்சி அல்லது புரட்சி தோல்வியடைந்துள்ள நிலையில், பறித்தெடுக்கப்பட்டுள்ள மூன்று அமைச்சுக்களும் தம்மிடம் மீளக் கையளிக்கப்பட வேண்டும் என அரசாங்கம் வற்புறுத்தி வருகின்றது. இதனை மேற்கொள்ளக் கூடிய நிலையில் ஜனாதிபதி இல்லை. ஏனெனில், அவரது நிலை "புலி வாலைப் பிடித்த கதையாகிவிட்டது." இதுவே இன்று அரசியல் நெருக்கடி தொடர்வதற்கான காரணம் ஆகும். இன்று இலங்கையில் ஒன்றுடன் ஒன்று இணங்க முடியாத இரண்டு அரசாங்கங்கள் காணப்படுகின்றன. இது எக்கோணத்திலிருந்து நோக்கினும் ஆரோக்கியமானதல்ல.

எவ்வாறாயினும் இந்நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான மார்க்கம் யாது? அல்லது அடுத்து என்ன இடம் பெறப்போகின்றது எனச் சிந்திக்கையில் பிரதானமாக மூன்று வழிமுறைகள் இருப்பதாகத் தோன்றுகின்றன் (1) தேசிய அரசாங்கம், (2) நிச்சயமற்ற தன்மை தொடர்வது, (3) புதிய தேர்தல்.

தேசிய அரசாங்கம்

தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவது எல்லாச் சமூகப் பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தந்துவிடும் என்பது போலப் பொதுவாகப் பேசப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டே ஜனாதிபதியும் இப்பிரச்சினைக்குத் தீர்வாக தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார். எனவே, தேசிய அரசாங்கம் என்கின்ற தோரணத்திற்கு தென்னிலங்கையில் பாரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குள்ளது. அத்துடன், தேசிய அரசாங்கம் என்கின்ற கோஷம் முன்வைக்கப்படுவது இதுவே முதற் தடவை அல்ல. இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இத்தகைய கோஷம் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், இதற்கு முன்னர் அது நடைபெற்றதுமில்லை, இம்முறை நடக்கப்போவதுமில்லை.

குறிப்பாக இம்முறை தேசிய அரசு கோஷத்தில் விசேடமான சிக்கல்கள் சில காணப்படுகின்றன. முதலாவது, தேசிய அரசு என்பது எந்த ஒரு கட்சியும் தனித்து அரசமைக்க முடியாத இக்கட்டான ஒரு நிலையிலேயே பொதுவாக ஏற்படுத்தப்படும். ஆயினும், இலங்கையில் அத்தகைய ஒரு இக்கட்டான நிலை காணப்படவில்லை. மாறாக ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்றத்தில் தெளிவான பெரும்பான்மையை பெற்றிருந்தது. அத்துடன், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட போது ஐ.தே.முன்னணிக்கு சார்பாக இடப்பட்ட கையொப்பங்களினடிப்படையில் நோக்கப்படுகின்றபோது, தேவையான எண்ணிக்கைக்கும் (113) மேலதிகமாக குறைந்தது 15 உறுப்பினர்களின் ஆதரவு ஐ.தே.மு. இருந்துள்ளது. அத்துடன், கடந்த அரசாங்கத்துடன் ஒப்பிடுகையில் இவ்வரசாங்கம் குறிப்பிடத்தக்களவு அரசியல் இஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியிருந்தது. எனவே, தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான அரசியல் சூழ்நிலை ஒன்று இங்கு காணப்பட்டிருக்கவில்லை.

மேலும், தேசிய அரசாங்கம் ஒன்றுக்குச் சார்பாக கருத்துக்களை வெளியிட்டதன் பின்னரும், இரு கட்சிகளும் அல்லது கட்சித் தலைமைகளும் தமது "விரோத நடத்தைகளை" விட்டுவிடவில்லை. இரு கட்சிகளும் ஒன்றின் மீது ஒன்று மிகப்பாரதூரமான குற்றச்சாட்டுகளை சுமத்திவருகின்றனவே அன்றி ஒன்றிணைந்த செயற்பாட்டிற்குத் தேவையான நட்பு ரீதியான நடத்தைகளை வெளிப்படுத்தத் தவறியுள்ளன. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை அடுத்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பில் ஆராய "விசேட குழு" ஒன்று அமைக்கப்பட்டிருப்பது அரசியல் கண்துடைப்பே அன்றி வேறில்லை.

அவ்வகையில் தேசிய அரசு என்ற தீர்வு இம்முறையும் சாத்தியமற்றதாகும்.

தேசிய அரசாங்கம் தொடர்பில் அவதானிக்கப்பட வேண்டிய இன்னுமோர் விடயம், அது சிறுபான்மையின அரசியலில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் ஆகும். தென்னிலங்கையில் தேசிய அரசு என்று கருதப்படுவது இரு பிரதான (சிங்களக்) கட்சிகளுக்கிடையிலான இணைவே ஆகும். இது பூரணமாக இல்லாவிடினும் ஒரு வகையில் சிறுபான்மையினருக்கு எதிரானதுமாகும். இரு பெரிய கட்சிகளுக்கும் இடையிலான ஒற்றுமையின்மையே சிறுபான்மைக் கட்சிகள் (மு.கா., இ.தொ.கா.) தேசிய அரசியலை ஆட்டிப்படைப்பதற்கான நிலையை ஏற்படுத்தியுள்ளன எனப் பொதுவாக இங்கு கருதப்படுகின்றது.

கடந்த ஞாயிறு பிரதான ஆங்கிலப் பத்திரிகை ஒன்று "சிறுபான்மையினரின் கொடுங்கோலாட்சியை" (Tynanny of the minonity) தோற்கடிப்பதற்காகவாயினும் தேசிய இணக்கம் காணப்பட வேண்டியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியம் என ஆசிரிய தலையங்கம் தீட்டியிருந்தமை சுட்டிக் காட்டப்படத்தக்கது. எனவே, தேசிய அரசு என்பது சிறுபான்மையினருக்கு சாதகமாக இருக்கப்போவதில்லை. அவ்வகையில் சிறுபான்மை நலன் என்ற கோணத்தில் இருந்து நோக்குகையில், தேசிய அரசு என்கின்ற எண்ணக்கரு "நாசூக்காக" நசுக்கப்படவேண்டியதே அன்றி கூச்சல் போட்டு குழப்பப்பட வேண்டியதொன்றல்ல.

குறிப்பாக தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டால் நாம் ஆயுதமேந்துவோம் அல்லது புலிகளுடன் சேர்ந்து செயற்படுவோம் என்பது போன்ற கோஷங்கள் புத்திசாலித்தனத்தையோ அல்லது அரசியல் இராஜதந்திரத்தையோ வெளிப்படுத்துபவை அல்ல. மாறாக, குறிப்பிட்ட சமூகத்திற்கு நீண்ட காலத்தில் தீங்கு விளைவிக்கக் கூடியவை என்பதையே அது வெளிப்படுத்துகின்றது.

இன்றைய நிலை தொடர்தல்

தற்போதைய நிலையைக் கையாள்வதற்கான இரண்டாவது வழிமுறை, இந்நிச்சயமற்ற சூழ்நிலையை மேலும் சிறிது காலத்திற்கு தொடரவிடுதல். இது பெருமளவிற்கு ஐ.தே.க. நாடக்கூடிய ஒரு வழிமுறையாகும். தம்மிடம் இருந்து அமைச்சுப் பொறுப்புகள் பறித்தெடுக்கப்பட்டபோது அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. நீதிமன்றம் நிச்சயமாக எதிரான தீர்ப்பையே வழங்கி இருக்கும். லொத்தர் சபை பறித்தெடுக்கப்பட்ட பொழுது ஓரளவு ரவ்டியிஸமாவது பிரயோகிக்கப்பட்டது. தற்போது மக்களை வீதிக்குக் கொண்டு வருகின்ற நடவடிக்கையாயினும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன், இன்றும் கூட 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் ஐ.தே.கட்சியைப் பொறுத்தவரை பிரகாசமாகவே உள்ளது. ஜனாதிபதித் தேர்தலிலான வெற்றி பாராளுமன்றத் தேர்தல் வெற்றிக்கு உதவும். எனவே ஐ.தே.க. தேர்ந்தெடுக்கக்கூடிய பிரதானமான தந்திரோபாயம் இதே நிலையிலாயினும் ஜனாதிபதித் தேர்தல் வரையிலும் வண்டியை இழுத்துச் செல்வதாகும். மேலும், ஐ.தே.கட்சியின் தலைமைத்துவப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், இத்தந்திரோபாயத்தை அது தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான சாத்தியம் பெரிதும் உண்டு.

தற்போதைய இழுபறி காரணமாக ஜனாதிபதிக்கேற்பட்டுள்ள அவப்பெயரும், பிரதமர் கட்டியெழுப்பியுள்ள தூய அரசியல் தோற்றப்பாடும் இத் தந்திரோபாயத்தை பலப்படுத்தக்கூடும். அவ்வடிப்படையில் நோக்குகையில் சு.க. இத்தந்திரோபாயத்தை அனுமதிப்பற்கில்லை என எதிர்பார்க்கலாம். ஆனால், இம்மாற்று குறுகிய காலத்தில் சமாதான செயன்முறைகளைத் திட்டவட்டமாகப் பாதித்து விடும் என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் தேர்தல்

தற்போதைய நெருக்கடிக்கு சாத்தியமான அடுத்த மாற்று அல்லது தீர்வு மீண்டுமொரு தேர்தலை நடத்துவதாகும். குறிப்பாக இரண்டு வழிமுறைகளில் புதிய தேர்தல் ஒன்று எம்மீது திணிக்கப்படலாம். ஒன்று, ஐக்கிய தேசியக் கட்சியானது பாராளுமன்ற பெரும்பான்மையைப் பயன்படுத்தி பாராளுமன்றம் தன்னைத் தானே கலைத்துக் கொண்டதாக அறிவித்தல். இரண்டாவது, ஜனாதிபதி தனது அரசியலமைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலை அறிவித்தல்.

இவற்றுள் முதலாவது அம்சத்தைப் பொறுத்தவரை அது நடைமுறைச் சாத்தியமானது. ஏனெனில், ஐ.தே.கட்சிக்கு நிச்சயமான பெரும்பான்மை உள்ளதுடன் குறிப்பாக பாராளுமன்ற சபாநாயகர் அக்கட்சியைச் சேர்ந்தவர் என்பதனால் இலகுவாக தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும். இதற்கான ஒரே தேவை ஐ.தே.கட்சியுடன் இணைந்துள்ள சிறிய கட்சிகளை இதற்கு இணங்கச் செய்வதே. எனினும், இத்தந்திரோபாயத்தை அரசாங்கம் நாடும் என எதிர்பார்ப்பதற்கில்லை.

ஏனெனில், மீண்டுமோர் தேர்தல் என்பது மக்கள் மத்தியில் இன்று செல்வாக்குடைய ஒரு எண்ணக்கரு அல்ல. இவ் அரசாங்கம் கலைக்கப்பட்டு புதியதொரு தேர்தல் இடம் பெறுமாயின் அது நான்கு ஆண்டுகளில் இடம்பெறுகின்ற மூன்றாவது தேர்தலாக இருக்கும். இதனை மக்கள் விரும்பப் போவதில்லை. அவ்வடிப்படையில் தேர்தல் ஒன்றை நாடுகின்ற கட்சியின் மீது மக்கள் அதிருப்தியடைய சந்தர்ப்பம் உள்ளது. எனவே, தேர்தல் ஒன்று இடம்பெறுமாயின் அது ஜனாதிபதியின் தீர்மானமாக இருப்பது ஐ.தே.கட்சிக்கு உகந்தது.

அடுத்து ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தல் ஒன்றிற்கு உத்தரவிடலாம். இதற்கான பூரண அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. பாராளுமன்றம் 19 ஆம் திகதி கூடுவதற்கு முன்னராக ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவார் என சில அவதானிகள் நம்பியிருந்தனர். உண்மையில் அவ்விதமான ஒரு நிலை காணப்படவே செய்தது. ஆயினும், அரசாங்கம் 19 ஆம் திகதி சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட்டிராவிடின், அது அரசிற்கான பாரிய நிதி நெருக்கடிகளையும், சமூகப் பிரச்சினைகளையும் தோற்றுவித்திருக்கும். அவ்விதமான ஒரு செயற்பாடு ஜனாதிபதிக்கு "மேலும்" அவப்பெயரை ஏற்படுத்தியிருக்கும். அதன் காரணமாகவே பாராளுமன்றம் கலைக்கப்படவில்லை.

இதன் கருத்து பாராளுமன்றம் ஜனாதிபதியால் கலைக்கப்பட மாட்டாது என்பதல்ல. தான் ஆரம்பித்த ஆட்சி மாற்றத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் ஜனாதிபதி உள்ளார். தற்போதைய நிலையில் அதற்கான ஒரே மார்க்கம் புதிய தேர்தல் ஒன்றை நடாத்துவதே ஆகும். எனினும், இத்தேர்தலில் பொதுஜன முன்னணி தனித்துப் போட்டியிடுமாயின் நிச்சயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியுறும். இந்த யதார்த்தத்தைக் கவனத்தில் எடுத்துக் கொண்டமையினாலேயே சில தினங்களுக்கு முன்னர் ஸ்ரீ லங்கா சுதந்திக் கட்சியின் மத்திய குழு ஜே.வி.பி. யுடனான கூட்டிற்கு அனுமதி அளித்தது. இது சு.க. - ஜே.வி.பி. கூட்டு தொடர்பில் ஏற்பட்ட மிக முன்னேற்றகரமான நடவடிக்கையாகும். அத்துடன் இக்கூட்டு தொடர்பான விடயங்களைத் தீர்மானிப்பதற்காக குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. எனவே, இரு கட்சிகளுக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று மிக விரைவாகவே கையெழுத்திடப்படக் கூடும். ஒப்பந்தம் கையெழுத்திடப்படுமாயின், அடுத்த கட்ட நடவடிக்கை நிச்சயமாக பாராளுமன்றத்தை கலைப்பதாகவே அமைந்திருக்கும். பாராளுமன்றம் கலைக்கப்பட்டதென்கின்ற செய்தி கூட திடுதிப்பென எம்மை வந்தடையக்கூடும். எவ்வாறாயினும் புதிய தேர்தலில் சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி. யும் இணைந்து ஒன்றாகப் போட்டியிடுமாயின் புதிய கூட்டுவெற்றியடைவதற்கான பெரும் சந்தர்ப்பம் உள்ளது. எமது தேர்தல் முறையில் உள்ள போனஸ் ஆசன முறைமை இவ்வெற்றியில் பெரும் பங்கு வகிக்கும்.

ஆயினும், புதிய தேர்தல் என்கின்ற யோசனை முற்றிலும் மோசமான ஒன்று அல்ல. ஏனெனில், இத்தகைய தேர்தலுக்கு தென்பகுதியில் (இப்போது இல்லாத அரசியல் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தக் கூடிய இயலுமை இருக்கக்கூடும். சு.க - ஜே.வி.பி. கூட்டு வெற்றி பெறுமாயின் (சமாதானப் பேச்சுவார்த்தைகள் பூரணமாக முறிந்துவிடும் என்பது வேறு விடயம்) ஜனாதிபதி - பாராளுமன்றம் என்பவை ஒரே தரப்பைச் சேர்ந்தவைகளாக இருக்குமாகையினால், அவற்றிற்கிடையிலான மோதல் (குறுகிய காலத்திற்காயினும்) முடிவுக்குக் கொண்டுவரப்படக் கூடும். அதே சமயம், ஐ.தே.கட்சி வெற்றி பெறுமாயின் சில பிரச்சினைகள் தானாகவே தீர்க்கப்பட்டுவிடும்.

தேர்தல் ஒன்று இடம் பெறுமாயின், அது உண்மை நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மட்டிலான கருத்துக் கணிப்பாகவே இருக்கும். இந்நிலையில் ஐ.தே.கட்சி வெற்றி பெறுமாயின், அது ஐ.தே.கட்சியின் சமாதானக் கொள்கைகளுக்கு கிடைத்த தெளிவான மக்கள் அங்கீகாரமாகக் கருதப்படலாம். குறிப்பாக புலிகளின் யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவ்விதமான ஒரு வெற்றி அடையப்படுவது மிக முக்கியத்துவமுடையதாக இருக்கும். எனவே, ஐ.தே.க. அதிக தன்னம்பிக்கையுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக் கூடியதாயிருக்கும். அத்துடன் புதிய பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட நாளில் இருந்து ஒரு ஆண்டிற்கு ஜனாதிபதி அதனைக் கலைக்க முடியாது. எனவே, மீண்டும் அரசாங்கம் அச்சுறுத்தப்படுவதற்கான சந்தர்ப்பம் குறைவானதே. இவ்விதம் நோக்குகின்ற போது புதிய தேர்தல் என்பது அவ்வளவு மோசமான ஒரு யோசனை அல்ல என்பது புலப்படக்கூடும்.

இது எப்படியிருப்பினும், தற்போதைய நிலையில் நாடு புதிய தேர்தல் ஒன்றை நோக்கி உறுதியாக நகர்ந்து வருவதாகவே எண்ணத் தோன்றுகின்றது. தற்போதைய நெருக்கடியுடன் இணைந்த முக்கிய பிரச்சினை தற்போது உத்தியோகபூர்வமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான செயன்முறையின் எதிர்காலம் பற்றியதாகும்.

(23. 11. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26

மெல்லச் சாகும் சமாதான செயன்முறை

2001 ஆம் ஆண்டு ஐக்கியதேசியக் கட்சி தெரிவு செய்யப்பட்ட காலத்தில் இருந்தே இங்கு இரு அரசாங்கங்கள் காணப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்று பலமானதாகவும் மற்றையது பலவீனமானதுமாகவும் இருந்தன. ஆயினும், ஜனாதிபதியின் அரசியலமைப்பு சதிப் புரட்சியுடன் இவ்விரு அரசாங்கங்களும் சமமான பலமுடைய நிறுவனங்களாக மாற்றப்பட்டுள்ளன. ஜனாதிபதி மூன்று அமைச்சுப் பொறுப்புகளை மட்டுமே கையேற்றுக் கொண்டுள்ள போதும், அவை மிக அடிப்படையானவை என்கின்ற வகையில் ஐம்பது விகிதமளவான அதிகாரங்கள் ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன எனப்படலாம்.

தற்போதைய நிலையில் ஐ.தே.கட்சியிடம் எஞ்சியுள்ள ஒரே பலமான அமைச்சு நிதி அமைச்சு மட்டுமே ஆகும். நிதி அமைச்சும் ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்படுமேயாயின் அரசாங்கம் ஜனாதிபதியே அன்றி ஐ.தே.கட்சி அல்ல. எனவே, இன்றைய நிலையில் இலங்கையில் சம அதிகாரமுடைய இரு அரசாங்கங்கள் காணப்படுகின்றன. அதாவது இன்று பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ள ஒரு தரப்பு (ஐ.தே.கட்சி அரசாங்கம்) தனது செயற்பாட்டு எல்லையினுள் பூரணமான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. இதுவே இன்று சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் காணப்படுகின்ற அடிப்படை பிரச்சினையாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்ற தரப்பினர் தமது செயற்பாட்டு எல்லையினுள் பூரண கட்டுப்பாடுடையவர்களாக இருப்பது மிக முக்கியமானது. அவ்விதம் இல்லாத பட்சத்தில் பேச்சுவார்த்தைகள் வெற்றியடைவது கடினமானதாகவே காணப்படும். ஏனெனில், பேச்சுவார்த்தைத் தரப்பு கட்டுப்பாட்டில் இல்லாத போது அது தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதோ அல்லது தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதோ சாத்தியமானதல்ல.

இதற்கான சிறந்த உதாரணம் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஆகும். மேற்குக் கரை, காஸா பிரதேசங்களினுள் பா.வி.இயக்கத்தின் கட்டுப்பாட்டினுள் இல்லாத இயக்கங்கள் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றமையும், அவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் பா.வி.இயக்கத்தின் இயலாமையும், உறுதியாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியாத நிலைக்கு அதனைத் தள்ளியுள்ளது. ஆயினும், இந்நிலை பொதுவாக அரசு அற்ற கிளர்ச்சிக் குழுக்களுக்கே காணப்படுவதுண்டு. தான் கட்டுப்பாட்டில் இல்லாத நிலை அரச தரப்பினருக்குப் பொதுவாக இருப்பதில்லை.

துரதிஷ்டவசமாக இன்று இங்கு அரசு கட்டுப்பாட்டில் இல்லாத நிலை காணப்படுவதால் பேச்சுவார்த்தைகளை உறுதியாக முன்னெடுக்கக் கூடிய நிலை இல்லை. அவ்வகையில் தம்மிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்ட அமைச்சுக்கள் இல்லாத நிலையில் பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்க முடியாதென ஐ.தே.கட்சி அரசாங்கம் கூறுவது யதார்த்தமானதே.

அதேசமயம், பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கக் கூடிய நிலையில் நாம் இல்லை. அதனை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென அரசாங்கம் கூறுவது இவ்யதார்த்தத்தினால் மட்டுமல்ல என்பதும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மாறாக அது ஜனாதிபதி மீது அழுத்தத்தை செலுத்துவதற்கான (புத்திசாலித்தனமான) தந்திரோபாயமு மாகும். ஜனாதிபதியின் செயற்பாடு காரணமாக பேச்சுவார்த்தைகள் இடை நிறுத்தப்பட்டன என்கின்ற நிலை ஜனாதிபதி மீதான சர்வதேச அழுத்தத்தை அதிகரித்து ஒரு வகையில் அவரது செயற்பாடுகளை தடை செய்திருந்தன.

நோர்வே

இத்தந்திரோபாயத்தின் பெருப்பிக்கப்பட்ட ஒரு வடிவமே நோர்வே அரசாங்கத்தின் தற்காலிகமாக மத்தியஸ்த முயற்சிகளை இடைநிறுத்திக் கொள்கின்ற தீர்மானம் ஆகும். ஒரு வகையில் நோக்குகையில் நோர்வே முதல் தடவையாக சமாதானத்தை ஊக்குவிக்கும் வகையிலான தன்முனைப்புள்ள செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தது எனக் கூறப்படலாம். சமாதான செயன்முறை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே நோர்வே ஒருவித தலையிடாக் கொள்கையைக் கடைபிடித்து வந்துள்ளது. அதாவது பேச்சுவார்த்தைத் தரப்பினர் கோருகின்றபோது வேண்டியதைச் செய்கின்ற ஒருவகை செயற்பாட்டையே நோர்வே மேற்கொண்டு வந்திருந்தது. ஒரு அனுசரணையாளர் என்கின்ற வகையில் அதுவே தனது கடமையென நோர்வே எண்ணியிருந்தது.

உதாரணமாக கடந்த ஏப்ரல் மாதம் பேச்சுவார்த்தைகள் தடைப் பட்டபோது, தன்னிலையில் அதனை உடனே ஆரம்பிப்பதற்கான எத்தகைய செயற்பாட்டிலும் நோர்வே ஈடுபடவில்லை. மாறாக அனுசரணையை இடைநிறுத்திக் கொள்கின்ற தீர்மானம் சமாதான முயற்சிகள் இடையூறின்றி தொடர்வதை உத்தரவாதப்படுத்தும் நோக்கிலான தன்முனைப்புள்ள செயற்பாடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோர்வே தனது பங்கை இடைநிறுத்திக் கொள்வதென்பது சமாதான முயற்சிகளிலான பாரிய ஒரு பின்னடைவாகும். இருப்பினும் ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கையின் பின்னரும் நோர்வே எதுவித பிரச்சினையும் இல்லை என்பது போல் நடந்து கொண்டிருக்குமாயின் அவரது நடவடிக்கைகளின் பார தூரத் தன்மை வெளிப்பட்டிருக்க வாய்ப்பு இருந்திருக்காது.

அதேசமயம், அரசியல் அதிகாரம் யார் கைகளில் உள்ளது என்பது தெளிவாகும் வரையில் அனுசரணை முயற்சிகளை இடைநிறுத்திக் கொள்வதாக அறிவித்ததன் மூலமும், அதனூடாக ஜனாதிபதி மீதான அழுத்தத்தை ஏற்படுத்தியதன் மூலமும் நோர்வே ஐ.தே.கட்சிக்குப் பக்கச்சார்பாக நடந்து கொண்டுள்ளது எனப் பலராலும் சுட்டிக் காட்டப்படுகின்றது. அத்துடன் குறிப்பாக, ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் இப்பக்கச் சார்பைக் கண்டித்துள்ளனர். நோர்வேயின் இச் செயற்பாடு பக்கச்சார்பானதா?

நிச்சயமாக நோர்வேயின் இச்செயற்பாடு பக்கச் சார்பானதே. ஆயினும், கவனிக்கப்பட வேண்டியது யாதெனில், இப்பக்கச் சார்பு சுயநல நோக்கில் ஏற்பட்டதல்ல. மாறாக பேச்சுவார்த்தை சுமூகமாகத் தொடர வேண்டும் என்கின்ற விருப்பத்தின் அடிப்படையில் ஏற்பட்ட பக்கச்சார்பாகும். இலங்கையின் அண்மைக்கால அரசியலையும் குறிப்பாக சமாதான முயற்சிகளையும் உன்னிப்பாக அவதானிக்கின்ற எவருக்கும் இலகுவில் புலப்படக்கூடிய விடயம் ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் இடம்பெற்ற அதே சுமூகத்தன்மையுடன் பேச்சுவார்த்தைகள் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் இடம் பெறாது என்பதாகும்.

இது இலங்கை அரசியலுடன் நெருக்கமாக தொடர்புபட்டுள்ளவர்கள் என்கின்ற வகையில் நோர்வேக்கு புலப்பட்டிருக்கும். எனவேதான் ஐ.தே.கட்சியின் கீழ் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதை அவர்கள் விரும்புகின்றனர். எனவே, பக்கச் சார்பின்மை என்கின்ற கற்பனையின் அடிப்படையில் தவறான செயற்பாடுகளில் ஈடுபடாது மேற் கொள்ளப்பட்ட அவர்களது தீர்மானம் யதார்த்தமானதே.

பேச்சுவார்த்தையின் எதிர்காலம்

ஜே.வி.பி. கண்டி - கொழும்பு பாத யாத்திரையை மேற்கொண்ட பொழுது சமாதான முயற்சிகளுக்கான முதலாவது சாவுமணி அடிக்கப்பட்டு விட்டதாக நாம் இப்பகுதியில் கூறியிருந்தோம். இன்று சமாதான முயற்சிகள் மெல்லச் செத்துக் கொண்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆயினும், தென்னிலங்கை அரசியலின் எதிர்காலம் யாது என்பது தீர்மானிக்கப்படும் வரை சமாதான முயற்சிகளின் எதிர்காலம் யாது என்பது நிச்சயமாகக் கூறப்பட முடியாது. எனினும், இன்றுள்ள அரசியல் நிச்சயமற்ற நிலை குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு நீடித்திருக்குமாயின் சமாதான முயற்சிகளின் முக்கிய ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியாகிய யுத்த நிறுத்த உடன்படிக்கை மிதமிஞ்சிய அச்சுறுத்தலுக்குள்ளானதாகவே இருக்கும்.

சமாதானம் என்பது கொள்கைகள், நடவடிக்கைகள் மட்டுமல்ல, அது அடிப்படையில் மனோபாவம் தொடர்புடையதும் கூட. நவம்பர் 4 ஆம் திகதி வரை காணப்பட்ட நட்புணர்வும், சுமூகத்தன்மையும் இன்று இல்லை. இன்று காணப்படுவது அச்சமும், பதற்றமும் ஆகும். மனோபாவங்கள் இலங்கையின் அரசியல் தலைவர்களின் தோற்றப்பாட்டின் காரணமாகவும் நிர்ணயிக்கப்படுகின்றன. பாதுகாப்பு அமைச்சு கைமாறியது மனோபாவங்களையும் மாற்றி விட்டதென்பதில் சந்தேகமில்லை. இம்மாற்றம் யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் திடீரென வெடித்து விடக்கூடிய கால - வெடிகுண்டாக மாற்றியுள்ளது. கிழக்கில் இரண்டு முஸ்லிம்கள் காணாமற் போயுள்ளனர் அல்லது கொல்லப்பட்டு விட்டனர் என்பது போன்றதொரு சம்பவம் கூட இக்கால - வெடிகுண்டை வெடிக்க வைக்கக்கூடிய விசையாகச் செயற்பட்டுவிடக்கூடும்.

சமாதான பக்தி முயற்சிகளின் ஒரு பகுதியாகிய பேச்சுவார்த்தைகள் உத்தியோகபூர்வமாக இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், மறுபகுதியாகிய யுத்த நிறுத்த உடன்படிக்கை வீழ்ச்சியுறுமாயின், நாடு தவிர்க்க முடியாதபடி யுத்தத்தை நோக்கி முன்னேற வேண்டியிருக்கும். அது மோதலுடன் தொடர்புடைய எந்த ஒரு தரப்பிற்கும் அல்லது சமூகக் குழுவிற்கும் சாதகமாக அமையப்போவதில்லை.

(30. 11. 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27

ஈழப் பிரச்சினையில் மீண்டும் இந்தியா?

புலிகளின் இடைக்கால சபைக்கான யோசனைகள் வெளியிடப்பட்ட-போது. அதற்கான இலங்கை அரசாங்கத்தின் பதில் யாது என்பது பற்றி நியாயமான கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அதிஷ்டவசமாகவோ. துரதிஷ்டவசமாகவோ அரசாங்கத்திடம் இருந்து காத்திரமான ஒரு பிரதிபலிப்புக் கிடைப்பதற்கு முன்னரே தென்னிலங்கை அரசியல் தலைகீழாக மாறிவிட்டருந்தது. இம்மாற்றத்தின் ஒரு விளைவு தற்காலிகமாகவேனும், தென்னிலங்கையின் கவனம் யோசனைகளிலிருந்து திசை திருப்பப்பட்டிருப்பதாகும். சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்-கேற்ற அரசியல் சூழ்நிலை தெற்கில் தோன்றுகின்ற போது எமது கவனம் தவிர்க்கமுடியாதபடி யோசனைகளை நோக்கி மீண்டும் குவிக்கப்படும்.

இந்தியா

இருப்பினும் புலிகளின் யோசனைகள் பற்றியும், அதனுடன் தொடர்புடைய எல்லா அரசியல் அபிவிருத்திகள் பற்றியும் தொடர்ச்சியான அதேசமயம் கவனமான அவதானிப்பை மேற்கொண்டு வந்த முக்கியமான இன்னுமோர் செயற்பாட்டாளர் இருக்கவே செய்தார். அது இந்தியாவாகும். கடந்த தசாப்தத்தில், குறிப்பாக ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டதன் பின்னர் இந்தியா, இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் தலையிடாக் கொள்கையைப் பின் பற்றி வந்துள்ளது.

இம்முறை நோர்வே அரசின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, தாம் இம்முயற்சிகளை ஆதரிப்பதாகக் கூறி வந்துள்ள இந்தியா ஏனைய எவ்விதத்திலும் இனப் பிரச்சினையுடன் அல்லது சமாதான செயன்முறையுடன் தொடர்புபடவில்லை. இது இலங்கை மீதான அக்கறையை இந்தியா இழந்துள்ளது போன்றதொரு தோற்றப்பாட்டினை ஏற்படுத்தியிருந்தது. உண்மையில் இத்தகைய ஒரு அணுகுமுறை "ஸ்ரீ லங்கா வாட்சர்ஸ்" (Sri Lanka Watchers) என இந்தியாவில் அழைக்கப்படுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அவதானிகளினால் கண்டிக்கப்பட்டு வந்துள்ளது. எனினும் இவ்விதம் இந்தியா - இலங்கை மீதான அக்கறையை இழந்திருக்குமாயின் அது இலங்கை தொடர்பில் இந்தியக் கொள்கையில் ஏற்பட்ட பாரிய மாறுதல் என வர்ணிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அவ்விதமான ஒரு மாறுதல் உண்மையில் ஏற்பட்டிருக்கவில்லை. மாறாக இந்தியா மௌனமாக அதேசமயம் தீவிரமாக இங்கு ஏற்படுகின்ற அபிவிருத்திகளை அவதானிக்கின்ற ஒரு போக்கையே பின்பற்றிவந்துள்ளது.

இந்தியக் கொள்கை

இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகள் வன்முறைப் போராட்டமாக மாற்றமடைந்து இந்திய உதவியுடன் கட்டி எழுப்பட்டு வந்த காலத்திலேயே இந்தியாவின் இலங்கைக் கொள்கையின் இரு மூலைக்கற்களாக,

(1) இந்தியப் பாதுகாப்பு கட்டமைப்பில் இலங்கை பிரதானமானது என்ற எண்ணமும்

(2) இலங்கைத் தீவில் இரு அரசுகள் இருப்பது இந்திய நலனுக்கு உகந்ததல்ல என்ற நம்பிக்கையும் காணப்பட்டிருந்தன.

இக்கொள்கை ஏற்படுத்தப்படுவதிலும் நடைமுறைப்படுத்தப் படுவதிலும் கெடு பிடியுத்தம் பெரும் பங்காற்றியிருந்தது. இன்று கெடுபிடி யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தத்திற்கு மேலாகியும் இந்தியாவின் இலங்கை தொடர்பான அடிப்படைக் கொள்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இதனைக் கடந்த சில வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட தனது நடவடிக்கைகள் மூலம் இந்தியா நிரூபித்துள்ளது.

புலிகளின் யோசனைகள் வெளியிடப்படுவதற்கு முன்னரே அது தொடர்பிலான அபிப்பிராயங்கள் கட்டி எழுப்பப்பட்டு வந்திருந்தன. குறிப்பாக புலிகளின் யோசனைகளின் பண்பு யாது என்பது தெளிவற்ற ஒரு வகையிலாயினும் விஷயமறிந்தோரினால் யூகிக்கப்படக் கூடியதாகவேயிருந்தது. யோசனைகள் வெளியிடப்பட்டபோது இந்த யூகங்கள் பெருமளவு நியாயப்படுத்தப்பட்டிருந்தன. புலிகளின் யோசனைகள் சமஷ்டி என்பதற்கு அப்பால் சென்று சமஷ்டி,· தனிநாடு என்பவற்றிற்கிடையில் தம்மை நிலைப்படுத்திக்கொண்டிருந்தன.

தென்பகுதியில் எவ்விதம் இடைக்கால நிர்வாகத்திற்கான யோசனைகள் தனிநாட்டிற்கான முதற்படி எனக் கருதப்பட்டதோ அவ்விதமே இந்தியாவினாலும், இந்தியாவின் ஸ்ரீ லங்கா அவதானிகளாலும் கருதப்பட்டிருந்தது. இந்த யோசனைகளை இந்தியா விரும்பவில்லை. எனவே இந்தியா ஈழத்தை மட்டுமல்ல பிற்காலத்தில் ஈழம் உருவாவதை ஊக்குவிக்கக்கூடிய எதையும் கூட ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பது தெளிவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய நிலைப்பாடு

அவ்வகையில் புலிகளின் யோசனைகள் வெளியிடப்படுவதற்கு முன்னரே இந்தியா மென்மையான ஒரு முறையில் தனது செயற்பாடுகளை முடுக்கிவிட்டிருந்தது. அவற்றுள் பிரதானமானது இரு நாடுகளின் பிரதமர்களினாலும் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை ஆகும். இவ்வறிக்கையில் இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்துவதற்கான பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொண்டிருந்தது. அத்துடன் அவ்வடிப்படையில் இரு நாடுகளுக்கிடையிலும் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடவும் இணக்கம் காணப்பட்டிருந்தது. இது ஒரு மட்டத்தில் புலிகளின் யோசனைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட "தற்பாதுகாப்பு" நடவடிக்கையாக இருந்தது. யோசனைகள் வெளியிடப்பட்டதன் பின்னர் இந்தியா ஒருவித "தாக்குதல்" தந்திரோபாயத்தைக் கடைப்பிடித்திருந்தது.

யோசனைகள் வெளியிடப்பட்டதன் பின்னர் சென்னையிலிருந்து கருத்து தெரிவித்த இந்திய இராணுவ உபதளபதி இலங்கையைப் பொறுத்து "இராணுவ நடவடிக்கை" உட்பட எல்லா தெரிவுகளும் திறந்தே இருப்பதாகக் கூறினார். அத்துடன் டெல்லிக்குப் பயணம் செய்த நோர்வேயின் விசேட சமாதான பிரதிநிதியிடம் யோசனைகள் பற்றிய தமது தீவிர சந்தேகங்களையும், அதிருப்தியையும் இந்திய அரசியல் தலைவர்கள் எடுத்துக் கூறியதாகவும் பத்திரிகைச் செய்திகள் ஊர்ஜிதம் செய்கின்றன.

புலிகளின் யோசனைகளில் இந்தியா அதிருப்தி அடையக்கூடிய பல அம்சங்கள் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுகின்றது. உதாரணமாக, புதிய அதிகாரசபையின் எல்லையின் கீழ் வரக்கூடிய கடற் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டினுள் வருவது புலிகள் சுதந்திரமான, தமது சொந்த கடற்படையை பேணிக்கொள்ளக்கூடிய சாத்தியக்கூறு போன்றவை இந்தியாவின் இராணுவ மற்றும் பொருளாதார நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியவை எனக் கருதப்படுகின்றது.

மேலும் (இந்திய) தேசிய வாதக் கண்ணோட்டத்திலேயே எதனையும் நோக்கும் இந்திய அவதானிகள் யோசனைகளின் எந்த ஒரு அம்சத்தினையும் சாதகமான முறையில் நோக்குவதாகத் தெரியவில்லை. உதாரணமாக யோசனைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்றை வரைந்திருந்த தென் இந்திய பேராசிரியர் ஒருவர் இடைக்கால சபை மதச்சார்பற்றதாக இருக்குமென முன்மொழியப்பட்டிருந்ததைஇலங்கைஅரசாங்கத்தை அவமானப்படுத்துவதற்கான ஒரு யோசனை என வர்ணித்திருந்தார். மாறாக தென் இலங்கை அரசியல் அவதானிகள் சிலர் அதனை ஒரு முற்போக்கான, அதேசமயம் பாராட்டத்தக்க ஒன்றாக கருதியிருந்தமை கவனிக்கத்தக்கது.

எவ்வாறாயினும் குறிப்பாக இந்திய தளபதியின் இராணுவத் தெரிவு பற்றிய கருத்து உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டியதாகும். இது தொடர்பில் எழுப்பப்படக்கூடிய இரு பிரதான கேள்விகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றகரமான ஒரு கட்டத்தை அடைந்துள்ளது என நாம் கருதுகின்ற. ஒரு சந்தர்ப்பத்தில் மிகப் பொறுப்புவாய்ந்த ஒரு அதிகாரி இராணுவத்தெரிவு பற்றி ஏன் வெளிப்படையாகப் பேசவேண்டும்?

(2) இராணுவத் தெரிவு யாருக்கு எதிரானது? என்பவையாகும்.

பிரதான தடை

இவற்றுள் முதலாவது கேள்வியைப் பொறுத்தவரை இந்தியா இராணுவத் தெரிவு பற்றி தீவிரமான சிந்தனையை கொண்டுள்ளதோ இல்லையோ, இவ்வதிகாரியின் கூற்றில் ஒரு பயமுறுத்தல் பண்பு காணப்படுவது வெளிப்படையானது. இரண்டாவது இராணுவத் தெரிவு என்பது நிச்சயமாக கொழும்பிற்கு எதிரானது அல்ல. எனவே, அது புலிகளுக்கு எதிரானதாகவே இருக்கவேண்டும். அவ்வகையில் இப்பயமுறுத்தலும் புலிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டதாகவே கருதப்பட வேண்டும்.

இலங்கையின் வடபுலத்தில் தனிநாடு ஒன்று அமைவதையோ அல்லது தனிநாடு தோன்றுவதற்கான சூழ்நிலைகளையோ விரும்பாதிருப்பது இந்தியா மட்டுமல்ல ஒரு வகையில் முழுச் சர்வதேச சமூகமும் இத்தகைய ஒரு நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே சமஷ்டி தீர்வு ஒன்றுக்கான ஏகோபித்த சர்வதேச ஆதரவு கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

உதாரணமாக, இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கான ஆதரவை அமெரிக்கா பல சந்தர்ப்பங்களில் ஆணித்தரமாக வலியுறுத்தி வந்துள்ளது. அதேபோன்று பல ஐரோப்பிய நாடுகளும் இதனையே வலியுறுத்தி வருகின்றன. அதன் ஒரு உச்சக்கட்டமாகவே அண்மையில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகாரச் செயலாளர் கிறிஸ் பற்றன், சமாதான முயற்சிகள் மூலம் அடையப்படுகின்ற தீர்வு பிரிவினையாக இருக்கக்கூடாது என எடுத்துக் கூறியிருந்தார்.

ஆயினும் சர்வதேச சமூகம் இலங்கையில் உயர்மட்டத்திலான அதிகாரப்பகிர்வு இடம் பெறுவதை எதிர்க்கப் போவதில்லை. இருந்தபோதும் தனிநாடொன்றை ஏற்படுத்தக் கூடியது என்று இந்தியா கருதக்கூடிய மட்டத்திலான அதிகாரப் பரவலாக்கலை இந்தியா எதிர்க்காது என எதிர்பார்க்க முடியாது. இத்தகைய ஒரு சாத்தியத்தை எதிர்ப்பது மட்டுமல்ல, அதற்கு எதிராக இராணுவ பலமும் கூட உபயோகிக்கப்படலாம் என்பதையே இந்திய இராணுவத் தளபதியின் கூற்று உணர்த்துகின்றது.

இந்திய இராணுவத்திற்கும், புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியின் காரணமாக இந்தியா எதிர்காலத்தில் இராணுவ ரீதியாக இலங்கையில் தலையிடாது என்கின்ற கருத்து பொதுவாக நிலவிவருகின்றது. ஆயினும் இந்நம்பிக்கை பூரணமானது அல்ல என்பதையே அண்மைக்கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய நடவடிக்கைகள் சுட்டி நிற்கின்றன. அதாவது தான் விரும்பாத ஒரு மட்டத்திலான அதிகாரப் பகிர்வு இலங்கையில் இடம் பெறுமாயின் அதற்கு எதிராக இந்தியா இராணுவ ரீதியாகத் தலையிடக்கூடிய சாத்தியம் இருக்கவே செய்கின்றது. அது தமிழ் மக்களுக்குச் சாதகமானதாக இருக்காது என்பதும் எதிர்பார்க்கப்படக்கூடியது. அவ்வகையில் நோக்குகையில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அடைந்து கொள்வதில் பிரதானமான தடைக்கல் இலங்கை அரசு அல்ல. மாறாக அது இந்தியாவே என எண்ணத் தோன்றுகின்றது. எனவே இச்சவாலை கையாள்வது எவ்விதம் என்பது பற்றி இப்போதிருந்தே சிந்திக்க வேண்டிய அவசியம் தமிழ் தரப்பினருக்கு உண்டு.

(07 .12 . 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28

நாட்டின் அரசியல் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் நிகழ்வுகள்

2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ம் திகதி இலங்கையின் அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகும். 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை இந்நாடு மிகத் துரதிர்ஷ்ட வசமான ஒரு நிலையிலேயே இருந்து வந்தது. இன யுத்தம் சராசரி மக்களின் நாளாந்த வாழ்க்கையில் எதிர்நிலை தாக்கம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தமையினால் அரசியல் மாற்றம் ஒன்று அத்தியாவசியமானதாக மாறி இருந்தது. பொதுஜன ஐக்கிய முன்னணியினுள் ஏற்பட்ட பிளவுகள் ஆட்சி மாற்றம் ஒன்றிற்கான தக்க பின்னணியை ஏற்படுத்தியிருந்தமையினால் ஐக்கிய தேசியக் கட்சி சமாதானக் கோஷத்தின் அடிப்படையில் ஆட்சி பீடம் ஏறியது.

அன்று முதல், இந்நாட்டின் எதிர்காலம் பற்றிய பாரிய நம்பிக்கை ஒன்று மக்கள் மனங்களிலும், அவதானிகள் மத்தியிலும் ஏற்பட்டிருந்தது. நவம்பர் 4 ஆம் திகதி இந்நம்பிக்கை சிதறடிக்கப்பட்டு கடினமான ஒரு காலப்பகுதியியை நோக்கி எமது எதிர்காலம் திருப்பி விடப்பட்டுள்ளது. பிந்திய அபிவிருத்திகளின் அடிப்படையில் நோக்குகின்ற போது நெருக்கடி மிக்க ஒரு எதிர்காலத்தை நோக்கி வீறுநடை போடுவது போன்றே தோற்றமளிக்கின்றது. அவ்வகையில் நாட்டின் பொதுவான எதிர்காலமும், சிறுபான்மை மக்களின் எதிர்காலமும், குறிப்பாக தமிழ் மக்களின் எதிர்காலமும் கேள்விக் குறியாகியுள்ளது.

ஜனாதிபதி பதவிக்காலம்

நாட்டின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ள பிரதான அம்சம் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சையாகும். இச் சர்ச்சை பாரிய நெருக்கடியை அரசியல் ரீதியில் ஏற்படுத்தக் கூடிய உள்ளார்ந்த இயலுமை உடையது என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும். இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து யாதெனில் சர்ச்சைக்குரியதாக இருப்பது ஒரு வருட காலப்பகுதி தானே எனக் கண்டுகொள்ளாமல் இருந்துவிடக் கூடிய ஒரு விடயமல்ல இது என்பதாகும்.

நெருக்கடியின் தாற்பரியம் யாதெனில், தான் இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டவுடன் பொதுமக்கள் மத்தியில் மேற்கொண்ட சத்தியப் பிரமாணம் சரியானது அல்ல என்பதனால், மீண்டும் ஒரு தடவை பிரதம நீதியரசர் முன்னிலையில் இரகசியமான இன்னுமோர் சத்தியப் பிரமாண நிகழ்ச்சியை நடாத்தியதாகவும் இதுவே சரியான பதவியேற்பு நிகழ்ச்சி என்பதனால் தனது பதவிக்காலம் 2005 ஆம் ஆண்டு அல்ல மாறாக 2006ஆம் ஆண்டே முடிவடையும் என ஜனாதிபதி கூறியுள்ளமையாகும்.

இதனுடன் இணைந்த சுவையான அபிவிருத்தி இவ்விடயம் பொதுமக்கள் கவனத்தை வந்தடைந்த விதமாகும். ஆரம்பத்தில் ஜனாதிபதி இரகசிய (3 ஆவது) சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டார் எனும் செய்தி சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டிருந்தது. பின்னர் அது பிரபல ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்ட போதே தேசத்தின் கவனத்தை ஈர்த்துக்கொண்டது. செய்தி பாரிய அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தபோதும் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்தோ அல்லது பிரதம நீதியரசர் அலுவலகத்தில் இருந்தோ அது தொடர்பில் எவ்வித கருத்தும் கூறப்படவில்லை. இருப்பினும் செய்தி எவ்வித அரசியல் எதிர்பார்ப்பினையும் மக்கள் மட்டத்தில் இருந்து ஏற்படுத்தியிருக்கவில்லை. இறுதியில் கடந்த வாரம் ஜனாதிபதி தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் செய்தி உண்மைதான் எனவும், தான் 2006ஆம் ஆண்டு வரை பதவியில் இருக்கக்கூடும் எனவும் கோடிட்டுக் காட்டியிருந்தார். எனவே செய்தி வெளியிடப்பட்ட விதம் மக்கள் பிரதிபலிப்பை அறிந்துகொள்ளும் நோக்கில் ஜனாதிபதி அலுவலகத்தினாலேயே கசிய விடப்பட்டிருக்கலாம் எனக் கருதுவோரும் இல்லாமலில்லை.

எவ்வாறாயினும், இவ்விடயம் அரசியல் உயர் மட்டத்தில் பல்வேறு வாதப் பிரதிவாதங்களை தூண்டி விட்டிருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் மூன்றாவது இரகசிய சத்தியப் பிரமாணத்திற்கு ஆதரவாகவும், ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் எதிராகவும் தர்க்கங்களை முன்வைத்து வருகின்றனர். இருப்பினும் மிக எளிமையான விடயம் யாதெனில் இரண்டாவது சத்தியப் பிரமாணம் சரியான முறையில் மேற்கொள்ளப் பட்டிராவிடின் 3வது சத்தியப் பிரமாணம் இரண்டாவதிலும் அதிகமான சிறப்புத் தன்மையுடனும், உத்தியோக பூர்வமாகவும் மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும் என்பதாகும். "வீட்டிலும், அறையிலும் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள ஜனாதிபதிப் பதவி என்பது, பண்டாரநாயக்க குடும்பத்தின் குடும்ப விவகாரமல்ல" என ஒரு ஆய்வாளர் சுட்டிக் காட்டியதில் ஒரு நியாயம் இருக்கவே செய்கின்றது.

தனது பதவிக்காலம் இன்னுமோர் ஆண்டினால் நீடிக்கப்படலாம் எனும் ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியானவுடன் நினைவிற்கு வந்த வரலாறு, 1970 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவின் பதவி நீடிப்பு ஆகும். 1970 ஆம் ஆண்டு ஐந்து ஆண்டுகளுக்கெனத் தெரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட திருமதி பண்டாரநாயக்க 1975 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை நடத்தாமல் தனது பதவிக் காலத்தை இரண்டு ஆண்டுகளினால் நீடித்துக் கொண்டார். இதன் காரணமாகவே இன்று ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்மானத்தை விமர்சிப்பவர்கள் "இது பண்டாரநாயக்க குடும்பத்திற்கு காணப்படும் அதிகார மோகத்தின் வெளிப்பாடு" எனச் சாடுகின்றனர்.

திருமதி பண்டாரநாயக்க இரண்டாண்டுகள் பதவிக்காலத்தை நீடித்துக் கொண்டமையே ஜனநாயக விரோத செயல் என்பதுடன் தனது தீர்மானத்தை நியாயப்படுத்த, அவர் மேலும் பல ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட வேண்டியதாயிற்று. இது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சி பீடமேறுவதற்கு 17 ஆண்டுகள் பொறுத்திருக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. எனவே, தற்பொழுது ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளும் கூட அக்கட்சிக்கு அத்தகைய நிலையை மீண்டும் ஏற்படுத்தக் கூடும் என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியதவசியம்.

எனினும், இதனிலும் முக்கியமானது, தற்போதைய பதவி நீடிப்பு நடவடிக்கையும் கூட ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு விரோதமானது மட்டுமல்ல, எதிர் காலத்தில் இந்நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பு முழுவதையும் தகர்த்து விடக் கூடிய இயலுமை உடையதாகும் என்பதாகும். இதன் காரணமாகவே இவ்விடயம் முக்கியமானதாகக் கருதப்பட்டு கையாளப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனை நாம் பல்வேறு கோணங்களில் இருந்து நோக்க முடியும்.

நீதி முறைமை

ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைவது 2005 ஆம் ஆண்டா அல்லது 2006 ஆம் ஆண்டா என்கின்ற சர்ச்சையில் அதனைத் தீர்மானிக்க வேண்டியது நானே என ஜனாதிபதி கூறியுள்ளார். அது ஒரு வகையில் தவறான அபிப்பிராயம் ஆகும். ஏனெனில், ஏற்பட்டிருப்பது அரசியலமைப்பு அடிப்படையிலான பிரச்சினை என்பதனால் இறுதி நிலையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற அல்லது தீர்ப்பளிக்கின்ற பொறுப்பு உச்ச நீதிமன்றத்தையே சாரும். ஆயினும், பிரதம நீதியரசராக சரத்டி சில்வா நியமிக்கப்பட்டதில் இருந்து அரசியலமைப்பு ரீதியாக ஏற்பட்ட பிரச்சினைகள் யாவற்றிலும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு அல்லது ஜனாதிபதிக்கு சார்பாகவே தீர்ப்பளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக அரசியலமைப்பிற்கான 19 வது திருத்தப் பிரச்சினை, ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டது போன்ற யாவற்றிலும் உயர் நீதிமன்றத்தின் அபிப்பிராயம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமற்றதாகவே இருந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இம்முறையும் ஐ.தே. கட்சி ஜனாதிபதியின் பதவி நீடிப்பு விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடுமாயின், தீர்ப்பு வித்தியாசமானதாக இருக்குமென எதிர்பார்ப்பதற்கில்லை. குறிப்பாக பிரதம நீதிபதி சரத் டி சில்வாவே இரகசியமான சத்தியப் பிரமாணத்தை நடத்தி வைத்தார் எனக் "கூறப்படுவதனால்" தீர்ப்பு ஜனாதிபதிக்கு சார்பாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் காரணமாகவே சுதந்திரக் கட்சி பிரமுகர்கள் "உங்களுக்கு இது தொடர்பில் பிரச்சினைகள் இருந்தால் நீதி மன்றம் செல்லுங்கள்" என சவால் விடக்கூடியதாய் உள்ளது.

இத்தகைய அபிவிருத்திகள் இந்நாட்டில் நீதித்துறையின் சுதந்திரத்தையும், பக்கச்சார்பின்மையையும் தீவிரமாகப் பாதித்திருப்பது மட்டுமன்றி, பொதுமக்கள் மத்தியில் நீதித்துறை தொடர்பிலான நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் கூட சிதைத்துவிடக் கூடியதாய் உள்ளது. சுதந்திரமான, நேர்மையான நீதித்துறை சிறந்த ஜனநாயக முறைமையின் மூலைக்கற்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் யாப்பு

சிறப்பாக செயற்படத்தக்க அரசியலமைப்பு ஜனநாயகத்தின் இன்னுமோர் மூலைக்கல் ஆகும். அதாவது, அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் முறைமையை உத்தரவாதப்படுத்துவதாக இருக்க வேண்டுமேயன்றி அரசியல் தலைவர்களின் அதிகார வெறியைக் திருப்தி செய்வதாக இருக்கக்கூடாது. துரதிஷ்டவசமாக எமது அரசியல் யாப்பு தற்போது இதனையே செய்து வருகின்றது. அது அரசியல் வாதிகள் தன்னைச் சுரண்டவும், திரிபுபடுத்திக் கொள்ளவும் இலகுவாக இணங்கிவிடுகின்றது.

இந்த அரசியல் அமைப்பும், குறிப்பாக நாலாவது திருத்தமும் ஜனாதிபதிகள் தாம் விரும்பியவாறு தேர்தல்களை நிர்ணயித்துக் கொள்ளவும், பதவிப்பிரமாணங்களை செய்துகொள்ளவும், தமது பதவிக் காலங்களை நீடித்துக் கொள்ளவும், அல்லது ஒடுக்கிக் கொள்ளவும் இடமளிக்கின்றது. இதன் காரணமாகவே தற்போதய ஜனாதிபதியும் தனது தனிப்பட்ட விருப்பங்களுக்கு ஏற்ப தனது பதவியை துஷ்பிரயோகம் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது தவறான உதாரணங்களை ஏற்படுத்துவதன் மூலம் எதிர் காலத்தில் பதவி மோகம் கொண்ட அரசியல் வாதிகள் அரசியல் அமைப்பை சுரண்டுவதற்கும், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கும் இடமளிக்கும். நீண்டகால நோக்கில் ஆரோக்கியமான ஜனநாயகம் ஒன்றிற்கு இது உகந்ததல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை

தனது அரசியல் வாழ்வை நீடித்துக்கொள்ளும் முகமாக அரசியல் அமைப்பை பாராளுமன்ற முறைமைக்கு மாற்றவே தனது தற்போதைய நடவடிக்கைகள் மூலம் ஜனாதிபதி எத்தனித்து வருகின்றார் என முன்னரே கூறியிருந்தோம். தற்போது ஏற்பட்டுள்ள இரகசிய சத்தியப் பிரமாண விவகாரமும் ஜனாதிபதியின் இவ் விருப்பத்தின் தீவிரத்தன்மையையே வெளிக்காட்டுகின்றது.

தற்போதுள்ள பிரதானமான பிரச்சினை என்னவெனில் இவ்விவகாரம் 2006 ஆம் ஆண்டுடன் முடிந்துவிடும் என நம்பமுடியாதிருப்பதாகும். காரணம் அரசியல் அமைப்பிற்கு அப்பாற்பட்ட வழிமுறைகளினூடாக தற்போதுள்ள அரசியலமைப்பை மாற்ற அவர்கள் முயற்சித்திருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகும். இத்தகைய நோக்கில் ஜே.வி.பி. யுடனான புதிய கூட்டை அவர் பயன்படுத்திக் கொள்வதற்கு அதிக சாத்தியங்கள் காணப்படுகின்றன. இத்தகைய ஒரு முயற்சி அரசியலமைப்பு புரட்சி என முத்திரை குத்தப்பட்டு முன்னெடுக்கப்படலாம். எனவே, 2006 ஆம் ஆண்டிற்குப் பின்னரும் திருமதி சந்திரிகா குமாரதுங்க அரசியல் அரங்கில் நீடித்திருப்பாராக இருப்பின் அது ஆச்சரியப்படத்தக்க ஒரு விடயமாக இருக்காது. எனினும், இத்தகைய முயற்சிகள் சுமூகமாக நடந்தேறப் போவதில்லை. அவை மேலதிக அரசியல், அரசியலமைப்பு நெருக்கடிகளை ஏற்படுத்துவதன் மூலம் நிச்சயமாக இந்நாட்டின் ஜனநாயகத்தைப் பாதிப்பதாக அமையும்.

(25. 01. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29

சமாதான முயற்சிகளின் கடைசி சாவுமணி

சுமார் 10 மாதகால பேச்சுவார்த்தைகளின் பின்னர் சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.இற்கும் இடையிலான பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தேர்தல் கூட்டிற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. புதிய கூட்டு "ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு" எனக் கூறப்படுகின்றது. கடந்த பத்து மாத காலங்களில் இக்கூட்டமைப்பு தொடர்பிலான பேச்சுவார்த்தைகளில் பல இடர்களும், சரிவுகளும் ஏற்பட்டிருந்தன. சில சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தைகள் பூரணமாக முறிவடைந்து விட்டதாகவும் கூறப்பட்டது. அத்தகைய சந்தர்ப்பங்களில் சமாதான ஆர்வலர்களும், குறிப்பாக தமிழ்க் கட்சிகளும் பெரும் ஆரவாரத்துடன் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தனர். எனினும் நாம் அவசரப்பட்டு ஆரவாரிக்க வேண்டிய அவசியமில்லை, இக் கூட்டு வெற்றிகரமாகக் கைச்சாத்திடப்படுவதற்கான சாத்தியங்கள் இன்னும் இருக்கவே செய்கின்றன என முன்னரே கூறப்பட்டிருந்தது.

இவ்விதம் கூட்டு வெற்றியளிக்கும் என நம்பிக்கை கொள்வதற்கு இரண்டு பிரதானமான காரணிகள் காணப்பட்டிருந்தன (1) நீண்டகாலம் எதிர்க் கட்சி ஆசனங்களில் அமர்ந்திருப்பதைத் தவிர்த்துக் கொள்வதற்கு சுதந்திரக் கட்சிக்கு இருந்த ஒரே தெரிவு ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்வதென்பதுவே (2) அண்மைக்காலங்களில் அரசியல் அதிகாரத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் ஆவல் ஜே.வி.பி. தலைவர்கள் மத்தியில் அதீதமாக அபிவிருத்தியடைந்திருந்தமை. உண்மையில் இவ்விரு காரணிகளே இவ்விரு தரப்பையும் ஒரே மேடையில் கொண்டு வந்து அமர்த்தியுள்ளது. ரூபவாஹினியில் "வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரட்சி" என வர்ணிக்கப்பட்ட சந்தானய கைச்சாத்தாகிவிட்டது, இப்பொழுது எல்லோர் மனங்களிலும் ஏற்பட்டுள்ள கேள்வி அடுத்து என்ன என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து என்ன?

ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரும் பாராளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது என்கின்ற தொனியில் சுதந்திரக் கட்சித் தலைவர்கள் கருத்துக் கூறிவருகின்றனர். அத்துடன் நேற்றுவரை முரண்டு பிடித்துக் கொண்டிருந்த ஜனாதிபதி, இன்று திடீரென மந்திரி சபை கூட்டத்திற்குச் சமூகமளித்திருப்பதாகவும் மிகவும் நட்புறவுடனும், புரிந்துணர்வுடனும் நடந்து கொள்வதாகவும் கூறப்படுகின்றது. இவை சமாதான சகவாழ்வில் புதிய ஒரு அத்தியாயம் தொடங்கி விட்டது ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்படப் போகின்றனர் என்பது போன்ற தவறான அபிப்பிராயங்களை மக்கள் மத்தியிலும் அவதானிகள் மத்தியிலும் தோற்றுவித்திருக்கக் கூடும். இவ்விதமான ஒரு அபிப்பிராயம் தோற்றுவிக்கப்பட்டிருக்குமாயின் அது தவறானது. ஏனெனில் பாராளுமன்றம் கலைக்கப்படுவதே புதிய கூட்டின் இயல்பான அடுத்த அபிவிருத்தி ஆகும். எனவே ஜனாதிபதியின் போக்கும், சுதந்திரக் கட்சித் தலைவர்களின் கூற்றுகளும், ஐக்கிய தேசியக் கட்சியின் கவனத்தைத் திசை திருப்புவதற்கான தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம். இவ்விதம் கவனத்தைத் திசைதிருப்பி எதிர்பாராத சந்தர்ப்பத்தில் தாக்கும் தந்திரோபாயத்தை ஜனாதிபதி கடந்த இரண்டு ஆண்டுகளில் பல தடவைகளில் வெற்றிகரமாகக் கையாண்டிருக்கின்றார்.

கடைசிப் பொதுத் தேர்தல் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம் பெற்றதால், அரசியல் தடங்கல்கள் எதுவும் அற்ற வகையில் அடுத்த பொதுத் தேர்தல் 2007 ஆம் ஆண்டே இடம் பெறும். எனினும் தேர்தல் கூட்டு என்ற வகையில் கைச்சாத்திடப்பட்டுள்ள இவ்வொப்பந்தம் அடுத்த தேர்தலுக்காக இன்னும் நான்காண்டுகளுக்குக் காத்திருக்கப்போகின்றதென எதிர்பார்ப்பதற்-கில்லை. அவ்விதம் காத்திருப்பது இலங்கை அரசியல் அபிவிருத்திகளின் கடிவாளத்தை ரணில் விக்கிரமசிங்கவின் கைகளில் விட்டு விடுவதற்குச் சமமானது. இதனை ஜனாதிபதியோ அல்லது சுதந்திரக் கட்சியோ விரும்பப் போவதில்லை. அத்துடன் அரசியல் அதிகாரத்தை அனுபவிப்பதற்கு அவ்வளவு காலம் காத்திருக்கும் பொறுமை ஜே.வி.பி இற்குக் காணப்படுவதாகவும் தெரியவில்லை. எனவே சுதந்திரக் கட்சியின் புதிய "சகா" பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி அழுத்தத்தைப் பிரயோகித்த வண்ணமே இருக்கும். இவற்றினடிப்படையில் நோக்குகையில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் தீர்மானத்துடன் ஜனாதிபதி மீண்டுமொருமுறை நம்மை ஆச்சரியத்திற்-குள்ளாக்கினால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தேர்தல் கணிப்பீடுகள்

எவ்வாறாயினும், நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளவாறு பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலொன்றுக்குச் செல்வது இவ்விரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளின் முதலாவது தெரிவு அல்ல. முதலாவது தெரிவு இருக்கின்ற பாராளுமன்றத்தினுள்ளேயே போதிய ஆசனங்களைப் பெற்றுக் கொண்டு ஆட்சியமைப்பதாகும். எனவே பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சிகள் திரைமறைவில் நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடும். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து உறுப்பினர்களைக் கவர்ந்து கொள்ளும் முன்னைய முயற்சிகள் தோல்வியடைந்திருந்தமையினால், ஐ.தே.க உடன் இணைந்து செயற்படுகின்ற முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. அத்துடன் மு.கா தலைமைத்துவம் அண்மைக் காலங்களில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான மோதலில் ஒரு நிலையான போக்கை வெளிப்படுத்தி வருகின்றமையும் கடந்த வாரம் வெளிவந்த சில பத்திரிகைச் செய்திகளும் முஸ்லிம் காங்கிரஸ் புதிய கூட்டின்பக்கம் "சாய்ந்து" விடக்கூடிய சாத்தியத்தை அதிகரித்துள்ளன. அவ்விதம் மு.கா புதிய கூட்டை ஆதரிக்க முன்வருகின்ற பட்சத்திலும் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இ.தொ.காவும் அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படுமாயின் தேர்தல் ஒன்றைச் சந்திக்காமலேயே அரசாங்கத்தை அமைக்கும் புதிய கூட்டின் திட்டம் வெற்றியடைவது கடினமானதே. அத்தகைய ஒரு நிலையில் பாராளுமன்றத்தைக் கலைப்பதைத் தவிர வேறு ஒரு மார்க்கம் ஜனாதிபதிக்கு இருக்கப் போவதில்லை.

தேர்தல் ஒன்று அண்மைய எதிர்காலத்தில் நடாத்தப்படும் பட்சத்தில், தேர்தலுக்கு முன்னரோ அல்லது பின்னரோ முஸ்லிம் காங்கிரஸ் புதிய கூட்டிற்கு ஆதரவளிக்குமாயின், அது தேர்தலில் வெற்றிடையவும் அரசாங்கத்தை அமைக்கவும் பெருமளவு சந்தர்ப்பம் உண்டு. அவ்விதம் சு.க. - ஜே.வி.பி தலைமையில் புதிய அரசாங்கமொன்று அமையுமாயின், அது இந்நாட்டிற்குப் பாதகமான விளைவுகளையே கொண்டுவரும் என்பது நிச்சயமானது.

இந்நிலை பல்வேறு அடிப்படைகளில் தோற்றம் பெறக்கூடும். குறிப்பாக இந்நாட்டின் பொருளாதாரக் கொள்கை அமுலாக்கல் என்பவற்றில் பாரிய நெருக்கடிகள் ஏற்பட இடமுண்டு. 1977 ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரம் இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, இன்றுவரை பொருளாதாரக் கொள்கைத் திட்டமிடலில் ஒரு தொடர்ச்சித் தன்மை இருந்து வருகின்றது. இத் தொடர்ச்சித் தன்மை சர்வதேசப் பொருளாதாரப் போக்குகளுடன் இசைந்து செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. முழு சர்வதேச சமூகமுமே உலக மயமாக்கல் செய்முறையுடன் இசைந்து செல்கின்றபோது இலங்கை இச் செயன்முறையில் இருந்து விலகிச் செல்ல எத்தனிப்பது, இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும் மக்களின் பொருளாதார நலன்களையும் கூடப் பாதிப்பதாக அமையும். ஜே.வி.பி. இன்றும் தேசிய சோஷலிஸக் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டிருப்பதும், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற நிறுவனங்களுக்கு எதிராக வெளியிட்டுவரும் அதிதீவிர கருத்துகளும் நவீன பொருளாதாரத் தேவைகளையும், சித்தாந்தங்களையும் புரிந்து கொள்ளக்கூடிய அதன் இயலுமையைக் கேள்விக் குறியாக்கியுள்ளன. முதலாளித்துவம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமயமாக்கல் என்பவற்றிற் கெதிரான சுதேசிய பாதுகாப்புக் கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொள்வதென்பது வேறு, சோஷலிஸப் பொருளாதார முறைமைக்கு திரும்பிச் செல்வதென்பது வேறு. அதேசமயம் சோசலிஸ அரசொன்றை ஏற்படுத்தும் அதன் அடிப்படை நோக்கத்தில் பாரிய மாற்றங்களெதுவும் ஏற்பட்டுள்ளது போல் தோன்றவில்லை. எனவே அரசியல் அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொள்கின்றபோது, ஜே.வி.பி. அதனைக் பயன்படுத்தி தான் வன்முறை மூலம் அடைய முடியாத இலக்குகளை அடைய எத்தனிக்காது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. அவ்வித முயற்சி மேற்கொள்ளப்படுமாயின் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துவதாயிருக்கும்.

சமாதானம்

எனினும் புதிய கூட்டினால் ஏற்படப்போகும் மிகப் பெரும் தாக்கம் சமாதான முயற்சிகள் மேலானதே என்பது முக்கியமானது. இன்று நாடு எதிர் நோக்கியுள்ள மிக அடிப்படையான நெருக்கடி இனமோதலே. ஆயினும் அவ்விடயத்தில் ஒரு இணக்கத்தை அடைய சு.க., ஜே.வி.பி. தலைவர்களினால் இயன்றிருக்கவில்லை. எனவே உடன்படிக்கைப் பற்றி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுதந்திரக் கட்சி அதிகாரப் பரவலாக்கலை ஆதரிக்க, ஜே.வி.பி நிர்வாகப் பரவலாக்கலை ஒரு கொள்கையாகத் தொடர்ந்தும் பின்பற்றுவதாகக் கூறப்பட்டுள்ளது. இதன் கருத்து இவ்விரு தரப்பினருக்கும் இடையில் முக்கியமான ஒரு விடயம் குறித்த இணக்கம் காணப்பட முடியவில்லை என்பது மட்டுமல்ல, மாறாக ஜே.வி.பி. யின் தனது கொள்கைகள் மீதான உறுதியான பற்றுதலையும் எடுத்துக் காட்டுகின்றது. இது புலப்படுத்துவது யாதெனில், குறிப்பாக இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் காலத்திற்கும் யதார்த்தத்திற்கும் ஏற்ற வகையில் மாற்றமுறக்கூடிய இயலுமை அதற்கு காணப்பட வில்லை என்பதாகும்.

நிர்வாகப் பரவலாக்கம் என்பது தமிழ்ப் போராட்டத்தை நாற்பது வருடங்களினால் பின்தள்ளி விடுவதாக அமையும் என்பதனால் குறிப்பாக விடுதலைப் புலிகளிடம் இருந்து எந்தவிதமான பிரதிபலிப்பும் இருக்கப்போவதில்லை. அத்துடன் அடிப்படையில் ஜே.வி.பி அதிகாரப் பரவலாக்கலுக்கு மட்டுமல்ல அரசியற் பேச்சுவார்த்தைகள் என்கின்ற விடயத்திற்கே எதிரானதாகும். இன்று நாம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்குத் தயாராக இருக்கின்றோம் எனக் கூறப்படுவ தெல்லாம் "சும்மா" சர்வதேச சமூகத்தை திருப்திப் படுத்துவதற்காக முன்வைக்கப்படுகின்ற கூற்றுகள் ஆகும். எனவே ஜே.வி.பி. யின் இனப்பிரச்சினை தொடர்பான கோட்பாடுகள் நடைமுறைப்படுத்தப் படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமாக இருப்பின் மீண்டும் யுத்தத்திற்குச் செல்வதைத் தவிர வேறு மாற்று வழிகள் குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கு இருக்கப் போவதில்லை. அத்துடன் இத்தருணத்தில் புதிய கூட்டிற்கு ஆதரவளிக்கின்ற சக்திகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிப்பது அவசியமானது. தேசப்பற்றுள்ள தேசியவாத இயக்கம், அதிதீவிர பிக்குமார் குழுக்கள் போன்றவையே இப்புதிய கூட்டின் பின்னணியில் இருக்கின்ற சக்திகள் ஆகும். இவ் அடிப்படையில் நோக்குகையில் புதிய கூட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாயின் சமாதான முயற்சிகளில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படப் போவதில்லை என்பது தெளிவானது. புதிய கூட்டின் சமாதான செயன்முறைகள் பற்றி அபிப்பிராயத்தையும் எதிர் காலத்தையும், அதன் முக்கிய தலைவர்களில் ஒருவராகிய லக்ஷ்மன் கதிர்காமரின் அபிப்பிராயம் புலப்படுத்தும். கடந்த வாரம் அளித்த பேட்டியொன்றில் பேச்சுவார்த்தைகள் கடந்த பல மாதங்களுக்கு முன்னரே முறிந்து விட்டன, எனவே இல்லாத ஒன்றைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்கின்ற தொனியில் வெளியிட்ட கருத்து முக்கியமானது.

(01. 02. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30

அரசியல் கட்டமைப்பில் மாற்றத்தை அவசியமாக்கும் சமாதான செயற்பாடு

1994/5 ஆம் ஆண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த நிலையில் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த யுத்தம் ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் தொடர்ந்து இடம்பெற்றது. ஏழாண்டுகள் முடிவில் யுத்தம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக மாட்டாது என்பது பல்வேறுபட்ட மட்டங்களில் உணரப்பட்டிருந்தமையினாலும், யுத்தத்தை தக்கவைத்துக் கொள்வதில் அரசாங்கம், விடுதலைப் புலிகள் ஆகிய இருசாராரும் கஷ்டமான ஒரு நிலையில் இருந்தமையினாலும் சமாதான முன்னெடுப்புக்கள் பற்றிய பேச்சுக்கள் பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டன. இருந்தபோதும் நடைமுறையில் அதனை மேற்கொள்ள இயன்றிருக்கவில்லை. அதிலும் குறிப்பாக 2000ஆம் ஆண்டு அரசும் புலிகளும் நோர்வே அரசை ஒரு மூன்றாந் தரப்பாக பேச்சுவார்த்தைக்கு உதவும்படி உத்தியோகபூர்வமாக கேட்டுக் கொண்டதன் பின்னரும் கூட ஆக்கபூர்வமான ஒரு முறையில் பேச்சுக்களை முன்னெடுக்கவோ அன்றி அது தொடர்பில் வேறேதேனும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ முடியவில்லை. ஏனெனில் இத்தகைய மிக அடிப்படையான, பாரதூரமான மாற்றம் ஒன்று யுத்தம் அல்லது சமாதான முயற்சிகளில் ஏற்படுவதற்கு, எமது அரசியல் கட்டமைப்பில் பாரதூரமான மாற்றம் ஒன்று அவசியமானதாயிருந்தது. அதாவது, பழைய அரசியல் கட்டமைப்புக்கள் அவ்விதமே தொடர்ந்திருக்கின்றபோது புதிய சமாதான முன்னெடுப்பொன்றை ஆரம்பிப்பது நடைமுறைச் சாத்திய மற்றதாயிருந்தது. அத்தகையதொரு மாற்றத்தை 2001ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலும், அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டமையும் வழங்கியிருந்தது.

எனவே, எமது அரசியல் கட்டமைப்பில் அடிப்படை மாற்றம் ஒன்று ஏற்பட்டவுடன் ஆக்கபூர்வமான முறையில் சமாதான முன்னெடுப்புக்களை ஆரம்பிப்பது. கடினமானதொன்றாய் இருக்க வில்லை. உண்மையில் யுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்த உடன்படிக்கை பெரிதும் எதிர்பார்க்கப்படாத நிலையிலேயே கையெழுத்திடப்பட்டிருந்தது.

யுத்த நிறுத்தம் நிறுவனமயப்படுத்தப்பட்டதன் பின்னர் முன்னேற்றகரமான, நம்பிக்கையூட்டக்கூடிய பல அரசியல் அபிவிருத்திகள் இடம்பெற்றிருந்த ஒரு நிலையில் இன்று நாம் குறைந்தது நான்காண்டுகள் பின்னோக்கிச் சென்றுள்ளோம். ஏனெனில் இந்தச் சமாதான செயன்முறை தொடர்பில் இருக்கின்ற நிலை பெருமளவிற்கு 2000ஆம் ஆண்டு காணப்பட்ட அரசியல் நிலைக்கு ஒப்பானதாகும். 2000ஆம் ஆண்டு இரு தரப்பினரும் சமாதானமென்பது பற்றி ஒருதலைப்பட்சமாக பேசிக்கொண்டிருந்தனரே யன்றி ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கவில்லை. இன்றும் அதே நிலையே காணப்படுகின்றது. இரு தரப்பினருமே ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளக்கூடிய நிலையில் இன்று இல்லை. இக்கருத்து தற்போதைய நிலைதொடர்பில் இரு விடயங்களை சுட்டிநிற்கின்றது.

இல்லாத சமாதான செயன்முறை

முதலாவது விடயம், துரதிஷ்டவசமான முறையில், இன்று உண்மையில் சமாதான செயன்முறை ஒன்று இல்லை என்பதாகும். அரசியல் அவதானிகளும் இலங்கை மக்களில் பெரும்பான்மையினரும், ஏன் சர்வதேச சமூகமும் கூட சமாதான செயன்முறை இன்னும் நடைமுறையில் உள்ளது போன்றதொரு தோரணையில் பேசியும் செயற்பட்டு வருகின்றனர். இது வெறும் கற்பனைவாதம் மட்டுமே ஆகும். ஆயினும் இம்மனோபாவம் யதார்த்தத்தை ஏற்பதில் உள்ள அச்சத்தையும், மோதல் தரப்பினரை பேச்சுவார்த்தை மேடைக்கு கொண்டுவந்து விடலாம் என்கின்ற நப்பாசையையும் பிரதிபலிக்கின்றது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

மேலும் அரசும், புலிகளும் கூட சமாதான செயன்முறை நடைமுறையில் உள்ளது போன்றதொரு தோரணையில் பேசிவருவார்களாயின் அது சர்வதேச சமூகத்தை சாந்தப்படுத்துவதற்காகவேயன்றி வேறில்லை. குறிப்பாக அரசாங்கத் தரப்பும் "நல்ல நடிகர்களை" கொண்டுள்ள போதும் இடையிடையே உண்மையை கக்கிவிடுவார்கள். உதாரணமாக அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர போன்றோர் சமாதான செயன்முறை நாம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இடைநிறுத்தப்படவில்லை, அது கடந்த ஆண்டு ஏப்ரல் மாதமே நிறுத்தப்பட்டு விட்டதென பலதடவைகள் வாதிட்டுள்ளனர். இதன் மூலம் அவர்கள் இன்று சமாதான செயன்முறை ஒன்று இல்லை என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எனினும், கடந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் இடைநிறுத்தப்பட்டது, பேச்சுவார்த்தைகளே அன்றி சமாதான செயன்முறை அல்ல. ஏனெனில், நேரடிப் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டபோதும், இரு தரப்பினருக்கும் இடையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகள் நிலைத்திருந்தன. அத்துடன் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகள் உறுதியான முறையில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. உதாரணமாக நேரடிப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்ட பின்னரே அரசாங்கம் இடைக்கால சபைக்கான தனது யோசனைகளை சமர்ப்பித்திருந்தது.

யோசனைகளை நிராகரித்த புலிகள் தமது சொந்த யோசனைகளை முன்வைப்பதற்கான செயற்பாடுகளை சர்வதேச மட்டத்தில் முன்னெடுத்திருந்தனர். புலிகளின் யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டபோது, முன்வைக்கப்பட்ட யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு நேரடிப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க இரு தரப்பினரும் இணங்கியிருந்தனர்.

அவ்வகையில் நோக்குகையில் 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆம் திகதி சமாதான செயன்முறை ஒன்று இருந்ததென்பதும் அது இன்று இல்லை என்பதும் தவறான கூற்றுக்கள் அல்ல.

அவ்வாறாயின் இன்று நாம் எங்கு நிற்கின்றோம் என்பது முக்கியமானதொரு கேள்வி. தீவிரமானதொரு மட்டத்தில் சிந்திப்பதாயின் நாம் இன்று மீண்டும் யுத்தத்தினுள் நுழைந்துவிட்டோம் என்று கூறப்படலாம். ஆனால், இன்றைய யுத்தம் முன்னைய யுத்தம் போலன்றி மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது இன்று யுத்தம் பிராந்திய ரீதியாகவும், மனிதவள ரீதியாகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பிராந்திய ரீதியாக மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள யுத்தம், மெதுவாக தலைநகரை நோக்கியும் பரவத்தொடங்கியுள்ளது. இதன் கருத்து யாதெனில் மட்டுப்படுத்தப்பட்ட யுத்தத்தை அதே அமைப்பில் நீண்டகாலம் பேணிக்கொள்வது கடினமானதென்பதாகும். சமாதான செயற்பாடுகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின் கொழும்பு யுத்தகோலம் பூணும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பது உணரப்படலாம்.

அதேசமயம், யுத்தம் மனிதவள ரீதியாகவும், மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இன்று நாம் முகம் கொடுக்கின்ற "குளிர் யுத்தம்" புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலானதன்றி புலிகளுக்கும் அரசுடன் சேர்ந்து செயற்படுகின்ற குழுக்களுக்கும் இடையிலானது. அத்துடன் இன்றைய யுத்தத்தில் நேரடியாக ஈடுபட்டுள்ளோர் தொகையும் மிகக் குறைவானதாகும். எனவே தான் நாம் இன்று மட்டுப்படுத்தப்பட்ட குளிர் யுத்தம் ஒன்றினுள் நின்று கொண்டிருக்கின்றோம் என கூறவேண்டியுள்ளது.

எனவே, இன்றிருக்கின்ற நிலை மோசமானதும் அபாயகரமானதுமான ஒன்று என்பது உணரப்படவேண்டும். அவ்வாறு உணரப்படும் பட்சத்திலேயே இவ் அபாயகரமான நிலையில் இருந்து மீளக்கூடிய காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். மாறாக சமாதான செயன்முறை தொடர்ந்துள்ளது. பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு விடும் என்பன போன்ற தவறான அபிப்பிராயங்கள் இந்நாட்டை மோசமான ஒரு நிலைக்கு தள்ளிவிடலாம். குறிப்பாக இவ்வபாயகரமான நிலையை இந்நாட்டு மக்கள் உணர்வது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் தேவை

இரண்டாவது விடயம், 2000ம் ஆண்டு காணப்பட்டது போலவே காத்திரமான முறையில் சமாதானம் நோக்கிய நகர்வை மேற்கொள்ள எமது அரசியல் கட்டமைப்பில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படவேண்டியது அவசியமாகியுள்ளது. குறிப்பாக தென்னிலங்கை அரசியலில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படாதவரை சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்வது கடினமானதாகவே தோன்றுகின்றது. அவ்வகையில் குறிப்பிடப்படக்கூடிய சில அம்சங்கள் தற்போதைய அரசாங்கத்தின் சிறுபான்மை அந்தஸ்து மற்றும் அரசாங்கத்தின் கட்டமைப்பு போன்றவையாகும். ஒரு அரசாங்கம் சிறுபான்மை அரசாங்கமாக இருக்கின்றபோது இயல்பாகவே அதன் செயற்திறன் மந்தமாகிவிடுகின்றது. அது இவ்வரசாங்கத்திற்கும் பொருத்தமானது. சில அவதானிகள் ஏற்கனவே அரசாங்கமொன்று இருக்கின்றதா இல்லையா என்கின்ற தொனியில் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். இத்தகையதொரு நிலையில் புறையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும்படி இவ்வரசாங்கத்தை எதிர்பார்ப்பது நியாயமற்றதாக இருக்கலாம்.

எனினும் இதனிலும் முக்கியமான பிரச்சினை அரசாங்கத்தின் கட்டமைப்பாகும். குறிப்பாக அரசாங்கத்தின் முக்கியமானதொரு பகுதியாக ஜனதா விமுத்தி பெரமுன இருப்பது சமாதான செயன்முறை மட்டில் பிரச்சினைக்குரியதே. புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதை எதிர்ப்பதில் ஜே.வி.பி. தெளிவாகவே உள்ளது. இவ்வடிப்படையில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்ற முதலாவது நாள் சுதந்திர முன்னணி கூட்டரசாங்கத்தின் கடைசி நாளாக இருக்குமென விமல் வீரவன்ச பிரகடனப்படுத்தியுள்ளார். ஆயினும் உண்மை நிலை என்னவெனில், இடைக்கால சபை யோசனைகள் அடிப்படையில் மட்டுமன்றி வேறெந்த அடிப்படையிலும் கூட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதை ஜே.வி.பி. அனுமதிக்கப்போவதில்லை. கொள்கையளவில் ஜே.வி.பி. அதிகாரப்பரவலாக்கம், சமாதான பேச்சுவார்த்தைகள் என்பவற்றிற்கு எதிரானது என்பதில் எவ்வித மாற்றமும் இன்னும் ஏற்படவில்லை. இத்தகைய நிலையில், இவ்வரசாங்கம் சமாதானத்தை நோக்கிய உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது.

எனவே, இவ்வரசாங்கத்தின் தந்திரோபாயமாக அமையப்போவது முழுமையான யுத்தமொன்று ஏற்படாது தடுத்துக் கொள்ள முற்படுகின்ற அதே சமயம் வாயளவில் சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதாகும். எனவே தான் உண்மையான முறையில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட, குறிப்பாக தென்னிலங்கை அரசியலில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படவேண்டியது அவசியம் எனக் கருதவேண்டியுள்ளது.

(08. 08. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31

சந்தான தலைமையை ராஜிநாமா செய்த ஜனாதிபதி

சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி குமாரதுங்க சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியில் இருந்து இராஜிநாமா செய்திருந்தமை யாவரும் அறிந்ததே. திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையின் பின்னணி யாது என்பது பற்றிப் பல பத்திரிகைகளும் பல்வேறுபட்ட அபிப்பிராயங்களை முன் வைத்திருந்தன. அவற்றில் பிரதானமான இரண்டு விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. முதலாவதாக, ஜனாதிபதியின் ஜே.வி.பி.மீதான அதிருப்தியின் காரணமாக இது மேற்கொள்ளப்பட்டதாக சிலர் கருதினர். வேறுசிலர் அநுர பண்டாரநாயக்கவை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகத் தயார் செய்வதற்கான ஒரு ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக இதனைக் கருதினர்.

இவற்றுள் இரண்டாவது காரணி சுவையானதும் முக்கியத்துவ முடையதுமாகும். ஜனாதிபதி குமாரதுங்க அநுர பண்டாரநாயக்கவை ஜனாதிபதி வேட்பாளராக அடுத்த தேர்தலுக்குத் தயார் செய்ய முன்வருவாரேயானால் அதன் கருத்து அரசியலமைப்பு மாற்றமொன்றின் மூலம் தனது அரசியல் வாழ்வை நீடித்துக் கொள்ளும் முயற்சி வெற்றியடைவது கடினமானது என்கின்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளும் நிலையை அவர் அடைந்து விட்டார் என்பதாகும். அரசியலமைப்பு நிர்ணய சபை ஒன்றினூடாக யாப்பில் திருத்தங்களைக் கொண்டுவருவதன் மூலம் பாராளுமன்ற முறைமைக்கு மீண்டும் செல்வது இலகுவானதல்ல என்பது எமது அரசியலை உன்னிப்பாக அவதானித்துவரும் எவருக்கும் இலகுவில் புலப்படக்கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மை?

அரசியல் நிர்ணய சபை ஒன்றை நாடுவதாயின் ஆகக் குறைந்தது பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை பலமாவது அரசாங்கத்திற்கு இருக்க வேண்டியதவசியம். அத்தகைய ஒரு சாத்தியம் அண்மைய எதிர்காலத்தில் ஏற்படுமென எதிர் பார்ப்பதற்கில்லை. அத்துடன் அரசியலமைப்பு நிர்ணய சபையொன்றினூடாக யாப்பை மாற்றுவதை ஆதரிப்பவர்கள் அத்தகைய செயற்பாட்டிற்கு ஜே.வி.பி. ஆதரவளிக்கும் என்கின்ற எடுகோளின் அடிப்படையிலேயே தமது முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இதுவும் அடிப்படையில் தவறானதொரு அணுகுமுறையாக இருக்கலாம்.

அதாவது அரசியலமைப்பு மாற்றமடைகின்ற போது தேர்தல் முறைமையும் மாற்றமடையும் என்பது ஓரளவு நிச்சயமானது. தேர்தல் முறைமை மாற்றப்படுவதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்குக் காணப்படக் கூடிய அதே சிக்கல் ஜே.வி.பி.யிற்கும் காணப்படும் என்பதும் நிச்சயமானது. 2000 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் பத்து ஆசனங்களை மட்டுமே கொண்டிருந்த ஜே.வி.பி.இன்று 39 ஆசனங்களைக் கொண்டுள்ளதாயின் அது இருக்கின்ற விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையினாலேயே அன்றி வேறில்லை. கடந்த தேர்தலில் சில ஜே.வி.பி.உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களிலும் அதிகமான வாக்குகளை பெற்றிருந்த போதும் சுதந்திரக் கட்சியின் வாக்கு வங்கி அற்றவகையில் பெருவாரியான தொகுதிகளில் ஜே.வி.பி வெற்றியடைவது சந்தேகத்திற்குரியதே. எனவே, தேர்தல் முறைமையுடன் கூடிய அரசியல் அமைப்பு மாற்றம் ஒன்றை ஜே.வி.பி.ஆதரிக்கும் என எதிர்பார்ப்பது தவறானதாக இருக்கக்கூடும்.

ஆயினும், உடனடி நிலையில் ஜே.வி.பி.யின் ஆதரவு பற்றிய கேள்வி நடைமுறை முக்கியத்துவம் இல்லாதிருக்கின்றமையினால். அக்கட்சி இது தொடர்பில் மௌனத்தைக் கடைப்பிடித்து வருகின்றது. அரசியல் அமைப்பு நிர்ணய சபைக்கான காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது ஜே.வி.பியின் சுய ரூபம் தெரியவரும்.

இந்த உண்மை ஜாதிக ஹெல உறுமயவிற்கும் பொருத்தமானது. பழைய முறைமையின் கீழ் ஜாதிக ஹெல உறுமய ஒரு ஆசனத்தைக் கூட வெற்றியீட்டியிருக்க முடியாது. எனவே, தேர்தல் முறைமையுடன் கூடிய அரசியல் அமைப்பு மாற்றத்திற்கு ஹெல உறுமயவின் ஆதரவும் கிடைக்கப்போவதில்லை. எனவே, ஜனாதிபதி தனது அரசியல் வாழ்வை நீடித்துக் கொள்ளும் திட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திருப்பாரேயானால் இத்தகைய யதார்த்தங்களை உணர்ந்து கொண்டமையினாலேயே ஆகும். இத்தகைய ஒரு பின்னணியிலேயே ஜனாதிபதி இரண்டாவது சிறந்த தெரிவை நாடியுள்ளார் என நம்பப்பட்டது. முதலாவது தெரிவான ஜனாதிபதியின் அரசியல் வாழ்வை நீடித்துக் கொள்வதென்பது இயலாத பட்சத்தில் இரண்டாவது தெரிவாகிய சுதந்திரக் கட்சியையும் ஜனாதிபதிப் பதவியையும் தனது குடும்பத்தின் கட்டுப் பாட்டினுள் வைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதை உத்தரவாதப்படுத்தும் நோக்கிலானதே ஜனாதிபதியின் இராஜிநாமா என நம்பப்பட்டது.

இரண்டாவது தெரிவு

ஆயினும் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப் பதவிக்கு பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ரட்ணசிறி விக்ரம நாயக்க நியமிக்கப்பட்டதும் இவ்வாதம் தவறானது எனக் கூறப்பட்டது. எனினும், கவனிக்கத்தக்கது யாதெனில், இந்த அபிப்பிராயம் பூரணமாகத் தவறானது அல்ல என்பதாகும். ஏனெனில், ஜனாதிபதியின் தற்கால செயற்பாடுகளையும், அவரது சொற்பொழிவுகளையும் கூர்மையாக அவதானிக்கின்ற போது அவர் இன்னும் அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்கின்ற நம்பிக்கையைப் பூரணமாக இழந்துவிடவில்லை என்பது புலப்படும். அதாவது அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதற்கு அவர் இன்னும் தயாராகவில்லை. ஆனால் அது இலகுவில் சாத்தியமானதல்ல என்பதையும் அவர் நன்கு உணர்ந்தே வைத்துள்ளார். எனவே, சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை இராஜிநாமா செய்தமை ஒரு பாதுகாப்பு நடவடிக்கையே அன்றி வேறில்லை.

உடனடி நிலையில் அரசியலமைப்பு திருத்தப்படுவதுடனோ அல்லது ஜனாதிபதி சந்திரிக்கா அரசியலில் நீடித்து இருப்பதினாலோ அநுர பண்டாரநாயக்கவிற்கு உடன்பாடு இல்லை என்பது வெளிப்படையானது. ஜனாதிபதியின் காலம் முடிந்துவிட்டது எனவே, "முடிக்குரிய உரிமையை" தனக்கு வழங்கிவிட்டு அவர் ஓய்வு பெற வேண்டுமென்பதே அநுரவின் கருத்தாகும். இக்கருத்தை அவர் சாடைமாடையாக அவ்வப்போது கூறிவருவதும் குறிப்பிடத்தக்கதே ஆகும். இந்நிலையில் சுந்திரக் கூட்டணியினதோ அல்லது சுதந்திரக் கட்சியினதோ தலைமைப் பதவிக்கு அநுர நியமிக்கப்படுவது ஜனாதிபதியின் எதிர்காலத் திட்டத்திற்கு தடையாக அமைந்து விடக் கூடும்.

எனவே, அப்பதவி உடனடி நிலையில் ரட்ண சிறி விக்ரமநாயக்கவிற்கு வழங்கப்பட்டுள்ளது. ரட்ண சிறி விக்ரம நாயக்க உண்மையில் ஓய்வு பெற்றுவிட்ட ஒரு அரசியல்வாதி என்பதனாலும், ஜனாதிபதியின் தீவிர விசுவாசி என்பதனாலும் அவருக்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளது. தேவை ஏற்படுகின்ற போது அப் பதவி அனுரவிற்கு வழங்கப்படலாம். ஆனால், கூட்டமைப்பின் உயர் பதவிகள் வழங்கப்படுவதன் மூலம் மட்டும் அனுர வெற்றிகரமான ஒரு வேட்பாளராக மாறிவிடுவாரா என்பது வேறுவிடயம்.

சமாதானம்

எவ்வாறாயினும் சுவாரசியமானது யாதெனில் ஜனாதிபதியின் இராஜிநாமா தொடர்பில் அவரது செயலகத்தினால் கூறப்பட்ட விளக்கம் ஆகும். செயலக அறிக்கையின் படி சமாதான செய்முறையில் கூடுதலான நேரத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியையும் செலவழித்து அதனை ஆரோக்கியமான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காகவே பதவி கைவிடப்பட்டது எனக் கூறப்பட்டிருந்தது. ஜனாதிபதி தனது விவாதத்திற்கிடமான நடவடிக்கைகளுக்கு தேசிய நலன் என்கின்ற முலாம் பூசுவதில் கைதேர்ந்தவர் என்பதை கடந்த காலத்தில் பல முறை நிரூபித்திருக்கிறார். கடந்த ஆண்டு ஐ.தே.முன்னணி அரசாங்கத்திடமிருந்து மூன்று அமைச்சுப் பொறுப்புக்கள் பறிக்கப்பட்ட போது தேசிய ஒருமைப்பாட்டைப் பேணிக்கொள்வதற்காகவே அவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்பட்டமை இங்கு நினைவு கூரத்தக்கது.

அத்துடன் ஜனாதிபதி செயலகத்தின் விளக்கம் குறிப்பாக மக்கள் மத்தியில் மயக்கத்தை ஏற்படுத்தக் கூடியது என்பதிலும் சந்தேகமில்லை. அதாவது இதுவரை காலம் சமாதான முயற்சிகள் காத்திரமான ஒரு முறையில் முன்னெடுக்கப்படவில்லையாயின் அது ஜனாதிபதியின் நேரமின்மையினாலேயே ஆகும் என்கின்ற (தவறான) அபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடியது. ஆயினும் இன்று சமாதான செயன்முறை ஒன்று இல்லாதிருக்கின்ற அதேசமயம் யுத்த நிறுத்த உடன்படிக்கை வீழ்ச்சியின் விளிம்பில் இருக்கின்றதாயின் அதற்கான அடிப்படைக் காரணம் தென்னிலங்கையில் ஏற்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட அடிப்படையான சில தவறுகளே ஆகும். அத்தவறுகளில் ஒன்று ஜே.வி.பி பாரிய ஒரு சக்தியாக வளர விடப்பட்டமையும், அரசாங்கத்தின் ஒரு அங்கமாக ஆக்கப்பட்டமையும் ஆகும். எனவேதான் இன்று சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுப்பதிலுள்ள பிரதான தடை ஜே.வி.பியே எனக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகத்தின் விளக்கத்திற்கு இன்னொரு பரிமாணமும் உண்டு. உண்மை நிலையில் சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமாக முன்னெடுக்க முடியாத ஒரு நிலையில் மோதற் தரப்பினர் மேற்கொள்ளக் கூடிய ஒரே நடவடிக்கை சமாதான முயற்சிகளுக்கு வாயளவில் சேவை செய்வதே ஆகும். இராஜிநாமாவிற்கான ஜனாதிபதியின் விளக்கமும் அவ்வகையைச் சார்ந்ததே.

மேலும் ஜனாதிபதியின் இராஜினாமா சமாதான முயற்சிகளை மேலும் பாதிக்குமே அன்றி உதவிகரமானதாக அமையப் போவதில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் ஜே.வி.பி. யின் கடும் போக்கு யாவரும் அறிந்ததே. இந்நிலையில் பேச்சுவார்த்தைகளுக்கு சார்பாக அபிப்பிரயாங்களும் ஆதரவும் பெறப்பட வேண்டுமாயின், கோட்பாட்டளவில் ஒரு உறுதியான தலைமைத்துவத்தின் மூலமே அது மேற்கொள்ளப்படலாம். அத்தகைய உறுதித் தன்மை ஜனாதிபதியிடம் காணப்படுகின்றதே அன்றி, ரட்ணசிறி விக்ரமநாயக்க போன்றவர்களிடமல்ல. உண்மையில் ரட்ணசிறி விக்ரமநாயக்காவின் நியமனத்தின் மூலம் சுதந்திரக் கூட்டமைப்பின் தீவிரவாதப் போக்கு மெருகூட்டப்பட்டுள்ளதே அன்றி வேறில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் பொதுவாக முன்வைக்கப்படுகின்ற ஒரு அபிப்பிராயம், இப்பொழுது ஜே.வி.பி யின் வலையில் இருந்து ஜனாதிபதி மீண்டுள்ளமையினால், அவர் தன்னிலையில் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியும், அல்லது கண்டுவிடுவார் என்பதாகும். இதுவும் ஒருவகையில் தவறான அபிப்பிராயம் ஆகும். ஏனெனில் (1) அரசாங்கத்தின் ஆதரவின்றி ஜனாதிபதி தன்னிலையில் எவ்வித செயற்பாடுகளையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாதென்பது, (2) தென்னிலங்கை மக்களின் பெரும்பான்மையினரின் ஆதரவற்ற வகையில் முன்வைக்கப்படுகின்ற எத்தகைய தீர்வும் வெற்றியளிக்கவோ அல்லது நிலைத்திருக்கவோ போவதில்லை என்பது விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

(22 . 08 .2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32

பெருகிவரும் அரசியல் யோசனைகளும் அருகி வரும் நல்லிணக்கமும்

கடந்த ஆண்டு நவம்பர் நான்காம் திகதி முதல் இந்நாட்டு மக்களிடையே பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்த சமாதான முயற்சிகள் படிப்படியாக அதேசமயம் சீரான ஒரு முறையில் சரிவடைந்து வருகின்ற. அதே வேளை, கடந்த ஓரிரு மாதங்களில் யுத்த அச்சம் அதிகரித்து வருவதும் யாவரும் அறிந்ததே இதனிடையே ஒரு வகையில் ஒரு முரண்பாடு என்று கூறக் கூடிய வகையில் இனப்பிரச்சினைத் தீர்விற்கான யோசனைகளின் எண்ணிக்கையும் பாரிய அளவில் அதிகரித்து வருகின்றன.

இது ஒரு முரண்பாடான அபிவிருத்தி எனக் கூறப்படுவதன் காரணம் யாதெனில், கடந்த சில வருடங்களின் முன்னர் அரசியல் தீர்வு அல்லது அரசியல் யோசனை என்ற பேச்சுக்கே இடமற்ற ஒரு நிலை காணப்பட்டிருந்தது. யுத்தத்தின் மூலம் சமாதானம் கட்டியெழுப்பப்பட்டலாம் எனும் நம்பிக்கை இவ்வடிப்படை-யிலேயே தோற்றம் பெற்றிருந்தது. ஆயினும் அண்மைக் காலங்களில் அரசியல் யோசனைகள் புற்றீசல் போல் பெருகி வருகின்றன. இதில் துரதிஷ்ட வசமானது யாதெனில் யோசனைகள் அதிகரித்து வருகின்ற அதே போக்கில் மோதற் தரப்பினருக்கிடையிலான நல்லிணக்கமும் சமாதானத்திற்கான சாத்தியமும் குறைந்து வருவதாகும்.

எவ்வாறாயினும் கடந்த வாரம் ஜனாதிபதி புதிய யோசனைகள் பற்றி பல்வேறு விடயங்களை பிரகடனப்பத்தியிருந்ததுடன், முஸ்லிம் காங்கிரசும் கூட அரசியல் தீர்விற்கான தனது யோசனைகளும் தயார் என அறிவித்திருந்தது. இந்த யோசனைகளுடன் அல்லது யோசனைகள் பற்றிய செய்திகளுடன் தொடர்புடைய சில பரிமாணங்களை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

புதிய யோசனைகள்

விரும்பியோ விரும்பாமலோ தற்கால இலங்கை அரசியல் பற்றிப் பேசுகையில் சிக்கல்கள், தெளிவற்ற தன்மைகள் பற்றியே பேசவேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியம் ஏற்பட்டுள்ளது. இதில் ஜனாதிபதியின் பங்கு குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல. அவ்வகையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பேட்டியொன்றில் இடைக்கால நிர்வாகம் பற்றிய பல யோசனைகளை தாம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்திருந்ததாகவும் அவற்றுக்குப் புலிகளிடம் இருந்து தக்க பதில் கிடைக்கவில்லை எனவும் அவர் கூறியிருந்தார்.

அதே சமயம், அவ்விதமான யோசனைகளெதுவும் தமக்கு அனுப்பப்படவில்லை எனப் புலிகள் கூறியிருந்தனர். மீண்டும் ஓர் குழப்பம். அதிஷ்டவசமாகப் பேட்டியின் பின்னர் அரசாங்கத் தரப்பில் இருந்து வெளியிடப்பட்ட சில அறிக்கைகள் மாற்று யோசனைகள் தற்போது தயார்-படுத்தப்பட்டு வருவதாகக் கூறியிருந்தன. அதாவது புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளுக்கு எதிரான மாற்று யோசனைகள் அரசாங்கத் தரப்பில் தயார் செய்யப்பட்டு வருகின்றனவாம்.

புதிய சந்தானய அரசாங்கத்தினால் மாற்று யோசனைகள் தயாரிக்கப்படுவதற்கான தேவை யாது? ஒன்று, முன்னைய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட மூன்று யோசனைகளுடனும் இவ்வரசாங்கத்திற்கு உடன்பாடு கிடையாது. எனவே, தற்போது தமது சொந்த யோசனைகளை முன்வைக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கலாம். இரண்டாவது, புலிகளின் இடைக்கால சபைக்கான யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதில் குறிப்பாக ஜே.வி.பி.யிடமிருந்து எதிர்நோக்கும் சவால்களை கையாள்வதற்காகவே புதிய யோசனைகள் தயார் செய்யப்படுகின்றன என்ற பாணியிலான சில விளக்கங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இவற்றில் சில அடிப்படையான முரண்பாடுகள் காணப்படுகின்றன. அதாவது, முன்னைய அரசாங்கத்தின் யோசனைகளுடன் இவ்வரசாங்கம் உடன்படவில்லை எனவே, மாற்று யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன எனக் கூறப்படுகின்ற போது, எழுகின்ற உடனடிக் கேள்வி யாதெனில் புதிய யோசனைகள் முன்னைய அரசாங்கத்தின் யோசனைகளிலும் கூடிய அதிகாரங்களையா அல்லது குறைந்த அதிகாரங்களையா கொண்டிருக்கும் என்பதாகும். இப் பரிமாணம் அதி முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், முன்னைய அரசாங்கம் மூன்றாவதாகவும் இறுதியாகவும் முன்வைத்த யோசனைகள் முக்கியமான இரு தரப்பினரால் நிராகரிக்கப்பட்டிருந்தன.

இந்த யோசனைகள் போதுமானவை அல்ல எனப் புலிகளாலும், தேவையற்றது என ஜே.வி.பி.யினாலும் நிராகரிக்கப்பட்டிருந்தமை சுட்டிக் காட்டப்படக்கூடியது. வேண்டியது. இவ்விரு தரப்பினரதும் நிலைப்பாடுகளிலும் மாறுதல்கள் எதுவும் ஏற்பட்டிராத நிலையில், யூகிக்கக் கூடியது புதிய யோசனைகள் முன்னைய யோசனைகளிலும் குறைவானதாக இருப்பின் புலிகளாலும் கூடியதாக இருப்பின் ஜே.வி.பி.யினாலும் உடனடியாக நிராகரிக்கப்படும் என்பதாகும். இத்தகைய ஒரு பின்னணியில் புதிய யோசனைகளின் பயன்பாடு யாது என்பது சர்ச்சைக்கு உரியதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை நோக்கம்

எனவே, புதிய யோசனைகள் தயாரிக்கப்படுவதன் நோக்கமும் அதன் பயன்பாடும் வேறு அடிப்படைகளைக் கொண்டவையாய் இருக்கலாம். முதலாவதாக, இத்தகைய யோசனைகளை முன்வைப்பதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்கின்ற செய்தி அரசாங்கத்திற்கு தற்போது உள்ள நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கு அல்லது நிச்சயமான கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தேவையான கால அவகாசத்தை வழங்கும்.

உதாரணமாக யுத்த நிறுத்த உடன்படிக்கை உடைந்து கொண்டிருக்கிறது, அல்லது நாடு யுத்த விளிம்பிற்கு தள்ளப்பட்டுவிட்டது போன்ற அச்சங்களை புதிய யோசனைகளின் செய்தி சற்றே பலவீனப்படுத்தியுள்ளது என்பது நிச்சயமானது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் சமாதான செயன்முறை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்ற தோற்றப்-பாட்டை இச்செய்தி ஏற்படுத்தியுள்ளது.

இத்தோற்றப்பாடு இன்றுள்ள நிலையில் அரசாங்கத்திற்கு மிகவும் அத்தியவசியமானது. இதன் வெளிப்பாடே அரசாங்கத்தின் முக்கிய தலைவர்கள், யுத்த முழக்கமிடுகின்ற அதேசமயம், தமக்கு யுத்தத்திற்கு திரும்பிச் செல்வதற்கான விருப்பமோ அல்லது வீதித் தடைகளையோ அல்லது சோதனைச் சாவடிகளையோ ஏற்படுத்துவதற்கான எண்ணமோ இல்லை என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர். எளிமையான வகையில் கூறுவதானால் யுத்தத்திற்கு மீண்டும் செல்வதை மக்கள் விரும்பவில்லை என்பதை அரசாங்கம் தெளிவாகவே புரிந்து வைத்துள்ளது.

அதேசமயம் இச் செய்தி ஜே.வி.பி. பிரச்சினையை கையாள்வதற்கும் உதவியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. அதாவது, ஜே.வி.பி. அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் யோசனைகளை எதிர்க்கும் என்பதை அதன் தலைவர்கள் உறுதியாகவே எடுத்துரைத்துள்ளனர். ஆனால், ஜே.வி.பியினால் யோசனைகள் தயார் செய்யப்படுவதை எதிர்க்க முடியாது. அவ்விதம் எதிர்க்கவேண்டிய தேவையும் அதற்கு இல்லை. எனவே யோசனைகள் தயார் செய்யப்படுகின்றன என்கின்ற விடயம் அல்லது செய்தி ஒரு இக்கட்டு நிலையில் இருந்து அரசாங்கம் ஜே.வி.பி. ஆகிய இரு தரப்பினரையும் மீட்டுள்ளது எனக் கூறப்படலாம்.

அதேசமயம் இச் செய்தி ஒரு வகையில் விடுதலைப் புலிகளையும் இக்கட்டு நிலைக்கு தள்ளியுள்ளதுடன், அவர்கள் மேற்கொள்ளக்கூடிய ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளை ஓரளவிற்கு மட்டுப்படுத்தியுள்ளது எனவும் கூறலாம். அதாவது புதிய யோசனைகள் தயாரிக்கப்படுகின்றன என்று கூறியுள்ளதன் மூலம் புலிகளின் யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட முடியாது என அறுதியிட்டுக் கூறுவதை அரசு தவிர்த்துக் கொண்டுள்ளது. இது அரசாங்கத்தின் நோக்கில் இருந்து அவதானிக்கையில் புத்திசாதுரியமான ஒரு செயற்பாடாக வர்ணிக்கப்படலாம். எனவே, சமாதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறையுடன் தொடர்புடைய காத்திரமான ஒரு நடவடிக்கையில் தோற்றத்தை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கின்ற நிலையில் புலிகள் ஒருதலைப்பட்ச தீர்மானங்கள் எதனையும் மேற்கொள்வது கடினமானதாகவே இருக்கும். எனவே புதிய யோசனைகளை தயாரிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என கூறப்படுவது சமாதான முயற்சிகளுக்கு பாரிய உந்துதலை வழங்க இயலாது இருப்பினும் அரசாங்கத்திற்கு சாதகமானது என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இப்போதுள்ள நிலையில் அரசாங்கம் விரைவில் யோசனை ஒன்றை தயாரித்து புலிகளிடம் ஊத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஆனால், அவ்விதம் நோர்வே அரச அனுசரணையாளரூடாகப் புலிகளுக்குப் புதிய யோசனை ஒன்று சமர்ப்பிக்கப்படுமாயின் அது பந்தை காத்திரமான ஒரு முறையில் புலிகளின் பக்கம் தள்ளிவிடும். கடந்த ஒக்ரோபர் மாதம் தமது யோசனைகளை உத்தியோகபூர்வமாக சமர்ப்பித்திருந்ததன் மூலம் புலிகள் பந்தை அரசாங்கத்தின் பக்கம் தள்ளிவிட்டிருந்தனர். அதன் மூலம் அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு கைமாற்றப்பட்டிருந்தது. ஆனால், உடனடி நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகள் எதனையும் மேற்கொள்ள முடியாத நிலையில் அரசாங்கம் அழுத்தத்திற்குட்பட்டிருந்தது. புதிய யோசனைகளை சமர்ப்பிக்கப்பட்டால் அவ் அழுத்தம் மீண்டும் புலிகளுக்கு கைமாற்றப்பட்டுவிடும். இந்நிலையில், புலிகள் புதிய யோசனைகள் நிராகரிப்பினும் கூட அழுத்தத்திற்குட்பட்ட நிலையிலேயே அது மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மு.கா. யோசனைகள்

இந்நிலையில் கடந்த வாரம் முஸ்லிம் காங்கிரசும் புலிகளின் இடைக்கால அதிகாரசபைக்கு எதிரான தனது சொந்த யோசனைகள் தயாரிக்கப்பட்டு விட்டதாக அறிவித்துள்ளது. கடந்த சில காலங்களாகவே குறிப்பாக புலிகளின் யோசனைகள் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், முஸ்லிம் காங்கிரசும் யோசனை ஒன்றை சமர்ப்பிக்கும் என்று தொடர்ச்சியாக கூறி வந்துள்ளது. இச்செயற்பாடுகள் பற்றிய அபிவிருத்திகள் இரகசியமான முறையில் கையாளப்பட்டு வந்துள்ளபோதும், இறுதியில் முஸ்லிம்களின் யோசனைகள் தயாரிக்கப்பட்டுவிட்டன என்று கூறப்படுவது வரவேற்கப்படக்கூடியது.

ஆயினும் ஏமாற்றத்திற்குரியது யாதெனில் இந்த யோசனைகள் பொதுமக்கள் பார்வைக்கு உரியது அல்ல என்றும் சரியான சந்தர்ப்பத்தில் தேவையான தரப்பினருக்கும் சமர்ப்பிக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளமை ஆகும். யோசனைகள் தொடர்பில் முஸ்லிம் காங்கிரசினால் கூறப்படுகின்ற விடயங்களில் இருந்து புரிந்து கொள்ளப்படக் கூடியவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) இந்த யோசனைகள் புலிகளின் யோசனைகளின் அடிப்படைகளை பெருமளவிற்கு நிராகரித்துள்ளன.

(2) யோசனைகள் தயாரிக்கப்பவடுதில் இலங்கைவாழ் முஸ்லிம்களின் பங்களிப்பு பெரிதும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிலையிலேயே இருந்துள்ளது என்பவையாகும்.

இவற்றில் இரண்டாவது விடயம் முக்கியமானது. இன்றுவரை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுகள் எதுவும் சம்மந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்புடைய மக்களின் அபிலாசைகளையும், விருப்பு வெறுப்புக்களையும் கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கவில்லை. இவ்விடயத்தில் அரசியல் தலைவர்கள் சமாதான செயன்முறை தமக்கு மட்டுமே சொந்தமானது என்ற தோரணையில் செயற்பட்டு வருவதும், மக்களின் அபிப்பிராயங்களை அறிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை எனக் கருதி வருவதும் தெளிவானது. இது ஜனநாயக ரீதியானது அல்ல. இதற்கு முஸ்லிம் காங்கிரசின் யோசனைகள் மட்டுமல்ல, அரசாங்கத்தின் யோசனைகளோ அல்லது புலிகளின் யோசனைகளோ விதிவிலக்கானவை அல்ல.

ஆயினும், இப்போதுள்ள நிலையில் முக்கியமானது யாதெனில், இன்று இலங்கையில் உத்தியோகப் பற்றற்ற "பொது சமாதான செயன்முறை" ஒன்று இருந்து வருவதாகும். புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான "உத்தியோக பூர்வமான சமாதான செயன்முறை" நிலைகுலைந்துள்ள போதும் இப் "பொது சமாதான செயன்முறை" தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இன்று சமாதானத்துடன் தொடர்புடைய பொதுமக்களும் அக்கறையுடையவர்களும், ஆர்வலர்களும், கல்விமான்களும் உத்தியோகபூர்வமற்ற ஒரு முறையில் சமாதானத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளை ஆய்வு செய்தும் கலந்துரையாடியும் வருகின்றனர். அவ்வகையில், இன்று புலிகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகளும், அரசாங்கத்தின் யோசனைகளும் முக்கிய அவதானத்தைப் பெற்றுள்ளன. இவ் அவதானம் எதிர் காலத்தில் உத்தியோகபூர்வ பேச்சு வார்த்தைகளுக்கு ஓர் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கும். எனவே, முஸ்லிம்கள் தமது அபிலாசைகளையும் யோசனைகளையும் "ஒளித்து வைக்காமல்" பொதுமக்களின் அவதானத்திற்கு அதனை முன்வைப்பது அவசியமானது. அப்பொழுது முஸ்லிம்களின் யோசனைகளும் கூட "உத்தியோகபூர்வமற்ற" முறையில் ஆராயப்பட்டு அபிவிருத்தி செய்யப்படலாம். முஸ்லிம் காங்கிரசின் யோசனைகள் என்ன என்பதை அறிந்து கொள்ளும் ஜனநாயக உரிமை முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி இந் நாட்டின் குடிமக்கள் யாவருக்கும் உண்டு. உண்மையில் இப்பொழுது ஒளித்து வைக்கப்பட்டிருந்து "சரியான சந்தர்ப்பத்தில்" அவிழ்த்து விடப்படும் முஸ்லிம் காங்கிரசின் யோசனைகள் ஒரு "கால வெடிகுண்டின்" தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

(50. 09. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33

இ. தொ. கா. வின் அரசியல்: சாதாரணமயப்படுத்தப்பட்டுவிட்ட சமாதானச் சுரண்டல்கள்

தற்போது இலங்கை அரசியல்வாதிகளுக்கு சமாதான செயன்முறையின் மீதுள்ள பற்றும் பாசமும் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது. தற்போது அவர்கள் முன்னெடுக்கின்ற எல்லா நடவடிக்கைகளும் சமாதானத்திற்காகவே என்பது போன்றதொரு நிலை ஏற்பட்டுள்ளது. நாளை சிலர் தாம் தும்முவதும் தூங்குவதும் கூட சமாதானத்திற்காகவே என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வகையில் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் இருந்து இராஜிநாமாச் செய்த ஜனாதிபதி சமாதான செயன்முறையை பலப்படுத்துவற்காகவே தாம் அவ்விதம் செயற்பட்டதாகக் கூறியிருந்தார். முஸ்லிம் காங்கிரஸின் தலைமைக்கு ஆப்பு வைக்கும் முயற்சியின் பின்னணியில் அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட சில பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட தமது செயற்பாடுகள் சமாதான செயன்முறையைத் தக்கவைத்துக் கொள்வதற்கான முயற்சிகளே எனக் கூறியதாக ஞாபகம்.

இவ்விதம் சமாதானம் என்கின்ற கோஷத்தையும், அதிதீவிர அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கின்ற சமாதான செயன்முறையையும் தமது அரசியல் லாபங்களுக்காக "சுரண்ட" முயற்சிக்கின்ற அரசியல் வாதிகளின் பட்டியலில் இறுதியாகச் சேர்ந்துகொண்டிருப்பவர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் ஆவார். சற்றும் எதிர்பார்க்கப்படாத ஒரு வகையில் கடந்த வாரம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் "நிபந்தனைகள் அற்ற வகையில்" அரசுக்கு ஆதரவளிக்கப் போவதாக திடீரென அறிவித்தது. இது ஒரு வகையில் அரசியல் அவதானிகள் பலரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியிருந்தது என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணி

உண்மையில் இ.தொ.கா. அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதில் பல சிக்கல்கள் காணப்பட்டன. அவற்றுள் பிரதானமான சில பிரச்சினைகள் தீர்க்கப்படுவது அவ்வளவு கடினமானதல்ல என முன்னர் கூறியிருந்தோம், உதாரணமாக எத்தனை அமைச்சுப் பொறுப்புகள் இ.தொ.கா.விற்கு வழங்கப்பட வேண்டும் போன்றவை உண்மையில் பிரச்சினைகளே அல்ல. தேவையேற்படின் மேலதிக அமைச்சுப் பொறுப்புகளை உருவாக்கி இ.தொ.கா.விற்கு வழங்குவது அரசாங்கத்திற்கு கடினமானதாக இருக்கப் போவதில்லை எனச் சுட்டிக் காட்டியிருந்தோம். அவ்வகையில் தற்பொழுது இ.தொ.கா.அரசாங்கத்திற்கு செய்திருக்கும் "சேவைக்கு" பிரதியுபகாரமாக அமைச்சுகள் உட்பட பல பதவிகள் சில நாட்களினுள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், இ.தொ.கா.அரசாங்கத்துடன் இணைவது தொடர்பில் காணப்படுகின்ற பிரதானமான பிரச்சினை அரசியலமைப்பு நிர்ணய சபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அரசியலமைப்பு சீர்திருத்தத்துடன் தொடர்புடையது. இன்று இ.தொ.கா.நிபந்தனை அற்ற வகையில் ஆதரவளிப்பதாக அறிவித்த பின்னரும் இப் பிரதான பிரச்சினையில் பண்பு ரீதியான மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டுள்ளது எனக் கூற முடியாது.

அதாவது அரசாங்கம் எதிர்பார்க்கின்ற வகையிலான அரசியலமைப்பு மாற்றம் ஒன்று மேற்கொள்ளப்படுமாயின் இ.தொ.கா தனது பாராளுமன்ற எண்ணிக்கைப் பலத்தை மட்டுமல்ல, அது அரசாங்கங்களின் மீது செலுத்தக் கூடிய செல்வாக்கையும் ஓரளவிற்காயினும் இழந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னரே இலங்கை அரசியலில் இ. தொ. கா. வினதும் சௌமியமூர்த்தி தொண்டமானதும் செல்வாக்கு அதிகரித்தது என்பதை கட்சியின் தற்போதைய தலைவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள் என்றோ அல்லது அரசியலமைப்பு மாற்றத்தின் விளைவுகளை அவர்கள் புரிந்து கொண்டிருக்க மாட்டார்கள் என்றோ கூறுவதற்கில்லை.

எனவே, இத்திடீர் ஆதரவுக்கான காரணம் யதார்த்த சிந்தனைக்கு அப்பாற்பட்ட வேறொன்றாக இருப்பதற்குரிய சாத்தியங்கள் பெருமளவிற்கு உண்டு எனக் கூறப்படலாம். இவ்வகையில் பணம், பெண்கள் போன்ற பல்வேறு "வதந்திகள்" ஊடகங்களிலும் வாய் மொழி மூலமாகவும் வந்திருந்தன. கடந்த வாரம் முன்னணி ஆங்கிலப் பத்திரிகைகள் சில சுமார் எழுபது கோடி ரூபா பெறுமதியான, முன்னர் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் கீழ் இருந்த தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையை நவீன மயப்படுத்தம் திட்டம் ஒன்றுடன் தொடர்புபட்ட வகையிலேயே இ.தொ.கா. வின் அரசாங்கத்திற்கான ஆதரவு நிர்ணயிக்கப்பட்டிருந்தது என செய்தி வெளியிட்டிருந்தன. இவற்றிற்குப் புறம்பாக இத் தீர்மானம் அச்சுறுத்தல்கள். ஒளிநாடாக்கள் என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில், இத் தீர்மானத்தினால் இந்தியத் தமிழ் மக்களுக்கு எவ்விதமான நன்மைகள் கிட்டும் எனக் கூறுவது சற்றுக் கடினமானதே.

இந்தியத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல இ.தொ. கா. என்கின்ற கட்சிக்குமே கூட இத்தீர்மானத்தினால் எத்தகைய நன்மைகள் கிட்டும் எனக் கூற முடியாது. அரசாங்கம் ஏற்கனவே மிக மோசமான நிதி நெருக்கடியினை எதிர் நோக்கியிருக்கின்ற நிலையில் மிக விரைவில் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிக சலுகைகளை வழங்கும் என எதிர்பார்க்க முடியாது. இந் நிலையில் கட்சி அரசாங்கத்துடன் இணைந்திருப்பதன் மூலம் அதன் மீதான அதிருப்தி அதிகரிக்க இடமுண்டே அன்றி வேறு வாய்ப்புகள் இல்லை எனக் கூறப்படலாம்.

அத்துடன் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் யானைச் சின்னத்திற்கு வாக்களிக்கப் பழகிவிட்டமை இப்பிரச்சினையைத் தீவிரப்படுத்தி விடக் கூடும். ஆயினும் இப்பிரச்சினையை சமாளிக்கும் நோக்கில் இ.தொ.கா. மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை என்பது யாவரும் அறிந்ததே.

எதிர்காலம்

எவ்வாறாயினும், தற்போது விரும்பியோ விரும்பாமலோ சரியாகவோ, தவறாகவோ இ.தொ.கா. அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டாயிற்று. விரைவில் அது அரசாங்கத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட அங்கமாக மாறிவிடும். இந் நிலையில் சுவாரசியமானது யாதெனில், முக்கியமான சில பிரச்சினைகளில் அதன் எதிர்கால நடத்தை எப்படியிருக்கும் என்பதாகும்.

குறிப்பாக, இ.தொ.கா.வின் இணைப்புடன் அரசாங்கம் தற்பொழுது "ஒபரேசன் 113றை" வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளது. தெரிவு செய்யப்பட்டு ஏறத்தாழ ஐந்து மாதங்களின் பின்னர் தனது (எளிய) பெரும்பான்மையைப் பாராளுமன்றத்தில் நிரூபிக்கக் கூடிய நிலையை அரசாங்கம் அடைந்துள்ளது. இ.தொ.கா.வின் எட்டு ஆசனங்கள் மற்றும் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து அண்மையில் உடைத்தெடுக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள் ஆகிய எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் கணக்குச் சரியாக இருக்கும் என்பது அரசாங்கத்திற்கு ஆறுதலையும் தெம்பையும் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இத் தெம்பு மறுபுறத்தில் அரசாங்கத்தின் அல்லது ஜனாதிபதியின் அரசியலமைப்பு மாற்றத் திட்டத்திற்கான புத்துணர்ச்சியை வழங்கி விடக்கூடும்.

சில காலம் மந்தமடைந்து காணப்பட்ட அரசியலமைப்பு நிர்ணய சபைக்கான செயற்பாடுகள் முடுக்கி விடப்படின் இ.தொ.கா.வின் அணுகுமுறை எவ்விதம் இருக்கும் என்பது சுவாரசியமானதே. இ.தொ.கா.வின் கடந்தவாரத் தீர்மானத்தின் அடிப்படையில் நோக்குகையில், அரசியலமைப்பு மாற்றத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.தொ.கா. ஆதரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே, கட்சி என்பதற்குப் புறம்பாக அரசியலமைப்பு மாற்றம் பற்றிய மலையகத் தமிழ் மக்களின் அணுகுமுறை எவ்விதம் இருக்க வேண்டும் என்பது பற்றிய கலந்துரையாடல் ஒன்று மலையகத் தமிழ் மக்கள் மத்தியிலும், புத்திஜீவிகள் மத்தியிலும் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசரமானதும் அவசியமானதுமான ஒன்றாக மாற்றமடைந்துள்ளது.

இது தொடர்பில் ஆகக் குறைந்தது வாதப்பிரதிவாதங்களையாவது ஆரம்பித்து வைக்கவேண்டிய கடப்பாடு மலையகத் தமிழ் மக்களின் நலனில் அக்கறையுடையவர்கள் அனைவருக்கும் உண்டு. மலையகத் தமிழ் மக்கள் தமது எதிர்காலத்தை முற்றுமுழுதாக அரசியல்வாதிகள் கைகளில் விட்டுவிடுவது மாபெரும் தவறாக அமைந்து விடக்கூடும்.

இலங்கைத் தமிழர்

இ.தொ.கா.வின் திடீர் தீர்மானம் குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் ஆச்சரியத்தையும் ஒருவித கசப்பையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்தவாரம் வெளியிடப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களதும் அரசியல் கட்சித் தலைவர்கள் பலரதும் கருத்துக்களை அவதானிக்கின்ற போது, இ.தொ.கா.வின் அரசாங்கத்திற்கான ஆதரவு அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. குறிப்பாக, இ.தொ.கா.வின் தீர்மானம் மலையகத் தமிழர், இலங்கைத் தமிழர் ஆகிய இரு தரப்பினரிடையேயும் கசப்புணர்வைத் தூண்டி விடுமோ என்கின்ற அச்சமும் தவறானதன்று. ஆயினும் இது தொடர்பில் இலங்கைத் தமிழர் புரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விடயம் யாதெனில் தீர்மானம் தூய நிலையில் கட்சி சார்ந்ததே அன்றி சமூகம் சார்ந்த ஒன்றல்ல என்பதாகும். எனவே, "திருப்தியின்மை" அவதானமான ஒரு முறையில் வெளியிடப்பட வேண்டியது அவசியம்.

இ.தொ.கா.வின் அரசாங்கத்திற்கான ஆதரவு தொடர்பிலான திருப்தியின்மைக்கு இரண்டு பிரதானமான காரணிகள் இருக்கலாம். ஒன்று, மென்மையான ஒரு மட்டத்தில் பெரிதும் "சந்தர்ப்பவாதம்" எனக் கருதப்படுகின்ற ஒரு விடயத்திற்கு சமாதானத்தைச் "சாட்டாகப்" பயன்படுத்தியமை பொதுவாகக் கண்டிக்கப்பட்டிருந்தது. இவ் விடயத்தில் ஒரு நியாயத்தன்மை காணப்பட்டிருந்தது. ஏனெனில், இ.தொ.கா.வின் தீர்மானத்தில் "சமாதானத்தை பலப்படுத்துவது" ஒரு காரணியே அல்ல என்பதை முன்னமே சுட்டிக் காட்டியிருந்தோம்.

இலங்கைத் தமிழரின் திருப்தியின்மைக்கான இரண்டாவது ஆனால், மிக முக்கியமான காரணம் சுதந்திரக் கூட்டமைப்பு நீண்டகாலம் பதவியில் நீடித்திருப்பதை அவர்கள் விரும்பவில்லை என்பதாகும். சமாதான முயற்சிகளை காத்திரமான நிலையில் முன்னெடுக்கக் கூடிய நிலையில் சுதந்திரக் கூட்டமைப்பு காணப்படவில்லை. எனவே, சுதந்திரக் கூட்டமைப்பின் ஆயுளை நீடிப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான முயற்சிகளின் தாமதத்தை நீடிப்பதற்கு சமமானது என்று கருதப்படுவதனாலேயே தமிழ் மக்கள் இதனை விரும்பியிருக்கவில்லை. இது ஒருவகையில் சரியானதே ஆயினும், உண்மை நிலையாதெனில் இ.தொ.கா.வின் ஆதரவு ஒரு மட்டத்தில் அரசாங்கத்தின் மீதான அழுத்தத்தை அதிகரித்துவிடும் என்பதாகும். ஏனெனில், சமாதான முயற்சிகள் சரியாக முன்னெடுக்கப்படாமைக்கும், பொருளாதாரம் தேக்கமடைந்துள்ளமைக்கும் ஒரு "சாட்டாக" பாராளுமன்றப் பெரும்பான்மை இன்மை பயன்படுத்தப்பட்டிருந்தது. அச் சாட்டு இனி பயனளிக்கப் போவதில்லை. எனவே, முக்கியமான விடயங்களில் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்படும்.

(12 . 09. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34

தென்பகுதிக்கு நகர்த்தப்பட்டுள்ள சமாதான செயன்முறை: பார்வையாளராக புலிகள்

கடந்த வாரம் இடம்பெற்ற பிரதானமான நிகழ்வு எரிக் சொல்ஹெய்ம் இலங்கை விஜயம் ஆகும். மோதலுடன் தொடர்புடைய தரப்பினரைச் சந்தித்து உரையாடுவதன் மூலம் சமாதான முயற்சிகளுக்கு புத்துயிரூட்டும் சாத்தியத்தை ஆராய்வதே சொல்ஹெய்மின் விஜயத்தின் பிரதான நோக்கமாகும். இக்கட்டுரை எழுதப்படுகின்ற பொழுது சொல்ஹெய்மின் சந்திப்புகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. எனினும், உற்சாகத்தையோ அல்லது நம்பிக்கையையோ ஏற்படுத்தக்கூடிய செய்திகளெதுவும் வெளியாகியிருக்கவில்லை. அவ்விதம் அதிர்ச்சித் தகவல்களெதுவும் வெளியிடப்படும் என எதிர்பார்க்கக்கூடிய நிலையிலும் நாம் இல்லை.

ஏனெனில், பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கக்கூடிய சாதகமான ஒரு நிலையில் நாம் இன்று இல்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கு தென்னிலங்கையில் கட்டமைப்பு ரீதியான ஒரு மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியம் என நாம் முன்னரே சுட்டிக் காட்டியிருந்தோம். அத்தகைய மாற்றத்தை நோக்கிய ஒரு நகர்வே இ.தொ.கா.வின் அரசாங்கத்துடனான இணைப்பு எனச் சிலர் வாதிட முற்பட்டுள்ளனர். ஏனெனில்இ.தொ.கா.வின்இணைப்பு அரசாங்கத்திற்கு மிக அத்தியாவசியமான பெரும்பான்மைப் பலத்தைத் தென்னிலங்கையில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. ஆயினும் இம்மாற்றம் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு போதுமானதல்ல என்பதே யதார்த்தமாகும். ஏனெனில், அரசாங்கம் தனது உயிர் வாழ்விற்கு இன்றும் பெருமளவிற்கு ஜே.வி.பி.யில் தங்கியிருக்க வேண்டிய நிலையே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.வி.பி

புலிகளின் இடைக்கால யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு ஜே.வி.பி. அவ்வளவு இலகுவில் இணங்கிவிடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அதேசமயம், ஜே.வி.பி.யின் இணக்கம் அற்ற வகையில் எந்தவொரு முக்கிய தீர்மானத்தையும் மேற்கொள்ளக்கூடிய நிலையில் அரசாங்கமோ அல்லது "நிறைவேற்று அதிகாரம்" கொண்ட ஜனாதிபதியோ காணப்படவில்லை என்பது வெளிப்படையானது.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே ஜே.வி.பி.யின் சம்மதத்துடனேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என்ற தொனியிலான அறிக்கை விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். உண்மையில் ஜே.வி.பி.யின் சம்மதமின்றி பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட மாட்டாது என்று கூறுவது இப்போதைக்கு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட மாட்டாது என்பதற்குச் சமமானதாகும். இன்னுமொரு வகையில் நோக்குகையில் இது அரசாங்கத்தின் மீதான ஜே.வி.பி.யின் இறுக்கப்பிடியை தெளிவுபடுத்துகின்றது எனவும் கூறப்படலாம்.

அதேசமயம் புலிகளின் இடைக்கால யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதுடன் இணங்குவதில் ஜே.வி.பி.இற்கு பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள், அதிகாரப் பரவலாக்கம் என்பவற்றிற்கு எதிரான அடிப்படையான கொள்கை ஒன்றை ஜே.வி.பி.கொண்டுள்ளது. இக் "கொள்கையில்" இருந்து விடுபட்டு பேச்சுவார்த்தைகளுக்கு இணங்குவது முன்னாள் தீவிரவாதிகளுக்கு சற்றுக் கடினமானதாகவே இருக்கும். இதன் கருத்து ஜே.வி.பி.பொதுவாகதனது கொள்கைகளை விட்டுக் கொடுத்து விடாது என்பதல்ல. ஏனெனில், அரசியல், சமூக யதார்த்தங்களை புரிந்து கொள்கின்ற இயலுமை கட்சிக்கு ஓரளவு காணப்படவே செய்கின்றது.

அதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றிற்கெதிராக புயற் பிரசாரம் செய்தவர்கள் இப்பொழுது கடனுதவி தொடர்பாக அதே நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கின்றனர். எதிர்க் கட்சியில் இருக்கின்ற பொழுது புரியாத சில யதார்த்தங்கள் அரசாங்கக் கட்சியாக மாறிய பின் இலகுவாகப் புரிந்துவிடும் என்பது ஜே.வி.பி.யினருக்கும் பொருந்தவே செய்கின்றது.

எனவே, இனப்பிரச்சினைத் தீர்விலான யதார்த்தத்தை அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாகவன்றி இராணுவ வழிமுறைகளினூடாக இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாதென்கின்ற யதார்த்தத்தை அவர்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்பது முற்றிலும் சரியானதல்ல. ஆனால், இத்தகைய மாற்றம் இலகுவாக ஏற்பட்டுவிடக்கூடியதல்ல. ஏனெனில் ஒரு வகையில் நோக்குகையில் 1994 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி

Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

காணப்பட்ட அதே நிலையிலேயே இன்று ஜே.வி.பி.காணப்படுகின்றது. அதாவது 1994 ஆம் ஆண்டு பொ.ஐ.முன்னணி சமாதானம் பற்றிப் பேசியபோதும் "சரியாக நடாத்தப்பட்டால்" யுத்தம் வெல்லப்படலாம் எனும் அடிப்படையான நம்பிக்கையைக் கொண்டிருந்தது. அதன் காரணமாகவே பேச்சுவார்த்தைகளில் இருந்து புலிகள் ஒரு தலைப்பட்சமாக விலகிக் கொண்டவுடன் ஒரு முழுமையான யுத்தத்தை அது நாடியிருந்தது. இன்று ஜே.வி.பி.யும் அதே நிலையிலேயே உள்ளது.

எனவே, அநாவசியமாக புலிகளுடன் பேச வேண்டிய அவசியம் இல்லை என அது கருதுகின்றது. எனவே தான் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் அடிப்படையில் மட்டுமன்றி வேறு எந்தவொரு அடிப்படையிலும் புலிகளுடன் பேசுவதை ஜே.வி.பி.இலகுவில் அனுமதிக்கப் போவதில்லை என்று கூறி வந்துள்ளோம்.

இதற்குப் புறம்பாக மக்கள் அபிப்பிராயம் ஒன்று பற்றிய அச்சமும் ஜே.வி.பி.இற்கு இருக்கக்கூடும். முன்னைய சமாதான முயற்சிக்கு எதிராகவும், இடைக்கால சபை யோசனைகளுக்கு எதிராகவும் முன்வைக்கப்பட்ட நிலைப்-பாட்டின் அடிப்படையிலேயே ஜே.வி.பி.யின் வாக்குகள் வெல்லப்பட்டுள்ளன. இத்தகைய ஒரு நிலையில் கடந்த அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அதே கட்டமைப்பின் அடிப்படையிலும் அதே யோசனையின் அடிப்படையிலும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க இப்பொழுது இணங்குமாயின், அது கட்சி ஆதரவாளர்களிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி விடுவது மட்டுமன்றி எதிர் விளைவுகளையும் தோற்றுவித்துவிடக்கூடும். அவ்வகையில் நோக்குகையில் தாம் விரித்த வலையில் தாமே சிக்கியுள்ளது போன்றதொரு நிலையிலேயே ஜே.வி.பி. இன்று காணப்படுகின்றது.

இத்தகையதொரு பின்னணியிலேயே அரசாங்கம் அல்லது சரியாகச் சொல்லப்போனால் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்காமல் இருப்பதை ஜே.வி.பி. உத்தரவாதப்படுத்தியுள்ளது. எதிர்காலத்திலும் கூட அதன் இணக்கம் இலகுவாகப் பெறப்பட முடியாது என்றே எண்ணத்தோன்றுகின்றது. ஆனால், பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்படுவதற்கான சாத்தியம் இருக்கின்ற நிலையில் ஒரு "தந்திரோபாயமாக" அரசாங்கத்தின் ஒரு பகுதியான சுதந்திரக்கட்சி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதை அனுமதிக்கக் கூடிய சாத்தியமும் இல்லாமல் இல்லை. இதன் மறுபக்கம், தீர்வொன்றை அடைந்து கொள்ளுகின்ற நோக்கில் பேச்சுவார்த்தைகளுக்கான அனுமதியை ஜே.வி.பி.வழங்காது என்பதாகும்.

தென்பகுதி செய்முறை

இத்தகைய ஒரு நிலையிலேயே பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கவும் முடியாத அதேசமயம், சமாதான முயற்சிகளை பூரணமாகக் கைவிட்டுவிடவும் முடியாத ஒரு இக்கட்டு நிலையை "ஜனாதிபதியின் அரசாங்கம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்துள்ளது. இவ்விக்கட்டு நிலையில் இருந்து மீளும் ஒரு தந்திரோபாயமாகவே அரசாங்கம் இன்று சமாதான செய்முறையை பூரணமாக தென்பகுதிக்கு நகர்த்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதன் முதலாவது கட்டமே அரசாங்கம் புதிய யோசனை ஒன்றை தயார் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று கூறப்பட்டமையாகும். இப்பொழுது தென்பகுதி இணக்கம் ஒன்றை அடைந்துகொள்ளும் நோக்கிலான சர்வகட்சி மாநாடோ அல்லது அது போன்றதொன்றையோ கூட்டும் முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். இம்முயற்சி ஆரம்பத்திலேயே தோல்வியுறுவதற்கான சாத்தியங்களே பெருமளவு காணப்படுகின்றன என்பது வேறு விடயம்.

சமாதான முயற்சிகளைத் தென்பகுதிக்கு நகர்த்தி உள்ளதன் மூலம் அரசாங்கம் இரு இலக்குகளை அடைந்து கொண்டுள்ளது. ஒன்று சமாதான முயற்சிகள் இன்றும் தொடர்ந்துள்ளன என்ற உணர்வை இலங்கை மக்கள் மத்தியிலும் குறிப்பாக சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் ஏற்படுத்துவதில் வெற்றியடைந்துள்ளது. இரண்டாவது, விடுதலைப் புலிகளை சமாதான முயற்சிகளின் பங்காளன் என்ற நிலையில் இருந்து பார்வையாளன் என்ற நிலைக்கு மாற்றியுள்ளது. இவ்விரண்டுமே தற்போதைய நிலையில் அரசாங்கத்திற்கு உதவக்கூடியவை என்பதில் சந்தேகமில்லை.

(12. 09. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35

ஒரு தலைப்பட்ச சமாதான முயற்சியின் பின்னணியிலுள்ள யதார்த்தங்கள்

சமாதானப் பேச்சுவார்த்தை மேசையை நோக்கி நகரக்கூடிய இயலுமை இலங்கை அரசாங்கத்திற்குக் காணப்படவில்லை என்பது யாருக்குப் புரிகிறதோ இல்லையோ ஜனாதிபதிக்குப் புரிகிறது. எது எவ்விதமிருப்பினும் ஜனாதிபதியின் அரசியல் அறிவும் சாணக்கியமும் மிக உயரியவை என்பதில் சந்தேகமில்லை. அதன் காரணமாகத்தான் புலிகளுடன் ஒன்றிணைந்து சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக் முடியாத நிலையில் ஜனாதிபதி தென்னிலங்கையில் ஒரு தலைப்பட்சமான சமாதான முயற்சிகளை முன்னெடுத்துள்ளார்.

இவ்விதம் அதி தீவிரமான முறையில் ஒருதலைப்பட்சமான சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான பிரதானமான காரணம் யுத்தத்திற்கு மீண்டும் செல்லக்கூடிய நிலையிலும் அரசாங்கம் இல்லை என்பதாகும். மக்கள் மூன்று வேளை உணவிற்கே கஷ்டப்படும் நிலையில் யுத்தத்திற்குத் தேவையான கோடிக்கணக்கான ரூபாய்களை எங்கிருந்து பெறுவது எனும் தந்திரம் அரசாங்கத்திற்கு இன்னும் புலப்பட்டிருக்கவில்லை. எனவேதான் ஜனாதிபதி உட்பட அரசாங்கத் தலைவர்கள் பலரும் நாம் யுத்தத்திற்கு திரும்பிச் செல்லப் போவதில்லை. சமாதானமே எமது நிலைப்பாடு என அழுத்திக் கூறிவருகின்றனர்.

இதன் கருத்து அரசாங்கம் சமாதானம் என்பதில் உறுதியாக இருக்கின்றது என்பதல்ல. உண்மை நிலையில் அரசாங்கம் சமாதானத்திற்கும் யுத்தத்திற்குமிடையில் சிக்குண்ட ஒரு நிலையிலேயே இருந்து வருகின்றது. எனவே, சமாதானம் என்ற கோசத்தில் இருந்து யுத்தத்திற்கு மாறிச் செல்வது அதற்கு அவ்வளவு சிரமமானதாக இருக்கப் போவதில்லை. அவ்வகையில் நோக்குகையில் இங்கு யுத்த அபாயம் என்பது பாரதூரமானதாகும். வேறுவகையில் கூறுவதனால், அரசாங்கத்திற்கான நெருக்கடிகள் அதிகரித்துச் செல்ல யுத்த அபாயமும் அதிகரித்துச் செல்லும்.

பொதுவாக மூன்றாம் உலக நாடுகளில் நாம் காணுகின்ற ஓர் அனுபவம் என்னவெனில், உள்ளூர் ரீதியான அரசியல் நெருக்கடிகளைச் சமாளிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கில் அரசியல் தலைவர்கள் யுத்தத்தை நாடுவதாகும். இது அரசியல் நெருக்கடிகளை தேசியவாதத்தினால் கையாளும் ஒரு தந்திரோபாயம் எனவும் கூறப்படலாம். யுத்தங்கள் ஏற்படுகின்ற போது, தேசியவாத உணர்வுகளால் உந்தப்படுகின்ற மக்கள் பொருளாதாரம் உட்பட பல பிரச்சினைகளை மறந்துவிட்டு யுத்தத்திற்கு ஆதரவளிப்பதை பாகிஸ்தான், ஈராக் போன்ற பல நாடுகளில் நாம் கண்டிருக்கின்றோம். இவ்வரசியல் பாடம் எமது அரசியல்வாதிகளுக்கும் தெரிந்திருக்காது என எதிர்பார்ப்பதற்கில்லை. உண்மையில் கடந்த காலங்களில் இத்தந்திரோபாயம் இலங்கையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, அரசாங்கத்திற்கான நெருக்கடி அதிகரித்துச் செல்கையில், அந்நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு வேறு வழிவகைகள் இல்லாத நிலையில், அரசாங்கம் யுத்தத் தெரிவை நாடாது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை.

முதல் நகர்வு

எனினும், யுத்தத்தை மீளத் தொடங்குவதென்ற முடிவு மேற்கொள்ளப்படுமாயின் அரசாங்கம் நேரடியாகவோ உடனடியாகவோ அதனை மேற்கொள்ளப் போவதில்லை. இப்பாடத்தை அரசாங்கம் உண்மையில் புலிகளிடமிருந்தே கற்றிருக்கின்றது. 1995 ஆம் ஆண்டு பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையிழந்த புலிகள் ஒருதலைப்பட்சமான பேச்சுவார்த்தையில் இருந்து விலகிக் கொண்டதுடன், கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதல்கள் மூலம் தான் பேச்சுவார்த்தைகளில் இருந்து வெளியேறியதை உலகிற்கு அறிவித்திருந்தனர். இது புலிகளுக்கும் தமிழர்களுக்கும் எதிரான சர்வதேச அபிப்பிராயத்தைத் தூண்டிவிட்டிருந்ததுடன் பல நாடுகளிலும் இயக்கம் தடை செய்யப்படுவதற்கும் வழியேற்படுத்தியிருந்தது.

1995 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இன்று இலங்கை மீதான சர்வதேச அபிப்பிராயம் அதிகரித்துள்ளது என்பது தெளிவானது. இந்நிலையில், யுத்தம் மீண்டும் ஏற்படுவதற்கு காரணமான்து என சர்வதேச சமூகத்தினால் கருதப்படுகின்ற தரப்பின் மீதான அழுத்தமும், கெடுபிடியும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இது, குறிப்பாக புலிகள் மீது கூடுதல் தாக்கத்தைக் கொண்டிருக்குமாயினும், அரசாங்கம் முதலில் யுத்தத்தை நாடுமாயின் அதன் மீதும் பொருளாதார தாக்கத்தைக் கொண்டுவரும். இப்பொழுதுள்ள நிலையில் எந்த ஒரு பொருளாதார அதிர்ச்சியையும் தாங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை.

எனவே, யுத்தத்திற்குத் திரும்பிச் செல்வதென்ற தீர்மானம் மேற்கொள்ளப்படுமாயின் அரசாங்கம் கடைப்பிடிக்கக்கூடிய தந்திரோபாயம் புலிகளை யுத்தத்தை நோக்கித் தள்ளுவதாகும். அவ்வகையில் கிழக்கில் ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் இராணுவ யதார்த்தங்கள் உதவிகரமானவையாக அமையக் கூடும்.கருணா அணியினால் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியான புலிகள் மீதான தாக்குதல்கள் இத்தகைய பின்னணியில் புரிந்து கொள்ளப்படலாம். உண்மையில், கிழக்கு ஒரு பலவீனமான முனை ஆகும். அது புலிகளை யுத்தத்தினுள் தள்ளிவிடுமாயின், அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒரே கல்லில் இரு மாங்காய்கள் அடித்தது போல் ஆகிவிடும். ஒன்று, தெற்கின் கவனம் திசை திருப்பப்படலாம். இரண்டாவது, யுத்தத்தினால் ஏற்படக்கூடிய பாதகமான சர்வதேச தாக்கத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

(26. 09.2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36

தொடரும் வன்முறைகளுக்கு முன்றாந்தரப்பு பொறுப்பாகுமா?

கடந்த 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் இருந்தே பூரணமான முறையில் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்-பட்டிருந்தது என்று கூறமுடியாது. உடன்படிக்கையின் பங்காளிகளாகிய இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்த மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதும், யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவின் அறிக்கைகளின்படி எண்ணிக்கை ரீதியாக புலிகள் மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பங்களே அதிகமானவை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

யுத்த நிறுத்த மீறல்

யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களும், கண்காணிப்புக் குழுவின் அறிக்கைகளும், செயற்றிறன் மிக்க ஒரு முறையில் கடந்த அரசாங்கத்திற்கு எதிராக அப்பொழுது எதிர்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றினால் பயன்படுத்தப்பட்டிருந்தன. உண்மையில் கடந்த அரசாங்கத்தைப் பதவி கவிழ்ப்பதில் புலிகளினால் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்ட யுத்த நிறுத்த மீறல் நடவடிக்கைகள் முக்கியமான ஒரு பங்காற்றியிருந்தன என்பது யாவரும் அறிந்ததே. எனவே புதிய அரசாங்கம் பதவி ஏற்றவுடன் யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களைத் தடுப்பதற்கான எல்லாவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனப் பல்வேறு மட்டங்களிலும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக நாட்டில் குறிப்பாக கிழக்கு மாகாணத்திலும், கொழும்பின் புறநகர்ப் பகுதிகளிலும் இடம்பெறுகின்ற இன மோதலுடன் தொடர்புடைய வன்முறைகள் அதிகரித்து வந்துள்ளன. இவ் அதிகரிப்பிற்கான மிக அடிப்படையான காரணம் புலிகள் இயக்கத்தினுள் ஏற்பட்ட பிளவும் கருணா தலைமையிலான புலிகளுக்கு எதிரான கலகமும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணா விவகாரம் அரசாங்கத்தினால் இராணுவ ரீதியாக பயன்படுத்தப்-பட்டுள்ளமையினால் மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களில் வன்முறை மட்டம் அதிகரித்து வருகின்றமை வெளிப்படையானது. இவ்விடயம் தொடர்பில் யுத்த நிறுத்த மீறல் குற்றச் சாட்டுகளுக்குப் புறம்பாக வேறெந்த அக்கறையும் அரசாங்கத் தரப்பில் வெளிப்படையாகக் காணப்படவில்லை. ஏனெனில், புலிகளுக்கும் கருணா அணியினருக்கும் இடையிலான வன்முறைகள் இயக்கத்தினுள்ளான குழப்பமாகவே படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. எனவே, தேசிய அரசியலில் அதன் தாக்கம் பெரிதும் மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருந்துள்ளது.

ஈ. ம. ஐ. க.

ஆயினும் தேசிய அரசியலின் அக்கறையையும் கொழும்பின் கவனத்தையும் பெரிதும் கவரக் கூடிய விடயமாக மாறியுள்ளவை தொடர்ச்சியாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் மீதான தாக்குதல்களும் அழிப்பு நடவடிக்கைகளுமாகும். ஈ.ம.ஜ.க. மீதான தாக்குதல்களில் அண்மைக் காலத்தில் பண்பு ரீதியான மாற்றமொன்று ஏற்பட்டுள்ளமை பலராலும் அவதானிக்கப்பட்டிருக்கலாம். கட்சியின் தலைமைத்துவம் அதாவது டக்ளஸ் தேவானந்தா வன்முறைக்கான ஒரு இலக்காக நீண்டகாலம் இருந்து வந்துள்ளார். அவர் மீது கடந்த காலங்களில் பத்துக்கும் மேற்பட்ட கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக குறிப்பாக ஆங்கில மற்றும் சிங்களப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டியிருந்தன.

இதன் மறுபக்கம் யாதெனில், ஈ.ம.ஜ.கட்சியின் உறுப்பினர்கள் அல்லது டக்ளஸ் தேவானந்தாவைச் சுற்றியுள்ளவர்கள் மீதான அச்சுறுத்தல் அதி தீவிரமானவையாக இருக்கவில்லை என்பதாகும். இன்று டக்ளஸ் தேவானந்தாவைச் சுற்றியுள்ளவர்கள் மீதான அச்சுறுத்தல் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. இதன் விளைவாக கடந்த சில காலங்களில் ஈ.ம.ஜ.கட்சி உறுப்பினர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். கிழக்கில் நடந்து வரும் வன்முறைகளுடன் ஒப்பிடுகையில் ஜனநாயகக் கட்சி மீதான தாக்குதல்கள் முக்கியத்துவமுடையவையாக மாறியுள்ளன. இதன் காரணமாகவே ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கடந்தவாரம் இக் கொலைகளை கண்டித்திருந்ததுடன் இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்ற உறுதியையும் வழங்கியிருந்தது.

எவ்வாறாயினும் டக்ளஸ் தேவானந்தா என்கின்ற இலக்கில் இருந்து விடுபட்டு கட்சி உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்கள் மீதான கரிசனை அதிகரித்திருப்பதற்கான காரணம் யாது என நோக்குகையில், இன வேறுபாடு அற்ற வகையில் ஊடகங்களிடையே ஒத்த கருத்து காணப்படுவது போன்று தோன்றுகின்றது. அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள்ளான பிளவை டக்ளஸ் தேவானந்தா வெளிப்படையான நிலையிலேயே கொழும்பிற்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்பாகப் பயன்படுத்த முற்பட்டமையினாலேயே ஒரு இலக்கு என்கின்ற அடிப்படையில் ஈ.ம.ஜ.கட்சி மீதான கரிசனை அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறன்து.

அத்துடன் கருணா அணியின் மீதான தாக்குதலின் மூலம் கற்கப்பட்ட ஒரு பாடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மீதும் பிரயோகிக்கப்படுவதாக அபிப்பிராயப்படுவோரும் இருக்கவே செய்கின்றனர். அதாவது கருணா அணியை இலக்கு வைத்து புலிகள் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது முதலில் கருணாவைச் சுற்றியிருந்தவர்கள் அல்லது அவரது ஆதரவாளர்களே இலக்கு வைக்கப்பட்டு தாக்கி அழிக்கப்பட்டிருந்தனர். கருணாவைத் தனிமைப்படுத்தித் தாக்கும் தந்திரோபாயம் பெரு வெற்றியளித்திருந்தமை யாவரும் அறிந்ததே. எனவே அதே தந்திரோபாயம் டக்ளஸ் தேவானந்தாவிற்கு எதிராகவும் முன்னெடுக்கப் படுவதாகவும் கூறப்படுகின்றது. எனவே ஈ.ம.ஜ.கட்சி மீதான தாக்குதல்களில் பண்பு ரீதியான மாற்றம் ஏற்பட்டுள்ள போதும் இறுதி இலக்கு ஒன்றாகவே காணப்படுவதாக இவ் அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளோர் கருதுகின்றனர்.

இத் தந்திரோபாயம் கட்சியின் அடிப்படையையே உலுக்கி உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. இதன் காரணமாக எதிர் காலத்தில் ஜனநாயகக் கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் பாரிய சிக்கல்கள் ஏற்படும் என்பதிலும் சந்தேகமில்லை. இத்தகைய ஒரு நிலையை தவிர்த்துக் கொள்ள வேண்டுமாயின் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஈ.ம.ஜ கட்சிக்குக் காணப்படுகின்றது என்பது தெளிவானது. வன்முறை ரீதியான தீவிர நடவடிக்கைகளைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளக் கூடிய இயலுமை கட்சிக்கு இல்லாமையினால் அதி தீவிர "அகிம்சாவாத" நடவடிக்கைகளில் அது ஈடுபட்டுள்ளது. இது கட்சியின் விரக்தி மனப்பான்மையையும் ஓரளவிற்கு வெளிப்படுத்துகின்றது எனக் கூறப்படலாம்.

போராட்டம்

தனது அங்கத்தவர்கள் மீதான வன்முறையை தடைசெய்வதற்கான பிரதானமான ஒரு தந்திரோபாயமாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சி தனது கவனத்தைச் சர்வதேச சமூகத்தின் பக்கம் திருப்பியுள்ளது. அதன் ஒரு அங்கமாகவே கொலை செய்யப்பட்ட தனது அங்கத்தவர்களின் பூதவுடல்களை கண்காணிப்புக் குழு அலுவலகங்களின் முன்னும், நோர்வே தூதரகத்தின் முன்னும் வைத்து ஆர்ப்பாட்டம் நடாத்தும் ஒரு செயன்முறையைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. இவற்றிற்கு புறம்பாக கொழும்பிலுள்ள மேற்கு நாடுகளின் தூதரகங்களின் முன் தொடர்ச்சியான போராட்டங்கள் நடத்தப்பட இருப்பதாகவும் கூறப்படுகின்றது. இப் போராட்டங்களின் அடிப்படையான நோக்கம் மேற்கு தேச அரசாங்கங்களின் கவனத்தை கவர்வதன் மூலமும் அவற்றை நிர்ப்பந்திப்பதன் மூலமும் தம் மீதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதல்களைத் தவிர்த்துக் கொள்வதாகும். இத் தந்திரோபாயம் புலிகள் மீது ஒருவித அழுத்தத்தைக் கொண்டுவருமாயினும், பூரணமான வெற்றியை அளிக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை.

எவ்வாறாயினும், ஈ.ம.ஜ கட்சியின் தந்திரோபாயங்களில் ஒன்றாகிய நோர்வே தூதரகத்தின் முன் பூதவுடல்களை வைத்து நடத்தப்படுகின்ற போராட்டங்களின் அரசியற் பரிமாணங்களை ஆராய வேண்டிய அவசியம் ஒன்று உள்ளது. ஏனெனில் அது சமாதான செயன்முறையுடன் நெருங்கிய தொடர்புடையதொன்றாய் மாற்றமடைந்துள்ளது.

நோர்வே தனது செயற்பாடுகளை ஆரம்பித்த காலத்தில் இருந்தே அதற்கு உள்ளூர் ரீதியாக பலத்த எதிர்ப்பு அதிதீவிரவாத சிங்களக் கட்சிகளிடம் இருந்து தோற்றம் பெற்றிருந்தது. அதன் தொடர்ச்சியாக அவர்களை அவமானம் செய்கின்ற நடவடிக்கைகள் பலவும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. தூதரகத்தின் முன் சத்தியாக்கிரகம் செய்தல், அவர்களது தேசியக் கொடியை எரித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இவ்வமைப்புகளினால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதன் ஒரு தொடர்ச்சியாகவே நோர்வேயின் செயற்பாடுகளை நவகாலனித்துவத்துடன் தொடர்புபடுத்துவதும் அவர்களை அமெரிக்க ஏகாதிபத்திய வாதத்தின் கையாட்களாகப் படம் பிடித்துக் காட்டுவதும் இடம் பெற்று வந்துள்ளது.

நோர்வேயின் நோக்கில் இருந்து அவதானிக்கையில் இவை "நன்றியில்லாச் செயற்பாடுகள்" எனக் கூறப்படக் கூடுமே ஆயினும் அவற்றை இலகுவாக நிராகரித்து விட்டு தொடர்ந்து செயற்படக் கூடிய இயலுமை நோர்வேயிற்குக் காணப்பட்டது. அதாவது இதுவரை சிங்கள அதிதீவிர தேசியவாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சமாதான எதிர்ப்புச் சக்திகளின் செயற்பாடுகள் என நிராகரிக்கப்படக் கூடிய இயலுமை காணப்பட்டமையினால் நோர்வே மீதான அழுத்தம் குறைவாக இருந்து வந்துள்ளது.

அழுத்தம்

ஆயினும் ஈ.ம.ஜ. கட்சியின் செயற்பாடுகள் நோர்வே மீது மிக மோசமான அழுத்தத்தைக் கொண்டுவரக் கூடியவை என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் கட்சியின் செயற்பாடுகள் நோர்வே கொலைகளை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துவதுடன் கொலைகளின் ஒரு பகுதி பொறுப்பு நோர்வேயைச் சாரும் என்ற தொனியில் முன்வைக்கப்படுகின்றன.

முதலில் நோர்வே கொலைகளை நிறுத்த வேண்டும் என்கின்ற விடயத்தை எடுத்துக் கொள்வோமாயின், யுத்த நிறுத்த உடன்படிக்கையை உத்தரவாதப் படுத்தவேண்டிய ஒரு பொறுப்பு அதற்குக் காணப்பட்ட போதும் எதனையும் அமுல்படுத்துகின்ற அதிகாரம் நோர்வேயிற்கோ அல்லது கண்காணிப்புக் குழுவிற்கோ காணப்படவில்லை என்பது புரிந்து கொள்ளப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். உயரிய ஒரு மட்டத்தில் கண்காணிப்புக் குழு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கை பிரச்சினையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பது மட்டுமே ஆகும். நோர்வே தூதரகத்திற்கு இவ் இயலுமை கூடக் காணப்படவில்லை. ஆயினும் கொலைகளை நிறுத்துவதென்பது அமுல்ப்படுத்தல் என்பதுடன் தொடர்புடையது. எனவே அமுல்ப்படுத்தும் அதிகாரம் அற்ற ஒரு நிறுவனத்திடம் அதனை வேண்டிநிற்பது புத்திசாலித் தனமானதாகத் தெரியவில்லை. ஆயினும் இந் நுணுக்கம் ஈ.ம.ஜ.கட்சிக்குப் புரிந்திருக்காது என்று எதிர்ப்பார்ப்பதற்கும் இல்லை.

அதேசமயம் கொலைகளின் பொறுப்பு நோர்வேயையும் சாரும் எனக் கூறி பூதவுடல்களை தூதரகத்தின் முன் வைத்துப் போராட்டம் நடத்துவது அரசியல் ரீதியாக அதற்குப் பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் நோர்வேயின் மூன்றாம் தரப்பாகச் செயற்படுகின்ற உறுதியையும் ஆட்டம் காணச் செய்துவிடக்கூடும். ஏனெனில் சர்வதேசரீதியாக மனித உரிமைகள், ஜனநாயகம், சமாதானம் ஆகிய விடயங்களில் சிறந்த நிலையில் உள்ள ஒரு நாட்டின் மீது அதே விடயங்களின் அடிப்படையில் சேறு பூசுவது அதன் சர்வதேச அந்தஸ்தை பாதித்து விடக்கூடும். ஈராக்கில் அமெரிக்காவின் பங்கை எவ்விதம் "தேவையில்லாத வேலை" எனப் பலர் கருதுகின்றனரோ அதேபோன்று இலங்கையில் நோர்வேயின் பங்கு கருதப்பட இடமுண்டு, இவ்வபிப்பிராயம் நோர்வேயின் வெளிவிவகாரத் திணைக்களத்தில் அதிகரிக்குமாயின் நோர்வே தனது மூன்றாம் தரப்பு செயற்பாடுகளை இடைநிறுத்திக் கொள்வதற்கான சாத்தியங்கள் இருக்கவே செய்கின்றன. தற்போதைய நிலையில் நோர்வே ஒரு மூன்றாம் தரப்பாக தொடர்ந்து செயற்படுவதும் செயற்படாதிருப்பதும் அதன் மன வலிமையிலேயே தங்கியுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் நோர்வே எமக்கு உதவுவதற்கு நாம் அவர்களுக்கு உதவவில்லை. அதேசமயம் ஒரு மூன்றாம் தரப்பாக நோர்வேயின் உதவி இன்றி இப்பிரச்சினையை சமாதானமாக தீர்த்துக் கொள்ளும் இயலுமை எமக்கு இருக்கின்றதா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டிய பொறுப்பு மோதலில் நேரடியாகத் தொடர்புபட்டுள்ள தரப்பினருக்கும், குறிப்பாக இந்நாட்டு மக்களுக்கும் உண்டு.

(30. 10. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37

தேசிய ஆலோசனைச் சபையின் உள்ளார்ந்த முரண்பாடுகள்

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனை சபை அமைக்கப்பட்டுவிட்டது. எம்மிடையே உள்ள பலர் அது பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாத போதும் சிலர் நிச்சயமாகப் புத்துணர்வூட்டப்பட்டுள்ளனர். சபை கூடுவதற்கு முன்னதாகவே சர்வதேச கவனத்தையும் கூட அது பெற்றுக் கொண்டுள்ளது. உதாரணமாக அமெரிக்கர்கள் சபைக்கான யோசனையையும் அது அமைக்கப்பட்டமையையும் இருகரம் நீட்டி வரவேற்றுள்ளனர். எனவே, சிலர் எம்மை நம்பவைக்க முயற்சிப்பது போன்று அது ஒரு வரலாற்று நிகழ்வாக இல்லாவிடினும் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் அம்சமாக மாற்றமடைந்துள்ளது. எனவே, அதன் தாற்பரியங்களை அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஒன்று உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையிலான அரசியற் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டபோது, அது உள்ளூர் ரீதியாக அன்றி சர்வதேச ரீதியாக முன்னெடுக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. பேச்சுவார்த்தைகள் தாய்லாந்து, ஜப்பான், ஜேர்மனி, நோர்வே என்று பல சர்வதேச நிலையங்களுக்கு நகர்த்தப்பட்டிருந்ததுடன் தொலைக்காட்சி கமராக்களின் முன் நிகழ்த்தப்பட்ட நடவடிக்கைகளும் அதிகமானவையாகவே காணப்பட்டன. எனவே, பேச்சுவார்த்தைகளுக்கும் அது முன்னெடுக்கப்பட்ட விதத்திற்கும் எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த ஜனாதிபதி அதனை "சர்வதேச சர்க்கஸ்" எனக் கண்டித்திருந்தமை நினைவூட்டப்படக்கூடியது. இந்த வார்த்தைப்பிரயோகத்தை ஜனாதிபதி அநேகமாக மத்திய கிழக்கில் இருந்து பெற்றுக் கொண்டிருக்கக் கூடும்.

ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் பலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்குமிடையில் "மாட்ரிட் பேச்சுவார்த்தைகள்" என அழைக்கப்பட்ட சமாதான செயன்முறை ஒன்று இடம் பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பேச்சுவார்த்தைகளும் சர்வதேச ரீதியாக நகரத்திற்கு நகரம் இடமாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் "சி.என்.என்" போன்ற மாபெரும் தொலைக்காட்சி நிறுவனங்களின் கமராக்களுக்கு முன்னரேயே இடம்பெற்றிருந்தன.

இப்பேச்சுவார்தைகளில் அதிருப்தியுற்றிருந்த பலர் அதனை அக்காலத்தில் "சர்வதேச சர்க்கஸ்" எனக் கண்டித்திருந்தனர். அவ்வகையில் ஜனாதிபதி சந்திரிகா மாட்ரிட் பேச்சுவார்த்தைகளுக்கும் எமது பேச்சுவார்த்தைகளுக்கும் இடையில் சில ஒற்றுமைகளைக் கண்டிருக்கக் கூடும். உண்மையில் எமது பேச்சுவார்த்தைகளிலும் சர்க்கஸின் சில பண்புகள் காணப்படவே செய்தன. இலங்கைக்கு வெளியில் அமைதியான ஒரு சூழ்நிலையில் அதிக ஆரவாரமற்ற வகையில் முன்னெடுக்கப்பட்டிருந்தால் அது கூடுதல் செயற்திறன் உடையதாய் இருந்திருக்கும் என்பது வேறு விடயம். ஆயினும் சுவாரசியமானது யாதெனில். தேசிய ஆலோசனை சபையும் இந்த சர்க்கஸின் பண்புகளைக் கொண்டிருப்பதாகும். எனவே, ஜனாதிபதி சர்வதேச சர்க்கஸை உள்ளூர் சர்க்கஸாக மாற்றியுள்ளார் என யாராவது குற்றம் சாட்டினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒரு சர்க்ஸின் நோக்கம் யாது? ஒரு சர்க்கஸின் நோக்கம் உறுதியான இலக்கொன்றை அடைந்து கொள்வதில்லை, மாறாக சுற்றியுள்ளவர்களை மகிழ்ச்சிப் படுத்துவது மட்டுமே ஆகும்.

எண்ணக்கரு

எவ்வாறாயினும், தேசிய ஆலோசனைச் சபை என்ற எண்ணக்கருவின் பின்னணியில் உறுதியான ஒரு மதிப்பீடு காணப்படுகின்றது என்பதில் சந்தேகமில்லை. உயர் மதிப்பீடுகளைக் கொண்ட எண்ணகருக்களை தனது அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதில் ஜனாதிபதி கைதேர்ந்தவர் என நாம் முன்னரே பல தடவைகள் சுட்டிக் காட்டியிருந்தோம். அவ்வகையில், இந்த எண்ணக்கருவின் தாற்பரியத்தை விளங்கிக் கொள்வதும் பயனுடையதாய் இருக்கக் கூடும்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடாக இருந்த போதும், இங்கு மனித உரிமைகள் பற்றிய அக்கறைகள் அதிகமானவையாகக் காணப்பட்டபோதும் அரசியல் தீர்மானம் மேற்கொள்தலில் மக்கள் பங்குபற்றுதல் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. தேர்தல் சமயங்களுக்குப் புறம்பாக அரசியல் செயற்பாடுகளில் மக்கள் செல்வாக்கு குறைவாகக் காணப்படுகின்றமை இலங்கை அரசியலின் பலவீனமான ஒரு மையமாக மனித உரிமை ஆர்வலர்களினாலும், தாராண்மைவாத ஜனநாயகக் கோட்பாடுகளில் நம்பிக்கை யுடையவர்களாலும் சுட்டிக் காட்டப்படுகின்றது. இலங்கையின் சமாதான செயன்முறைகளிலும் கூட மக்கள் பங்குபற்றுதல் காணப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகையில் இவ்வக்கறையையும் கரிசனையையும் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் ஒரு முயற்சியே அமைக்கப்பட்டுள்ள சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைச் சபை ஆகும். எனவே, நேரடி நிலையில் நோக்குகின்ற போது, இம்முயற்சி இலங்கையின் ஜனநாயகத்தில் காணப்படுகின்ற அடிப்படைக் குறைபாடு ஒன்றைக் களையும் முயற்சி எனக் கூறப்படலாம். எனவே, இலங்கை அரசியல் பற்றிய தெளிந்த அறிவும் இலங்கை அரசியல் பற்றிய தீவிர அக்கறையும் அற்றவர்கள் இச் செயற்பாட்டினால் மிக இலகுவாக திசை திருப்பப்பட்டு விடலாம். இவ்விதம் இலகுவாகத் திசை திருப்பப்படாதவர்களினால் இன்று கேட்கப்படுகின்ற கேள்வி, பத்து வருடங்களுக்கு மேல் தேவைப்படாத மக்கள் அபிப்பிராயம் அல்லது பங்குபற்றுதல் இன்று தேவைப்படுவது ஏன் என்பதாகும்.

எனவே, தற்போதைய நிலையில் தேசிய ஆலோசனை சபையை சிறந்த தத்துவத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ள பலவீனமான கட்டமைப்பு என இலகுவாகக் கூறிவிட முடியும். அத்துடன் தாமதமாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதற்காக ஒரு சிறந்த எண்ணக் கரு பூரணமாக நிராகரிக்கப்பட வேண்டும் என்கின்ற அவசியம் இல்லை. இச் செயற்பாட்டில் உள்ள குறைபாடு அதன் அடிப்படைக் கோட்பாடு அல்ல, மாறாக அதி முக்கியத்துவம் வாய்ந்த உடனடியான பிரச்சினை ஒன்றுடன் தெளிவற்ற ஒரு செயன்முறையுடன் பிணைக்க முயற்சிப்பதாகும். இது அவசரமான நடவடிக்கைகளை தாமதப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே, மக்கள் அபிப்பிராயத்தை அல்லது பங்குபற்றுதலை உத்தரவாதப்படுத்துவது உண்மையாயின் மேற்கொள்ளப்பட வேண்டியது யாதெனில், அரசியல் கட்டுப்பாடு அற்ற வகையில் சுயாதீனமான தேசிய ஆலோசனை சபையை செயற்பட அனுமதிக்கின்ற அதேசமயம், உறுதியான ஒரு நிலைப்பாட்டுடன் தேசிய ஆலோசனை சபையுடன் உறுதியாக பிணைக்கப்படாத வகையில் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து செல்வதாகும். ஏனெனில், "இந்த" ஆலோசனை சபை மக்கள் பங்குபற்றுதலை உத்தரவாதப்படுத்திவிடும் என்றோ, அல்லது மக்கள் அபிப்பிராயத்தை வெளிப்படுத்திவிடும் என்றோ எதிர்ப்பார்ப்பதற்கில்லை. மக்கள் அபிப்பிராயத்தை பிரதிபலிக்கின்ற அடிப்படையான நிறுவனம் பாராளுமன்றமே என்பது மறக்கப்படக்கூடாது.

தேசிய சபை?

அமைக்கப்பட்டிருக்கின்ற சபை தேசிய ஆலோசனை சபை என அழைக்கப்படுகின்றது. ஆயினும் அது "தேசியத்தைப்" பிரதிபலிக்கவில்லை என்பது துரதிஷ்டவசமானதாகும். உண்மையில் இச்சபை "ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆலோசனைச் சபை" என்றே அழைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் கூட்டமைப்புக்கு வெளியில் உள்ள எந்தவொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதானமான கட்சியும் இதில் கலந்துகொண்டிருக்கவில்லை. பேரியல் அஸ்ரப், தொண்டமான், டக்ளஸ் தேவானந்தா, வீரவன்ச போன்ற யாவரும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சித் தலைவர்களே என்பது வெளிப்படையானது.

பிரதான இரு கட்சிகளில் ஒன்றான ஐ.தே.கட்சி கலந்துகொள்ளாமை தேசிய சபையின் தேசியத்தைப் பாதித்துள்ளதென்பதில் சந்தேகமில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு சபை செயற்பாடுகளில் கலந்து கொள்வதில் இரு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

(1) சபை ஒரு இழுத்தடிக்கும் தந்திரோபாயம் என ஐ.தே.கட்சி நம்புகின்றது,

(2) அரசியலமைப்பின் படி ஜனாதிபதி அடுத்த ஆண்டு ஓய்வு பெறுவதை

இச்செயன்முறை தாமதப்படுத்தி விடும் என அது கருதுகின்றது. அத்துடன் ஐ.தே.கட்சியும், சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்பட முடியாது என்ற இந்நாட்டின் அரசியல் கலாச்சாரத்துடன் தொடர்புடைய அடிப்படை யதார்த்தம் ஒன்று காணப்படுகின்றது என்பதும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

ஜாதிக ஹெல உறுமயவின் தீர்மானம் எவரையும் ஆச்சரியப் படுத்தவில்லை என்பதுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தீர்மானமும் தெளிவானதாகக் காணப்படுகின்றது. த.தே. கூட்டமைப்பை பொறுத்த வரை இது தென்னிலங்கையின் தேசிய ஆலோசனைச்சபை, எனவே இச்சபையினால் அவர்கள் ஆற்றக்கூடிய பங்கு மிகக் குறைவானதாகவே இருக்கும். எவ்வாறாயிறும் இம் மூன்று முக்கியமான கட்சிகளின் பங்கு பற்றுதலின்மை சபையின் எதிர்பார்ப்புகளை பலவீனப்படுத்தி விட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

ஆலோசனைச் சபை அங்குரார்ப்பணத்தில் தேசியத்தை பிரதிபலிக்கின்ற ஒரே ஒரு அம்சமாக இருந்தது சர்வமத பிரதிநிதிகள் தமது உத்தியோகபூர்வ ஆடைகளுடன் "பிரசன்னமாய் இருந்தமை" ஆகும். முஸ்லிம் மதகுருவும் இந்து மதகுருவும் தனிப்பட்ட நபர்களாகவே கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர் என்பதில் அதிக சந்தேகமில்லாவிடினும் கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க மதகுருக்கள் தமது திருச்சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனரா அல்லது தனிப்பட்ட அழைப்பினடிப்படையில் சமூகமளித்திருந்தனரா என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே, தேசிய சபை உண்மையில் தேசிய சபையாக இருக்கவில்லை என்பது தெளிவானது.

பெரும் பரபரப்பையும் ஆர்வத்தையும் சில மட்டங்களில் ஏற்படுத்தியுள்ள ஆலோசனைச் சபை எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் எனச் சிந்திக்கையில், அது ஏமாற்றகரமானதாகவே அமையப் போகின்றது என்ற எண்ணம் தோன்றுவதும் துரதிஷ்டவசமானதே. இலங்கையின் வரலாறு என்ற கண்ணாடியை அணிந்து கொண்டு தேசிய ஆலோசனைச் சபையை நோக்குவோமாயின் புலப்படுகின்ற விடயம் யாதெனில், ஒன்றில் சபை இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தைத் தழுவிக் கொள்ளும், அல்லது அதில் கலந்து கொள்ளும் குழுக்கள் ஒவ்வொன்றாக வெளிநடப்புச் செய்யும் என்பதாகும்.

வழிமுறை

இறுதியாக, ஆலோசனைச் சபை அமைக்கப்பட்டதற்கான அடிப்படைக் காரணம் எனக் கூறப்பட்டது, சமாதான செயன்முறையை, குறிப்பாக புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை எவ்விதம் முன்னெடுத்துச் செல்வது என்பதற்கான ஆலோசனையைப் பெறுவதாகும். இங்கு தொக்கி நிற்கின்ற விடயம் யாதெனில், சமாதான செயன்முறை, பேச்சுவார்த்தைகள் என்பதில் எவ்விதமான பிரச்சினையும் இல்லை. மாறாக அதனை எவ்விதம் முன்னெடுத்துச் செல்வது என்பதிலேயே பிரச்சினை உள்ளது என்பதாகும்.

அதற்கான ஆலோசனையே பெறப்படவுள்ளது என்பதாகும். அவ்விதமாயின் சபையில் இடம் பெற்றுள்ள அனைவரும் பேச்சுவார்த்தைகளுக்கு இணக்கமான, பொதுவான கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது தான் பேச்சுவார்த்தை எவ்விதம் முன்னெடுக்கப்படலாம் என்ற விடயம் செயற்திறன் மிக்க வகையில் ஆராயப்படலாம்.

ஆயினும், ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் பாரிய மாற்றங்கள் எதுவும் தென்படவில்லை. அவ்வித மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவுமில்லை. அவர்கள் பேச்சுவார்த்தைகள் எவ்விதம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற ஆலோசனையை வழங்குவதற்காகவா சபையில் அங்கத்துவம் வகிக்கின்றனர் அல்லது வேறு காரணங்களுக்காகவா என்பது தெளிவுபடுத்தப்படவேண்டும். அதேசமயம், புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை அடியோடு எதிர்க்கின்ற ஜாதிக ஹெல உறுமயவிடம் பேச்சுவார்த்தைகள் எவ்விதம் முன்னெடுக்கப்படவேண்டும் என்று கேட்பதை முரண்பாடு என்றழைப்பதா அல்லது கேலிக் கூத்து என்பதா?

(10 . 10. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38

பலவீனமான அரசாங்கம் பலமற்ற எதிர்க்கட்சி

கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தேர்தலை தொடர்ந்து சுதந்திரக் கூட்டமைப்பும், ஜனதா விமுக்தி பெரமுனவும் இலங்கை அரசியலின் மத்திய ஸ்தானத்தைப் பிடித்துக்கொண்டமையினால், அரசியல் ஆய்வாளர்களின் அவதானத்திலிருந்து ஐ.தே.கட்சி நழுவி விட்டிருந்தது. சிங்கள மற்றும் ஆங்கில பத்திரிகைகளில் அவ்வப்போது சில கண்டனக் கணைகள் கட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த போதும் தமிழ் பத்திரிகைள் ஐ.தே.க பற்றி பெரியளவிற்கு அக்கறை செலுத்தியிருக்கவில்லை. இதற்கு தமிழ் மக்களும் பத்திரிகையாளர்களும் இக் கட்சிமீது கொண்டிருந்த அனுதாபமும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். எவ்வாறாயினும், பதவி கவிழ்க்கப்பட்டிருந்ததை தொடர்ந்து கட்சி தனது செல்வாக்கை முழுமையாக இழந்துவிட்டிருக்கவில்லை.

அத்துடன் ஒரு நாட்டின் ஜனநாயகம் பேணப்படுவதிலும் அல்லது சின்னாபின்னப்படுத்தப்படுவதிலும் அந் நாட்டின் எதிர்க் கட்சிக்கு பாரிய பங்கு உண்டு. தற்போது எதிர்க்கட்சியாக உள்ள ஐ.தே.க. இன்று இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பின்னணியில் தனது பொறுப்பை எவ்விதம் செயற்படுத்தப்போகிறது என்பதும் முக்கியமானதொரு கேள்வியாகும். அவ்வடிப்படையில் இங்கு ஐ.தே.கட்சியின் நிலை பற்றிய ஒரு கண்ணோட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பதவி கவிழ்ப்பு

2001 ஆம் ஆண்டு தேர்தலில் ஐ.தே.கட்சி அமோக வெற்றியடைந்திராவிடினும், அது பாராளுமன்றத்தில் தெளிவான ஒரு பெரும்பான்மையைக் கொண்டிருந்தது. இத் தெளிவான பெரும்பான்மையிடையேயும் அரசாங்கத்தின் ஆயுள் தெரிவு செய்யப்பட்ட நாள் முதல் அச்சுறுத்தப்பட்டே வந்துள்ளதும். எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஒரு ஜனாதிபதியின் தலைமையில் இயங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியிருந்தமை, கட்சியை பொறுத்தவரை துரதிஷ்ட வசமானதொன்றே எனக் கூறப்படவேண்டும். தெரிவுசெய்யபட்ட ஒரு வருடகாலத்தின் பின்னர் எந்நேரத்திலும் பாராளுமன்றத்தையும், ஏன் அரசாங்கத்தையும் பதவி நீக்கம் செய்யக்கூடிய அரசியலமைப்பு அதிகாரத்துடன் ஜனாதிபதி இருந்தமை கழுத்தில் கத்தி வைக்கப்பட்ட நிலைக்கு ஐ.தே.முன்னணி அரசாங்கத்தைத் தள்ளி இருந்தது.

ஆயினும், தெளிவாகக் காணப்பட்டது யாதெனில் அரசாங்கம் அதன் ஆயுள் முடிய முன்னரே கலைக்கப்படும் என்பதாகும். உதாரணமாக இப் பகுதியிலேயே கூட, நாம் பல தடவைகள் சுதந்திரக் கட்சிக்கும், ஜனதா விமுக்தி பெரமுனவுக்கும் இடையில் கூட்டணி அமைக்கப்படும் என்றும் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்றும் தொடர்ச்சியாக கூறிவந்துள்ளோம். எனவே, இன்று காணப்படுகின்ற அரசியல் நிச்சயமற்ற நிலை ஒரு ஆண்டுக்கு முன்னர் காணப்பட்டிருக்கவில்லை.

இது சரியான வகையில் நோக்குகையில் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டை இலகுவாக்கியிருக்க வேண்டும். காலத்திற்கு முன்னரே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு அரசாங்கம் பதவி கவிழ்க்கப்படுவதற்கு எதிராக நிச்சயமான தந்திரோபாயம் ஒன்றை வகுத்துக் கொண்டிருக்கக்கூடிய கால அவகாசம் அதற்கு காணப்பட்டிருந்தது. ஐ.தே.கட்சியின் பிரதிபலிப்பு அதனை எதிர்பார்த்திராதது போலவே இருந்தது. அதாவது ஜனாதிபதியின் செயற்பாட்டை தடுத்து நிறுத்தக்கூடிய அல்லது ஆகக் குறைந்தது சவாலுக்குட்படுத்தக் கூடிய எத்தகைய செயற்பாட்டிலும் அது ஈடுபட்டிருக்கவில்லை. இத்தகைய பிரதிபலிப்பின் மூலம், கட்சி தனது ஆதரவாளர்களை ஏமாற்றத்திற்குட்-படுத்தியிருந்தது என்பதற்குப் புறம்பாக அது ஜனநாயகத்தை பலவீனப்படுத்தி விட்டது என்பது முக்கியமானது. ஏனெனில், கடந்த முறை பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை சந்தேகத்திற்கிடமற்ற வகையில் ஜனநாயக மதிப்பீடுகளுக்குப் பொருந்தாத செயலாகும்.

பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அரசியலமைப்பு அதிகாரம் இருந்தபோதும் இருக்கின்ற அரசாங்கத்திற்கு தெளிவான பெரும்பான்மை இருக்கின்ற போது அதனைக் கலைப்பது ஜனநாயக மதிப்பீடுகளுடன் இசைந்தது அல்ல. உண்மையில் கலைக்கப்படுவதற்கு சற்று முன்னர் பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்ட போது அதற்கு எதிராக 130 உறுப்பினர்கள் கைச்சாத்திட்டிருந்தனர். பாராளுமன்றம் கலைக்கப்படுவதை ஆதரித்த பலர் கூறிய ஓர் காரணம் அல்லது கற்பித்த ஓர் நியாயம் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் உள்ளதென்பதாகும். ஆயினும் அதிகாரம் உள்ளதென்பதற்காக அதனை பிரயோகித்து விடமுடியாது என்பதை இவர்கள் உணரவில்லை. உதாரணமாக ஜனாதிபதிக்கு யுத்தப் பிரகடனம் செய்யும் அதிகாரம் உள்ளது என்பதற்காக அவர் ஏனைய நாடுகள் மீது யுத்தப் பிரகடனம் செய்துவிட முடியாது. அதற்குரிய சூழ்நிலையும் நியாயங்களும் சரியாக அமையவேண்டியது அவசியம். அது போன்றதே பாராளுமன்றத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்பதற்கான அதிகாரமும் ஆகும். இங்கு முக்கியமானது யாதெனில் இத்தகைய ஜனநாயக விரோத செயற்பாட்டைத் தடுக்க வேண்டிய தார்மீகக் கடமை ஒன்று ஐ.தே.கட்சிக்குக் காணப்பட்டது. உண்மையில் இதனைத் தடுக்கக்கூடிய ஒரு சிறு நடவடிக்கையில் கூட கட்சி ஈடுபட்டிருக்கவில்லை. இவ்விதம் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடாதிருந்தமைக்கான அடிப்படைக் காரணம் தமது வெற்றி வாய்ப்புப் பற்றிய தவறான கணிப்பீடாகவே இருந்திருக்க வேண்டும். அவ்வகையில் ஐ.தே.கட்சியின் அப்போதைய செயற்பாடு அதன் அரசியற் சாணக்கியம் பற்றிய சந்தேகத்தைத் தோற்றுவிக்கக்கூடியது.

ஒரு ஜனநாயகத்தில் வன்முறையில் ஈடுபடுவது தான் தவறானதே அன்றி போராடுவது அல்ல. ஒரு புத்திசாலித்தனமான ஜனநாயத் தலைமைக்கு வன்முறை அற்ற வகையில் போராடுவதற்கு பல்வேறு உபாயங்கள் நிச்சயமாகக் காணப்படுகின்றன. அத்தகைய உபாயங்கள் எதுவும் ஐ.தே.கட்சிக்கு தோன்றியிருக்கவில்லை. மூன்று அமைச்சுப் பொறுப்புக்கள் அரசாங்கத்திடமிருந்து பறித்தெடுக்கப் பட்ட போது எழுச்சியடைந்திருந்த மக்கள் ஆதரவைக் கூட கட்சி சரியாகப் பயன்படுத்த முடியாதிருந்தமை ஏமாற்றத்திற்குரியதே.

ஜனாதிபதி பதவி

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிராக ரணில் விக்ரமசிங்க நடந்து கொள்ளாமைக்கு கூறப்பட்ட ஒரு காரணம் ஜனாதிபதி என்ற பதவியின் அந்தஸ்த்தைக் குறைக்க விரும்பாமை ஆகும். ஏனெனில் சந்திரிகா பண்டாரநாயக்காவின் பின்னர் ஜனாதிபதிப் பதவியை ஏற்பதில் விக்ரமசிங்கவிற்கு பாரிய போட்டி காணப்பட்டிருக்கவில்லை. எனவேதான் ஜனாதிபதியாக வருகின்றபோது தனது நடத்தைகளை முன்னுதாரணமாகக் கொண்டு அப்பதவியை எவரும் அவமதித்துவிடக்கூடாது என்பதற்காகவே ரணில் விக்ரமசிங்க ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக தீவிரமாக நடந்து கொள்ளவில்லை எனக் கூறப்படுகின்றது.

நீண்ட கால நோக்கில் கூடிய இயலுமையுடைய ஒரு தலைவர் என்ற வகையில் ரணில் இவ்வடிப்படையில் நடந்துகொண்டிருப்பதற்கான சாத்தியங்கள் நிறையவே காணப்பட்டன. எனினும் இந்த அணுகுமுறையில் காணப்படுகின்ற பிரச்சினை யாதெனில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெற்று அதில் சந்திரிக்கா பண்டாரநாயக்கா போட்டியிடாதிருப்பின் மட்டுமே ரணில் ஜனாதிபதியாக வருவதற்கான சந்தர்ப்பம் காணப்பட்டது என்பதாகும். ஆனால் இவை இரண்டுமே சந்தேகத்திற்கிடமானவை என்பதில் சந்தேகமில்லை.

தனது அரசியல் வாழ்வை நீடித்துக் கொள்வதில் ஜனாதிபதி குமாரதுங்கவிற்கிருக்கின்ற தணியாத ஆர்வம் இலங்கை அரசியலை பக்கச் சார்பற்ற வகையில் அவதானிக்கின்ற எவருக்கும் இலகுவில் புரியக் கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான தீவிர முயற்சியில் ஏறத்தாழ 2000ஆம் ஆண்டிலிருந்து அவர் ஈடுபட்டு வந்துள்ளபோதும் அவை வெற்றியளிக்கவில்லை. 2004 ஆம் ஆண்டு தேர்தலில் தெளிவான பெரும்பான்மையை பெறமுடியாது போனவுடன் இம்முயற்சியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டிருந்த போதும் அவர் இந் நோக்கிலான இறுதி முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளார். அவ்வடிப்படையிலான இரு வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.

(1) அரசியலமைப்பை மாற்றி (சீர்திருத்தி?) பாராளுமன்ற முறைமைக்குச் செல்ல முற்படலாம், அல்லது

(2) ஜனாதிபதி இரண்டு தடவைகளுக்கு மேலும் பதவி வகிப்பதை அனுமதிக்கக் கூடிய வகையில் அரசியலமைப்பின் ஒரு சரத்தை மட்டும் மாற்றிக் கொள்ள முயற்சிக்கலாம்.

எவ்வாறாயினும் மேற்கூறிய இரண்டில் எது நடைபெற்றாலும் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வருவதற்கான சாத்தியங்கள் இல்லாது போய்விடும். அதாவது முதலாவது தெரிவு செயற்படுத்தப்படுமாயின். ஜனாதிபதித் தேர்தல் என்கின்ற ஒன்றே இடம்பெறப்போவதில்லை. இரண்டாவது தெரிவு வெற்றிபெறுமானால் இன்றும் கூட சந்திரிக்கா பண்டாரநாயக்கவை தோற்கடிக்கக் கூடிய இயலுமை ரணில் விக்ரமசிங்கவிற்கு காணப்படவில்லை. இவ்விதம் நோக்குகையில் ஐ.தே. கட்சித் தலைமைத்துவத்தின் அரசியல் சாணக்கியம் சந்தேகப்படக் கூடியதாகவே உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் நலன் என்ற நோக்கில் இருந்து பார்க்கையில் சரியான தந்திரோபாயமாக அமைந்திருக்கக் கூடியது ஐ.தே. கட்சிக்கு எதிரான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை முளையிலேயே கிள்ளி எறிவதாகும். ஆயினும் அது மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, இப்போது இருக்கின்ற கேள்வி. ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியல் அமைப்பு நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் அரசியல் அமைப்பை மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமாயின் அதற்கு எதிரான தந்திரோபாயம் என்ன என்பதாகும். இத்தகைய சரியான தந்திரோபாயம் ஒன்று காணப்படுகின்றதா அல்லது கட்சி இன்றும் தவறான நம்பிக்கையினை கொண்டுள்ளதா என்பதே கூட ஒரு பிரச்சினைதான். மாறாக அவ்விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாயின் சர்வதேச சமூகம் தனது உதவிக்கு வருமென்ற தவறான நம்பிக்கையே காணப்பட்டிருந்தது. எனினும், அச்சுறுத்தல் யதார்த்தமாக மாறியபோது ஜனாதிபதிக்கு எதிரான சர்வதேச வலைப்பின்னல் பயனற்றதாக மாறியிருந்தது. ஐ.தே. கட்சி தனது ஆயுளை பாதுகாப்பதற்கு தனது சொந்த நடவடிக்கைகளிலும் பார்க்க சர்வதேச சமூகத்தில் தங்கியிருந்தமை அடிப்படைத் தவறு என்றே எண்ணத்தோன்றுகின்றது. எனினும், இத்தவறு இன்றும்கூட புரிந்துகொள்ளப்பட்டுள்ளதா என்பது சந்தேகத்திற்-கிடமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி ஜனநாயக விரோதமான வகையில் அரசியலமைப்பை மாற்ற முயற்சிப்பாரேயாயின் சர்வதேச சமூகம் அதற்கு தடையாக இருக்கும் என்று இன்றும் நம்பப்படுவது. அடிப்படையான அரசியல் தவறாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், அரசியலமைப்பிற்கு உட்படாத எந்த ஒரு மாற்றமும் நேரடியாக மேற்கொள்ளப்படப் போவதில்லை. அது ஜனநாயக முலாம் பூசப்பட்டே மேற்கொள்ளப்படும். அத்தகைய நிலையில் சர்வதேச சமூகம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே காணப்படும். இன்று ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிரான செயற்திறன் மிக்க பாதுகாப்பாக அமையக்கூடியது உறுதியான மக்கள் இயக்கமே ஆகும். சர்வதேச அபிப்பிராயம் போன்றவை மேலதிக பாதுகாப்புகளாகவே அமையக்கூடும். அவ்வகையில் எழுகின்ற முதலாவது கேள்வி இவ் உண்மையை ஐ.தே. கட்சி உணர்ந்துள்ளதா என்பதாகும். இரண்டாவது கேள்வி அரசாங்கத்தின் நடவடிக்கைகளை தடைசெய்யக்கூடிய மன வலிமையும் இயலுமையும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் உள்ளதா என்பதாகும்.

(17. 10 . 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39

ஜே. வி. பி. யின் இரட்டைப் பாத்திரம்

ஜே.வி.பி.யின் கடந்த காலம் இலங்கை அரசியலில் பாரதூரமான தாக்கங்களைக் கொண்டிருந்தது மட்டும் அன்றி சுவையான தொன்றாகவும் காணப்பட்டிருந்தது. அரசியல் வன்முறை மூலம் மார்க்சிச சோசலிச அரசாங்கமொன்றைத் தோற்றுவிப்பதை இலக்காக் கொண்டிருந்த இயக்கம் 1971 ஆம் ஆண்டு ஆயுதப் புரட்சி ஒன்றை முன்னெடுத்திருந்தது. ஆயுதப் போராட்டம் கொடூரமாக நசுக்கப்பட்டமையின் காரணமாக 1982 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருந்தது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் ஆயுத இயக்கத்தை அரசியல் கட்சியாக மாற்றிக் கொண்டிருந்த போதும் அதன் அரசியல் இலக்கு மாற்றமடைந்திருக்கவில்லை. இத் தேர்தலில் கட்சி எதிர்நோக்கிய தோல்வி ஜனநாயக அரசியலில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியமையினால் 1980 ஆம் ஆண்டுகளின் இறுதியில் இயக்கம் ஆயுதங்களின் பக்கம் திரும்பி இருந்ததுடன் மிக மோசமான பொருளாதார மற்றும் மனிதவள இழப்புகளை ஏற்படுத்தியிருந்த கிளர்ச்சி ஒன்றை முன்னெடுத்திருந்தது. ஜனாதிபதி பிரேமதாசாவின் காலத்தில் இக்கலகமும் கொடூரமாக அடக்கப்பட்டமையினால் 90களின் ஆரம்பத்தில் மீண்டும் கட்சி அரசியலில் காலடி எடுத்து வைத்திருந்தது.

இவ்விதம் கட்சியின் தந்திரோபாயமும் அணுகுமுறையும் காலத்திற்குக் காலம் மாறியிருந்த போதும் அதன் இலக்கு மாற்றமடைந்திருக்கவில்லை. இன்று ஜே.வி.பி.யின் முகத் தோற்றத்தில் பாரிய மாற்றங்கள் தெரிகின்றன. உலகமயமாக்கத்தின் செயற்பாடுகளுடன் கட்சி நெருக்கமாகப் பிணைக்கப்பட்டு வருவதுடன், அரசியல் அதிகாரத்தின் தாக்கமும் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கி உள்ளது. இதன் கருத்து கட்சி தனது அடிப்படை இலக்காகிய சோசலிச அரசாங்கம் அல்லது அரசு என்ற கோசத்தைக் கைவிட்டு விட்டது என்பதாகுமா? இது பற்றிய கொள்கைப் பிரகடனம் ஒன்றைக் கட்சி இன்றும் முன்வைக்கவில்லை. ஏனெனில், அவ்வித விளக்கமொன்றை முன்வைக்க வேண்டும் என்று கட்சியினாலோ அன்றி மக்களினாலோ உணரப்-பட்டிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும், கட்சியின் கொள்கைகளை ஓரளவிற்கு வெளிச்சம் போட்டுக்காட்டிய அண்மைய ஆவணம் 2001 ஆம் ஆண்டு ஜே.வி.பி. பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும். இந்த ஒப்பந்தத்தைக் கூர்ந்து அவதானிக்கையில் புலப்படுகின்ற தெளிவான விடயம் கட்சி தனது கடந்தகால சோசலிசத்துவம் சார்ந்த கொள்கைகளை முற்றாகக் கைவிட்டு விடவில்லை என்பதாகும். உண்மையில் கட்சி ஜனநாயகத்தின் மேலுள்ள நம்பிக்கையின் காரணமாக ஜனநாயக முறைமையினுள் செயற்படுகின்றதா அல்லது தனது இறுதி இலக்கை அடைந்து கொள்கின்ற ஒரு வழிமுறையாக முறைமையைப் பயன்படுத்துகின்றதா என்பது கூட இன்றும் தெளிவாக இல்லை. நீண்டகால நோக்கில் சிந்திக்கையில் எழுகின்ற கேள்வி என்னவெனில், சுயமாக ஆட்சி அமைக்கக் கூடிய ஒரு நிலையில் பொலிஸ், பாதுகாப்பு என்பவற்றின் மீதான தனது கட்டுப்பாட்டைப் பயன்படுத்திக்கொண்டு ஜே.வி.பி. இலங்கையில் ஒருகட்சி சோசலிசத்தைப் பிரகடனப்படுத்தி விடுமாயின் அதற்கு எதிராக இலங்கை வாழ் மக்களுக்கு இருக்கக் கூடிய பாதுகாப்பு என்னவென்பதாகும்.

இந்நாட்டு அரசியல்வாதிகள் பலரிடையே நீண்டகால சிந்தனை இன்மையாலும், இத்தகைய ஒரு சாத்தியம் பெரிதும் உணரப்பட்டிராமையினாலும் இலங்கை அரசியலில் ஜே.வி.பி.யின் பங்கு என்பது பற்றி இன்று பெரிதும் பேசப்படுவதில்லை. எனினும், ஜே.வி.பி.சுயமாக அரசமைக்கக்கூடிய இயலுமையை அடைகின்றபோது இது முக்கியமான ஒரு பிரச்சினையாக மாற்றமடையலாம்.

தேர்தல் அரசியல்

இவ்விதமான சாத்தியம் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதற்கான முக்கியமான காரணம் அண்மைக் காலங்களில் ஜே.வி.பி.அடைந்து வருகின்ற தேர்தல் அரசியல் வெற்றிகளாகும். 1994ஆம் ஆண்டு கட்சி மீண்டும் ஜனநாயக அரசியல் பிரவேசத்தை மேற்கொண்ட பொழுது அது பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது வெறுமனே ஒரு ஆசனம் மட்டுமே ஆகும். ஆயினும், இன்று கட்சி பாராளுமன்றத்தில் கொண்டிருக்கின்ற 39 ஆசனங்கள் எவ்வகையில் நோக்கிலும் பாரதூரமான வெற்றி என்றே கூறப்படவேண்டும். அதிலும் குறிப்பாக கட்சி 2000ஆம் ஆண்டிற்கும் 2004ஆம் ஆண்டிற்கும் இடையில் அடைந்து கொண்டுள்ள வெற்றி அளப்பரியது ஆகும்.

இவ் வெற்றியின் பின்னணியில் இருந்த அல்லது இருக்கின்ற பிரதானமான காரணி சோசலிசம் சார்ந்த கோட்பாடுகளையும் மக்களின் உளவியல் ரீதியான அச்சங்களையும் தேர்தல் நோக்கில் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய அல்லது சுரண்டிக் கொள்ளக்கூடிய கட்சியின் இயலுமை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகையில் கட்சி கடந்த காலங்களில் இரு பிரதான விடயங்களில் கவனம் செலுத்தியிருந்தது.

(1) விலைவாசி உயர்வும் பொருளாதார நெருக்கடிகளும்,

(2) இன மோதலும் சமாதான செயன்முறையும்.

இவற்றுள் முதலாவது அம்சத்தை எடுத்துக்கொள்வோமாயின் கட்சி இன்று தான் விரித்த வலையில் தானே வீழ்ந்துள்ள நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்ட போது அவை பற்றிய பின்னணியை பகுத்தறிவின் அறிவின் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கவோ அல்லது புரிந்துகொள்ளவோ கட்சி முயற்சி செய்திருக்கவில்லை அல்லது விரும்பியிருக்கவில்லை. அரசாங்கத்தை எதிர்ப்பதும் போராட்டம் நடத்துவதும் இலகுவான காரியங்களாகக் காணப்பட்டிருந்தன. இவ்வடிப்படையில் பெருந்தொகையான மக்களை, குறிப்பாக கிராமப்புற மக்களைக் கட்டியெழுப்பக் கூடிய அபாரமான இயலுமை கட்சிக்குக் காணப்பட்டிருந்தது.

ஆயினும் சுயமாக அரசாங்கத்தை அமைப்பதற்கோ அல்லது அரசியல் அதிகாரத்தை அனுபவிப்பதற்கோ இவ்வியலுமை போதுமானதாக இருக்கவில்லை. எனவேதான் இதுவரை எதிர்த்து வந்த அரசாங்கத்துடனேயே கைகோர்க்க வேண்டிய அவசியம் ஜே.வி.பி.இற்கு ஏற்பட்டிருந்தது. 2001 ஆம் ஆண்டில் இதுவரை கீரியும் பாம்பும் போலிருந்த பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி.யும் தகுதிகாண் அரசாங்கமொன்றை அமைக்கும் நோக்கில் பொது உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டிருந்தன. இயல்பாகவே ஜே.வி.பி.இதற்குக் கூறிய காரணம் தேசத்தை (ஜாதிய) பிரிவினையில் இருந்து பாதுகாப்பதாகும்.

உண்மையில் ஜே.வி.பி.யின் நெகிழாத் தன்மை காரணமாகவே 2001 ஆம் ஆண்டு தகுதிகாண் அரசாங்கம் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் காரணமாக அரச அதிகாரத்தை நீண்ட காலம் அனுபவிக்க முடியாத நிலைக்கு கட்சி தள்ளப்பட்டிருந்தது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும் தேர்தல் பற்றிய எந்தவிதமான சிந்தனைகளும் அற்றவகையில் இரு கட்சிகளும் தம் வழியே சென்றிருந்ததுடன் தனித்தனியே தேர்தலில் போட்டியிட்டிருந்தன. இது தேர்தல் பற்றிய பாரதூரமான தவறான கணிப்பின் அடைப்படையிலே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதாவது பொதுஜன முன்னணியும் ஜே.வி.பி.யும் கூட்டாகப் போட்டியிட்டிருப்பின் 2001 ஆம் ஆண்டு தேர்தலே கூட வெற்றிகொள்ளப்பட்டிருக்கலாம். இத்தவறு தேர்தலின் பின்னரேயே உணரப்பட்டிருந்தது. அதன் காரணமாகவே தேர்தல் முடிவடைந்த உடனேயே இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டுப்பற்றிய பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டிருந்தன. கூட்டு ஏற்படுத்தப்பட்டமையும் அதன் பின்னர் நிகழ்ந்தவையும் இன்று வரலாறு ஆகும். ஆயினும் இன்றைய நிலை என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பூசல்?

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக சந்தானய பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. அவற்றுள் பிரதானமானவை மக்களுக்கு மேலதிக பொருளாதார நலன்களை வழங்குவதும், சமாதான செயன்முறையைச் "சரியான" வகையில் முன்னெடுத்துச் செல்வதுமாகும். அவ்வகையில் நோக்குகையில் ஜே.வி.பி.யின் செயற்திட்டங்களே சந்தானயவின் செயற்திட்டங்களாக உருவெடுத்திருந்தன.

எவ்வாறாயினும் ஜே.வி.பி.யோ அல்லது அரசாங்கமோ எதிர்பார்த்திராத வகையில் இன்று பொருளாதாரம் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கி உள்ளது. இதற்கு இரு பிரதானமான காரணிகள் காணப்படுகின்றன. ஒன்று, சர்வதேச சந்தையில் துரிதமாக அதிகரித்து வரும் எண்ணெய் விலை. இரண்டாவது, சமாதானப் பேச்சுவார்த்தைகள் முடக்கப்பட்டுள்ளமையினால் ஓரளவிற்கு முடக்கப்பட்டுள்ள சர்வதேச நிதி உதவிகள். இவற்றுள் முதலாவது அம்சம் மீது அரசாங்கத்திற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் காணப்படவில்லை. ஆயினும் துரதிஷ்டவசமானது யாதெனில் இத்தகைய நெருக்கடியான ஒரு நிலையில் அதனைச் சமாளிக்கக் கூடிய உள்ளூர் முன்னெடுப்புகளை மேற்கொள்ளவேண்டிய அவசியம் உணரப்பட்டிராமையாகும். உண்மையில் இத்தகைய உள்ளூர் தந்திரோபயங்களை வகுத்துக் கொள்ளக் கூடிய இயலுமை அரசாங்கத்திற்குக் காணப்படுகின்றதா என்பதே கூட சந்தேகத்திற்குரியது.

அத்துடன் தெளிவான விடயம் யாதெனில், ஜே.வி.பி.இற்கு உள்ளூர் தேர்தல் அரசியல் பற்றிய தெளிவும் இயலுமையும் பெருமளவிற்கு உள்ள போதும் பொருளாதார முகாமைத்துவ இயலுமை மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளதென்பதாகும். அதன் காரணமாகவே அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான எந்தவொரு காத்திரமான செயற்திட்டமும் இன்னும் முன்வைக்கப்படவில்லை. இந் நிலை மறுவலமாக சிங்கள மக்களிடையேயான ஜே.வி.பி யின் செல்வாக்கை தீவிரமாகப் பாதிப்பதாக அமைந்துள்ளது. உண்மையில் விலைவாசி உயர்வு பிரச்சினையின் பெரும் பகுதியை இன்று ஜே.வி.பி.யே சுமக்க வேண்டியுள்ளது.

அதேசமயம், ஏற்பட்டுள்ள நிலைமையின் காரணமாக உடனடியாக அரசாங்கத்தில் இருந்து வெளியேற முடியாத ஒரு நிலையும், கட்சிக்குக் காணப்படுகின்றது. ஜே.வி.பி. வெளியேறியமையின் காரணமாக அரசாங்கம் வீழ்ச்சியடையுமானால், இரண்டாவது தடவையும் அரசாங்கத்தை வீழ்த்திய பொறுப்பை அது ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். எனவே, உண்மையில் ஒருவித பொறியில் சிக்குண்ட நிலையிலேயே ஜே.வி.பி இன்று காணப்படுகின்றது.

இச்சிக்கலான நிலையில் இருந்து மீளும் நோக்கில் ஜே.வி.பி.இன்று கடைப்பிடித்து வருகின்ற தந்திரோபாயமே இந்த நாடகத்தில் இரட்டைப் பாத்திரமேற்றிருப்பது. அதாவது ஜே.வி.பி. அரசாங்கமாக இருக்கின்ற அதேசமயம், எதிர்க் கட்சியாகவும் நடித்து வருகின்றது. இவ்விரட்டைப்பாத்திரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரோபாயம் மிக நீண்ட காலத்திற்கு தொடர முடியாதிருக்கலாம். ஏனெனில் இவ்வடிப்படையில் மக்களை நம்பச் செய்வது கடினமானதாக இருக்கலாம். அத்துடன், இது அரசாங்கத்தின் இரு பிரதானமான கட்சிகளிடையேயும் தவிர்க்க முடியாதபடி முரண்பாட்டையும் மோதலையும் ஏற்படுத்தி விடலாம். இத்தகைய சாத்தியக்கூறுகள் இப்பொழுதே ஏற்படத் தொடங்கியுள்ளன. எனவே, அண்மைய எதிர்காலத்தில் அரசாங்கத்தினுள் தொடர்ந்து இருப்பதா இல்லாதிருப்பதா என்ற யதார்த்தத்தை ஜே.வி.பி. எதிர்நோக்க வேண்டியிருக்கும். இதற்கான விடை அடிப்படையில் தனித்துப் போட்டியிட்டு வெற்றியடைய முடியும் என்கின்ற நம்பிக்கையில் அல்லது நம்பிக்கையின்மையில் தங்கி உள்ளது.

(24. 10 . 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40

ஒஸ்லோ பிரகடனமும் சுயநிர்ணய உரிமையும்

இம்முறை இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முன்னெடுக்கப்பட்ட சமாதானப் பேச்சு வார்த்தைகள், சிறப்பியல்புகள் பலவற்றைக் கொண்டிருந்தன. அவற்றுள் ஒன்று, ஒஸ்லோவில் இடம்பெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் எட்டப்பட்ட சமஷ்டி பற்றிய முடிவுகள் ஆகும். இவை பொதுவாக ஒஸ்லோ பிரகடனம் என அழைக்கப்பட்டிருந்தன. இதன் சாராம்சம் யாதெனில், மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் சமாதானத்தை அடைந்துகொள்ளும் நோக்கில் ஒரு சமஷ்டி நிர்வாக முறையை ஆராய்வதற்கு இணங்கியிருந்தனர் என்பதாகும். ஆயினும், தற்பொழுது புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வெளியிட்டுள்ள ஓர் புதிய நூலில் ஒஸ்லோ பிரகடனம் என்ற ஒன்று இருக்கவில்லை என்று கூறியுள்ளார்.

யுத்தமும், சமாதானமும் எனப் பெயரிடப்பட்டுள்ள இவ் ஆங்கில நூல் கைகளில் கிட்டாமையினால் இக் கட்டுரைகளுக்காக அதுபற்றி வெளிவந்த செய்திகளில் தங்கியிருக்க வேண்டியிருந்தது. குறிப்பாக தமிழ் நெற் இணையதளம் இந்நூல் பற்றிய நீண்ட செய்தியொன்றை வெளியிட்டிருந்தது.

ஒஸ்லோ பிரகடனம்

இச்செய்தியறிக்கையின்படி பாலசிங்கம் ஒஸ்லோ பிரகடனம் என்ற ஒன்று காணப்பட்டிருக்கவில்லை என்பதுடன், புலிகள் தனி நாட்டிற்கான தெரிவை இன்னும் கைவிடவில்லை என்றும் கூறியுள்ளார். பாலசிங்கத்தின் கருத்துப்படி 2002ஆம் ஆண்டு மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறியுள்ளது போன்று, தமிழரின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு ஒன்று முன்வைக்கப்படவில்லையாயின், பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்பது இன்றும் பொருத்தமானதாகும். அத்துடன், புலிகள் இன்றும் உள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநிர்ணய உரிமை, வெளி சுயநிர்ணய உரிமை ஆகிய இரண்டு அம்சங்களின் அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றனர் என்பதையும் பாலசிங்கம் தனது நூலில் வலியுறுத்தியுள்ளார். சுருக்கமாகக் கூறுவதாயின், சமாதான செயன்முறையின் காரணமாக புலிகள் தமது இலக்குப் பற்றிய நெகிழ்ச்சித் தன்மையைக் கடைப்பிடித்திருந்த போதும் தனிநாட்டுக் கோரிக்கையை அவர்கள் முழுமையாக விட்டுவிடவில்லை என்பது பாலசிங்கத்தின் கருத்தாகும்.

இவற்றுள் முதலாவது அம்சமாகிய ஒஸ்லோ பிரகடனம் என்ற ஒன்று இருக்கவில்லை என்ற விடயத்தை எடுத்துக் கொள்வோமாயின், இக்கூற்று தென்னிலங்கையில் தேவையிலும் அதிகமான கவனத்தை ஈர்த்துள்ளது. என்றே கூறவேண்டும். ஏனெனில், இது உண்மையில் ஒஸ்லோ தீர்மானத்தின் பெயர் தொடர்புடைய ஒரு பிரச்சினையே அன்றி வேறில்லை. உத்தியோகபூர்வமாக ஒஸ்லோ பிரகடனம் என்ற ஒன்று இல்லாத போதும், சமஷ்டியை ஆராய்வதற்கான தீர்மானம் உண்மையானது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அத்தீர்மானத்தின் பெயர் ஒஸ்லோ பிரகடனம் அல்ல என்று பாலசிங்கம் கூறுவாரானால், அது பாரதூரமானது அல்ல.

ஆயினும், பாரதூரமான காரணங்கள் இல்லாமல் பாலசிங்கம் இதனைக் கூறியிருக்க முடியாது என்பதும் நிச்சயமானது. அவ்வடிப்படையில் நோக்குகையில் ஒஸ்லோ பிரகடனம் தென்னிலங்கையில் எவ்விதம் உள்வாங்கப்பட்டிருந்தது என்பது பாலசிங்கத்தின் முக்கியமான ஒரு கரிசனையாக இருந்திருக்கக்கூடும். தென்னிலங்கையில் ஒரு பிரிவினர் ஒஸ்லோ பிரகடனத்தின் மூலம் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு விட்டார்கள் என அர்த்தப்படுத்த முனைந்திருந்தனர். இதில் துரதிஷ்டவசமானது யாதெனில், இவர்களில் பெரும்பான்மையினர் சமாதான செயன்முறையை ஆதரித்திருந்தவர்கள் என்பதுடன், சமாதான செயன்முறையை உறுதிப்படுத்தும் அல்லது நியாயப்படுத்தும் நோக்கிலேயே ஒஸ்லோ பிரகடனம் என அழைக்கப்பட்ட தீர்மானத்திற்கு இத்தகைய வடிவத்தை வழங்க முன்வந்திருந்தனர்.

உண்மையில், தென்னிலங்கையின் தீவிர தேசியவாத சக்திகள் அல்லது சமாதான செயன்முறையை எதிர்த்தவர்கள் ஒஸ்லோ (பிரகடனத்தையல்ல) தீர்மானத்தை சந்தேகக் கண்கொண்டு நோக்கியிருந்ததுடன், அதனைப் புலிகளின் இன்னுமோர் கபட நாடகம் என நிராகரித்திருந்தனர். அவ்விதம் நோக்குகையில் பாலசிங்கத்தின் புதிய பிரகடனத்தின் மூலம் மூக்குடைபட்டவர்கள் தென்னிலங்கையின் சமாதான விரும்பிகளே எனக் கூறாலாம்.

பிரகடனமோ, இல்லையோ சமஷ்டியை ஆராய்வதாகவே ஒஸ்லோவில் எட்டப்பட்ட தீர்மானம் அல்லது இணக்கம் சமாதான செயன்முறைக்கான ஒரு பாரிய உந்துதலை வழங்கியிருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், இனமோதல் அரசியல் ரீதியாக சமாதானமாக தீர்க்கப்பட வேண்டுமாயின் சாத்தியமான ஒரே அரசியல் கட்டமைப்பு சமஷ்டியே ஆகும். அவ்வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீர்மானம் நாட்டை தீர்வுக்கு அண்மையில் இட்டுச் சென்றிருந்தது. சந்தானய அரசாங்கம் பதவிக்கு வந்தன் பின் தீர்வில் இருந்து நாம் தூர விலகிச் சென்றிருந்தோம் என்பது தெளிவானது. பாலசிங்கத்தின் புதிய பிரகடனம் அப்போக்கைத் தீவிரப்படுத்த உதவக்கூடியதாகும்.

அதேசமயம், உணரக்கூடிய இன்னுமோர் விடயம் யாதெனில், தாம் தேவையிலும் அதிகமாக விட்டுக் கொடுத்துவிட்டோம் என்று தற்பொழுது புலிகள் உணரத் தொடங்கியிருப்பதாகும். இன்று இருக்கின்ற அரசியல் நிலையை கூர்ந்து அவதானிக்கையில் புலப்படுகின்ற விடயம் இலங்கை அரசாங்கம் வெற்றிபெற்ற ஒரு நிலையில் இருப்பதாகும். தென்னிலங்கையில் அரசியல்வாதிகளுக்கு அல்லது சமூகத்திற்கு இனப்பிரச்சினை எப்பொழுதுமே பாரதூரமான நெருக்கடியாக இருந்ததில்லை. அவர்களுக்கு பிரச்சினையாக இருந்ததெல்லாம், "யுத்தம்" மட்டுமே ஆகும். யுத்தம் அற்றவகையில் தமிழர்கள் இனப்பிரச்சினையை முன்னெடுத்து இருப்பார்களேயானால், அது ஒரு பிரச்சினையாகவே இருந்திருக்கப்போவதில்லை. மாறாக யுத்தம் தென்னிலங்கையை பாரதூரமான ஒரு நெருக்கடி நிலைக்குத் தள்ளியிருந்தது. யுத்தத்தின் தாக்கத்தை அரசியல் இஸ்திரமின்மை, பாதுகாப்புப் பிரச்சினை, நிதி மற்றும் மனிதவள இழப்புகள் போன்ற எத்தனையோ கோணங்களில் இருந்து நோக்க முடியும். எனவே, தென்னிலங்கைக்கு வேண்டியிருந்ததெல்லாம் அல்லது அதன் முதலாவது தெரிவாயிருந்தது யுத்தத்தை நிறுத்துவதே அன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதல்ல. அந்த இலக்கு இன்று, ஆகக் குறைந்தது தற்காலிகமாகவேனும் அடையப்பட்டுள்ளது. அதுவும் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு எந்தவிதமான செயற்பாட்டு ரீதியான அதிகாரப் பரவலாக்கமும் இல்லாத வகையில் யுத்தம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது தென்னிலங்கை அரசாங்கத்திற்குக் கிடைத்த ஒரு வெற்றி என்றே வர்ணிக்கப்பட வேண்டும்.

உண்மையில், பாரதூரமான நிதிப் பிரச்சினை ஒன்று இல்லாதிருப்பின் அல்லது சர்வதேச நிதி உதவிகள் பேச்சுவார்த்தைகளுடன் பிணைக்கப்பட்டிருந்திருப்பின் இப்போதுள்ள நிலையை நீடித்துக் கொண்டிருப்பதே தென்னிலங்கையைப் பொறுத்தவரை பயனுடையதாய் இருந்திருக்கும். எனினும், இந்த யதார்த்தத்தை புலிகள் உணர்ந்திருக்க மாட்டார்கள் எனக் கருதுவதற்கில்லை. எனவே, பாலசிங்கத்தின் புதிய பிரகடனம் அல்லது இவ்வருட மாவீரர் தின உரையில் பிரபாகரன் பிரகடனப்படுத்தவுள்ள விடயங்கள் என எதிர்பார்க்கப்படுபவை இந்த யதார்த்தத்தினை புரிந்து கொண்டதன் விளைவுகளாய் இருக்கக்கூடும்.

தனிநாடு

பாலசிங்கம் வலியுறுத்தியுள்ள அடுத்த பிரதானமான விடயம் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை முற்றாகக் கைவிட்டுவிடவில்லை, அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பூரணமான சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டினுள்ளேயே செயற்படுகின்றனர் என்பதாகும். தமிழ்மக்களுக்கு சட்ட ரீதியாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் சுயநிர்ணய உரிமை உள்ளது என அவர் வாதிட்டது போன்று தோன்றுகின்றது. கோட்பாட்டு ரீதியான விடயத்தின் நடைமுறை ரீதியான சாத்தியம் என்ன என்பது இங்கு முக்கியமானதாகும்.

புலிகள் தனிநாடு என்ற கோட்பாட்டினடிப்படையில் செயற்படுவது பேரம்பேசும் தந்திரோபாயமே எனில், அதில் அதிக வாதப்பிரதிவாதங்களுக்கு இடமிருப்பது சாத்தியமற்றது. பேச்சுவார்த்தை தந்திரோபாயம் என்ற நிலையில் இருந்து சிந்திப்போமாகில் தனிநாடு என்ற கோட்பாட்டினுள் இருந்து பேச்சுவார்த்தை மேசைக்கு செல்வோமாயின், மட்டுமே ஆகக் குறைந்தது சமஷ்டித் தீர்வொன்றையாயினும் பெற்றுக்கொள்ள முடியும். சமஷ்டி என்ற நிலையில் இருந்து ஆரம்பிப்போமாயின் மாகாண சபை போன்றதொரு தீர்விற்கே இணங்கவேண்டியிருக்கும்.

எனவே, பேச்சுவார்த்தையில் ஒரு துரும்பாக தனிநாடு என்பதைப் புலிகள் பயன்படுத்த முனைவார்களேயாயின் அது தவறான ஒரு அணுகுமுறையாக இருக்காது. மாறாக தனிநாடு என்பது நடைமுறைச் சாத்தியமான ஒரு தீர்வே என்ற வட்டத்தினுள் இருந்து சிந்திப்பார்களேயாயின் அவர்கள் கவனத்தில் எடுக்கவேண்டிய பல்வேறு விடயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பிரதானமானவை என்ற வகையில், சர்வதேச அபிப்பிராயம், ஆயுத ரீதியாக அன்றி அரசியல் ரீதியாக பூரண சுயநிர்ணய உரிமையை அடைந்துகொள்ளக்கூடிய இயலுமை, இராணுவ ரீதியான தீர்வாயின் நீண்ட காலத்தில் யுத்தத்தைத் தக்கவைத்துக் கொள்ளக்கூடிய இயலுமை, இலங்கை இராணுவத்தை வட கிழக்குப் பிரதேசத்தில் இருந்து பூரணமாக வெளியேற்றக்கூடிய புலிகளின் இயலுமை போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கும்.

எவ்வாறாயினும், இது ஒரு பேச்சுவார்த்தைத் தந்திரோபாயமாக இருப்பின், முக்கியமாது பேச்சுவார்த்தை எவ்வரசாங்கத்துடன் என்பதாகும். சந்தானய அரசாங்கத்துடன் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக்கூடிய சாத்தியம் காணப்படவில்லை என்பதை இதற்கு முன்னரே பல தடவைகள் இப்பகுதியில் கூறியுள்ளோம். அந்நிலையில் இன்றும் பாரிய மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. அதேசமயம், அரசாங்கத்தின் நிதி நெருக்கடியும் தீவிரமாக அதிகரித்துச் செல்வது தெளிவாகப் புலப்படுகின்றது. எனவே, பூரணமான பொருளாதார வீழ்ச்சியை தவிர்த்துக் கொள்ளும் வகையில் ஒரு தந்திரோபாயப் பேச்சு வார்த்தைக்கு அரசாங்கம் இணங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இத்தகைய நிலையில் இவ்வரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு இணங்குமாக இருப்பின், அரசாங்கத்தின் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொள்ள புலிகள் தயங்கமாட்டார்கள் என எதிர்பார்க்கலாம். அதாவது, இவ்வரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக்கான தயார்நிலை அதிகரிக்க, புலிகளின் நிலைப்பாடும் இறுக்கமடைந்து செல்லும் என எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய சந்தர்ப்பத்தில் தனிநாடு என்கின்ற பேச்சுவார்த்தைத் துரும்பு அதிக பயனுடையதாய் இருக்கலாம்.

ஆனால், பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவது ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துடனாக இருக்குமாயின், பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டியதாய் இருக்கும். இடைக்கால நிர்வாகசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என ஐ.தே.க.சந்தானய அரசாங்கத்தை வலியுறுத்தி வருவதனால், அது அண்மைய எதிர்காலத்தில் அரசமைக்குமாக இருக்குமானால், இடைக்கால யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முன்வரும் என எதிர்பார்க்கலாம். ஆயினும். இறுதித் தீர்வு என்ற விடயத்திற்கு வருகின்றபோது, மீண்டும் ஒஸ்லோ பிரகடனத்தில், மன்னிக்கவும் தீர்மானத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டியிருக்கும்.

(07. 11. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41

அதிகரிக்கும் இலங்கை-இந்திய நெருக்கம்: தீவிரமடைந்து வரும் சந்தேகங்கள்

கடந்த சில காலங்களாக இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான உறவின் தாற்பரியம் மிகத் தீவிரமான முறையில் உறுதியடைந்து செல்வது அவதானிக்கப்படலாம். ஒருவகையில் நோக்குகையில் இவ்விரு நாடுகளும் அபாயகரமான அளவில் நெருங்கிச் செல்வதாலோ என்னவோ சில மட்டங்களில் இப்போக்கு சந்தேகத்தையும் அச்சத்தையும் தோற்றுவிக்கக் கூடியதாய் மாற்றமடைந்துள்ளது. குறிப்பாக, இலங்கைத் தமிழ் மக்களிடையே இது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறப்படலாம்.

அதிகரிக்கும் உறவு

இந்தியாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நெருங்கிய அயல்நாடுகள் காணப்பட்டபோதும், இலங்கைக்கு புவியியல் ரீதியாக நெருக்கமான அயல்நாடு இந்தியா மட்டுமே ஆகும். இதன் காரணமாகவும் ஏனைய பல வரலாற்று, சமூகவியல் காரணிகளினாலும் இந்தியாவிற்கும், இலங்கைக்குமிடையில் விசேடமான ஒரு பிணைப்பு காணப்படுகின்றது. வரலாற்றுக் காரணிகள் என்ற வகையில் பௌத்தம் இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டமை, சமூகக் காரணிகள் என்ற வகையில் இரு நாடுகளுக்கிடையிலும் காணப்படுகின்ற மொழி, கலாசார ரீதியான தொடர்புகள் போன்றவை கூறப்படலாம். எனினும், அண்மைய வரலாற்றுக் காலத்தில் இவ்விரு நாடுகளுக்குமிடையில் குறிப்பிடத்தக்க ஓர் நல்லுணர்வு காணப்பட்டது எனக் கூறமுடியாது.

குறிப்பாக, இவ்விரு நாடுகளும் பிரித்தானிய ஆதிக்கத்தில் இருந்து விடுதலை அடைந்து கொண்டதன் பின்னர் அச்சமும், பதற்றமுமே காணப்பட்டிருந்தன. இதற்கான பிரதானமான காரணம் இலங்கையை இந்தியாவுடன் அரசியல் ரீதியாக இணைத்துக் கொள்வதற்கான ஒரு விருப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில இந்தியத் தலைவர்களிடையேயும், வெளிவிவகாரக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்வோரிடையேயும் காணப்பட்டிருந்தமையாகும். இது இலங்கை ஒரு சுதந்திரமான இறைமை பொருந்திய நாடாக நிலைத்திருப்பதற்கு ஒரு அச்சுறுத்தலாக இருந்தமையால் சிங்கள மக்கள் இந்தியாவை இட்டு பெரும் அச்சத்தைக் கொண்டிருந்தனர். ஜே.வி.பி.ஆரம்ப காலங்களில் மிகத் தீவிரமான இந்திய எதிர்ப்பு மனோபாவத்தைக் கொண்டிருந்தமைக்கான முக்கிய காரணம் இதுவெனக் கூறப்படலாம்.

ஆயினும், இந்திய அச்சுறுத்தலைக் கையாள்வதற்கான ஒரு உபாயமாக பதவியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கங்கள் மேற்கு நாடுகளைக் குறிப்பாக அமெரிக்காவைச் சார்ந்து செல்கின்ற போக்கைக் கொண்டிருந்தன. இப்போக்கே குறிப்பாக திருமதி இந்திரா காந்தி - ஜே.ஆர்.ஜெயவர்தன காலத்தில் இரு நாடுகளும் மிக விரோதமான உறவைக் கொண்டிருக்கக் காரணமாயிற்று. இத்தகைய உறவில் இருந்து தமிழர்கள் பெரும் பயனடைந்திருந்தார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதில் இருந்து குறிப்பாக இவ்வுறவுப் போக்கில் பாரிய மாற்றமேற்பட்டிருந்ததுடன். இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கம் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதில் இருந்து குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்திருந்தது.

இருப்பினும் மிக அண்மைக்காலம் வரை இது "மிகச் சிறந்த உறவு" என்பதாக இருந்ததே அன்றி சந்தேகப்படும் படியானதாக இருந்ததில்லை. இருப்பினும் கடந்த சில வருடங்களாக இலங்கை மீதான இந்தியாவின் அக்கறை மிகத் தீவிரமாக அதிகரித்துள்ளது எனக்கூறப்படலாம். இவ்வக்கறை பல்வேறு வழிகளிலும் இலங்கையின் விவகாரங்களில் இந்தியா தொடர்புபடுகின்ற ஒன்றாகவும், இலங்கையில் அதன் பிரசன்னத்தை தெளிவாகப் புலப்படுத்துவதாகவும் அமிவிருத்தியடைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இலங்கை இராணுவத்தின் இருப்பு அச்சுறுத்தப்பட்ட போது இந்தியா இலங்கைக்கு வழங்கிய பெருந்தொகை நிதியுதவியில் இருந்து. இந்தியா இன்று வரை கோடிக்கணக்கான ரூபாய்களைக் கடனாகவும், வேறு உதவிகளாகவும் வழங்கியுள்ளது. இன்று அநுராதபுரத்தில் இருந்து திருகோணமலைக்கான அதிவேக பாதையின் நிர்மாணத்திற்கான நிதியையும் வழங்க முன்வந்துள்ளதுடன் சில செய்தியறிக்கைகளின் படி இப்பாதைக்கு ராஜீவ் காந்தியின் பெயரே சூட்டப்படவுள்ளதாகத் தெரிகின்றது. அத்துடன், இதற்கு முன்னரே திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியா குத்தகைக்கு எடுத்திருப்பது யாவருமே அறிந்ததே.

பொருளாதார ரீதியாகவும் இலங்கையில் இந்தியாவின் பிரசன்னம் அதிகரித்து வருவது புலப்படக்கூடும். உதாரணமாக, இலங்கையின் எண்ணெய்ச் சந்தையில் இந்திய எண்ணெய்க் கம்பனி பாரிய பலத்துடன் உட்புகுந்துள்ளது. அதற்கும் மேலதிகமாக பாரத் எண்ணெய்க் கம்பனி என அழைக்கப்படுகின்ற இந்திய அரசுடன் தொடர்புடைய இன்னுமோர் நிறுவனம் மூன்றாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டாளராக உள்நுழையக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதுமட்டுமன்றி இலங்கையின் ஹோட்டல் தொழில்துறை போன்ற பல்வேறு துறைகளிலும் பெருமளவில் முதலீடு செய்து வருகின்றது. இவ்விதம் இலங்கையில் இந்தியாவின் பிரசன்னமும் அக்கறையும் திடீரெனப் பெருமளவுக்கு அதிகரித்திருப்பதற்கான காரணம் என்ன?

பாதுகாப்பு ஒப்பந்தம்

இலங்கைக்கு இந்தியாவினால் எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லை என்ற கருத்தை முன்வைக்க விரும்புவோர் சுட்டிக்காடுகின்ற ஒரு விடயம் இலங்கை மீதான இந்தியாவின் அக்கறை தற்போதைய நிலையில் பூரணமாகப் பொருளாதார ரீதியானதே என்பதாகும். அவ்வகையில் நியாயப்படுத்தப்படுவதே இலங்கைச் சந்தையில் அதிகரித்து வரும் இந்தியாவின் கட்டுப்பாடு ஆகும். நிர்மாணிக்கப்படவுள்ள அநுராதபுரம் - திருகோணமலை துரித பாதை கூட பொருளாதார ரீதியாக விளக்கமளிக்கப்படலாம். பொலநறுவைக்கு அப்பால் திருகோணமலை வீதி மிக மோசமாகச் சேதமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. சில இடங்களில் வீதியே காணப்படாத ஒரு நிலையே உள்ளது. இது இந்தியக் கம்பனிகளின் எண்ணெய்ப் போக்குவரத்துக்கு ஒரு பிரச்சினையே ஆகும். எனவே, திருகோணமலை வீதி இந்தியக் கம்பனிகளின் போக்குவரத்துக்கு உதவும் என்பதால் அதற்குப் பொருளாதார ரீதியான ஒரு பரிமாணம் உள்ளது என்றே கூறப்பட வேண்டும்.

எனினும், சுவாரசியமானது யாதெனில், முன்னெடுத்து வரப்படுகின்ற இலங்கை, இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கான காரணமும் பொருளாதார ரீதியானது எனச் சிலர் வாதிடமுனைவதாகும். அதாவது தற்போதைய நிலையில் இலங்கை பெருமளவிலான ஆயுதங்களையும், யுத்தப் பொருட்களையும் சீனா, இஸ்ரேல், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருகின்றது. அதேசமயம் இந்தியாவும் இப்பொழுது சர்வதேச ஆயுதச் சந்தையில் ஓர் உற்பத்தியாளராக உள்நுழைந்துள்ளது. எனவே, பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதன் மூலம் இந்தியா இலங்கையின் ஆயுதச் சந்தைக்குத் தனது உற்பத்திகளை வழங்கவே முற்படுகின்றது என்பது இவ்வாதம் ஆகும். பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதன் மூலம் தனது ஆயுதங்களையும், இராணுவ உபகரணங்களையும் இந்தியா இலங்கைக்கு விற்பனை செய்ய முற்படுமாயின் அது பொருளாதார ரீதியானதே என்பதில் சந்தேகமில்லை.

கடந்த ஞாயிறு "தினக்குரலில்" முன்பக்கச் செய்தியாக இலங்கையில் அரசியல், இராஜதந்திர ரீதியில் இந்தியா தலையிட மாட்டாது என்ற இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சுவாரசியமான வகையில் இங்கு தவறவிடப்பட்டிருந்த ஒரு வார்த்தை "இராணுவம்" என்பதாகும். மன்மோகன் சிங்கின் அறிவிப்பில் இராணுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியாக இந்தியா தலையிடாது என்று கூறப்படாமை தற்செயலானதாக இருப்பதற்கான சாத்தியம் குறைவானதே. இராணுவ ரீதியான தலையீடென்பது இராணுவத்தை அனுப்புவதாகவே இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆயுதங்களை வழங்குதல், இராணுவப் பயிற்சியளித்தல் போன்றவையும் இராணுவ ரீதியான தலையீடுகளாகக் கருதப்படலாம். அவ்வகையில் நோக்குகையில் இலங்கையில் இராணுவ ரீதியான தலையீடு தொடர்வதற்கான சந்தர்ப்பங்களே காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், பாதுகாப்பு ஒப்பந்தம் தூய நிலையில் பொருளாதார ரீதியானது என்பதை ஏற்றுக் கொள்வதில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பிரதானமானது பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவதில் காணப்படுகின்ற சிக்கல் ஆகும். இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி லயனல் பலகல்ல இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட காலத்தில் இருந்தே பேசப்பட்டு வருகின்றது. இன்று இம்முயற்சி பூரணமடைந்திருப்பதாகவும், அது விரைவில் அங்கீகரிக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகின்றது. ஆயினும், வெளியாகியுள்ள தகவல்களின்படி இது உடனடியாக கையெழுத்திடப்படுவதில் ஏற்பட்டுள்ள தடை பலாலி இராணுவ முகாம் பற்றிய சிக்கல் ஆகும்.

பாதுகாப்பு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக பலாலி இராணுவ முகாமின் ஓடுபாதையைப் புனரமைக்க இந்தியா விதித்துள்ள ஒரு நிபந்தனை இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகள் தவிர்ந்த ஏனைய எந்த ஒரு நாட்டினதும் விமானங்கள் இந்த ஓடு தளத்தைப் பாவிக்க அனுமதிக்கப்படக் கூடாது என்பதாகும். இது கடினமான ஒரு நிபந்தனை மட்டுமல்ல கிட்டத்தட்ட இலங்கையின் இறைமையில் கைவைப்பதற்குச் சமமானது. இதன் காரணமாகவே இந்த நிபந்தனைக்கு இணங்க இலங்கை அரசாங்கம் தயக்கம் காட்டி வருகின்றது. இது பாதுகாப்பு உடன்படிக்கை கையொப்பமிடப்படுவதையும் தாமதப்படுத்தியுள்ளது.

இலங்கையில் இந்தியாவுக்கு இருப்பது வர்த்தக நலன்கள் மட்டுமேயாகில் இந்தியா பெறமுயற்சித்திருக்க வேண்டியது பலாலித் தளத்தின் தடங்கலற்ற பாவனையாகும். ஆயினும், இலங்கையில் வேறு நாடுகள் செயற்பட அனுமதிப்பதைத் தடுக்க விரும்புவது ஒரு வகையில் இலங்கை தொடர்பிலான இந்தியக் கொள்கையில் அடிப்படை மாற்றங்களெதுவும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதையே புலப்படுத்துகின்றது. அதாவது கடந்த காலத்தில், உதாரணமாக 20 ஆண்டு காலத்துக்கு முன்னர் "இந்திய தேசியப் பாதுகாப்பு" காரணங்களின் அடிப்படையில், (1) வேறுநாடுகள் இலங்கையில் தலையிடுவதை எதிர்த்திருந்தது. (2) இலங்கையை இராணுவ ரீதியில் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள விரும்பியிருந்தது. அதன் ஒரு வெளிப்பாடாகவே இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்தது. அத்துடன், இந்தியா இலங்கை ஒப்பந்தத்தில் இணங்கப்பட்டிருந்த சில விடயங்கள் உதாரணமாக, திருகோணமலைத் முறைமுகம் போன்றவை வேறுநாடுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவங்களினால் பயன்படுத்தப்படுவதையும், "அமெரிக்காவின் குரல்" ஒலிபரப்பு நிலையம் இராணுவப் புலனாய்வு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதையும் தடை செய்திருந்தன. ஏனெனில், இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு இலங்கை மீதான கட்டுப்பாடு மிக அவசியமானதாகக் காணப்பட்டிருந்தது.

இவ்வடிப்படைச் சூழ்நிலையில் இன்றும் கூட பாரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன எனக் கூற முடியாது. கெடுபிடி யுத்தம் முடிவடைந்ததன் பின்னரும் கூட இந்தியப் பாதுகாப்பில் இலங்கையின் முக்கியத்துவம் குறைவடைந்துள்ளது எனக் கூற முடியாது. ஆயினும், இன்று நடப்பது என்ன? யுத்தம் அல்லது சமாதானம் என்பதைச் சாட்டாக வைத்துக்கொண்டு இஸ்ரேல் முதல், அமெரிக்கா, ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் யாவும் இலங்கையில் ஓரளவுக்கு இந்தியக் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்படுகின்ற நிலையே காணப்படுகின்றது. இது இந்தியாவுக்கு மகிழ்ச்சியளிக்கும் விடயம் என எவ்வகையிலும் கூற முடியாது.

அவ்வாறாயின் இந்தியாவிற்கிருக்கின்ற ஒரே தெரிவு இயன்ற அளவுக்கு இலங்கையை நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதாகும். இதற்கு தற்போது துரிதமாக அதிகரித்து வரும் அரசியல், இராஜதந்திர, பொருளாதார மற்றும் இராணுவத் தொடர்புகள் உதவக்கூடும். திருகோணமலை, பலாலி போன்றவை இந்தியாவின் செல்வாக்கினுள் கொண்டுவரப்பட்டு, மன்னார் - இராமேஸ்வரத்திற்கிடையிலான பாலம் அமைக்கப்(பட்டால்) படுகின்றபோது இச்செயன்முறை முடிவடையக் கூடும்.

(14 . 11. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42

சமாதான செயன்முறையை மீள ஆரம்பித்தல்: பந்து யாருடைய பக்கத்தில்?

கடந்த ஆண்டு இடைப்பகுதியில் தொய்யத் தொடங்கியிருந்த சமாதான செயன்முறை, நவம்பர் மாதத்துடன் பூரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. தமது அனுசரணையாளர் பணியை இடைநிறுத்திக்கொண்ட நோர்வே மீண்டும் வேலைக்குத் திரும்பியிருந்த போதும், புதிதாகப் பதவி ஏற்றுக்கொண்ட "சந்தானய" அரசாங்கமும் குறிப்பாக, ஜனாதிபதியும் சமாதான செயன்முறையைத் தொடர்ந்து முன்னெடுக்கத் தயாரென்று அறிவித்ததன் பின்னரும் பேச்சுவார்த்தைகள் ஒரு அங்குலம் கூட நகர்வதாகத் தெரியவில்லை. நாங்கள் பேச்சு வார்த்தைக்குத் தயார், அடுத்த தரப்பே தடையாகவுள்ளது என்ற பல்லவியை யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரும் தொடர்ச்சியாகப் பாடிவந்த போதும், இவ்விடயத்தில் தெளிவு படிப்படியாகக் குறைந்து வருவது மட்டும் தெளிவாக உள்ளது.

நாம் ஏற்கனவே கூறியிருந்தது போல கடந்த ஆண்டு தமது இடைக்கால அதிகார சபைக்கான யோசனைகளைச் சமர்ப்பித்திருந்ததன் மூலம் புலிகள் பந்தை உறுதியான முறையில் அரசாங்கத்தின் பக்கம் தள்ளி இருந்தனர். எனினும், இது தொடர்பில் எதுவித காத்திரமான நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லாதிருந்த போதும் பரஸ்பர குற்றச்சாட்டுகள் மட்டும் தொடர்ந்த வண்ணமிருந்தன. தற்பொழுது இரு தரப்பினரும் உறுதியான முறையில், அடுத்த தரப்பே பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும், ஏனெனில் பந்து அவர்களது பக்கம் தான் உள்ளது எனக் கூறி வருகின்றன. இது நிச்சயமாக அவதானிகள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக இந்நாட்டு மக்களுக்கு ஞாபக சக்தியில் பாரதூரமான பிரச்சினை உள்ளது என்ற பின்னணியில் இருந்து நோக்குகையில் இந்தத் தெளிவற்ற தன்மை ஆச்சரியப்படக் கூடியதல்ல.

எவ்வாறாயினும் இத்தகைய ஒரு பின்னணியிலேயே புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் தின உரை இவ்வருடம் கூடுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படும் ஒன்றாக மாறியிருந்தது. இவ்வுரையில் புலிகளின் கொள்கைப் பிரகடனங்கள் சில மேற்கொள்ளப்படுவது பொதுவானதாகக் காணப்பட்ட போதும், இம்முறை ஏற்பட்டுள்ள எதிர்பார்ப்பு மாவீரர்தின உரை சமாதான நடவடிக்கைகள் தொடர்பில் புலிகளின் தற்காலச் சிந்தனையை புரிந்து கொள்வதற்கான சில அறிகுறிகளாவது காணப்படும் என்பதாகும்.ஏனெனில், உண்மையில் சமாதான செயன்முறை அதிலும் குறிப்பாக, இவ்வரசாங்கத்துடனான அணுகுமுறைகள் பற்றிய புலிகளின் தீர்மானங்கள் யாவை என்பதை யூகிப்பது சற்றுக் கடினமானதாகவே உள்ளது. இதன் காரணமாகவே புலிகளின் எதிர்கால நடத்தை பற்றிய பல்வேறு யூகங்கள் முன்வைக்கப்பட்ட வண்ணமுள்ளன.

அவ்வகையில் சிலர் இம்முறை சமாதான செயன்முறையில் எத்தகைய பிரச்சினைகள் ஏற்படினும் புலிகள் மீண்டும் யுத்தத்தை நாடமாட்டார்கள் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். இதனைப் புலிகளின் இரண்டாம் மட்டத் தலைவர்கள் பலர் தாமே கடந்த காலத்தில் பிரகடனம் செய்திருந்தனர். அத்துடன், யுத்தத்திற்கு மீண்டும் செல்வதைக் கடினமானதாக மாற்றுவதாகவே இருக்கின்ற சர்வதேச சூழ்நிலைகளும் அபிப்பிராயங்களும் காணப்படுகின்றன. எனவே, யுத்தம் மீண்டும் ஏற்படுகின்ற சாத்தியம் காணப்படவில்லை என்கின்ற உறுதியான அபிப்பிராயத்தை தென்னிலங்கை அவதானிகள் பலர் கொண்டுள்ளனர். இவர்களுள் சிறந்த சர்வதேசத் தொடர்புகளைக் கொண்டுள்ள சிலர் முக்கிய சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு இக்கருத்தை ஊட்டி வருவதாகவும் கூறப்படுகின்றது.

அதேசமயம், இவ்வபிப்பிராயத்தில் பெரியளவு நம்பிக்கை அற்ற ஒரு பகுதியினரும் காணப்படவே செய்கின்றனர். குறிப்பாக தமிழ் மக்களிடையே அதிலும் குறிப்பாக வடக்கை மையமாகக் கொண்டிருக்கின்ற அவதானிகள் புலிகள் மீண்டும் யுத்தத்தை நாடமாட்டார்கள் என்பதை நிச்சயமாகக் கூறமுடியாது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். ஏனெனில், ஒரு வகையில் நோக்குகையில் இருக்கின்ற சூழ்நிலை தென்னிலங்கைக்குச் சாதகமானதாகவே உள்ளது. எனவே, புலிகள் தமது சமாதானம் தொடர்பான கொள்கைகளை மீள்பரீசீலனை செய்துகொண்டிருக்கக்கூடுமென இக்குழுவினர் கருதுகின்றனர்.

எனவே, சமாதான செயன்முறை தொடர்பிலான புலிகளின் தற்கால சிந்தனை என்பது பற்றிய ஆர்வம் குறிப்பாக தென்னிலங்கை அவதானிகள் மத்தியில் பெரிதும் அதிகரித்துள்ளது. அவ்வகையில் மாவீரர் தின உரையின் எதிர்பார்ப்பு ஆச்சரியப்படத்தக்கது அல்ல.

ஜனாதிபதி பேட்டி

இத்தகைய நிலையிலேயே கடந்த புதன்கிழமை ஜனாதிபதியின் விசேட பேட்டி ஒன்று தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டிருந்தது. இப்பேட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி ஈரான் விஜயத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் பதிவுசெய்து ஒளிபரப்பு செய்யப்பட்டிருந்தது என்றவகையில் பிரபாகரனின் உரைக்கு முன்னதாக ஜனாதிபதியின் செய்தி வெளியிடப்படவேண்டுமென்ற ஆர்வம் இருந்திருக்கலாம்.

பேட்டி ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பான பொதுவான விடயங்கள் பற்றியதாக காணப்பட்டபோதும் சமாதான தொடர்பிலான விடயங்கள் முக்கிய இடத்தைப் பிடித்துக்கொண்டிருந்தன. அவ்வகையில் ஜனாதிபதி கூறிய ஒரு விடயம் மிக முக்கியமானது. அதாவது புலிகள் இலங்கை அரசாங்கத்தை யுத்தத்தினுள் திணித்தாலன்றி யுத்தத்தை நாடும் நோக்கம் தனக்கில்லை என்பதை வலியுறுத்தி கூறியிருந்தார். எனவே யுத்தமொன்று ஏற்பட்டால் அதன் பொறுப்பு புலிகளையே சாரும் என்ற செய்தி தொக்கிநின்றிருக்கலாம்.

இதற்குப் புறம்பாக ஒப்பீட்டளவில் ஜனாதிபதியின் செய்திகள் அல்லது அணுகுமுறை நட்புணர்வு ரீதியானதாகவே காணப்பட்டிருந்தது. தமிழ் மக்களுக்கு நியாயமான பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதை மீண்டும் வலியுறுத்தியிருந்ததுடன் இடைக்கால சபையொன்று அமைக்கப்படுவதற்கு தாம் எதிரானவர் அல்ல என்பதை கூறியிருந்தார். அவ்வகையில் இப்பேட்டி ஒப்பீட்டளவில் நல்லெண்ணத்தை பிரதிபலிப்பதாய் இருந்தது. ஏனெனில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அளித்த பேட்டிகளிலேயே இருக்கின்ற நல்லெண்ணத்தையும் கெடுக்கக் கூடிய பல விடயங்களை அவர் கூறியிருந்தார்.

உதாரணமாக கடந்தவாரம் ஜனாதிபதியின் அபிமான பத்திரிகையாகிய (தமிழ்நாடு) இந்துவிற்கு அளித்த பேட்டியில் புலிகள் சமாதான செயன்முறையில் ஈடுபட்டிருக்கின்ற அதேசமயம் தன்னை கொலைசெய்ய முயற்சிசெய்கின்றார்கள் என்ற தோரணையில் சில கருத்துக்களை கூறியிருந்தார். எனவே, நல்லுணர்வை வெளிப்படுத்தக்கூடியதாய் இருந்த இப்பேட்டி மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் கடும்போக்கை கடைப்பிடிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் மேற்கொள்ளப்பட்ட தற்காப்பு நடவடிக்கையாகக்கூட இருந்திருக்கலாம். எவ்வாறாயினும் இப்பேட்டியில் ஜனாதிபதி கூறிய இரண்டு விடயங்கள் முக்கியமானவை.

(1) சமாதான செயன்முறையுடன் தொடர்புடைய அடிப்படை பிரச்சினைகளில் தமது அரசாங்கத்திற்குள் பாரதூரமான கருத்துவேறுபாடுகள் எதுவும் இல்லை.

(2) இறுதித் தீர்வுடன் இணைந்த வகையில் இடைக்கால அதிகாரசபை பற்றி பேச்சுவார்த்தை நடாத்துவதில் தமக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என்பவையே அவையாகும்.

இவற்றுள் முதலாவது அம்சத்தை பொறுத்தவரை, இலங்கையின் தற்கால அரசியலை உன்னிப்பாக அவதானிக்கின்ற எவருக்கும் புலப்படக்கூடிய விடயம் இக்கூற்று உண்மைக்குப் புறம்பானதென்பதாகும். அரசாங்கத்தின் இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய கூறுகளாகிய சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.இற்கும் இவ்விடயத்தில் எவ்விதமான உடன்பாடும் காணப்படவில்லை. மோதலின் அடிப்படைப் பிரச்சினைகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும் கூட நோர்வே மூன்றாம் தரப்பாக செயற்படுவது பற்றிய விடயத்தில்கூட இவற்றிற்கிடையில் எவ்விதமான உடன்பாடும் காணப்படவில்லை. நோர்வே இலங்கைச் சமாதான முயற்சிகளில் பயனுடைய ஒரு பங்கை ஆற்றிக் கொண்டிருக்கின்றது என்று சுதந்திரக் கட்சித் தலைவர்கள் கூறிக்கொண்டிருக்கின்ற அதே சமயத்திலேயே, நோர்வே வெளியேற வேண்டும் என்ற ஜே.வி.பி போராட்டம் "வார்ட் பிளேசில்" நடந்து கொண்டிருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் ஜே.வி.பி.யின் அரசியல் பற்றியும் ஒரு வார்த்தை கூறுவது பொருத்தமானது. உண்மையில் ஜே.வி.பி.யின் செயற்பாடுகள் "அரசியல் பகிடி" என்ற அளவிற்கு மாறியுள்ளமையினால் அதிக ஆய்வு அவசியமற்றது. ஆயினும் ஓர் அரசியல் தந்திரோபாயம் என்று கருதி அவர்கள் இச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்களேயானால் மக்கள் ஏமாற்றப்பட்டார்களா இல்லையா என்பது அடுத்த தேர்தலில் தெரியவரும்.

எவ்வாறாயினும் சமாதானம் தொடர்பில் இவ்விரு அமைப்புகளிடையிலும் ஒரு ஒருமைப்பாடு இல்லை என்பது தெளிவானது. அதே சமயம் ஜனாதிபதியின் கூற்று புலிகளின் குற்றச்சாட்டை மறுப்பதற்கு சமமானது. ஏனெனில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஒரு நிபந்தனை என்பது போலவே அரசாங்கத்தினுள் இருக்கின்ற அமைப்புகள் பொது நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை புலிகள் முன்வைத்துள்ளனர்.

இதில் சுவாரசியமானது யாதெனில் அரசாங்கம் கூறுவது போன்று இடைக் காலசபை, இறுதித் தீர்வு ஆகிய இரு அம்சங்களின் அடிப்படையில் பேச்சு நடாத்த நாம் தயார் என புலிகள் அறிவித்தால் என்ன நடைபெறும் என்பதாகும். சமாதான முயற்சிகள் ஆரம்பித்த காலத்தில் பல நடவடிக்கைகளை புலிகளே தொடங்கி வைத்திருந்தனர். உதாரணமாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு முன்னதாகவே புலிகளின் தலைவர் பிரபாகரன் கையெழுத்திட்டிருந்தார். இத்தகைய நடவடிக்கைகள் அவர்கள் பற்றிய அபிப்பிராயத்தை பல்வேறு மட்டங்களிலும் அதிகரித்திருந்தன என்பதில் சந்தேகமில்லை. அதே அடிப்படையில் இம்முறையும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க நாம் தயார் என திட்டவட்டமாக புலிகள் அறிவித்தால் அரசாங்கத்தின் நடவடிக்கை எவ்விதம் அமைந்திருக்குமென்பது சுவாரசியமானது. அப்பொழுது ஒருவேளை இக்கூற்றுகளின் சாயம் வெளுத்துவிடக்கூடும்.

ஆயினும், இரண்டாவது விடயம் அதாவது இறுதித் தீர்வுடன் இணைந்த வகையில் இடைக் காலசபை பற்றிப் பேசத் தான் தயாராக இருப்பதாக கூறுகின்றபோது அவரது வாதம் வலுவானதாகவே உள்ளது. இடைக்கால சபைபற்றி மட்டுமே இப்போது பேசுவோம் என்று புலிகள் கூறுவதில் ஒரு நியாயம் அவர்களைப் பொறுத்தவரை இருக்கக்கூடுமே ஆயினும், மோதலைத் தூரத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று அவதானிக்கின்ற ஒருவருக்கு அது நியாயமாகப் படப்போவதில்லை. ஏனெனில், இடைக்காலத்தில் அடையப்படவேண்டிய பொருளாதார நலன்கள் எந்த அளவிற்கு முக்கியமானதோ அதே அளவிற்கு முக்கியமானது இறுதித் தீர்வு என்பதாகும். எனவே, ஒரு மூன்றாம் நபருக்கு புலிகளின் கோரிக்கை அல்லது நிலைப்பாடு நியாயமற்றதாகவே தோன்றும்.

இதற்கொரு சிறந்த உதாரணம் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பிரபல சமாதான ஆய்வாளர் ஜொகான் கால்டுங்கியின் கருத்துக்களாகும். சமாதான பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கின்றபோது இடைக்கால நிர்வாக சபை பற்றிய விடயங்களுடன் இணைந்ததாக இறுதித் தீர்வு பற்றியும் பேசப்படவேண்டுமென அவர் கூறியிருந்தார். எனவே இவ்விடயத்தை பொறுத்தவரை ஜனாதிபதி நியாயமான நிலைப்பாட்டை கொண்டுள்ள அதேசமயம், புலிகள் நியாயமற்ற கோரிக்கையை கொண்டுள்ளனர் என்ற கருத்தே பொதுவாக சர்வதே அவதானிகளிடையே காணப்படுகின்றது. இக்கருத்து ராஜதந்திர வட்டாரங்களிலும் இருக்கக்கூடும். அவ்விதம் காணப்படுமாயின் புலிகள் பற்றிய சர்வதேச அபிப்பிராயத்திற்கு அது சாதகமானதல்ல. எனவே, தமது தந்திரோபாயங்களை மீள்பரிசீலனை செய்யவேண்டிய ஒரு தேவை புலிகளுக்கு ஏற்படலாம்.

(28. 11. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43

யுத்த அபாயத்தின் தாற்பரியத்தைப் புரிந்து கொள்ளும் இயலுமை தெற்கிற்கு உள்ளதா?

சர்வதேச ரீதியாகவும், தெற்கிலும் பொதுவாகவே எதிர்பார்க்கப் படுகின்ற ஒன்றாகிய புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரை இவ்வருடம் விசேட முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தற்கான காரணம் முன்னைய கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. சமாதான செயன்முறையின் எதிர்காலம் என்ன என்பது உண்மையில் ஒரு பிரச்சினையாகவே இருந்திருக்கவில்லை. ஏனெனில், சமாதான செயன்முறை என்ற ஒன்று நடைமுறையில் இருந்திருக்கவில்லை. கடந்த ஆண்டு ஏப்ரலில் தேக்கமடைந்த சமாதான முயற்சிகள் நவம்பர் மாதம் கிட்டத்தட்ட இல்லாமற் செய்யப்பட்டிருந்தன. அத்துடன் காத்திரமான ஒரு முறையில் முயற்சிகள் முன்னெடுக்கப்படப் போவதில்லை என்ற யதார்த்தம் இவ்வருடம் ஏப்ரல் மாதம் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் உறுதி செய்யப்பட்டிருந்தது.

எனவே, கேள்விக்குள்ளாகி இருந்ததெல்லாம் யுத்த நிறுத்த ஒப்பந்தமே அன்றி வேறில்லை. மிக நீண்ட காலத்தின் பின்னர் இந்த நாட்டிற்கு ஏற்பட்டிருந்த நம்பிக்கையூட்டக் கூடிய ஒரு விடயம் இருந்ததெனில் அது யுத்த நிறுத்த ஒப்பந்தமே ஆகும். இவ்வுடன் படிக்கை இந்நாட்டு மக்களிடையே அளவுக் கடந்த நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியிருந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இத்தகைய ஒரு சிறந்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ள இந் நாட்டின் தலைவர்கள் தவறியிருந்தமை துரதிஷ்டவசமானதே. தவறியிருந்தமை என்று இங்கு கடந்த காலத்தில் கூறவேண்டிய தேவையென்னவெனின், பிரபாகரன் உரையின் பின்னர் யுத்தம் மூளும் அபாயம் "ஏறக்குறைய" நிச்சயமாகியுள்ளது.

செய்தி

பிரபாகரன் தனது உரையில் என்ன கூறினார் என்பதை இங்கு மீண்டும் எடுத்துக் கூற வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. இருப்பினும் மிகக் கவனமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமைக்கப்பட்டிருந்த உரையின் முக்கியமான அம்சங்களுள் மூன்று, குறிப்பாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் எதிர்காலம் தொடர்பில் சுட்டிக்காட்டப்படக் கூடியவை. அவையாவன

(1) இருக்கின்ற சூழ்நிலை அரசுக்குச் சார்பானது என்பதால் அரசின் கவனம் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் உள்ளதே அன்றி சமாதான முயற்சிகளில் அல்ல

(2) விடுதலைப் புலிகள் பொறுமையின் எல்லையை அடைந்து விட்டார்கள்,

(3) சர்வதேச சமூகத்திடம் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்.

இம் மூன்று விடயங்கள் தொடர்பிலான விளக்கமான ஆய்விற்குச் செல்வதற்கு முன்னர் சுட்டிக் காட்டப்பட வேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில், உரையின் தொனி என்பதாகும். தென்னிலங்கை அரசியல் மீதும் குறிப்பாக ஜனாதிபதி, ஜே.வி.பி.கூட்டு மீதான தாக்குதல் ஆகும். 2000ஆம் ஆண்டு அல்லது 2001 ஆம் ஆண்டு மாவீரர் தின உரைகளில் காணப்பட்டிருந்த நட்புணர்வின் தொனி இவ்வுரையில் காணப்படாமை தென்னிலங்கை அரசியல் வாதிகளால் அவதானிக்கப்பட்டிருக்கலாம். அதேசமயம், சமாதான முயற்சிகளில் தொடர்ந்து நம்பிக்கைக் கொள்ள முடியாதிருப்பதற்கான நியாயத்தை குறிப்பாக தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கான முயற்சியும் உரையினுள் பொதிந்திருந்தது என்றே கூறவேண்டும். தீவிரமான ஒரு மட்டத்தில், யுத்தத்தை மீள ஆரம்பிப்பதற்கான நியாயத்தை மக்கள் மன்றத்தின் முன் எடுத்துரைப்பதற்கான முயற்சியாகவும் இது கருதப்படலாம்.

எவ்வாறாயினும் நாம் மேலே சுட்டிக் காட்டிய மூன்று விடயங்களுடனும் தொடர்புடைய பரிமாணங்களை விளக்கமாக நோக்குவது பயனுடையது ஆகும்.

யுத்த நிறுத்தம்

2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது முன்னெடுக்கப்படவிருந்த சமாதான முயற்சிகளுக்கான அடிப்படை யாது, அச்செயன்முறைக்கு உதவக் கூடியது என்ற வகையிலேயே அது உறுதி செய்யப்பட்டிருந்தது. ஒருவகையில் நோக்குகையில் சமாதான முயற்சிகளுக்கான ஒரு முன் நிபந்தனையாக யுத்த நிறுத்தம் காணப்பட்டிருந்தது. ஏனெனில், யுத்தத்தை தொடந்து முன்னெடுக்கின்ற அதேசமயம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை காத்திரமான முறையில் முன்னெடுப்பது என்பது நடைமுறைச் சாத்தியமானதல்ல. எனவே யுத்த நிறுத்தம் சமாதான செயன்முறையில் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு அம்சமாகவே கையெழுத்திடப்பட்டிருந்ததே அன்றி அது தன்னிலையில் சுயாதீனமான தன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சமயம், காலகெதியில் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் இருப்பு அதிகாரப் பரவலாக்கல் கோரிக்கைக்கு எதிரான ஒன்றாக மாறிவிட்டிருந்தது. நாம் ஏற்கனவே இப்பகுதியில் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒரு வகையில் இலங்கை அரசாங்கத்தை வெற்றியடைந்த நிலைக்குத் தள்ளியிருந்தது எனச் சுட்டிக்காட்டியிருந்தோம். ஏனெனில், இலங்கை அரசாங்கத்திற்கான பாரிய பிரச்சினையாயிருந்த யுத்தத்தை எந்தவிதமான அதிகாரப் பரவலாக்கலும் அற்ற வகையில் நிறுத்திக் கொள்வதற்கு இலங்கை அரசிற்கு இயன்றிருந்தது. எனவே யுத்த நிறுத்தம் நீடித்திருக்குமாயின் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் அரசுக்கு உண்மையில் இருந்திருக்கவில்லை. உண்மையில் யுத்த அபாயமே சமாதான முயற்சிகளை உந்திச் சென்ற வலு என்பதில் சந்தேகமில்லை. அவ்வகையில் நோக்குகையில் அரசாங்கத்தின் கவனம் யுத்த நிறுத்ததில் உள்ளேதே அன்றி சமாதான முயற்சிகளில் இல்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டமை வியப்பிற்குரியதல்ல.

விரக்தி

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஏறத்தாழ ஏழு ஆண்டுகால மிக மோசமான யுத்தத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டமைக்கான பிரதானமான காரணம் யுத்தத்தினால் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிகமாகவேனும் நிவாரணத்தை வழங்குவதாகும். அத்துடன், எத்தகைய நிவாரண நடவடிக்கைகளிலும் உறுதியான ஒரு பங்கை வகிக்க வேண்டும் என்ற விருப்பம் புலிகளுக்கு இருந்தது. இதன் அடிப்படையிலேயே உபகுழுக்களின் அமைப்பிற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அவை செயற்படவில்லை. புலிகளின் இடைக்கால அதிகார சபைக்கான முன்மொழிவுகளும் இவ்வடிப்படையிலேயே வடிவமைக்கப்பட்டிருந்தன. அதுவும் ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது ஆகக் குறைந்தது விவாதிக்கப்படவோ இல்லை. எனவே, வடக்கு, கிழக்கின் பொருளாதார அபிவிருத்திக்கான தக்க அடிப்படைகள் எதுவும் இன்றும் ஏற்படுத்தப்படவில்லை. அத்துடன் யுத்த நிறுத்தத்தின் பயனை தென்பகுதி மக்கள் பூரணமாக அனுபவிக்க வட-கிழக்கு மக்கள் அச்சந்தர்ப்பத்தைப் பெறவில்லை என புலிகள் உறுதியாக நம்புகின்றனர். எனவே சமாதான முயற்சியில் ஈடுபடுவதற்கு உந்திய காரணிகள் திருப்தி செய்யப்படவில்லை.

மாறாக யுத்த நிறுத்தத்தின் காரணமாக புலிகள் இயக்கத்திற்கு பாதகமான சில தாக்கங்கள் சில ஏற்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானது இயக்கத்தினுள் ஏற்பட்டுள்ள பிளவு ஆகும். கருணா விவகாரம் யுத்த நிறுத்தத்தின் ஒரு விளைவு என்பதில் சந்தேகமில்லை. அத்துடன் கடந்த வாரம் சிரேஷ்ட (முஸ்லிம்) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியபடி ஜனாதிபதி தென்னிலங்கை கட்சிகளினுள் மட்டுமன்றி புலிகள் இயக்கத்தினுள்ளும் பிளவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் தற்போதும் ஈடுபட்டுள்ளார். இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து உண்மையானதாக இருப்பின் மிகப் பாரதூரமானது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், தனது இயக்கத்தினுள் பிளவுகளை அனுமதித்துக் கொண்டு புலிகள் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பர் என எதிர்பார்ப்பதற்கில்லை.

இத்தகைய பின்னணியில் நோக்குகையில் "பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக் கோடுகள் உள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்து விட்டோம்" என்ற வார்த்தைகள் பேச்சுவார்த்தைகளை உந்துவதற்கான வெறும் பயமுறுத்தலாக மட்டுமே இருக்கலாம் என எதிர்பார்க்க முடியாது. அவ்வகையில் யுத்த அபாயம் உண்மையானது மட்டும் மல்ல உறுதியானதும் கூட என்பது குறிப்பாக தென்னிலங்கை அரசியல் சக்திகளால் உணரப்பட வேண்டியது அவசியம். ஆயினும், அந்த இயலுமை தெற்கிற்கு உண்டா என்பது பிரச்சினைக்குரியதே.

சர்வதேச சமூகம்

இறுதியாக பிரபாகரனின் உரையில் காணப்பட்ட முக்கியமான அம்சங்களில் ஒன்று தமது இக்கட்டான நிலையைப் புரிந்துக்கொண்டு பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தத்தை பிரயோகிக்கும்படி சர்வதேச நாடுகளை வேண்டிக் கொண்டமையாகும். இது சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயம் பற்றிய கடுமையான கரிசனை ஒன்று புலிகளிடம் உள்ளது என்பதை மீண்டும் உறுதிசெய்துள்ளது.

சர்வதேச நாடுகள் இது தொடர்பில் முன்னெடுக்கக் கூடிய நடவடிக்கைகள் யாவை? "இறைமை" என்ற எண்ணக்கரு காலத்திற்கு ஒவ்வாததாக மாற்றமடைந்துவிட்ட பின்பும், பெரும்பாலான நாடுகளுக்கிடையிலான உறவு இறைமைக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே இன்றும் முன்னெடுக்கப்படுகிறது. இதன் கருத்து யாதெனில் சமாதான முயற்சிகளை எவ்விதம் முன்னெடுக்கவேண்டும் என்று இலங்கை அரசுக்கு எந்த ஒரு நாடும் உத்தரவிடப் போவதில்லை என்பதாகும். ஆயினும், மறைமுகமாக அழுத்தத்தை பிரயோகிப்பது சாத்தியமானதாகும். தற்போதைய நிலையில் உறுதியான அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கான ஒரு வழிமுறை வாக்குறுதியளிக்கப்பட்ட நிதியை தடுத்து வைப்பதாகும். ஆயினும் உண்மையில் நடைபெறுவதென்ன?

டோக்கியோவில் உறுதியளிக்கப்பட்ட நிதி உதவி சமாதான செயன்முறையுடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டிருந்த போதும், அது பூரணமாக தடுத்து வைக்கப்படவில்லை. உண்மையில் இந்த நிதி மெதுவான ஒரு முறையில் திறந்து விடப்பட்டிருந்தது. வியப்பிற்குரியது யாதெனில், பிரபாகரனின் உரையின் பின்னர் உடனடியாகவே, சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராக செயற்பட விளைகின்ற ஜப்பான் பெருந்தொகை நிதியை இலங்கைக்கு கடனாக வழங்க முன் வந்திருந்தமை ஆகும். அதேசமயம், ஏனைய நாடுகளும் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைகின்ற நிலையில் நிதி உதவிகளைப் பூரணமாகத் தடுத்து வைக்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை. ஏனெனில் சமாதான முயற்சிகள் வெற்றியடைய வேண்டும் என்பதில் இவ் அரசுகளுக்கு எவ்வளவு ஆர்வம் உள்ளதோ அதேயளவு அக்கறை இலங்கை அரசு வீழ்ந்து விடாதிருப்பதிலும் உண்டு. இப்பிராந்தியத்தில் இன்னொரு "தோல்வியடைந்த" அரசை சர்வதேச நாடுகள் விரும்பப் போவதில்லை.

அதுமட்டுமன்றி, புலிகள் விரும்புவதற்கு எதிர்மாறான போக்கொன்றே காணப்படுவதாகக் கூறலாம். அதாவது பிராந்தியத்தின் சில நாடுகள் மிக அதிகமாக இலங்கை அரசுடன் நெருங்கிச் செல்வதாகவே தோன்றுகின்றது. அவ்வகையில், பல நாடுகளுடன் முன்மொழியப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தங்கள் கூறப்படலாம். இத்தகைய பின்னணியில் புலப்படுவது யாதெனில், புலிகளின் இக்கட்டான நிலையைப் புரிந்து கொண்டு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதில் சர்வதேச சமூகம் பெருமளவிற்கு உதவப் போவதில்லை என்பதாகும்.

உள்ளூர் யதார்த்தம்

சர்வதேச யதார்த்தம் இவ்விதம் இருக்க, உள்ளூர் நிலைப்பாடுகள் எவ்விதமுள்ளன என்பதும் முக்கியமானது. இலங்கை அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கக் கூடிய நிலையில் இன்று இல்லை. இதற்கான காரணங்கள் யாவை என்பதை இப்பகுதியில் இதற்கு முன்னரே பல தடவைகள் ஆராய்ந்துள்ளோம். எனவே அவற்றை மீளக்கூறவேண்டிய அவசியமில்லை. அதேசமயம், பிரபாகரனின் வார்த்தைகளை ஓர் அபாயசங்காக அரசாங்கம் விளங்கிக் கொண்டுள்ளதா என்பது சந்தேகத்திற்குரியது. மாறாக அது ஒரு அச்சுறுத்தலாகவே விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது போன்று தோன்றுகின்றது. அவ்விதமாயின் நற்புணர்வு ரீதியான முன்னெடுப்புகளெதனையும் தென்னிலங்கையில் இருந்து எதிர்பார்க்க முடியாது.

எனவே, புலிகளின் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க அரசாங்கம் முன்வருவதற்கான சாத்தியம் 98 சதவீதமளவிற்கு இல்லை என்றே கூற வேண்டும். எனினும், உண்மையானதாகவன்றி ஒரு தந்திரோபாயமாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க அரசாங்கம் முன்வருவதற்கான சாத்தியங்களும் இல்லாமல் இல்லை என்பது இப்பகுதியில் ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. எனினும், இத்தகைய சாத்தியம் இரண்டு சதவீதமளவானது மட்டுமே.

(05. 12 . 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44

சரிந்து செல்லும் ஜனநாயகம், மேலும் ஒரு படி கீழே!

கடந்த ஏப்ரல் மாதம் இவ்வரசாங்கம் பதவிக்கு வந்தபோது அதற்கு போதிய பெரும்பான்மை பாராளுமன்றத்தில் இருக்கவில்லை. அது அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைக்கு ஒரு சவாலாக இருந்தபோதும் முக்கியமான பிரச்சினையாக இருந்தது அரசாங்கத்தின் அரசியலமைப்புச் சீர்திருத்தத் திட்டத்திற்கு வேண்டிய அடிப்படை காணப்படவில்லை என்பதாகும். ஏனெனில் ஜனாதிபதி முறைமையை திருத்தி பூரண பாராளுமன்ற முறைமைக்குத் திரும்புதல் ஜனாதிபதியின் அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது விடயம் ஆகும். ஏனெனில், அது அவரது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணி ஆகும். எனவே புதிய அரசாங்கத்தின் முதலாவது இலக்காக இருந்தது பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையை உத்தரவாதப்படுத்திக் கொள்வதாகும்.

துண்டாடல்

சாதாரண சூழ்நிலையின் கீழ் இத்தகைய நிலையில் அரசாங்கம் மேற்கொண்டிருக்கக் கூடிய செயற்பாடு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் கட்சிகளை அரசாங்கக் கூட்டமைப்பில் சேர்த்துக் கொள்வதாகும். ஆயினும், பாராளுமன்றத்தில் இருக்கின்ற முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகள் தவிரந்த ஏனைய கட்சிகள் அரசாங்கத்தில் முழுமையாக இணைந்து கொள்ளக் கூடிய நிலையில் இருக்கவில்லை. இது குறிப்பாக, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் நிகழ்ச்சித் திட்டங்களினால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

உதாரணமாக, ஜனதா விமுக்தி பெரமுன அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற அதே நிலையில் ஆட்சியில் பங்கெடுப்பது ஹெல உறுமயவிற்கு இயலுமானதல்ல. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் ஓர் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு சாத்தியமானதல்ல. அதேசமயம், எத்தகைய ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையிலும் சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்கக் கூடிய நிலையில் ஐ.தே.கட்சி இல்லை.

எஞ்சியிருந்த இரு கட்சிகளிலும் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதில் கூட்டமைப்பு ரீதியான பிரச்சினைகள் எதுவும் இருக்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸின் சிற்சில நிபந்தனைகளுக்கு இணங்கக் கூடிய நிலையில் அரசாங்கம் இருக்கவில்லையே அன்றி இணைப்பை தடுக்கக் கூடிய அடிப்படையான பிரச்சினைகள் எதுவும் இருக்கவில்லை. தொழிலாளர் காங்கிரஸ் அதிக எதிர்ப்புகள் எதுவுமின்றி அரசாங்கத்தின் தாக்குதலுக்கு பலியானதும் "நிபந்தனைகள் அற்றவகையில்" ஆட்சியில் இணைந்து கொண்டதும் யாவரும் அறிந்ததே.

ஆயினும், தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவு மட்டுமே பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையைப் பெறுவதற்குப் போதுமானதாக இருக்கப் போவதில்லை என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்தே இருந்தது. எனவே, இப்பிரச்சினையைச் சமாளிப்பதற்கான அதன் தந்திரோபாயமாக அமைந்தது இயன்றவரை எதிர்க் கட்சியில் இருக்கின்ற கட்சிகளை பிளவுபடுத்தி சின்னாபின்னப்படுத்துவதாகும். எல்லாப் பாராளுமன்ற முறைகளிலும் எதிர்க் கட்சிகளை பலவீனப்படுத்தும் முயற்சிகளில் அரசாங்கங்கள் ஈடுபட்டிருக்கக் கூடும். ஆயினும், இலங்கையில் இன்று இடம்பெறுவது போன்று எதிர்க் கட்சிகள் மீதான திட்டமிட்ட "அரசியல் தாக்குதல் இடம் பெற்றிருக்குமென்றோ அல்லது தாக்குதல்கள் இந்த அளவிற்கு வெற்றி பெற்றிருக்குமென்றோ எதிர்பார்ப்பதற்கில்லை. அந்த அளவிற்கு இன்று எதிர்க் கட்சிகள் இலங்கையில் பிளவுபடுத்தப்பட்டு, பலவீனப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமே, இத்தந்ரோபாயத்திற்குப் பலியாகாமலுள்ள ஒரே கட்சி என்று கூறப்படலாம். இதற்குப் பல காரணங்கள் காணப்படலாமேயாயினும், இக்கட்சி மீதான புலிகளின் கட்டுப்பாடு முக்கியமான ஒரு காரணியாகக் கருதப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் இப் பிளவுபடுத்தி அழிக்கும் தந்திரோபாயத்திற்கு மிக மோசமான முறையில் பலியாகியுள்ளது முஸ்லிம் காங்கிரஸே ஆகும். கடந்த ஆறு மாதங்களிலும் முஸ்லிம் காங்கிரஸினுள் ஏற்பட்டபிளவுகளை சரியாகக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு தேசமான்ய அல்லது கலாசூரி விருதோ கூட வழங்கலாம். இன்று உண்மையில் பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் காங்கிரஸின் பலம் என்ன என்பது தெளிவற்றதாகவே மாறியுள்ளது.

அரசியல் நேர்மை, ஒற்றுமை, கொள்கைப் பற்று என்பவற்றில் அதி உயர் நிலையில் இருந்திருக்க வேண்டிய ஹெல உறுமயவினால் கூட அரசாங்கத்தின் தாக்குதல்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியவில்லை. மாறாக, "தர்ம ராஜ்யத்தை" ஏற்படுத்த வந்த கட்சியும் கூட இலகுவாகப் பிளவுபட வேண்டியதாயிற்று. அவ்வகையில் நோக்குகையில் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டமை, அதனை பிளவுகளில் இருந்து பாதுகாத்துள்ளதோ என்னவோ. எவ்வாறாயினும், தொழிலாளர் காங்கிரஸின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவும் ஏனைய எதிர்க் கட்சிகளின் பிளவுகளும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை உத்தரவாதப்படுத்தியிருந்த போதிலும் அரசாங்கத்தின் நோக்கங்களைத் திருப்திப்படுத்துவதாக இருக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபடுத்தப்படுவது மட்டுமன்றி பலவீனப்படுத்தப்படுவதும் இரு கோணங்களில் இருந்து நோக்குகையில் அரசாங்கத்திற்கு முக்கியமானதாயிருந்தது.

ஐ. தே. க.

ஒன்று, அரசியலமைப்பு மாற்றத்தை சட்டத்திற்குப் புறம்பாக செய்வதிலும் பார்க்க சட்ட ரீதியான வழிமுறைகளினூடாக மேற்கொள்வது சிறந்தது. சட்ட ரீதியாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய முதலாவது நிபந்தனை பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரம் ஆகும். ஐக்கிய தேசியக் கட்சியின் குறிப்பிடத்தக்க ஒரு தொகையான உறுப்பினர்களின் ஆதரவு இன்றி, அதனை அடைந்து கொள்வது சாத்தியமானதல்ல. எனவே, ஐ.தே.கட்சி உறுப்பினர்களைக் கொள்வனவு செய்வதில் அரசாங்கத்தின் கவனம் திரும்பியது. இது அவ்வளவு இலகுவான காரியமாக இல்லாவிடினும், முதல் வெற்றி போகொல்லாகம உருவில் அமைச்சுப் பொறுப்பேற்றது. டிரோன் பெர்னாண்டோ பாராளுமன்ற உறுப்பினராக இல்லாவிடினும் கட்சியை பிளவுபடுத்தும் செயன்முறையில் முக்கியமானதொரு மைல்கல் என வர்ணிக்கப் படலாம். அவ்வகையில் ஐ.தே.கட்சியை பிளவுபடுத்தும் செயன்முறை (அரச ஊடகங்களின் உதவியுடன்) தொடர்ந்தும் இடம்பெற்றவண்ணமுள்ளது.

எனினும், ஐ.தே.கட்சி பூரணமாகப் பிளவுபடுத்தப்பட்டு மூன்றில் இரண்டை நிதானமாகப் பெறக்கூடிய கால அவகாசம் அரசாங்கத்திற்குக் காணப்படவில்லை. ஏனெனில், ஒரு கடைசித் தெரிவாக சட்டத்திற்குப் புறம்பான வழியில் - அரசியலமைப்பு நிர்ணய சபையினூடாக - அரசியலமைப்பை மாற்றுவதற்கு அரசாங்கம் இன்றும் தயாராகவே உள்ளது. உண்மையில், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உத்தரவாதப்படுத்தப்பட்டவுடன் அரசியலமைப்பு நிர்ணய சபையைத் தோற்றுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும், சட்டத்திற்குப் புறம்பான இவ்வழிமுறை தோற்றுவிக்கக் கூடிய எதிர்ப்புப் பற்றியும் அதன் எதிர் விளைவுகள் பற்றியும் எச்சரிக்கப்பட்டமையினால் அரசாங்கம் சட்ட ரீதியான வழிமுறையை முயற்சிப்பதற்கு எத்தனித்திருக்கலாம்.

ஏனெனில், மூன்றில் இரண்டு பெரும்பான்மை அற்றவகையில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு மாற்றமும் நிரந்தரமான தாயிருக்கும் என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமுமில்லை. மாற்றத்திற்கு இணங்காத கட்சிகள் தமக்குக் கிடைக்கின்ற முதலாவது சந்தர்ப்பத்தில், அதனை செல்லுபடியற்றதாக பிரகடனப்படுத்தக்கூடிய சாத்தியமே உள்ளது. அத்துடன், சட்டத்திற்குப் புறம்பான வழிமுறைகளினூடாக அரசியலமைப்பு மாற்றப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சமூகம் செயற்படுகின்ற அடிப்படையையே தகர்த்துவிடும் என்பதுடன் பாரிய ஒரு சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையைத் தோற்றுவித்துவிடக் கூடும்.

இது அரசியலமைப்பு நிர்ணய சபைத் தெரிவை அரசாங்கம் பூரணமாகக் கைவிட்டு விட்டதென்ற அர்த்தத்தை உடையதல்ல. மாறாக, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெறப்பட முடியாவிடின், அரசியலமைப்பு நிர்ணய சபையூடாக தனது திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் இன்றும் தயாராகவே உள்ளது. இதனுடன் தொடர்புடையதே ஐ.தே.கட்சியை பலவீனப்படுத்துவதற்கான இரண்டாவது காரணம் ஆகும்.

அரசியலமைப்பு நிர்ணய சபையூடான யாப்பு மாற்றம் சட்டத்திற்குப் புறம்பானது என்பதனால் பாரிய அளவிலான அரசியல் எதிர்ப்பு இச்செயன்முறைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் என எதிர் பார்க்கலாம். அவ் எதிர்ப்பிற்கு தலைமையை வழங்க வேண்டிய கடமையும், பொறுப்பும் பிரதான எதிர்க் கட்சி என்ற வகையில் ஐ.தே.கட்சியையே சாரும். அண்மைய கடந்த காலங்களில் இப்பொறுப்பை நிறைவேற்றுவதில் கட்சியின் தற்போதைய தலைமை உறுதியான ஒரு முறையில் செயற்பட்டிருக்கவில்லை என்பது தெளிவானது.

எனவே, ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான எதிர்ப்பு பற்றிய பாரிய ஒரு அச்சம் அரசாங்கத்திற்கு இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. எனினும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கெதிரான திட்டவட்டமான செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய இரண்டாம் மட்டத்திலான பல தலைவர்கள் ஐ.தே.கட்சியினுள் இருக்கின்றார்கள் என்பது நிச்சயமானது. அந்த வகையில் முக்கியமானவர்கள் எஸ்.பி.திஸாநாயக்கா, ராஜித சேனாரட்ண, ரவி கருணாநாயக்க போன்றோராவர். இவர்களைக் களையெடுக்கும் நடவடிக்கையே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மரண அடி

அதிலும் குறிப்பாக, திஸாநாயக்கா சிறை செய்யப்பட்டமை, ஐ.தே.கட்சியின் எதிர்கால செயற்பாடுகளில் பாரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. திஸாநாயக்கா சுதந்திரக் கட்சியில் இருந்தபோதே கட்சிச் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதில் திறமை மிக்கவர் என்று பெயர் பெற்றவர். அதேசமயம், ஜனாதிபதியின் சொற்கணைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் அதே வகையில், அதே பாணியில் பதிலளிக்கும் இயலுமை மிக்க ஒரே ஐ.தே.கட்சி உறுப்பினராகவும் திஸாநாயக்க கருதப்படக்கூடும். அதன் காரணமாகவே அண்மையில் ஐ.தே.கட்சியின் தேசிய அமைப்பாளராக அவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வகையில் கட்சியின் எதிர்கால தேர்தல் பிரசாரங்களுக்கு மட்டுமன்றி, அரசியலமைப்பு மாற்றத்திற்கு எதிரான போராட்டத்திற்கும் தலைமை தாங்கும்படி எஸ்.பி.திஸாநாயக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகையில், தற்போது திஸாநாயக்கா இலங்கையின் அரசியல் புறச்சூழலில் இருந்து அகற்றப்பட்டிருப்பது அரசாங்கத்தின் திட்டங்களுக்குப் பலனளிக்கக் கூடியது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், திஸாநாயக்காவின் நீக்கம் குறுகிய காலத்திலானதன்று. அரசியலமைப்பின்படி இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத தண்டனை பெறக்கூடிய குற்றமிழைத்தவர் ஏழு ஆண்டுகளுக்கு வாக்களிக்கவோ அல்லது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கவோ தகுதியுடையவராகமாட்டார். நீதிமன்ற அவமதிப்பிற்கு என்ன தண்டனை எனச் சட்டக் கோவையில் கூறப்பட்டிருக்கவில்லை என ஐ.தே.கட்சி வாதிட்ட போதும், நீதிமன்றமும் ஓர் சட்ட ஆக்க நிறுவனமே என்பது சட்ட மாணவர்களுக்குப் புரியும்.

எனவே, உயர் நீதிமன்றம் நீதிமன்ற அவமதிப்புக்கு இரண்டாண்டு கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்படலாம் எனத் தற்போது நிர்ணயித்துள்ளது எனக் கொள்ளப்படலாம். எனவே, ஜனாதிபதியொருவரால் மன்னிப்பளிக்கப்பட்டாலே அன்றி திஸாநாயக்கா ஏழாண்டுகள் பாராளுமன்றம் செல்ல முடியாது என்பது திண்ணம். இது ஐ.தே.கட்சி மீது மேற்கொள்ளப்பட்டுள்ள மரண அடி என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் முக்கியமானது யாதெனில், இது கடைசி மரண அடி அல்ல என்பதாகும்.

எனவே, ஐ.தே.கட்சி மீது இரு வகையான தாக்குதல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒன்று பிளவுபடுத்தல், இரண்டு களையெடுத்தல். இவ்விருமுனைத் தாக்குதலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி எவ்விதம் முகம் கொடுக்கப் போகின்றது என்பது சுவாராஸ்யமானது மட்டுமல்ல, இந் நாட்டின் அரசியல் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கக் கூடியது.

(19. 12. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45

ஜே.வி.பி.யின் தற்காப்புத் தாக்குதலில் மௌனித்துப் போன சர்வதேச சமூகம்

மூன்று ஆண்டுகால இடைவெளிக்குப் பின் இந்நாடு சீரான ஒரு முறையில் யுத்தத்தை நோக்கி நகர்த்து கொண்டுள்ளது என்ற அச்சம் இந் நாட்டில் வாழ்கின்ற பெரும்பான்மையான மக்களுக்கும் அவதானிகளுக்கும் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவானது. இந்த யதார்த்தம் அரசியல் ரீதியாக மரத்துப் போனவர்கள் தவிர, ஏனைய அனைவருக்கும் இலகுவாகப் புரியக் கூடியது. யுத்தம் மீண்டும் ஏற்படுவதால் பல பாதகமான விளைவுகள் ஏற்படும். அவற்றில் ஒன்று, இம்முறை யுத்த நிறுத்தம் வீழ்ச்சியடைந்தால் மீண்டுமொரு சமாதான செயன்முறையை ஆரம்பிக்க மிக நீண்ட காலம் செல்லலாம் என்பதாகும். அத்தகைய ஒரு நீண்ட யுத்தத்தைத் தாக்குப்பிடிக்கக் கூடிய இயலுமை இந்நாட்டு மக்களுக்கு இருக்கும் என்பது சந்தேகமே.

ஏற்கனவே இந்நாட்டின் தேசிய பொருளாதாரம் மந்தமடைந்து விட்டுள்ள நிலையில், நீண்டகால யுத்தமொன்று இலங்கையை சோமாலியா அல்லது சூடான் போன்ற நாடுகளில் காணப்படக்கூடிய புறச்சூழலுக்குள் தள்ளிவிடக் கூடும். இது இங்குள்ள மக்களுக்கு மட்டுமன்றி, சர்வதேச ரீதியாகவும் பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். உதாரணமாக, இலங்கையின் உள்நாட்டு யுத்தம் ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் தோற்றுவித்துள்ள அகதிகள் பிரச்சினையை மீண்டுமொரு யுத்தம் தீவிரப்படுத்திவிடக்கூடும்.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே இலங்கையின் சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகத்தின் ஆர்வம் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். அவ்வகையில் நோக்குகையில், இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கு மிடையிலான பேச்சு வார்த்தைகள் வெற்றியடையவேண்டுமென்ற உண்மையான ஒரு ஆர்வம் சர்வதேச சமூகத்திடம் காணப்படுகின்றது எனப்படலாம். இதன் காரணமாக கடந்த ஓராண்டு காலமாக சமாதான முயற்சிகளில் ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் சர்வதேச சமூகத்தையும் குறிப்பாக, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளையும் கவலைக்குள்ளாகியிருந்தன என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவீரர் தின உரை

இத்தகைய ஒரு நிலையிலேயே புலிகளின் தலைவர் தனது மாவீரர் தின உரையில் திகதி குறிப்பிடப்படாத ஒரு காலக்கெடுவை விதித்திருந்தார். இவ்வுரையில் முன்னேற்றமடைய முடியாதிருந்த சமாதான செயன்முறை பற்றிய தனது இயக்கத்தின் விரக்தியை வெளிப்படுத்தியிருந்த அவர் யுத்தமும் அற்ற பேச்சுவார்த்தைகளும் அற்ற நிலை நீண்டகாலம் நிலைத்திருக்க முடியாதென்பதைத் தெளிவாகக் கூறியிருந்தார். இக் கூற்று நாட்டை நிச்சயமாக யுத்தத்தை நோக்கி மேலும் ஒருபடி நகர்த்தியிருந்தது என்பதில் சந்தேகமில்லை. இதனைப் புரிந்துகொள்ளக் கூடிய இயலுமை தென்னிலங்கைக்கு இருந்ததோ என்னவோ, யுத்த அபாயம் சர்வதேச சமூகத்தினால் சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டிருந்தது.

ஏனெனில், சர்வதேச சமூகத்தைத் தெளிவாக இலக்குவைத்துப் பிரபாகரன் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். அதாவது, தமிழ் மக்களின் இக்கட்டான நிலையைப் புரிந்து கொண்டு பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு உதவும்படி சர்வதேச சமூகத்தை அவர் நேரடியாகவே கேட்டிருந்தார். இத்தகைய ஒரு நிலையில் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதை ஊக்குவிக்கும் வகையிலும் அதேசமயம், புலிகளின் விரக்தியைத் தணிக்கும் வகையிலும் யாதாயினுமொரு செயற்பாட்டில் ஈடுபட வேண்டிய அவசியம் உதவி வழங்கும் நாடுகளுக்குக் காணப்பட்டிருந்தது.

அதாவது, தொடர்ந்தும் மௌனமாயிருப்பது புத்திசாலித் தனமானதன்று என்பது விளங்கிக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் விளைவே, ஜே.வி.பி.யின் சமாதான செயற்பாடுகளுக்கு விரோதமான செயற்பாடுகளைக் கண்டித்து உதவி வழங்கும் நாடுகளின் கூட்டுத் தலைமையினால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டிருந்த கடிதம் ஆகும். இச்செயற்பாட்டிற்கு பலவீனமான ஒரு இலக்கையே உதவி வழங்கும் நாடுகள் தெரிவு செய்து கொண்டிருந்தன என்பது முக்கியமானதாகும்.

நோர்வேயின் சங்கடம்

கடிதம் அனுப்பப்படுவதற்கு இன்னுமோர் முக்கியமான காரணமும் இருக்கவே செய்தது. அது தீவிரமடைந்துவரும் நோர்வே மீதான ஜே.வி.பி.யின் தாக்குதல்கள் ஆகும். சமாதான செய்முறையில் இருந்து நோர்வேயை வெளியேறக் கோரி வீதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வந்த போது, மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக கட்சியினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தந்திரங்கள் என ஜனாதிபதியினாலும் ஏனைய சில சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களினாலும் விளக்க மளிக்கப்பட்டு வந்திருந்தது. அத்துடன், நோர்வேயும் இதனைக் கண்டும் காணாதது போல் கண்ணை மூடிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, ஊடக ஆரவாரங்களுடன் நோர்வேத் தூதரகத்திற்கு அனுப்பிய கடிதம் அதனை தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளியிருந்தது. இக்கடிதத்தில் நோர்வே அரசுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்த ஜே.வி.பி. அனுசரணையாளர்கள் தமிழர்களுக்கான தனி நாட்டை ஏற்படுத்துவதற்கு மறைமுகமாக உதவிவருவதாகக் குற்றச் சாட்டியிருந்தது. இது மிகப் பாரதூரமான ஒரு குற்றச்சாட்டாகும்.

நோர்வே, புலிகளுக்கு அல்லது தமிழர்களுக்குச் சார்பாக நடுநிலையற்ற வகையில் செயற்பட்டு வருகின்றது எனக் குற்றம் சாட்டுவது வேறு, ஈழத்திற்கு உடந்தையாகவுள்ளது எனக் கூறுவது வேறு. எனவே, ரில்வின் சில்வாவின் கடிதத்திற்குப் பின்னரும் எதுவும் நடவாதது போல் பாசாங்கு பண்ணிக் கொண்டிருக்கக் கூடிய இயலுமை நோர்வேயிற்குக் காணப்படவில்லை. குறிப்பாக, அரசாங்கத்தின் முக்கியமான ஒரு பகுதி, அதிலும் தாமே அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற கட்சி எனக் கூறிக்கொள்ளும் ஒரு தரப்பு இத்தகைய குற்றச்சாட்டுகளை முன்வைக்கையில் அது பற்றிய விளக்கத்தைப் பெறாமல் தொடர்ந்தும் செயற்படுவதும் புத்திசாலித் தனமானதல்ல என்பதும் உணரப்பட்டிருக்கக் கூடும்.

எனவே, கடந்த வாரம் உதவி வழங்கும் நாடுகளினால் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திற்கு இரண்டு நிச்சயமான காரணிகள் காணப்பட்டிருந்தன. (1) புலிகளை மென்மைப்படுத்துவது, (2) நோர்வேயின் தலையீடு தொடர்பிலான அரசாங்கத்தின் ஒன்றிணைக்கப்பட்ட, தெளிவான அணுகுமுறையை விளங்கிக் கொள்வது.

ஜே.வி.பி.யின் தற்காப்பு

உதவி வழங்கும் நாடுகளின் கடிதத்தில் ஜே.வி.பி. நேரடியான ஒரு இலக்காகத் தாக்கப்பட்டிருந்தமையினால், அதற்குப் பதிலளிக்க வேண்டிய ஒரு அவசியம் கட்சிக்கு ஏற்பட்டிருந்தது. இதனை மேற்கொள்வதில் கட்சி அதிக நேரத்தை வீணடித்திருக்கவில்லை. எனினும், துரதிஸ்ஷட்வசமாக உதவி வழங்கும் நாடுகளின் எதிர்பார்ப்பிற்கு மாறாக, ஜே.வி.பி.யின் பிரதிபலிப்பு தனது கொள்கைகளையும் செயற்பாடுகளையும் நியாயப்படுத்த முற்பட்டிருந்ததே, அன்றி, பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படுவதில் உதவக் கூடிய எதனையும் கொண்டிருக்கவில்லை.

அவ்வகையில், ஜே.வி.பி.யின் பிரதிபலிப்பு உதவி வழங்கும் நாடுகளுக்கு உற்சாகமளிக்கக் கூடிய ஒன்றாக இருந்திராது என்பது நிச்சயமானது. எனினும், ஜே.வி.பி.யின் கடிதம் ஏமாற்றத்தை அளித்திருக்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை. ஏனெனில், இத்தகைய பிரதிபலிப்பையே அன்றி, வேறெந்த விதமான செயற்பாட்டையும் ஜே.வி.பி.யிடமிருந்து சர்வதேச சமூகம் எதிர்பார்த்திருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி வழங்கும் நாடுகள் மட்டில், தற்காப்புத் தந்திரோபாயத்தைக் கடைப்பிடித்துள்ள ஜே.வி.பி., தாக்குதலை புலிகளின் பக்கம் திருப்பிவிட்டுள்ளது. புலிகளைப் பாஷிசவாதிகள் என்றும், புலிகளின் தலைவரைத் தற்கால ஹிட்லர் எனவும் வர்ணித்துள்ள ஜே.வி.பி, புலிகள் மட்டில் மிகக் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைக் கையாண்டுள்ளது.

இது இவ்விரு தரப்பினருக்கும் இடையில் அதிரித்து வரும் பகைமையையும் குரோதத்தையும் வெளிப்படுத்துவதாயுள்ளது. எனவே, ஜே.வி.பி.யை ஒரு பகுதியாகக் கொண்ட அரசாங்கமொன்று புலிகளுடன் சுமூகமான முறையில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியாதென்ற யதார்த்தத்தை இப்பிந்திய அபிவிருத்தி மீண்டும் உறுதி செய்துள்ளது.

மாற்றம்?

உதவி வழங்கும் நாடுகளினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் அடிப்படைக் கரிசனை நோர்வே தொடர்பில் ஜே.வி.பி.யின் செயற்பாடுகளாகும். இதற்கு நோர்வே பக்கச் சார்பாக நடந்து கொள்கின்றது என்பதைத்தவிர, வேறெந்தத் தெளிவான பதிலையும் வழங்காத ஜே.வி.பி., தெளிவாக எடுத்துக் கூறியுள்ள விடயம் யாதெனில், இடைக்கால நிர்வாக சபை பற்றிய பேச்சுகளுக்குத் தாம் ஒருபோதும் இணங்கப் போவதில்லை என்பதுடன் இறுதித் தீர்வு பற்றிப் பேசுவதற்கு எப்போதும் தயாராக உள்ளோம் என்பதாகும்.

இறுதித் தீர்வு பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு நாம் தயாராகவே உள்ளோம் என்று கூறப்படுவதில் அதிக உண்மை இல்லாவிடினும், இடைக்கால சபை பற்றிப் பேசுவதற்கோ அல்லது அத்தகைய ஒரு நிறுவனம் அமைக்கப்படுவதற்கோ தாம் ஒருபோதும் இணங்கப் போவதில்லை என்பது மட்டும் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளமை முக்கியமானது. அதாவது, இடைக்கால சபை பற்றி மட்டுமே பேசுவோம் என்று புலிகள் கூறுவதற்கும் இடைக்கால சபை பற்றிப் பேசப் போவதில்லை என்று ஜே.வி.பி கூறுவதற்கும் இடையில் மிகத் தெளிவான பிளவு காணப்படுகின்றது. இந்நிலைப்பாடுகளில் அண்மைக்காலத்தில் பாரிய மாற்றங்களெதுவும் ஏற்படுவதற்குரிய சந்தர்ப்பம் காணப்படாமையினால் உதவி வழங்கும் நாடுகளின் பிந்திய முயற்சி இருக்கின்ற புறச்சூழலில் சாதகமான மாற்றங்களெதனையும் கொண்டுவரும் என எதிர்பார்ப்பதற்கில்லை.

அத்துடன், கவனிக்கப்பட வேண்டியது யாதெனில், இங்கு காணப்படுகின்ற பிரச்சினை தெளிவாக வேறுபட்ட நிலைப்பாடுகள் மட்டுமல்ல என்பதாகும். பிரச்சினைகள் வேறுபட்ட நிலைப்பாடுகள் மட்டுமேயாயின், இரு தரப்பும் இணங்கக் கூடிய மாற்றுத் தீர்வுகள் பற்றிச் சிந்திக்கக் கூடும் உண்மையான பிரச்சினை, ஒன்றாக அமர்ந்து அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக்கூடிய மனோநிலை புலிகளுக்கும் ஜே.வி.பி. இற்குமிடையில் காணப்படவில்லை என்பதாகும். நம்பிக்கையின்மை, அச்சம், பகைமை, குரோதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல அடிப்படையான உளவியல் தொடர்பான பிரச்சினைகள் இங்கு காணப்படுகின்றன. இவை இலகுவாகத் தீர்க்கப்படக் கூடியவை அல்ல. எனவேதான், பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கக் கூடிய கட்டமைப்பு ரீதியான புறச்சூழல் இன்று காணப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

அத்துடன், உதவி வழங்கும் நாடுகளின் கடிதத்திற்கு இலக்காகப் பலவீனமாக ஒரு அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது எனக் கட்டுரையின் முகப்பில் கூறியிருந்தோம். ஏனெனில், சமாதான முயற்சிகள் பாதிக்கப்பட்டமைக்கான முழுப் பழியையும் ஜே.வி.பி.யின் மீது சுமத்தியதன் மூலம் முக்கியமான கதாபாத்திரம் நழுவ விடப்பட்டிருந்தது. அதாவது, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான ஜனாதிபதியின் முயற்சிகளைப் பாராட்டுவதாகக் கடிதம் குறிப்பிட்டிருந்தது. இதன் மூலம் அண்மைய காலம் வரை, (ஒரு வகையில் இன்றும் கூட) ஜனாதிபதியின் நிலைப்பாட்டிற்கும் ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டிற்குமிடையில் அதிக வேறுபாடுகள் இருந்திருக்கவில்லை என்பது மறந்துவிடப்பட்டிருந்தது.

(26. 12. 2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46

சுனாமியின் பின் இலங்கை அரசியலில் உருவாகியுள்ள புதிய பரிமாணங்கள்

இலங்கை அரசியலில் தாக்கம் செலுத்துகின்ற பல்வேறு காரணிகள் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் இலங்கை அரசியலை ஆய்வு செய்துவந்த ஆய்வாளர்கள் இக் காரணிகளில் பலவற்றை கவனத்தில் எடுத்து வந்தபோதும், இயற்கை இந் நாட்டின் அரசியலிலும் வரலாற்றிலும் கூட மிகப் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு காரணியாக மாறும் என எவரும் கற்பனை செய்து பார்த்திருக்க வாய்ப்பில்லை. ஆயினும், சுனாமி இலங்கை அரசியலில் விட்டுச் சென்றுள்ள தாக்கம் சாதாரணமானதன்று. அவ்வகையில் இவ் இயற்கை அழிவின் பின் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் பரிமாணங்கள் சிலவற்றை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

யுத்தம்

கடந்த சில காலங்களாகவே இந்நாடு மெதுவாக ஆனால், சீரான ஒரு முறையில் யுத்தத்தை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது என இப்பகுதியில் கூறி வந்துள்ளோம். தற்போது விடயமறிந்த வட்டாராங்களில் இருந்து வருகின்ற தகவல்களின் அடிப்படையில் நோக்குகையில் பொங்கலின் பின் யுத்த நிறுத்த ஒப்பந்தம் உத்தியோக பூர்வமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம். யுத்த நிறுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதென்பதன் கருத்து கிடைக்கின்ற முதலாவது சந்தர்ப்பத்தில் யுத்த தரப்பினர் வன்முறையை நாடியிருக்கலாம் என்பதாகும். இத்தகைய ஒரு யுத்தம் எத்தகைய விளைவுகளை கொண்டிருக்கலாம் என்பதும் மீண்டும் ஒரு சமாதான செயன்முறையை ஆரம்பிப்பது எவ்வளவு கடினமானதாக இருந்திருக்கும் என்பதும் கடந்த காலங்களில் ஆய்வு செய்யப்பட்டிருந்தன. எனவே, யுத்த அபாயமென்பது உண்மையானதாகவும் நிச்சயமானதாகவும் இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

தற்பொழுது, சுனாமி (தற்காலிகமாக) இவ்வபாயத்தை நீக்கியுள்ளது. அதாவது, சுனாமியின் காரணமாக தற்போது ஏற்பட்டுள்ள சமூக, அரசியல் சூழ்நிலைகள் இரு தரப்பினரும் யுத்தத்தை நோக்கி நகரக் கூடிய இயலுமையை இல்லாமற் செய்துள்ளது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை யுத்தம் செய்யக்கூடிய மனோ தைரியத்துடன் சுனாமியின் முன்னரும் கூட அது இருந்திருக்கவில்லை. பொருளாதார ரீதியாகப் பாரிய இழப்பு ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையில் அரசாங்கம் யுத்தத்தினுள் தள்ளப்படுமாயிருப்பின் மீள் கட்டுமானப் பணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல, பொருளாதாரச் செயற்பாடுகளின் அடித்தளமே கூட தகர்க்கப்பட்டிருக்கக் கூடும். அவ்வகையில் அரசாங்கத்தின் நலன்களுக்கு சாதகமாயிருந்த "யுத்தமுமற்ற பேச்சு வார்த்தைகளுமற்ற" நிலையை நீடித்துக் கொள்வதற்கு உண்மையில் சுனாமி உதவியுள்ளது.

மாறாக, போராட்டத்தின் நோக்கம் என்ற கோணத்திலிருந்து நோக்குகையில் "யுத்தமுமற்ற பேச்சுவார்த்தைகளுமற்ற நிலை" புலிகளுக்குப் பாதகமாகவே அமைந்திருந்தது. அதன் காரணமாகவே கடந்த ஆண்டின் இறுதியில் யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்ளக் கூடிய நிலையை புலிகள் அடைந்திருந்தனர். அதன் காரணமாகவே, திகதி குறிக்கப்படாத காலக்கெடுவும் கூட விதிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், இன்று உடனடியாக யுத்தத்திற்குச் செல்லக்கூடிய நிலையில் புலிகளும் கூட இல்லை. சுனாமியின் காரணமாக வட, கிழக்குக் கரையோரப் பிரதேசங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக்காணக்கான உயிர்ச் சேதங்களுக்குப் புறம்பாக மிக மோசமான கட்டமைப்பு ரீதியான சேதங்களும் ஏற்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நடுத்தெருவுக்குத் தள்ளப்பட்டுள்ளன. இம்மக்களுக்கான நிவாரணப்பணிகளை மேற்கொள்வதுடன் மீள்குடியேற்றம், மீள் கட்டுமானம் என்பவற்றில் உதவ வேண்டிய தார்மீகக் கடமை புலிகள் இயக்கத்திற்கு உண்டு. தாம் ஒரு போராட்ட இயக்கமே அன்றி, இன்னும் ஓர் அரசு அல்ல என்று அவர்கள் சிந்திப்பார்களேயாயின் அது அவர்களின் சித்தாந்தம், செயற்பாடு, நோக்கம் என்பவற்றின் அடித்தளத்தையே பலவீனப்படுத்தி விடக்கூடும்.

ஆயினும், தமது பொறுப்புகளை சரியாக உணர்ந்துள்ளதன் காரணமாகவே புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் மிக விரைவாகவே ஈடுபட்டிருந்தனர். தற்போது கொழும்பை வந்தடைகின்ற தகவல்களின்படி இப் பணிகள் திட்டமிட்ட அடிப்படையிலும் செயற்திறனுடையவையாகவும் அமைந்திருந்தன எனக் கூறப்படுகின்றது. அதேபோன்று மீள்கட்டுமானப் பணிகளிலும் அவர்களுக்குப் பாரிய ஒரு பங்கு உண்டு. யுத்தத்திற்கு மீண்டும் உடனடியாகத் திரும்புவது தமது சொந்த செயற்பாடுகளை பாதித்து விடுகின்ற அதே சமயம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படக் கூடிய சில திட்டங்களையும் கூட இல்லாமற் செய்துவிடக்கூடும். இதனை புலிகள் நிச்சயமாக விரும்ப மாட்டார்கள் எனக் கூறலாம்.

இவ்விடயத்திற்கு சமமாக முக்கியத்துவம் உடைய இன்னுமோர் விடயம் சர்வதேச அபிப்பிராயம் ஆகும். யுத்தத்திற்கு திருப்பிச் செல்வதற்கான நியாயங்கள் எத்தகையவையாக இருப்பினும், இத்தகைய ஒரு பாரிய அனர்த்தத்தின் பின்னணியில் உடனடியாக யுத்தத்தை நாடுவதை எந்த ஒரு நாடும் அல்லது நிறுவனமும் அங்கீகரிக்கப்பபோவதில்லை. அதுமட்டுமன்றி, யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிக் கொள்வது போன்றதொரு அறிவிப்பும் கூட தீவிரமாகக் கண்டிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இது தமிழ் நலன்களுக்கு உகந்ததாக இருக்காது என்பதும் நிச்சயமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேசமயம், இப்புதிய சூழ்நிலை புலிகளின் சில நோக்கங்களை அடைந்து கொள்வதில் புதிய சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளது என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டமைக்கு ஒரு காரணம் மட்டுமே இருந்தது எனக் கூறமுடியாது. பல காரணிகளில் ஒன்று தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் தென்னிலங்கை அரசாங்கங்களுக்கு உண்மையான அக்கறை இல்லை என்பதை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்துவதாகும். இந்நோக்கம் சுனாமி நிவாரணம், மீள் கட்டுமானம் என்பவற்றை அரசாங்கம் வட, கிழக்கில் எவ்விதம் கையாள்கின்றது என்பதை வெளிப்படுத்துவதன் மூலம் அடையப்படலாம். இயல்பாகவே வட, கிழக்கில் இப்பணிகள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே கையாளப்படும் என்பதில் சந்தேகமில்லை.

இதற்கு கோபி அனானின் இலங்கை விஜயம் சிறந்த ஒரு உதாரணமாகும். அனானை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அழைத்துச் செல்வது பிரச்சினையாக இருந்திருக்குமாயின் யாழ்ப்பாணத்திற்காவது அவர் அழைத்துச் செல்லப்பட்டிருக்கலாம். ஆயினும் அனான் தமிழ்ப் பகுதிகளுக்கு பயணம் செய்யாதிருந்தமை இறுதியில் தமிழ் மக்களுக்கு தந்திரோபாய ரீதியான நலன்களையே கொண்டுவந்துள்ளது எனலாம். இது தொடர்பான தமிழ்மக்களின் முறைப்பாடுகள் சர்வதேச ஊடகங்களில் பேசப்பட்டுள்ளதுடன், அரசாங்கத்தின் மனோபாவத்தை புரிந்துக்கொள்ளக் கூடிய நிலையில் செயலாளர் நாயகம் இருந்திருப்பார். அத்துடன் கிடைக்கின்ற நிதி வட, கிழக்கின் தேவைகளுக்காக நியாயமாக செலவழிக்கப்படுமா என்ற சந்தேகம் சர்வதேச சமூகத்தின் மத்தியில் உறுதியாக விதைக்கப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் பல நலன்களைக் கொண்டுவரக்கூடும். அதேசமயம், கவனிக்கப்படவேண்டிய இன்னுமோர் விடயம், சுனாமியின் பின்னர் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான உறவைப் பூரணமாக நெருக்கடிக்கு உள்ளாக்கி இருப்பதாகும். எனவே, சுனாமி யுத்தத்தை தாமதப்படுத்தியுள்ள போதும், புதிய நம்பிக்கைகளை ஏற்படுத்தத் தவறியுள்ளது.

ஜனாதிபதி

சுனாமியின் பின் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளினால் தோன்றியுள்ள முக்கியமான இன்னுமோர் கேள்வி ஜனாதிபதியின் அரசியல் எதிர்காலம் பற்றியதாகும். அரசியல் அமைப்பை மாற்றி (பூரணமான) பாராளுமன்ற முறைமைக்குச் செல்வதன் மூலம் தனது அரசியல் எதிர்காலத்தை நீடித்துக் கொள்ளும் ஜனாதிபதியின் திட்டத்திற்கு என்னவாகும் என்பது முக்கியமானது. புதிய சூழ்நிலைகள் பற்றிய கரிசனை இன்றி தமது திட்டத்தை அவ்விதமே முன்னெடுத்துச் செல்லக்கூடுமா அல்லது புதிய அணுகுமுறை ஒன்று அவசியமாகுமா, என்பவை சுவாரசியமான கேள்விகள் ஆகும்.

சுனாமி ஜனாதிபதியின் கோணத்தில் இருந்து நோக்குகையில் பல நலன்களைக் கொண்டுவந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த அபாயம் தாமதப்படுத்தப்பட்டுள்ளது, மிக மோசமாகக் தேக்கப்பட்டுள்ள பொருளாதாரம் திடீரென உள்வாங்கப்பட்ட சர்வதேச நிதியின் காரணமாக புத்துணர்ச்சி அடைந்துள்ளது போன்று தோன்றுகின்றது. ரூபாயின் பெறுமதி சற்று ஸ்திரமடைதுள்ளமை இதற்கான சான்றாகும். அத்துடன் சுனாமி மிகப் பாரிய அளவில் மக்களின் உணர்வுகளை தூண்டி விட்டுள்ளமையினால் உனடியான அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் மறக்கப்பட்டு விடலாம். இன்று எஸ்.பி.திஸானாயக்க பற்றிய பிரச்சினை பூரணமாக பின்தள்ளப்பட்டுள்ளமை இதற்கான சிறந்த உதாரணமாகும். எனவே, உடனடி நிலையில் சுனாமி ஜனாதிபதிக்கு சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் அது அவரது இறுதி இலக்குப் பொறுத்து எவ்வித தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்பது சந்தேகத்திற்கு இடமானதே.

ஏனெனில், ஜனாதிபதிக்கு இன்றிருக்கின்ற பிரதானமான பிரச்சினை காலம் தொடர்புடையது ஆகும். காலம் மிக விரைவாக ஓடிக்கொண்டிருக்-கின்றது. அது முடிவதற்குள் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். ஜனாதிபதியின் பதவிக்காலம் இவ் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவடைகின்றது என்ற வகையில் ஏற்கனவே காலம் பெருமளவிற்கு தாமதப்படுத்தப்பட்டுள்ளது. ஓர் ஆண்டு காலத்தினும் ஓர் அரசியல் யாப்பு வரைபை முன்வைத்து அங்கீகரித்து கொள்வது என்பது இலகுவானதல்ல.

தற்போது சுனாமியினால் ஏற்படக்கூடிய தாமதம் "காலப்" பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. ஏனெனில், சுனாமியினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கான நிவாரணம் முடிவடைவதற்கு முன் அல்லது மீள் கட்டமைப்பு உறுதியாக ஆரம்பிக்கப்படுவதற்கு முன் அரசியலமைப்பு மாற்றம் பற்றிய வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட முடியாது.

எனவே, அரசியலமைப்பு மாற்றத் திட்டத்தை ஆரம்பித்து வைக்க அரசாங்கம் குறைந்தது சித்திரைப் புது வருடம் வரையாயினும் காத்திருக்க வேண்டியிருக்கும். அவ்வகையில் ஜனாதிபதி பெருமளவிற்கு கையாளக்கூடிய உபாயம் யாதெனில், தான் ரகசியமாக செய்து கொண்ட பதவியேற்பே உண்மையானது என வாதிடுவதன் மூலம், 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை பதவியிலிருக்க முயற்சிப்பதாகும். இது அரசியல் ரீதியான பதற்றத்தை தென்பகுதியில் ஏற்படுத்தக் கூடுமேயாயினும், இதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்னெடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்-பட்டவையாகவே இருக்கும்.

எனவே, சுனாமியின் விளைவுகள் ஜனாதிபதியின் திட்டத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. அது அரசியலமைப்பு மாற்றத்தை சாத்தியமற்றதாக்கி இருக்குமேயாயின், அரசியல் வரலாற்றின் முக்கிய அம்சமாகக் கணிக்கப்படும்.

(16. 01. 2005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுரை

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையிலான கூட்டணி கைச்சாத்திடப்பட்ட போதே சமாதான செயன்முறையின் முடிவு தீர்க்கமான ஒரு முறையில் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 2004 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சிக்கு வந்தவுடன் இது வரை சமாதான செயன்முறை முன்னெடுக்கப்பட்டு வந்த அடிப்படை தகர்க்கப்பட்டிருந்தது. அதாவது இதுவரை காலம் பேச்சுவார்த்தைத் தரப்பினரிடையே காணப்பட்டிருந்த "நல்லிணக்கம்" இல்லாது போய்விட்டிருந்தது மட்டுமன்றி குரோத உணர்வுமிக்க ஒரு விதமான எதிர்நிலை உறவு தோற்றம் பெற்றிருந்தது. இந்நிலையில் சமாதான செயன்முறையை காத்திரமான முறையில் தொடர்ந்து முன்னெடுக்கக் கூடிய எந்தவிதமான சந்தர்ப்பமும் காணப்பட்டிருக்கவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பினுள் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து இலங்கை அரசு அல்லது இராணுவம் நடந்துகொண்ட விதமும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அபிவிருத்திக்கும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் "குளிர் யுத்தம்" ஒன்றைத் தோற்றுவித்திருந்தது. இக்குளிர் யுத்தமும் அதற்கு மேலாக தேசிய மட்டத்தில் இடம் பெற்றுவந்த "பொல் யுத்தமும்" சமாதான செயன்முறைக்கு எவ்வகையிலும் உதவக் கூடியதாக இருக்கவில்லை.

ஆயினும், பேச்சுவார்த்தைகளுமற்ற யுத்தமுமற்ற சூழ்நிலை அரசுக்குச் சாதகமானதாகக் காணப்பட்டது என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை. ஒரு வகையில் அதிகாரப் பரவலாக்கலோ அல்லது பேச்சுவார்த்தைகளோ கூட இல்லாத வகையில் யுத்தத்தை நிறுத்திக் கொண்டமை அரசாங்க மட்டத்தின் ஒரு வெற்றியாகவே கருதப்பட்டிருந்தது. இது தவிர்க்க முடியாத வகையில் விடுதலைப் புலிகளை விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளுவதாக அமைந்திருந்தமையினாலேயே, இந்நிலை நீடிப்பின் கடுமையான தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டியிருக்கும் என பிரபாகரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

எவ்வாறாயினும், எத்தகைய கடுமையான தீர்மானங்களைத் தாமதப்படுத்துவதாக சுனாமியின் தாக்கம் அமைந்திருந்தது. ஒரு நிறுவனம் என்றவகையில் விடுதலைப் புலிகளும் சுனாமியினால் பாதிக்கப்பட்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் முக்கிய கரிசனையாயிருந்தது வடக்கு, கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையாகும். பெருந்தொகை-யிலான மக்கள் அகதிமுகாம்களில் அவதியுறுகின்றபோது யுத்தமொன்றை முன்னெடுப்பது சாத்தியமானதல்ல. எனவேதான் கூட்டுக் கட்டமைப்பு ஒன்று பற்றிப் பேசப்பட்டு வருகின்றது. சுனாமியின் பின்னர் மிக விரைவாகவே கூட்டுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்குமாயின் அது சமாதான செயன்முறையை மீள ஆரம்பிப்பதில் உதவியிருக்கக் கூடும். ஆயினும் அத்தகைய ஒரு சந்தர்ப்பம் நிச்சயமாகத் தவறவிடப்பட்டிருந்தது. மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்தின் ஒரு அங்கமாக இருக்கும்வரை கூட்டுக் கட்டமைப்பு மட்டுமல்ல பேச்சுவார்த்தைகளுமே கூட சாத்தியமானவையல்ல என்பது வெளிப்படையானது.

எனவே தென்னிலங்கையில் மீண்டுமொரு ஆட்சிமாற்றம் ஏற்பட்டு சமாதானத்திற்குச் சார்பான உறுதியான ஒரு அரசாங்கம் ஏற்படுகின்றவரை இவ்விடயத்தில் ஆரோக்கியமான அபிவிருத்திகள் ஏற்படும் என எதிர்பார்ப்பதற்கில்லை. மாறாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அதன் எஞ்சியிருக்கும் காலத்திற்கும் பதிவியிலிருக்குமாயின் தமது இராணுவ வலிமையை மீண்டுமொருமுறை நிரூபித்துக் காட்ட வேண்டிய துரதிஷ்டவசமான ஒரு நிலைக்குப் புலிகள் தள்ளப்படுவர் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் (1) கருணா கலகத்தினாலும், (2) சுனாமியின் தாக்கத்தினாலும் புலிகள் மோசமான பலவீனமாக்கப்பட்டிருப்பதான ஒரு அபிப்பிராயம் இவ்வரசாங்கத்தின் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது.

எவ்விதம் மீண்டுமொரு யுத்தம் ஏற்படுமாயின் அது பாரிய அழிவுத்தன்மை வாய்ந்ததாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதேசமயம் அது ஒரு தரப்பின் வெற்றியை உத்தரவாதப்படுத்தும் எனவும் எதிர்பார்ப்பதற்கில்லை. மாறாக இப்பொழுது புலப்படுவது போன்று புலிகள் இராணுவ ரீதியாக உறுதியான ஒரு நிலையில் இருப்பார்களாயின், அரசு அடுத்த கட்டப் பேச்சவார்த்தைகளில் கூடிய விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ள வேண்டிய நிலையிலிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இனமோதலும் சமாதானமும்

கலாநிதி எஸ். ஐ. கீதபொன்கலன்

இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் விவாதங்கள் மிக உயர்மட்டத்திலேயே இடம் பெற்றுவருவது ஜனநாயகத்தின் ஒரு குறைபாடாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இது சாதாரண மக்கள் மத்தியில் அரசியல் தெளிவின்மைக்கு காரணமாய் அமைவதுடன் அவர்கள் தவறான முடிவுகளை மேற்கொள்வதற்கும் உதவியுள்ளது. இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு சமூகத்தின் தீவிர பங்குபற்றுதலும், ஆதரவும் முக்கியமாகும். எனவே சமாதான செயன்முறையின் தார்ப்பரியங்களை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதுடன் அது பற்றிய தெளிவை ஏற்படுத்த வேண்டிய தேவையும் காணப்படுகிறது. இத்தேவையை பூர்த்தி செய்யும் வகையிலான ஒரு முயற்சியாக கலாநிதி எஸ். ஐ. கீதபொன்கலனினால் ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு வடிவமே இந்நூலாகும்.



கலாநிதி எஸ்.ஐ.கீதபொன்கலன் *(1965)*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசியல் சிறப்புத்துறை (B.A.Hons.) பட்டதாரியான இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகளுக்கான முதுமாணிப் பட்டத்தையும் (M.A.), அமெரிக்க வேர்ஜினியா மாநிலத்தில் உள்ள ஜோர்ஜ் மேசன் பல்கலைக்கழகத்தில் மோதல் தீர்வியல் துறை முதுமாணிப்பட்டத்தையும் (M.Sc.), அமெரிக்க புளொரிடா மாநிலத்தின் நோவா சவுத்ஈஸ்ட்டன் பல்கலைக் கழகத்தில் மோதல் தீர்வியல் துறையில் கலாநிதிப் பட்டத்தையும் (Ph.D.) பெற்றவராவார். தற்பொழுது கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல்துறை முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றும் கலாநிதி எஸ். ஐ. கீதபொன்கலன் ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் ஆயுதப் பரிகரண ஆய்வு நிலையம் மற்றும் ஜெர்மனியின் நிலை மாற்றத்திற்கான பொன் (Bonn) சர்வதேச நிலையம் ஆகியவற்றில் ஆய்வாளராகக் கடமையாற்றியுள்ளார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்விதழ்களில் பல ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதுடன், அரசறிவியலுக்கு ஓர் அறிமுகம் *(1993)*, மோதல் தீர்வும் வன்முறையும் *(2004)*, Impacts of Internal Conflicts on Regional Security in South Asia *(2003)* (இணையாசிரியர்), மோதல் தீர்வும் சமாதான செயன்முறைகளும் *(2005)*, Maritime Cooperation between India and Sri Lanka *(2005)* உட்பட பல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

ISBN 955-9429-71-X

குமரன் புத்தக இல்லம்

விடயம்: அரசறிவியல் / சமகால அரசியல்

விலை: ரூ 400.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org